# நதியின் வேகத்தோடு



சிவசங்கரி

# என்னுரை

நான் பிறந்தது முதல் பல தடவைகள் திருவையாருக்குப் போயிருக்கிறேன். பஞ்சநதீஸ்வரர் கோவிலும், குங்கிலியக் கிணறும், அதன் மங்காத புகையும், அகலமாய் ஓடும் காவேரியும், அந்தப் படித்துறைகளும், நாணற் புதர்களும் எனக்கு மிகவும் பழக்கமானவைதான் என்றாலும் இரண்டு வருஷங்களாக நான் அங்கு போகும் போதெல்லாம் 'என்னைப் பற்றி எழுதேன்' என்று என் காதில் கிசுகிசுக்கும். ஒரு அழகான கிராமத்துப் பெண் கற்பனையில் வளர்ந்து சதா மனசை நெருடத் தொடங்கினாள்.

என்ன எழுதுவது?

தொடர் கதையா, சிறு கதையா?

ஏதும் நான் தீர்மானித்திராத நிலையில் மங்கையிலிருந்து அன்று அந்தக் கடிதம் வந்தது. 'மங்கையில் ஆரம்பிக்கும் முதல் தொடர் கதை உங்களிடமிருந்து அமைய நாங்கள் விருப்பப்படுகிறோம். எங்கள் ஆசை நிறைவேறுமா?'—என்று உதவி ஆசிரியர் திரு. சாரதி எழுதியிருந்தார்.

நான் யோசிக்கத் தொடங்கினேன்.

மறு வாரமே திரு. சாரதி விழுப்புரத்திற்கு நேரிலேயே வந்து கதையைக் கேட்டதோடு அல்லாமல் 'உடனே தொடங்குங்கள்' என உற்சாகமும் கொடுத்தார்.

தர்மா—மங்களா—முரளி—எல்லோரும் உருவானதும் ''நதியின் வேகத்தோடு...'' பிறந்ததும் இப்படித்தான்.

இந்த நாவலை தொடராக மங்கையில் சிறப்புடன் வெளியிட்ட ஆசிரியர் திரு. விஸ்வம், உதவி ஆசிரியர் திரு. சாரதி ஆகியோருக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டவள்.

என் எழுத்தின் வளர்ச்சியில் பெரும் பங்கு கொண்டுள்ள திரு. இராமநாதன் அவர்கள் இந்த நாவலை கங்கை பதிப்பகத்தில் அழகான புத்தகமாக்கி விட்டார். அவருக்கு என் அன்பு கலந்த நன்றியை இங்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

தர்மா—உங்கள் அனைவர் உள்ளத்திலும் தங்கி நிற்பாள் என்ற நம்பிக்கையோடு இந்த முன்னுரையை முடிக்கிறேன்.

அன்புடன்,
**சிவசங்கரி,**

# ஆரம்பம்
# 1971

3743901



மூன்று பெரிய நிலைக்கண்ணாடிகள் அவள் பிம்பத்தை அழகுறப் பிரதிபலிக்க, அவள் தன்னை அலங்கரித்துக் கொள்ளும் காரியத்தில் ஈடுபட்டிருந்தாள். மனசில் சந்தோஷத்தை வெளிப்படுத்தும் வகையில், வாய் சம்பந்தா சம்பந்தமில்லாத பாடல்களை ஒன்றுக்குப் பின் ஒன்றாக முணுமுணுத்துக் கொண்டிருந்தது.

அப்போதுதான்குளித்திருந்ததால் ஜில்லென்று குளிர்ந்திருந்த உடல்மீது, வாசனை மிகுந்த பவுடரைத் தூவிக் கொண்டாள் அவள்.

அவள் முன் இருந்த அலங்கார மேஜையில் வண்ண வண்ணமாய் நகப் பூச்சுகளும், உதட்டுச் சாயங்களும்உயரமும் குட்டையுமாய் வாசனைத்திரவியங்களும் அணிவகுத்து நின்றிருந்தன.

முதலில் கொஞ்சமாய் லிக்விட் பவுன்டேஷனை விரலால் எடுத்து முகத்தில் சற்றே பூசியவள், மேற்கொண்டு பவுடரைப் போடாமல் ப்ளஷ்ஷரை எடுத்து கன்னங்களில் கண்களுக்கு மேல், சிறிது, முகவாயில் கொஞ்சம் என்று ரோஸ் நிறத்தை ஏற்றினாள். ஐ லைனரினால் மெல்லிய கோடுகளைக் கண்களுக்கு மேலேயும், கீழேயும், இழுக்கவும் ஏற்கனவே பெரிதாய் இருந்த கரிய கண்கள் இரண்டும், கருத்த ஆழ்கடலாய் மாறிப் போயின. உடுத்திக்கொண்டிருந்த ப்ரெஞ்ச் ஷிபானுக்கு ஏற்ற விதத்தில் சின்னதாய் நீலப்பொட்டு ஒன்றை வைத்துக் கொண்ட பிறகு,வெளிர் பிங்க் நிற லிப்ஸ்டிக்கையும் எடுத்து உதட்டுக்கு நிறம் கொடுத்தாள்.

கண்ணாடியில் இப்படியும், அப்படியும் முகத்தைத் திருப்பித் தன்னைப் பார்த்துக் கொண்டவளுக்கு திருப்தி எழவே முனகிக் கொண்டிருந்த, பாடலை இன்னும் கொஞ்சம் சப்தத்துடன் பாட ஆரம்பித்துவிட்டு, தலைமுடியை அவிழ்த்து, கணவனுக்கு, ஒற்றைப் பின்னலிட்டு, மல்லிகை சூடி, மணக்க மணக்க நின்றால் பிடிக்கும்

என்பது நினைவிலிருந்ததால், கருத்த கூந்தலை பிரஷ் செய்து, தளர ஒன்றைப் பின்னலாகப் பின்னி முடிந்தாள். சற்று முன் வேலைக்காரி கொண்டு வைத்துவிட்டுப் போயிருந்த குண்டு மல்லிகைச் சரத்தை இரண்டாக மடித்து, ஒரு இழை முடியை எடுத்து அதைச் சூடிக்கொண்டாள். பெரிய முடிக் கற்றைகளை எடுத்துச் சற்றே அவற்றைச் சுருட்டி காதுகளுக்கருகில் விடவும், அவை தோள்பட்டையைத் தொட்டுக்கொண்டு, இரண்டு பெரியஸ்பிரிங்போல குதித்து ஆடின. அலங்காரம் பூர்த்தி ஆகிவிட்டதால் எழுந்து நின்று புடவையைச் சரிசெய்து முன்பக்கம், பின்பக்கம் என்று திரும்பி மூன்று கண்ணாடிகளிலும் தெரிந்த பிம்பங்களை அவள் ரசித்துப் பார்த்தாள்.

சரியாக ஆறு மணிக்கு அவள் அன்புக் கணவன் வந்து விடுவான். நாளெல்லாம் அலுவலகத்தில் அசுரத்தனமாய் உழைத்துவிட்டு வீட்டுக்கு வரும் அவனுக்கு அவள்தான், அவள் அழகுதான், புத்துயிர் கொடுக்கும் டானிக்—

தன்னைத் தயார் செய்து கொண்டதும் கடைசியாய் ஒரு முழ நீளத்துக்கு நின்று கொண்டிருந்த 'டொபாஸ்' செண்டை எடுத்து உடம்பில் தாராளமாய் தெளித்துக் கொண்டாள். 'சட்'டென்று மனசில் குறும்பு கூத்தாட, சற்றுத் தள்ளி இருந்த படுக்கைகளிலும் அந்த செண்டை தெளித்தபோது. அதனால் ஏற்படப் போகும் விளைவுகளைக் கற்பனை செய்ததால் உதடுகள் புன்னகையால் விரிந்தன.

மிதமாய் இருந்த ஏ.ஸியை அவள் அதிகரித்தாள். அவனுக்கும் அறையில் நுழையும் போது சில்லென்று இருக்க வேண்டும். 'மலை வாசஸ்தலத்தில் காலடி எடுத்து வைப்பது போல இருந்தால், பாதி களைப்பு ஓடிவிடுகிறது' என்பான் அவன்.

மணி ஐந்தே முக்கால்—

படுக்கை அறையை ஒட்டியிருந்த பால்கனியில் உட்கார்ந்தால் அவன் கார் தெரு முனையில் வரும் போதே



பார்த்து விடலாம். அவன் வீட்டுக்குள் வருவதற்குள் இவள் கீழே இறங்கிப் போய் வாசலில் தயாராக நிற்கலாம்.

நாற்காலியில் சாய்ந்து உட்கார்ந்த அவள் மனம் நிம்மதியாயிருந்தது. கால்களை எதிரிலிருந்த மேஜைமேல் தூக்கிப் போட்டுக் கொண்டாள்,

அன்றைக்கு அவள் மிகவும் அழகாயிருந்தது அவளுக்கே புரிந்தது.

அவள் இயற்கையிலேயே நல்ல அழகி.

அழகுக்கு அழகு கூட்டுவது போல இன்றைய அலங்காரமும் அமைந்துவிட்டது.

மெல்லிய பிரெஞ்ச் நீல ஷிபான் புடவை. அதே நிறத்தில் ரவிக்கை, காதில், கையில், கழுத்தில் வெள்ளை முத்துக்கள்.

அழகு முகத்தில் பிரிந்தாடும் கூந்தலில் முத்துக்களை ஒத்த மல்லிக்கைப்பூ,

நாற்காலியில் சாய்ந்து அமர்ந்த அவள், தன்னைச் சுற்றிக் கண்களை ஓடவிட்டாள்.

வீட்டைச் சுற்றி ஓடிய, தோட்டத்தில் அவளுக்கு என்றுமே பெருமை அதிகம்.

வாசற் கேட்டிலிருந்து வீட்டுக்கு வர ஒரு அழகிய சாலை—அதன் இருபுறங்களிலும் அளந்து உயரே உயரே வளர்ந்திருந்த மரங்கள்-அவை காட்டுத்தனமாய் பூத்துக் கொட்டும் பூக்கள்.

இடது பக்கமும், வலது பக்கமும் பச்சைப் புல் வெளிகள்.

அவளும், அவனும் பௌர்ணமித் தினங்களில், இரவு சாப்பாட்டுக்கு மேல், அந்தப் புல்வெளியில் காலார நடப்பார்கள். வெள்ளியை உருக்கி ஊற்றினது போலப் பளபளக்கும் அந்தப் புல்தரையில், ஒரு மரத்தடியில் இவன் உட்காருவான்—மடியில் தலை வைத்து இவளைப் படுக்க

வைப்பான்—வாய் வார்த்தைகளாய் ஒன்றுமே பேசமாட்டார்கள்—மௌனத்தில் கரைந்து போவார்கள்.

அவன் கார் தொலைவில் வருவதை அவள் பார்த்து விட்டாள்.

ஒரே ஓட்டமாய் அறையைக் கடந்து, மாடிப்படிகளில் இறங்கி வாசலுக்கு ஓடுவதற்கும், அவன் வண்டி வந்து நிற்பதற்கும் சரியாக இருக்கிறது.

''ஹல்லோ ஸ்வீட்டி!''

காரைவிட்டு இறங்கி, படிகளில் ஏறி, அவள் இடுப்பை ஒரு கையால் அணைத்துக் கொள்கிறான் அவன் — அவன் ஒரு கட்டழகன் - ஆணுக்கு ஆணே ஆசைப்படுமளவுக்கு ஆண்மை நிறைந்தவன்-கம்பீரம் நிறைந்தவன் - குறும்புக்காரன்.

உள்ளே போகிறார்கள்...

அறைக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்ததும்-ஏஸியின் சிலுசிலுப்பும், பரவிக் கிடந்த மணமும், அருகிலிருந்த அவள் தோற்றமும் அவனுக்குப் போதை ஊட்டுகின்றன.

கையிலிருந்த ப்ரீஃப் கேஸை படுக்கையில் வீசிவிட்டு அவளை ஒருகையால் இழுத்து, தன்னோடு இறுக அணைத்துக் கொள்கிறான்.

''ம்...ம்...ம்...'' அவள் முகம், காது, கூந்தல் என்று நுகரும்போது இன்பமான மணம் எழுந்ததால் அவனுக்கு சந்தோஷம் அதிகரிக்கிறது.

அவள் முகத்தைத் தன்னை நோக்கித் திருப்பி, அன்புடன், அழுத்தமாய் முத்தமிடுகிறான்...

கண்களை நிமிர்த்தி அவளை தலையோடு, காலாய் உற்று நோக்குகிறான்... ''ஓ-யூ ஆர் லுக்கிங் ஸோ ப்ரட்டி, ஐ லவ் யூ ஸோ மச்'' என்று மெதுவாய் சொல்லிவிட்டு மீண்டும், மீண்டும் அணைத்து முத்தமிடுகிறான்.



அவன் கம்பீரத்தில், அவன் ஆண்மையில், அவள் மயங்குகிறாள்.

கைகளை அவன் கழுத்தில் மாலையாக்கி இறுக இவளும் அணைத்துக் கொள்கிறாள்.

எல்லாமே இனிக்கிறது அவளுக்கு.

''தர்மா... ஏய் தர்மா...என்ன பொண்ணடியம்மா நீ. விடிஞ்சு நாலு நாழியாறது...என்ன தூக்கம் அப்படி? உன்னோடொடத்த பொண்களெல்லாம் காவேரிக்குப் போயிட்டு வந்தாச்சு... நீ என்னடான்னா, தலைகாணியை கட்டிண்டு சுகம்மா தூங்கறே... எழுந்திரு தர்மா...''

அம்மா மடியாதலால், பெண்ணைக் கையால் தொட்டு எழுப்ப முடியாதவளாய், சற்று தள்ளி நின்று குரல் கொடுத்தாள்.

''ம்...ம்'' சுகமான கனவிலிருந்து விடுபட விருப்பமில்லாத தர்மா புரண்டு படுத்தாள்.

''எழுந்திருக்கப் போறயா, இல்லையா? இந்தாடி... தர்மா...'' அம்மா மீண்டும் கூப்பிட்டாள்.

கணவனின் கழுத்தை அணைத்துக் கொண்டிருப்பதாக தலைகாணியை கட்டிக் கொண்டிருக்கும் கைகளை விலக்கியவாறே கண்களை மெதுவாய் திறந்தாள் தர்மா.

இது நாழிகை உணர்ந்த இன்பமெல்லாம் வெறும் கனவு தானா?

மாளிகை, நந்தவனம், ஏ. ஸி. அறை, ஆண்மை கொண்ட புருஷன், நீல ஷிபான் புடவை, முத்துச்சரங்கள் எல்லாம் கனவு தானா?

தூக்கம் கலைந்து போய் கண்களை நன்றாய் திறந்தாள் தர்மா.

தலைக்கு மேல் ஓட்டுக் கட்டிடம்: அதில் கரேலென்று பிடித்துக் கொண்டு சரம் சரமாய்த் தொங்கின ஒட்டடைகள்—எல்லாம் சேர்ந்து சிரித்து, நீ கண்டது கனவுதான் என்று வலியுறுத்தின.

கண்களைப் பழையபடி மூடிக்கொண்டு விட்டாள் தர்மா.

கனவை மறுபடியும் நினைத்துப் பார்த்து அந்த இனிமையான உணர்வைத் திரும்பப்பெற முயற்சித்தாள்.

இந்த மாதிரிக் கனவை அவள் நிறையக் கண்டிருக்கிறாள். மனசில் எழுந்த ஆசைகளின் குமுறல்களோ, இல்லை சதா சர்வகாலம் பகல் கனவாய் இப்படியே எண்ணித் தவித்ததாலோ என்னமோ தர்மாவுக்கு இப்படி ஒரு கனவு அடிக்கடி வரும்.

நினைவு தெரிந்த நாளாய் இந்தக் கனவு வரும் போதெல்லாம் அவள் புளகாங்கிதமடைந்து போவாள்.

நாளெல்லாம் அந்தக் கனவு தந்த போதையில் அமிழ்ந்து கிடப்பாள்.

வழக்கமாய்வரும் கனவுதான் இன்றும் வந்தது என்றாலும் அவளுக்கு ஏனோ நெஞ்சு இனிக்கவில்லை

இது கனவு—இனி நடக்கப் போவது எல்லாமே வேறுதான் என்ற கசப்பு எழுந்ததாலோ?

காலம் காலமாய் தர்மா காணும் இந்தக் கனவுக்கும், அவள் வாழும், வாழப்போகும் வாழ்க்கைக்கும் சம்பந்தமே இல்லை—ஒன்றே ஒன்றைத் தவிர—

கனவில் வரும் ஹீரோயினும் அழகி—
தர்மாவும் பிரமாதமான அழகி—
தந்த நிறம்—



கருத்த கூந்தல்—
வாளிப்பான உடல்—
குண்டு கண்கள்
கூர்மையான மூக்கு—
அவள் இயற்கையிலேயே நல்ல அழகி.

மற்றப்படி எல்லாம் கனவு—நிழல்...இனி என்றுமே நடக்க இயலாத அர்த்தமற்ற அபிலாஷைகள்...

தர்மாவுக்கு உண்மை உறைத்துக் கண்கள் கலங்கின.

''என்ன பொண்ணுடிம்மா இவ... இப்படி ஆகாத்தியம் பண்ணறா!...நீயும் ஒண்ணரை நாழியா மன்னாடறே... எழுந்துக்கறாளோ... பாரேன்...டீ தர்மா...வயசுக் கேத்த மாதிரி பாந்தமா நடந்துக்கோ. எழுந்துருடீ...நாளைக்கு நிச்சயதார்த்தம் வேறே...இப்படி நீ இருந்தா உன் புக்காத்துலே போய் என்ன குப்பை கொட்டி கிழிக்கப் போறே?... வயசாறது குதிராட்டம் பதினெட்டு... கொஞ்சமாவது அடக்க ஒடுக்கம் வேண்டாம்... எழுந்துருடீ... தர்மா...'' அம்மா கூப்பிட்டு இவள் எழுந்திருக்காததால் கோபம் கொண்ட பாட்டி கத்த ஆரம்பித்து விட்டாள்.

பாட்டி தொடங்கினால் லேசில் விடமாட்டாள். நாலு வீட்டுக்குக் கேட்கிற மாதிரி கத்தி விட்டுத்தான் ஓய்வாள்.

படுத்துக் கொண்டிருந்த தர்மா தடக்கென்று எழுந்து உட்கார்ந்தாள்.

''அதான் எழுந்துண்டே இருக்கேனே பாட்டீ... எதுக்காக இப்படி கத்தறே?''

''தூங்கு மூஞ்சியா இருந்துண்டு வாயைப் பாரு வாயெ... உன் வயசில நேக்கு கல்யாணமாகி ரெண்டு கொழந்தைகள் கூட பொறந்தாச்சு...கார்த்தால மூணு மணிக்கு எழுந்து முதுகெலும்பு ஒடைய வேலை பண்ணுவேன்...நீ...?...நீ ஆறு மணி வரைக்கும் தூங்கிட்டு மகாராணி மாதிரி எழுந்துக்கறே...நாளைக்கு அவாத்திலே

எங்களைத்தான் சொல்லப்போறா...'பொண்ணை வளர்த்திருக்கறதைப் பாரு'னு எங்களைத்தான் மொகத்திலே அடிக்கப் போறா...''

பாட்டி பேசிக்கொண்டிருக்கும் போதே தாங்குமுடியாமல் எழுந்த தர்மா, பாயைச்சுருட்டி வைத்துவிட்டுக் கொல்லைக் கட்டுக்குப் போய் விட்டாள்.

பாட்டி முன் கட்டில் கத்துவது இங்கே கேட்டது.

போதுபோய் போது விடிஞ்சா நிச்சயதார்த்தம்... கொஞ்சமாவது அடக்கம், மரியாதை இருக்கா பாரு... போனாப் போறது போனாப் போறதுன்னு நீங்க கொடுத்த செல்லம்... அவ இன்னிக்கு யாரையும் மதிக்க மாட்டேங்கறா... நாளைக்கு அவாத்திலே எப்படித்தான் குடுத்தனம் பண்ணப் போறாளோ, எப்படித்தான் நல்ல பேர் வாங்கப் போறாளோ...பகவானே...''

கேட்கப் பிடிக்காமல் காதைப் பொத்திக்கொண்டாள் தர்மா.

நாளைக்கு நிச்சயதார்த்தம்...

அப்புறம் கல்யாணம்.

இதே பேச்சுத் தானா?

சதா சர்வ காலமும்—இந்தப் பேச்சைத் தவிர வேறு கிடையாது?...

சீ? என்ன நிச்சயதார்த்தம்—என்ன கலியாணம் வேண்டிக் கிடக்கிறது?...

நினைக்க, நினைக்க தர்மாவுக்கு ஆத்திரமும், கோபமும் சேர்ந்து எழுந்தன.

கிட்டத்தட்ட பதினைந்து நாட்களாய் வீட்டில் எந்த மூலை முடுக்கில் நின்றாலும் இந்தப் பேச்சுதான்—அவளுக்கு சலித்துப் போய் விட்டது.

தர்மாவுக்கு வாய்த்திருக்கும் வரனைப் பற்றி இவள் குடும்பத்தில் எல்லாருக்குமே ஏக திருப்தி—



ஏன்?

அவர்களையும்விட பெரிய இடம்:திருக்காட்டுப்பள்ளி சாலையில் இருந்த சூரியபுரத்து மிராசுதாரரின் மூத்த பிள்ளை; வீட்டோடு இருந்து நிலபுலன்களைக் கவனிக்கிறான்;கெட்டிக்காரன்; எல்லாவற்றையும்விட தர்மாவின் அழகில் மயங்கி, தாங்களாகவே வலிய வந்து பெண் கேட்டிருக்கிறார்கள்.வரதட்சிணை இல்லை; திருவையாறுக்குக் கிட்டத்திலேயே பெண்ணுக்குப் புக்ககம்; அடிக்கடி அருமைப் பெண்ணைப் பார்த்துக் கொள்ளலாம்—இத்தனையுமாகச் சேர்ந்து தர்மாவின் குடும்பத்தாரை சமமதிக்கச் செய்து விட்டன!

ஆனால் தர்மா?

சூரியபுரத்து பையனை நினைத்தாலே அவளுக்கு ஏனோ குமட்டிக் கொண்டு வந்தது.

கறுப்பு—குட்டையான, தொப்பை விழுந்த உருவம்—தெற்றிப் பல்—சதாசர்வ காலமும் ஒரு நாலு முழ வேட்டிதான்...சவரணையாய் பாண்ட், ஷர்ட் போட்டுக் கொள்ளக்கூட தெரியாதபடி இப்படியா ஒரு கிராமாந்திரத்தனம்?

தர்மாவுக்கு பிடிக்கவேயில்லை.

சின்ன வயது முதற்கொண்டு என்னவெல்லாமோ மனசுக்குள்ளேயே கணக்குப் போட்டுக்கொண்டு, எப்படியெல்லாமோ கற்பனை பண்ணி அந்த உலகில் வாழ்ந்தவளுக்கு, இன்று நடக்கப் போவது வேறு என்னமோ என்று தோன்றியதால் எல்லாம் வெறுத்துப் போயிற்று.

''எனக்கு அவனைப் பிடிக்கலைம்மா... எனக்கு அவனைப் பிடிக்கலைப்பா...' என்று பல தடவைகள் வாய்விட்டுச் சொன்னபோது ''வாயை மூடிண்டு இருடீ... சின்னக் கொழந்தை உனக்கு என்ன தெரியும்?' என்று அம்மாவும் ''உன் சந்தோஷம் எங்களுக்கு முக்கியம் தர்மா—நீ நாளைக்கு ராணியாட்டம் இருப்பே... பாரேன்...நாங்க சொல்வதைக் கேளும்மா...'' என்று அப்பாவும் அடக்கி விட்டார்கள்...

அவர்கள் கவலை அவர்களுக்கு—

தர்மாவின் அழகுக்காகப் பெரிய இடம் வலிய வரும் போது தள்ளலாமா?—கூடாது. இந்த சம்பந்தத்தால் நாளைக்கு அந்தஸ்து உயரும்; இப்போது ரொம்பச்செலவு செய்யாமல் கல்யாணம் பண்ணிவிட்டால், கீழ் கடைகளுக்குச் செய்வது சௌகரியம்...இப்படி என்னென்னவோ அவர்கள் எண்ணி சந்தோஷப்பட்டார்களே தவிரவும் 'அழகுச்சிலை தர்மாவுக்கு, அவன் ஏற்றவனா? இவள் குணத்துக்குப் பொருத்தமானவனா? எங்கோ உயர சிறகடித்துப் பறக்க விரும்பும் பெண், இவனுக்குக் கட்டுப் பட்டு வாழ்வாளா?' என்றெல்லாம் சற்றும் யோசிக்கவில்லை.

தூங்கி எழுந்து வந்து தோய்க்கும் கல்மேல்உட்கார்ந்த தர்மா மறுபடியும் அவள் கனவில் மூழ்கிப் போனாள்.

''தர்மா...பல் தேய்க்கப் போனா எத்தனை நாழி?... மடமடனு வா உள்ளே...வேலைக்காரி தேய்ச்சு வைச்சிருக்கிற பாத்திரத்துலே தண்ணிவிட்டு அலம்பி எடுத்துண்டு வா...வாழைப் பூவை ஆய்ஞ்சு கொடுத்துட்டு குளிக்கப் போ...காவேரிக்குப் போய் தண்ணிகொண்டு வா...ம்...ம்... ஆகட்டும்...''

அவள் தாயும் தந்தையும் பாத்திரங்கள் வாங்க அன்று கும்பகோணம் போகப் போகிறார்கள். மறுநாள் நிச்சய தார்த்தத்துக்கு வைக்கத் தட்டுகள்; பேலா, சிமிழ்—கல்கண்டு, பழம், இத்யாதி, இத்யாதி வாங்க வேண்டாமா?

அம்மா பரபரத்தாள்.

குடத்தை எடுத்துக் கொண்டு படித்துறைக்குப் போன போது தர்மாவின் நெஞ்சத்தின் கனம் அதிகமாகிப் போனது.

நாளைக்கு நிச்சயதார்த்தம்.

பிறகு அந்தத் தெத்திப்பல்காரனுக்கு வாழ்க்கைப் பட்டு குடும்பம் நடத்த வேண்டும்.

மூன்று மணிக்கு எழுந்து, கிணற்றில் ஜலம் இழுத்து, பாசி படிந்த மேடையில் குளித்துவிட்டு, அழுக்குப்



புடவையை உடுத்திக்கொண்டு மொண மொணவென்று ஜபம் சொல்லிக்கொண்டே சமைக்க வேண்டும். 'பத்து—அதைத்தொடாதே, இதை சாணி போட்டு மெழுகு' என்று மாமியார் சொன்னபடி ஆட வேண்டும்; புருஷர்களுக்கு சாதம் போட்டுவிட்டு, சமையல் அறையிலேயே பழிகிடக்க வேண்டும்; வேலைக்காரி வரவில்லை என்றால் வரட்டி தட்டவேண்டும்; ஊர் பெண்களுடன் காவேரிக்குப் போய் வம்பு அடிக்க வேண்டும்; கழுத்துப் பிடறி அழுக்கைக்கூட துடைக்காமலேயே ராத்திரி தெத்திப்பல்காரனுடன் படுக்கப் போக வேண்டும்; அவன் முத்தமிடுவானோ? இட்டால் பல் குத்துமோ? அவனோடு சேர்ந்ததற்கு அடையாளமாய் உழக்கு உழக்காய் பெத்துத் தள்ள வேண்டும், வாழ்க்கையில் ஒரு சுகத்தையும் காணாமல் இந்த திருவையாறு மண்ணிலே மடிஞ்சு போகவேண்டும்.

இது தானா என் வாழ்க்கை?

இது தானா என் தலை விதி?

இதற்கு எதற்காக எனக்கு இவ்வளவு அழகு இவ்வளவு ஆசை?

எண்ணங்கள் மாறி மாறி எழ, தர்மாவின் மனசில் வெறி அதிகமாகப் போனது.

அம்மாவும் அப்பாவும் கும்பகோணத்துக்கு புறப் பட்டுப் போனதும், மத்தியானம் ஆவதற்குள் ஏதேதோ தீர்மானங்கள் உருவாகி அவளை உலுக்கியதால் மாலை மணி நான்கு அளவில் ஒரு முடிவுக்கு வந்தவளாய்—''எனக்கு இந்தக் கல்யாணம் பிடிக்கலை! நான் போறேன்—செத்துப் போக மாட்டேன்; அதனால் என்னைத் தேட வேண்டாம்—' என்று எழுதி அப்பாவின் பெட்டிக்குள் வைத்துவிட்டு, இரவு ஏழு மணிக்கு வீட்டை விட்டு ஓடிப் போனாள்.

---

நடு

1963 - 1971

# 1

பாட்டி தன்னைச் சுற்றி குழந்தைகளை உட்கார வைத்துக் கொண்டு கையில் சாதம் பிசைந்து போட்டுக் கொண்டிருந்தாள். நாலு பக்கத் தாழ்வாரமும், நடுவில் திறந்த முற்றமும் கொண்ட ஓட்டு வீடு அது. பௌர்ணமி நிலா வெளிச்சம் போட்டுக் காய, முற்றத்தில் அமர்ந்து கதை சொல்லிக்கொண்டே, ஒவ்வொரு உருண்டையாய் உருட்டிக் குழந்தைகள் கையில் போட்டாள் பாட்டி.

கிச்சலி சம்பா அரிசியை, தும்பைப் பூவாய் வடித்திருந்த சாதத்தில், மணத்தக்காளியைப் பொன்னிறமாய் வறுத்து செய்திருந்த வத்தல் குழம்பை விட்டு, நல்லெண்ணெயை ஊற்றி மணக்க, மணக்க, கை பொறுக்கும் சூட்டில் பிசைந்து பாட்டி போட்டுக் கொண்டிருந்த சாதத்தின் மணம்-வாசல் வரைக்கும் பரவி இருந்தது.

பாட்டிக்கு வலது கோடியில் இருப்பது தர்மாவின் தங்கை, பாப்பா. அடுத்து செங்கல்பட்டிலிருந்து வந்திருக்கும் பாட்டியின் அண்ணா பேரன்கள் இரண்டு. இடது கோடியில் தர்மாவின் கடைசித்தங்கை விசாலிகூட, கடுகத்தனைக்கு உட்கார்ந்து கொண்டு கையை நீட்டிக் கொண்டிருந்தது.

''ம்...ஆகட்டும்...ராகவா...கையைப் பிரிச்சு பிடி... பாப்பா தரையிலே கையை ஊனிண்டு சாப்பிடாதே... ஆகாது''.

கதையை நடுநடுவில் நிறுத்திவிட்டுக் குழந்தைகளிடம் கவனத்தைப் பாட்டி செலுத்தவும் பொறுமை இழந்த விசாலி ''சொல்லு பாட்டி...'' என்று சிணுங்கினாள்.

பாட்டி கதையைத் தொடர்ந்தாள்

''அப்பர் ஸ்வாமிக்கு உடம்பு ரொம்ப முடியாம போயிடறது... ஊர் ஊரா அலைஞ்சு தேகம் தேஞ்சு போயிடறது. ஆனாலும் அவர் மனசு வைராக்கியம் மட்டும் கரையலை... எப்படியாவது என் அப்பன் சிவனை பார்த்தே தீருவேன்னு உறுதியோடு வந்துண்டே இருந்தார்... என்னடீ... பாப்பா கையிலே சாதம் அப்படியே இருக்கு?... ம்...''

இன்னும் ஒரு ரவுண்டு வத்தல் குழம்பு உள்ளே போனது. பெரிய கற்சட்டி ஒன்றில் நிறையப் பிசைந்து கொண்டு வந்திருந்த சாதம், கதையின் வேகத்தோடு குறைந்துகொண்டே வந்தது. யாராவது பார்த்தால் திருஷ்டி படும் என்று நம்பிய பாட்டி, சின்னத் தாமரை இலை ஒன்றில் கற்சட்டி வாயை மூடிக்கொண்டு வலது கையை மாத்திரம் சட்டிக்குள் விட்டு சாதத்தை எடுத்துப் பரிமாறினாள்.

கதை மேலே போகிறது.

''திருவையாத்துக்கு வந்த அப்பருக்கு உடம்பு ரொம்ப கடினமாயிடுத்து... என் தெய்வமே! என்னைச் சோதிக்காதே'ன்னு புலம்பிண்டே இருக்காராம். பார்த்தார் ஸ்வாமி... இனிமேயும் பக்தனை சோதனை பண்ணறது தப்புனு அவருக்குத் தோணவே, அன்னிக்கு அப்பர் கனவிலே வந்து, 'பஞ்ச நதீஸ்வரர் கோவில் ஸூர்ய புஷ்கரிணியிலே ஸ்னானம் பண்ணி, என்னைப் பூஜை பண்ணுனு' சொல்லிவிட்டு மறைஞ்சுட்டார்-

கற்சட்டியில் உள்ள சாதம் தீர்ந்து போய்விட்டது. சற்றே தலையைத் திருப்பி சமயற்கட்டிலிருந்த மாட்டுப் பெண்ணிடம் ''மோர் சாதம் கொண்டு வரயா?'' என்று பாட்டி கேட்ட சில நொடியில் தர்மாவின் தாய் மோர் சாதம் நிறைந்த பாத்திரத்தையும், தொட்டுக் கொள்ள நார்த்த இலைப் பொடியையும் கொணர்ந்து மாமியாருக்கருகில் வைத்துவிட்டு மீண்டும் உள்ளே போய் விட்டாள்.



குழம்பு சாதச் சட்டியை நகர்த்தி வைத்தாள் பாட்டி.

''மோர் சாதம் வழியும்... கையை ஓட்டையில்லாமல் கெட்டியா பிடிச்சுக்கோங்கோ...'' என்று சொல்லிவிட்டு இஞ்சி, பச்சைமிளகாய், கடுகு போட்டு தாளித்திருந்த மோர்சாதத்தை நீட்டிய கையில் போட ஆரம்பித்தாள்.

''எது வரைக்கும் சொன்னேன்?''—

''ஸ்வாமி கனவுலே வராறாம்...'' பாப்பா எடுத்துக் கொடுத்தாள்.

''ஸ்வாமி சொன்னபடியே மறுநாள் கார்த்தால அப்பர் ஸூர்ய புஷ்கரிணியிலே குளிச்சுட்டு—மடியா, மணியிலே தியானம் பண்ணிண்டே எழுந்தாராம்... பளீர்னு ஒரு வெளிச்சம்... பார்த்தா ஜகஜ்ஜோதியா சிவபெருமான் தேவியோடு நிக்கறாறாம்...''

''ஆ... உறைக்கறது... பாட்டி ... ஆ...''

விசாலியின் வாயில் பச்சைமிளகாய் துண்டு அகப் பட்டு விட்டது.

''இதுக்குத்தான் மோர்சாதத்திலே பச்சை மிளகாய் வேண்டாம்டினு உங்கம்மாகிட்டே சொல்றேன்... அவ கேக்கறாளோ? ராஜம்... டீ... ராஜம்... விசாலிக்கு ஜலம் குடு... மிளகாயை கடிச்சுட்டு தவிக்கிறது...''

சொல்லு பாட்டி''

கதையின் வேகம் தடைபடுவது மற்ற] குழந்தைகளுக்குப் பிடிக்கவில்லை...

''இரேண்டாப்பா சித்த...ஒரு நிமிஷம் நிறுத்தக் கூடாதா?...எங்கே விட்டேன்? ம்...அதான் கதை முடிஞ்சுடுத்தே...ஸ்வாமி ப்ரத்யட்சமாகி, அப்பருக்கு மோட்சம் கொடுத்தார்...அவ்வளவுதான்...எழுந்திருங்கோ...''

சாப்பாட்டுக் கடை முடிந்து, அனைவரும் எழுந்து விட்டார்கள்.

பாட்டி கதை சொல்லுவது மிகப் பிரசித்தம்—தெருக் குழந்தைகளெல்லாம் கூட வந்து, கையை நீட்டிக்கொண்டு உட்கார்ந்து விடும். ஆனால் தர்மா மட்டும் இதற்கு விதிவிலக்கு 'எனக்குக் கையிலே சாதம் வாண்டாம்—தட்டிலே போட்டுடு' என்று சமையற்கட்டிலேயே உட்கார்ந்து விடுவாள்.

திருவையாறு ஸ்வாமியைப் பற்றி பாட்டி விதவிதமாய் கதைகள் சொல்லுவதை எத்தனையோ முறைகள் கேட்டிருந்த தர்மாவுக்கு இப்போதெல்லாம் அக்கதைகள் அலுப்பைத் தந்தன.

சும்மா என்ன...'அப்பர் வந்தார்...ஸ்வாமி மோட்சம் கொடுத்தார் என்று ஒன்று; ஸுரத மகாராஜாவுக்கு குழந்தைகள் இல்லை; இந்த ஸூர்ய புஷ்கரிணிலே ஸ்னானம் பண்ணி வட கைலாச நாதரை ஆராதனை பண்ணியதும் சந்தானபாக்கியம் உண்டாயிடுத்து...என்று இன்னொன்று—இப்படி எத்தனையோ கேட்டுக்கேட்டு அவளுக்கு சலித்து விட்டது.

ஏழு, எட்டு வயசு வரைக்கும்கூட அவளும் இக்கதைகளை ரசித்திருக்கிறாள். இப்போதுதான் ஒரு சில வருஷங்களாக இக்கதைகளெல்லாம் அவள் நெஞ்சில் நிற்பதில்லை

பாட்டி கதைகளைக் கேட்டுக்கொண்டு, மாட்டு வண்டியில் உள்ளூர் பள்ளிக்குப் போய் வந்து, திருவை



யாறில் வாழும் பல சாதாரண சின்னப் பெண்களைப் போல இருந்த அவளுக்கு, முதன் முதலில் இதெல்லாம் பிடிக்காமல் போனது, தம்பி சேதுவுக்கு மொட்டை செலுத்த இராமேஸ்வரம் போய், மதுரையில் ஒன்றுவிட்ட பெரியப்பாவின் வீட்டில் சில நாட்கள் தங்கிவிட்டு வந்தார்களே அப்போதிலிருந்துதான்.

பெரியப்பா நகரத்திலேயே பிறந்து நகரத்திலேயே வளர்ந்தவர்; அவர் குடும்பமும் அப்படியேதான்.

எட்டு வயசு தர்மாவை ஒத்த குழந்தைகளெல்லாம் பச்சையும் வெள்ளையுமாக யூனிஃபார்ம் போட்டுக் கொண்டு, காலில் வெள்ளை சாக்ஸும், ஷூவுமாக கான்வெண்டில் படித்து, ஆங்கிலத்தில் வெளுத்துத் தள்ளிய போது, நாமும் அப்படி இல்லையே என்ற ஏக்கம் தர்மாவினுள் முதன் முதலாய் தோன்றியது.

வழவழவென்ற சாலையில் வழுக்கிக் கொண்டு ஓடும் காரில் செல்லும் பெரியப்பா குழந்தைகளைக் காணுகையில், மண்டையில் 'டொக்' 'டொக்' என்று இடிக்க இடிக்க தான் மாட்டு வண்டியில் பள்ளிக்குப் போவது அவள் நினைவில் வந்து நின்றது.

மேஜையில் உட்கார்ந்து அவர்கள் சாப்பிடுவதும், விதவிதமாய் உடுப்பதும் இவள் நெஞ்சை அள்ளியது.

தான் வாழ்வது பட்டிக்காட்டு வாழ்க்கை என்ற எண்ணம் பசுமரத்தில் அடித்த ஆணியாய் அவளுள் இறங்கி, நாகரீகப் பட்டின வாழ்க்கைக்காக ஆசைப்படும் தர்மாவாக அவளை மாற்றியதும் அந்த மதுரைப் பயணம் தான்.

ஊருக்குத் திரும்பி வந்ததும் அப்பாவின் அருமைப் பெண்ணான அவள் ''நானும் கான்வெண்டிலே சேர்ந்து படிக்கறேனப்பா... நேக்கும் இங்கிலீஷ் பேசணும் போல ஆசையாய் இருக்குப்பா...'' என்றபோது அவர், சின்ன

குழந்தையின் ஆசையைப் பாரேன்!' என்று சிரித்தார். அருகிலிருந்த பாட்டி மட்டும் ''பொம்மனாட்டிக் குழந்தைகளுக்குப் படிப்பு எதுக்குடா...? நாளைக்குக்கல்யாணம் பண்ணிண்டு குடித்தனம் பண்ணப்போறவளுக்கு படிப்பு எதுக்கு? இல்லை தஸ்புஸ்னு பேசி என்னாகணும்?...நீ படிக்கிற படிப்பே ஜாஸ்தி...'' என்றாள்.

''ராஜு, கமலா மட்டும் படிக்கலையோ?''

''ராஜு, கமலா...பட்டணத்துலே வாழறவா...அவா மாதிரியா நாம்ப இருக்க முடியும்? நம் ஆசாரமென்ன பழக்கவழக்கமென்ன?... அந்தப் பேச்சே இங்கே வாண்டாம்... ஆமாம்...''

அந்த வீட்டில் முழுக்க முழுக்க பாலாம்பா பாட்டியின் நாட்டாண்மைதான் கொடிகட்டிப் பறக்கும் என்று புரிந்திருந்த தர்மாவுக்கு, ஏமாற்றத்தால் கண்ணில் நீர் திரண்டது.

அருமைக் குழந்தையின் முகம் வாடிப் போவதைப் பொறுக்காத அப்பா ''நம்மூர்லே கான்வெண்ட் இல்லே, தர்மா...இருந்தா உன்னை சேர்க்கமாட்டேனா?...போ... போய் சாப்பிடும்மா...' என்று கனிவாய்பேசி, சமாதானப்படுத்தி மகளை அனுப்பினார்.

அதற்கப்புறம் இந்த ஊர், இந்தக் கடவுள் கதைகள், இந்தப் பழக்கவழக்கங்கள் எல்லாவற்றைக் கண்டதும் தர்மாவுக்குக் கொஞ்சம் கொஞ்சமாய் பிடிக்காமல் போகலாயிற்று.

''கதை சொல்லு பாட்டி...'' என்று அவள் தங்கை உட்கார்ந்தால்—இவளுக்கு ஏனோ கோபம் பொத்துக் கொண்டு வரும்.

''என்னடீ கதை... சும்மா கேட்ட கதையையே கேக்கறயே... அலுக்கலை?''...



'ம்ஹூம்...' என்று தலையாட்டிவிட்டு பாப்பா, பாட்டியிடம் கதை கேட்கப் போனால், இவள் வாசலில் இருக்கும் தந்தையைத் தேடி வந்து விடுவாள்.

''எனக்கு ராஜகுமாரி கதை சொல்லுப்பா. பறக்கற குதிரைமேல் ஏறிண்டு போனானே அந்தக் கதை சொல்லுப்பா...''... என்று தந்தையிடம் கெஞ்சுவாள்.

பெண் கேட்கிறாளே என்று அவரும் தனக்குத்தெரிந்த விதத்தில் ராஜகுமாரி கதையைச் சொல்லுவார்.

மதுரைக்குப்போய் அந்தக் குழந்தைகளோடு பழகின நாட்களில் 'ஆலிஸ் இன் வொண்டர் லாண்ட்', 'ஸ்னோ வொயிட் அண்ட செவன் ட்வார்ஃப்ஸ்' என்ற கதைகளைப் பற்றி அறிந்துகொண்டபோது, அவள் மனம் மேல்நாட்டுக் கதைகளில் வெகுவாக ஒன்றி, கான்வெண்ட், ஃப்ராக், ஹை இங்கிலீஷ்...மந்திர, தந்திரக் கதைகள், எல்லாம் சேர்ந்தது தான் ஜோரான நாகரிக வாழ்க்கை என்ற ஒரு எண்ணம் அந்தக் குழந்தை மனசில் உண்டாகிப் போனது

திருவையாறுக்கு வரும்போது மதுரைக்குழந்தைகளை கேட்டு வாங்கி வந்திருந்த ஓரிரு ஆங்கிலப் புத்தகங்கள், ஆலிஸ் இன் வொண்டர் லாண்ட் போன்ற சித்திரப் புத்தகங்களைத் தன் பொக்கிஷமாகக் கருத ஆரம்பித்தாள் தர்மா. நினைத்த போதெல்லாம் அப்புத்தகத்தை விரித்து வைத்துக்கொண்டு தானே ஆலிஸ் மாதிரி இருப்பது போலவும், அவள்அனுபவித்த அதிசயங்களைத்தானும்அனுபவிக்கப்போவது போலவும் கற்பனை செய்து பார்ப்பாள்.

தந்தையின் துணையுடன் மெல்ல அந்தப் புத்தகத்திலுள்ள எழுத்துக்களைக் கூட்டிப் படிப்பாள்—நாளாகஆக அக்கதையின் வாசகங்கள் அவளுக்கு மனப்பாடமாகவே ஆகிவிட்ட பிறகு, திறந்த வெளியில் உட்கார்ந்து கொண்டு உரக்க அந்த வசனங்களை மல்லிகைக்கொடியிடமும், அணிலிடமும், பச்சைக் கிளியிடமும் பேசிப் பார்ப்பாள்.

தர்மாவின் தந்தை ராமநாதன், பாரம்பரையாய் திருவையாற்றில் வாழும் குடும்பத்தைச் சேர்ந்தவர்.

தர்மாவின் பாட்டி—தாத்தாவிற்கு ராமநாதன் ஒரே பிள்ளை, அதுவும் தவமிருந்து பெற்ற பிள்ளை.

கிட்டத்தட்ட இருபதாண்டுகள் குழந்தைப்பேறு இல்லாமல் தவித்தபிறகு, ராமேஸ்வரம் சென்று. அங்கு ஒரு மண்டலம் விரதமிருந்து பெற்ற பிள்ளையானதால் தர்மாவின் தந்தைக்கு ராமநாதன் என்ற பேர்.

ராமநாதன் எட்டாவது வரைக்கும் படித்த பிறகு, அவர் தகப்பனார் அகாலமாய் மரணமடையவே, சின்ன வயசிலேயே படிப்பை விட்டுவிட்டு நிலபுலன்களைக் கவனிக்க ஆரம்பித்தார்.

ராமநாதன் ராஜத்தைக் கைப்பிடிக்கையில் அவருக்கு வயது இருபத்து மூன்று.

அடுத்த வருஷமே மாட்டுப் பெண் உண்டானபோது பாலாம்பாளுக்கு ஏக சந்தோஷம். 'எங்களை சோதித்த கடவுள் இப்பவாவது கருணையோடு இருக்கிறாரே!'' என்று குதூகலித்தாள்.

தங்க விக்ரகம் மாதிரி பெண் பிறந்தாள்—அம்பாளே பிறந்திருக்கா என்று எல்லோரும் ஒரு முகமாகச் சொன்னதால் ஊரின் அம்பாளான தர்ம சம்வர்த்தினியின் பெயரையே குழந்தைக்கு வைத்தார்கள்

தர்மாவின் அழகு காண்போர் யாரையும் மூக்கில் விரலை வைக்கத்தான் செய்தது.

எங்கேயிருந்து வந்தது இந்தத் தங்க நிறம்? யார் கொடுத்தது இந்த அழகு? என்று அனைவரும் சொல்லிச் சொல்லி மாய்ந்து போனார்கள்.

அழகும், சூடிகையும் ஒருங்கே அமைந்த தர்மா, செல்லப் பெண்ணாக வளர்ந்ததில் என்ன ஆச்சரியம்?



தர்மா பிறந்த மூன்றாம் வருஷம்,பாப்பா பிறந்தாள். முதல் பெண்ணுக்கு அம்மன் பேரை வைத்து விட்டதால் இவளுக்குப் பாலம் என்று தாயின்பெயரை வைத்துவிட்டு, அம்மா பெயரை எப்படிக் கூப்பிடுவது என்ற மரியாதை உணர்வால் 'பாப்பா' என்று கூப்பிட்டார் ராமநாதன்.

இரண்டு பெண்களுக்குப்பிறகு ராஜத்துக்கு ஒருகுறைப் பிரசவம் ஆயிற்று.

'வம்சத்துக்கு ஒரு பிள்ளை வேணுமே' என்று பாலாம்பாள் தவித்த தவிப்பு, சொல்லி மாளாது.

இரண்டு வருஷங்கள் கழித்து. தர்மாவுக்கு ஏழுவயதாகையில் ராஜம் மறுபடி பிள்ளையுண்டானாள்.

பேரன் பிறக்கவேண்டுமென்று பாலாம்பாள் வேண்டாத தெய்வமில்லை; செய்யாத பிரார்த்தனை இல்லை.

அத்தனையையும் முழுங்கிவிட்டு மூன்றாவது பெண் பிறந்தாள்.

'பிறந்திருப்பது பெண்' என்று தெரிந்ததும் பாலாம்பாள் அறைக்குள் போகவில்லை. அவ்வளவு ஏமாற்றம்...

''எங்கம்மா பேரை வைக்கலாமேன்னா...'' என்று ராமனாதனின் காதுக்குள் ராஜம் முணுமுணுத்ததால்-- ''ஏம்மா... விசாலம்னு பேர் வைக்கலாமா? நல்ல பேரு... கூப்பிட நல்லதா இருக்கும்... என்றார் மகன் தாயிடம். ''எதையோ வை'' என்று அசிரத்தையாய் சொல்லிவிட்டாள் பாலாம்பாள்.

ஆக, தர்மா, பாப்பா, விசாலம் பிறந்து வளர்ந்து கொண்டிருந்தார்கள்.

ராமநாதனுக்கு, சொத்து என்று பிரமாதமாகஇல்லாவிட்டாலும் குறைவில்லாமல் இருக்கும் அளவுக்கு இருக்கவே செய்தது.

திருவையாற்றிலிருந்து - ஒரு கல் தொலைவில் இருந்த நடுக்கடையில் கொஞ்சம் நிலமும், ஒரு வாழைத் தோப்பும் இருந்தது.

விளையும் நெல், வீட்டு உபயோகத்துக்குச் சரியாகி விடும். வாழைத் தோப்பு வருமானம்தான் மொத்தமாய் வருஷத்துக்கு எட்டு, பத்து ஆயிரம் என்று வரும்.

தியாகராஜர் சமாதிக்கு எதிரே இருக்கும் ஒற்றைத் தெருவழியாகப் போனால் வரும் பாலசாமி அக்ரஹாரத்தில் சொந்த வீடு. புறக்கடையில் ஒரு தென்னந் தோப்பு.

பசு ஒன்று கறந்ததால் பாலுக்குப் பஞ்சமில்லை.

என்னதான் இருந்தாலும் காலம் இருக்கிற இருப்பில் மூன்று பெண் குழந்தைகளை வளர்த்து — ஆளாக்கி நல்ல இடத்தில் ஒப்படைக்க இதெல்லாம் எந்த மட்டுக்கு?

இருப்பவைகளைக் காப்பாத்தினால் போதும், பிள்ளைக்கு ஆசைப்பட வேண்டாம்—என்ற வைராக்கியம் கொண்டு உள் அறையிலிருந்த படுக்கையை வாசற் திண்ணைக்கு மாற்றிக் கொண்டார் ராமநாதன்.

இரண்டு வருஷகாலம் வரைக்கும் பொறுத்துப் பார்த்தாள். பேரன் வேண்டும் என்ற ஆசை கொழுந்துவிட்டு எரிந்ததால் "நாளைக்கு எனக்கு நெய்ப்பந்தம் காட்ட ஒரு பேரன் வேண்டாமா?" என்று மெல்ல முணுமுணுக்க ஆரம்பித்தவள், நாளாவட்டத்தில் வெளிப்படையாகவே அழ ஆரம்பித்த போது, ராமநாதனின் வைராக்கியம் கரைந்து போயிற்று. பிறகு என்ன?

ராஜம் அடுத்தது உண்டானாள்.

"எங்க கவலை தீர்த்த கடவுளே! என் பிள்ளை வம்சத்தை வளர்த்துவிடு. குழந்தைக்கு உன் சன்னதியில் முதல் மொட்டை போடறேன்" என்று நெஞ்சுருக வேண்டிக் கொண்டு ஒரு ரூபாயை மஞ்சள் துணியில் முடிந்து



வைத்த பாலாம்பாளின் பிரார்த்தனை அந்தத் தடவை கடவுளுக்குக் கேட்டுவிட்டது.

சேதுராமன் பிறந்தான்.

தர்மாவுக்குப் பத்து வயதாகையில், குடும்பத்தோடு ராமேஸ்வரம் போய், சேதுவுக்கு மொட்டை அடித்து பிரார்த்தனை செலுத்தி வந்தார்கள்.

ராமநாதனின் எல்லாப் பெண்களுமே அழகுதான் என்றாலும் தர்மா மட்டும் தீப்பந்தம் போலத் தனியாகவே ஜொலித்தாள். சேதுராமன் பிறந்த பிறகு ராஜத்துக்கும், பாட்டிக்கும் அவனே செல்லப் பிள்ளையாகிவிட்டபோதும் ராமநாதனுக்கு மாத்திரம் தர்மாவிடம் உள்ள அலாதி வாஞ்சை குறையவேயில்லை.

தர்மாவை நினைத்தால் அவர் உள்ளம் நெகிழும். செதுக்கிவிட்ட தங்கச்சிலை போன்ற அவளைப் பார்க்கையில் பெருமிதம் வழிந்தோடும்.

தர்மாவை யாரும் கண்டித்தாலோ, ஏதும் வார்த்தை சூடாகச் சொன்னாலோ அவர் பொறுக்க மாட்டார்.

வயது ஆக ஆக, தந்தை கொடுக்கும் இந்த கண்மூடித்தனமான அன்பு, தர்மாவுக்கு 'தான்' என்ற அகந்தையை ஓரளவுக்குக் கொடுத்தது மட்டுமல்லாமல் 'நான் உசத்தி' என்ற உயர்வான எண்ணத்தையும், 'மற்றகுடும்ப நபர்கள் என்னை அனுசரித்துப் போக வேண்டும்' என்ற தவறான அபிப்பிராயத்தையும் வளர்க்க உதவியது என்றுதான் சொல்ல வேண்டும்.

## 2

திருவையாறு உயர்நிலைப்பள்ளி முன் மாட்டு வண்டி நின்றது. பையை எடுத்துக் கொண்டு கீழே குதித்தாள் தர்மா. அவளைத் தொடர்ந்து பாப்பாவும் இறங்கினாள்.

வண்டிக்காரனுக்கு அருகில் அமர்ந்திருந்த ராமநாதன் தலையை நீட்டி, "சாயரட்சை நான் சுருக்கத்திரும்பினா என்கூட வந்துடுங்கோ... இல்லேன்னா பொழுதோட ஆத்துக்கு போயிடுங்கோ. விளையாடறோம்—அது இதுனு நேரமாக்க வேண்டாம்... என்ன தர்மா?" என்றதும் 'சரி' என்பதுபோல தலையை ஆட்டினாள் தர்மா.

வண்டி நகர்ந்தது.

சினேகிதிகளைக் கண்டுவிட்ட பாப்பா, உள்ளே ஓடி விட்டாள்.

அது ஆண்களும், பெண்களும் சேர்ந்து படிக்கும் கோ—எஜுகேஷன் பள்ளி. அதை விட்டால் திருவையாறில் வேறு இல்லாதலால் 'தலை எழுத்தே' என்றுதான் பாதிப்பெற்றோர் தம் தம் பெண்களை அங்கு படிக்க அனுப்ப வேண்டியதாயிற்று.

மணி அடிக்கும் வரை கும்பலாய் மாணவர்கள் வாசலில் நின்று கொண்டிருப்பார்களாதலால், ரெண்டும் கெட்டான் வயசிலிருந்த தர்மாவுக்குப் பாப்பா மாதிரி ஓடவும் முடியாது—ரொம்பப் பெரியவளாய் தலையைத் தூக்கிக் கொண்டு நடக்கவும் தெரியாது. நித்தமும் வண்டியிறங்கி வகுப்புக்குப் போவதற்குள் உண்டாகும் சங்கடம் சொல்லி மாளாது.

பை ஒரு கையிலும், டிபன் பாக்ஸ் ஒரு கையிலுமாய் அவள் உள்ளே இருப்ப யனித்தனித்த போது, இன்னொரு மாட்டு வண்டி வந்து நிற்க, அதிலிருந்து அந்தப் பெண் இறங்கினாள்.

தர்மா மாதிரி ஆளை மயக்க வைக்கும் அழகாய்அவள் இல்லாவிட்டாலும் இலட்சணமாகவே இருந்தாள்.

அவள் பள்ளிக்குப் புதிசு போலிருக்கிறது.



வண்டியிலிருந்த பெரியவர் இறங்க முயற்சித்தபோது "நீங்க எறங்க வேண்டாம்ப்பா... நானே விஜாரிக்கண்டு போயிடறேன்..." என்று அவரைத் தடுத்துவிட்டாள்.

பள்ளி திறந்து கிட்டத்தட்ட நாற்பது நாட்களாகப் போகின்றன; எக்கச்சக்கமாய் புதுப்பாடங்கள் நடந்தாயிற்று. இந்தச் சமயத்திலா பள்ளியில் இவள் சேர்ந்திருக்கிறாள்?

"ஜாக்கிரதையா போம்மா... சாயங்காலம் வண்டி அனுப்பறேன்... அப்ப நா வரட்டுமா?" அவள் தந்தை கிளம்பி விட்டார்.

புதுப் பெண் என்பதால், பள்ளி வாசலில் நின்ற மாணவ, மாணவிகள் அவளை உற்றுப் பார்த்த மாதிரியே தர்மாவும் நோக்கினாள்.

பார்க்க, பார்க்க அவள் உள்ளூர்க்காரி இல்லை என்றே தோன்றியது.

வழ வழ வென்ற துணியில் பாவாடை, சட்டை...கால்களில் நூதனமான செருப்புக்கள் — தலையை இரட்டைப் பின்னல் போட்டு, நுனியில் ரிப்பனுக்குப் பதில் பளபள வென்ற மணி ஒன்றை வைத்துக் கட்டியிருந்தாள். அவள் புத்தகங்களை வைத்திருந்த பை எல்லோருடையதைப் போல காக்கியாகவோ, இல்லை 'ராமகிருஷ்ணா மளிகை வியாபாரம்' என்ன பெயரிட்ட சணல் பையாகவோ இல்லாமல், பட்டு நூல்களால், டிசைன் போட்ட தொங்கு பையாய், அழகாய் இருந்தது.

அந்தப் பெண் இறங்கினதிலும், சுற்றிப் பார்ப்பதிலும் ஒரு தனி கம்பீரம் இருப்பதாகத் தர்மாவுக்குத் தோன்றியது.

கிட்டத்தில் போய் அவள் பையை தடவிப் பார்த்தால் எப்படி இருக்கும்? எத்தனை அழகான செருப்பு! என்று

தர்மா வியந்து கொண்டிருக்கையிலே அவள் இவளை நோக்கி வந்தாள்,

''எக்ஸ்யூஸ்...மீ...போர்த்ஃபார்ம் 'பி' செக்ஷனுக்கு எப்படி போறதுனு சொல்லறயா?''

''ஃபோர்த்ஃபார்ம் 'பி' செக்ஷன்! அதுதானே தர்மா வகுப்பும்!

''அதுதான் என் கிளாஸ்கூட...நீ வா... நான் காட்டறேன்...'' இந்தப் பெண் தன்னோடு ஒரே வகுப்பில் படிக்கப் போகிறாள் என்ற எண்ணம் ஏனோ சந்தோஷத்தைக் கொடுக்க முன்னே நடந்தாள் தர்மா.

இவர்கள் வகுப்பை அடைவதற்கும் மணி அடிப்பதற்கும் சரியாக இருந்ததால், புதுப்பெண் பேர் மங்களா, அவள் கண்டீயூரிலிருந்து வருகிறாள் என்ற விவரங்களை மட்டுமே தர்மாவால் அறிந்து கொள்ள முடிந்தது.

டீச்சர் வந்தார்.

மங்களாவிடம் சில கேள்விகளைக் கேட்டுவிட்டு ''நீ போய் தர்மா பக்கத்திலே உட்கார்ந்துக்கோ...அவ உனக்கு ஹெல்ப் பண்ணுவா...'' என்று சொல்லி அனுப்பி வைத்தவர், தர்மாவை நோக்கி ''மங்களாவுக்கு ஸப்ஜெக்ட்ஸ்லே என்னென்ன பாடங்கள் நடந்திருக்குனு சொல்லிக் குடு தர்மா... அப்புறமா நான் அவளுக்குப் புரியாததைக் கத்துத் தரேன்'' என்றார்.

தர்மாவின் அருகில் வந்து உட்கார்ந்தாள் மங்களா.

அன்று பகல் இடைவேளையின் போது எல்லோரும் சேர்ந்து சாப்பிடப் போனார்கள்.

தன்னைப்பற்றின சில விவரங்களைச் சொன்னாள் மங்களா.

அவள் தந்தை இது நாள் வரை சென்னையில் ஒரு அலுவலகத்தில் வேலை பார்த்தாராம். இவள் அங்கேயே



ஒரு கான்வெண்டில் படித்து வந்தாளாம்—இங்கே கண்டியூரில் தாத்தா பாட்டிக்கு முடியாமை வந்துவிடவே இவர்கள் வரவேண்டி வந்து விட்டதாம்.

''உனக்கு அக்கா தங்கை எத்தனை பேருடீ?''

''உனக்கு எத்தனை வயசுடீ?''

''உன் செருப்பு ரொம்ப அழகாய் இருக்குடீ மங்களா-'' இப்படிப் பல பெண்கள் அவளை என்னென்னவோ கேட்ட போது ஒன்றுமே கேட்காத தர்மா, கடைசியில் வாயைத் திறந்து ''நீ கான்வெண்டிலேயா, படிச்சே? அப்போ இங்கிலீஷ் நன்னா பேசுவியா?'' என்று கேட்டாள்.

பெருமையாய் சிரித்தாள் மங்களா-பிறகு 'ஓ யெஸ்,' ஐ ஸ்பீக் வெரி குட் இங்கிலீஷ்'— என்றதும் அவள் மேல் தர்மா இது நாழிகை கொண்டிருந்த மதிப்பெல்லாம் நூறு மடங்கு உயர்ந்து போயிற்று.

''ஏ அப்பா! எத்தனை அழகா பெரியவா மாதிரி பேசறே!''

திரும்பச் சிரித்தாள் மங்களா—

''பூ! இது என்ன பிரமாதம் — நீயும் — விடாம என்னோட பேசிப்பாரு — உனக்கும் அதே மாதிரி ஒரு மாசத்திலே பேச வந்திடும்.

''நிஜம்மாவா?''

''நிஜம்மா தான்...''

இடது கையால் மங்களாவின் கையை அழுந்தப் பிடித்துக் கொண்டாள் தர்மா.

''எனக்கு இந்த மாதிரி இங்கிலீஷ்லே பேசணும்னு எத்தனை ஆசை தெரியுமா? இந்த ஊர்ல கான்வெண்ட் இல்லை... தஞ்சாவூருக்குப் போய் படிக்கணும்... அதுக்கு

ஆத்துலே சரிங்கலை...உன்னைப் பார்த்தா எனக்கு எத்தனை பெருமையா இருக்குத் தெரியுமா?''

தொஞ்சம் காணும் கனவுகளின் பிரதிபலிப்பு கண்களில் மின்னப் பேசிய தர்மாவை மங்களா பார்த்தாள். காலையில் வண்டியை விட்டு இறங்கினதுமே நிலாபோன்ற முகத்துடன் நின்று தன்னைக் கவர்ந்தவளை, இப்போது மறுபடி ஊன்றிய பார்வையில் 'ஒ!இவள் எத்தனை அழகு!' என்றே தோன்றியதால், அதை வெளியில் சொல்லவும் செய்தாள்.

''நீ எத்தனை அழகாயிருக்கே தர்மா... உன்னைப் பார்த்தா எனக்குப் பொறாமையா இருக்கு...''

ஒரு நிமிஷம் பரவசமாகிப் போனாள் தர்மா. ஆனால் மறுகணமே ''என்ன பெரிய அழகு வேண்டிக் கிடக்கு. உன்னை மாதிரி எனக்குப் பேசத் தெரியறதா? இல்லை உன்னை மாதிரி ஃபேஷனா இருக்கத் தெரியறதா? ஒண்ணும் இல்லையே'' என்று சலித்துக்கொண்டுவிட்டு ''மெட்ராஸிலே படிச்சவ இங்கே ஏன் வந்தே? கான்வெண்டிலே படிச்சப்புறம் இங்கே உனக்குப் படிக்கப் பிடிக்கறதா என்ன?'' என்றாள்.

''அப்பா, அம்மா இங்கே வந்தப்புறம் நான் மட்டும் அங்கேயிருந்து எப்படிப் படிக்கறது தர்மா? கஷ்டமாத்தான் இருக்கு—என்ன பண்ணறது?''

அருகிலிருந்த பெண் ஒருத்தி இவள் தலைப் பின்னலை எட்டி இழுத்து அதில் இருந்த மணியைத் தடவிப் பார்த்தவள் ''இது ஜோரா இருக்குடீ...எங்கே வாங்கினேடீ...'' என்று கேட்டாள்.

அந்தப் பெண் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாமல் மங்களா அவளை எதிர்க் கேள்வி கேட்டாள்.

''உன் பேர் என்ன?''



''மாலதி''

''இத பாரு மாலதி... இப்படி வார்த்தைக்கு வார்த்தை டீ போட்டுப் பேசாதே...இது எனக்குப் பிடிக்காது. என்ன கிராமாந்திர'' பேச்சு... வாடி, போடி, தோண்டின்னு— மங்களா மாலதியை முகத்தில் அடித்தாற்போலப் பேசி தோள்களைக் குலுக்கவும் சுற்றி இருந்த எல்லோருக்குமே முகம் இறங்கிப் போயிற்று.

ஒவ்வொருவராக எழுந்து போய் கை கழுவும் குழாயடியில் நின்று ''என்ன ராங்கித்தனம்! வாயைப் பாரு வாயை...மெட்ராசிலிருந்து வந்திருக்கிறதால இவளுக்குக் கொம்பு முளைச்சிருக்கா, என்ன? ராங்கி! ராங்கிக்கா'' என்று பேசிக் கொண்டார்கள்.

தர்மாவுக்கு மாத்திரம் மங்களா சொன்னது சரி என்றே தோன்றியது.

'இந்தக் கிராமாந்திரங்களுக்கு இந்த மாதிரி வாயிலே போடறவதான் லாயக்கு... மங்களா சொல்றது சரிதானே'...' என்ன 'டீ' இவாத்து வேலக்காரி மாதிரி...'

அன்று மாலை வீட்டுக்குப் போகும் வழியில் பாப்பா இவளை எதற்காகவோ 'டீ'-என்றபோது ''இனிமே 'டீ' போட்டுப் பேசாதே, பாப்பா...எனக்குப் பிடிக்கலை'' என்றாள் தர்மா வெடுக்கென்று.

இரவுக்குள் பல தடவைகள் இவள் ஞாபகப்படுத்தியும் பாப்பா, திரும்பத் திரும்ப 'டீ' போட்டபோது தர்மாவுக்கு கோபமே வந்துவிட்டது.

அம்மா, அப்பா, பாட்டி பெரியவர்கள்—அவர்களை ஒன்றும் சொல்ல முடியாது. ஆனால் இவளைவிட சின்னவர்கள் இவள் பேச்சைக் கேட்டுத்தானே ஆகவேண்டும்.

இரவு தூக்கம் வந்துவிட்ட நிலையில் ''டீ தர்மா-எனக்குப் படுக்கை போட்டுத் தாடி, தூக்கம் வரது'' என்ற

கடுகடுத்தபடி நின்று கொண்டு விசாலி கேட்டபோது பளார் என்று முதுகில் ஒன்று வைத்து விட்டாள்.

''கழுதை! நானும் சாயங்காலத்திலேந்து 'டீ' போடாதே, போடாதேங்கிறேன்—'டீ' தர்மாவா? இன்னொரு தடவை மரியாதை இல்லாம பேசினயோ பிச்சுப் பிடுவேன் பிச்சு?'' என்று மிரட்டினாள்.

''என்னாச்சுடிம்மா இந்தப் பொண்ணுக்கு? திடீர்னு துர்வாசராட்டம் கத்தறது?...'டீ' போட்டா என்ன மனுஷா தேஞ்சா போயிடுவோம்? அதுக்காக எதுக்கு கொழந்தையை அடிக்கணும்?... என்னமோடிம்மா...' அழுது கொண்டிருந்த விசாலியைப் பாட்டி அணைத்துத் தேற்றினாள்

''கிராமாந்திரங்கள்...எல்லாம் அசல் பட்டிக்காடுகள்!'' என்று தனக்குள்ளேயே முணுமுணுத்துக் கொண்ட தர்மா தன் படுக்கையை விரித்துப் படுத்து, கண்களை இறுகமூடிக் கொண்டாள்.

இப்படி ஆரம்பித்த தர்மா, மங்களா பிணைப்பு நாட்கள் இருபது ஆவதற்குள் இறுகிப் போயிற்று.

ஏற்கனவே நடந்து முடிந்த பாடங்களைத் தெளிவாய் தர்மா எடுத்துச் சொல்லுவாள். 'உனக்கு எத்தனை மூளை தர்மா...' என்று பாராட்டிக் கொண்டே மங்களா படிப்பாள்.

மங்களா வளர்ந்தது, கான்வெண்டில் படித்தது, கோடம்பாக்கத்தில் ஷூட்டிங் பார்த்தது, விடுமுறைக்கு ஒரு சமயம் பம்பாய் போனது, வீட்டில் எத்தனை தினுசு உடைகள் வைத்திருப்பது என்பது பற்றியெல்லாம் கதையாய் அவள் சொல்லுவாள்; இவள் கேட்பாள்.

ஒரு மாச காலம் ஆன பிறகு 'எங்காத்துக்கு ஒரு நாள் வாயேன்' என்று மங்களா கூப்பிட்டதால், ஒரு ஞாயிற்றுக் கிழமை,ராமநாதன் வயலுக்குச் செல்லும் போது,இவளும்



கூடவே போனாள். திருவையாற்றிலிருந்து தஞ்சை போகும் சாலையில் முதலில் நடுக்கடை; பிறகு கண்டியூர்.

அப்பா தோட்டத்தில் இறங்கிக் கொண்டார். ''உன் சினேகிதியாத்துக்குப் போயிட்டு ஒரு மணி நேரத்திலே வந்துடு...சாப்பாட்டுக்குப் போகணும்!'' என்று மகளைச் சொல்லி அனுப்பி வைத்தார்.

கண்டியூரிலிருந்து திருப்பூந்துருத்தி போகும் சாலையில் மங்களாவின் தாத்தா வீடு இருந்தது.

தர்மாவுக்காக அவள் வாசலிலேயே காத்து நின்றிருந்தாள்.

மங்களா அவள் பெற்றோருக்கு ஒரே குழந்தை. அவள் தாய் சின்னப் பெண்ணாக இருந்தாள். தர்மாவின் அம்மாவைப் போல மடிசார் கட்டாமல், முன் கொசுவம் வைத்துப் புடவை கட்டி, கொண்டை போட்டுக் கொண்டு கலகலப்பாக இருந்தாள்.

மங்களாவின் சாமான்களைப் பார்த்து மலைத்துப் போனாள் தர்மா.

எத்தனை பாவாடைகள்; ஃப்ராக்கூட இருந்தன! தலைக்கு கட்டும் மணிகளில் எத்தனை வகைகள்! செருப்பே நாலு ஜதை வைத்துக் கொண்டிருந்தாளே! அப்புறம் வெள்ளையாய் ஒன்று, ரோஸ் நிறமாய் ஒன்று, கட்டியாய் ஒன்று என்று எத்தனை தினுசு முகப்பவுடர்கள்!

''இதைப் பாரு தர்மா...''என்று ஒரு சின்ன பெட்டி ஒன்றை எடுத்து நீட்டினாள் மங்களா.

ஜாமெட்ரி பாக்ஸ் போல சின்ன தகரப் பெட்டி. மேலெல்லாம் வெள்ளி போல ஜிலுஜிலுத்தது.

'திறந்து பாரேன்.'

தர்மாபெட்டியைத் திறந்ததும் 'டிங் டிங்', 'டங் டங்' என்று வெகு இனிமையாய் பாட்டு எழ, அது நாழிகை

படுத்துக் கொண்டிருந்த ஒரு சின்ன பிளாஸ்டிக் பொம்மை எழுந்து ஆட ஆரம்பித்தது.

இந்தப் பக்கம் பவுடர் கொட்டிக் கொள்ள குழி, மெத்தென்று பூசிக்கொள்ளும் வெல்வெட்.

இத்துனூண்டு பென்சில் பாக்சில் எத்தனை அழகு!

பிரமித்துப் போனாள் தர்மா.

''ஏ! அப்பா! இது என்ன மங்களா—சின்னப் பெட்டி திறந்தா பாடறது. மூடினா நின்னுடறது... எவ்வளவு அழகா இருக்கு!...''

''இது ஒரு புதுமாதிரி பவுடர் பாக்ஸ் தர்மா...அப்பாவோட சிநேகிதர் சிங்கப்பூர்லேந்து கொண்டு வந்தார்... என் கிட்டே ரெண்டு இருக்கு...நீ வேணா ஒண்ணு எடுத்துக்கோ...''

தர்மாவால் நம்ப முடியவில்லை.

''இதையா? இந்த உசந்த சாமானையா?''

அவள் மறுத்தாள்.

''எடுத்துக்கோ தர்மா... நீ மட்டும் மங்களாவுக்குக் கஷ்டப்பட்டு ஒரு மாசமா பாடம் சொல்லித் தரலையா? நோட்ஸ் எல்லாம் எழுதித் தந்து. படம் போட்டுத் தந்து, எவ்வளவு உபகாரம் பண்ணிஇருக்கே? மங்களா உன்னைப் பத்தி வாய் ஓயாம சொல்லுவா... எடுத்துக்கோம்மா...'' அவள் தாயே சொன்ன பிறகு, தர்மாவால் மறுக்க முடியவில்லை

வீட்டுக்கு வந்தவள் பவுடர் பெட்டியை ஒரே ஒரு முறை தங்கைகள் தம்பியிடம் காட்டிவிட்டுப் பொக்கிஷம் போல துணி சுற்றி உள்ளே வைத்து விட்டாள்.

எல்லோரும் ஒன்றாய் சாப்பிட உட்கார்ந்தபோது ''ஏதுடீ அந்தப் பெட்டி?'' என்றாள் பாட்டி.

''மங்களா கொடுத்தா!''



''அது யாருடீ, மங்களா?''

'மெட்ராஸ்லேந்து புதுசா வந்திருக்கா பாட்டீ''— இது பாப்பா.

''திருவையாத்துலேயா இருக்கா?''

இந்தப் பாட்டிக்கு எல்லாத்தையும் துருவித் துருவிக் கேட்டால்தான் நிம்மதி.

தர்மா பதில் சொல்லாமல் சாப்பாட்டில் கவனம் செலுத்தினாள்.

குழம்பு சாதத்தைப் பிசைந்து கொண்டிருந்த ராமநாதன் பேசினார்.

''கண்டியூர் சுந்தரேசன் பொண்ணும்மா.''

''எந்த சுந்தரேசன்?... அம்பி மாமா பிள்ளை சுந்தரேசனா?''

''ஆமாம்' என்பதுபோல் தலையாட்டினார் ராமநாதன்.

''பட்டணத்துலே வேலையாயிருந்தானே அவன் தானே? அவன் வேலை பண்ணிண்டு இருந்த ஆபீஸ்லே லஞ்சம் வாங்கினான்னு வேலையை விட்டு அனுப்பிச்சுட்டாளாமே... அந்த சுந்தரேசன் தானே?...கோவில்லே அம்புஜு சொன்னா; உன் கிட்ட நானே கேட்கணும்னு இருந்தேன்...''

ராமநாதனுக்கு இது முன்னாலேயே தெரியும். சுந்தரேசன் இன்கம்டாக்ஸ் ஆபீசில் வேலை பார்த்தவரென்றும், ஏதோ லஞ்சக் கேசில் மாட்டிக்கொண்டு சரியாக ருஜுவாகாததால் வேலையை மட்டும் இழந்தவர் என்பதும் பத்து நாட்களுக்கு முன்பே அவர் கேள்விப்பட்டதுதான்—அந்தப் பெண் மங்களா நல்ல பெண்ணாகத் தெரிந்ததால் தர்மாவிடம் இவர் ஏதும் சொல்லவில்லை.

''ஊர் பேசறதை வைச்சுண்டு நாம்ப என்னம்மா சொல்ல முடியும்? சுந்தரேசன் நல்லவன்; நமக்குத் தெரியும். கிட்டப் போனாத்தானே விவரம் புரியும்?...''

''எது எப்படியோ? அவாத்துப் பொண்ணோட நம்ப தர்மா எண்டாப்பா பழகணும்? வேற பொண்களா கிடைக்கலை?''

சாப்பிட்டுக் கொண்டிருந்த தர்மாவுக்கு அழுகை வந்தது. எதையாவது சொல்லித் தங்கள் சினேகிதத்தை நிறுத்தி விடுவார்களோ என்ற பயமும் எழுந்தது

''மங்களா ரொம்ப நல்ல பொண்ணு பாட்டி...நீ அவளைப்பார்த்தா புரிஞ்சுப்பே...எத்தனை ஜோரா இங்கிலீஷ் பேசறா தெரியுமா? அம்புஜ் பாட்டிக்கு வேற என்ன வேலை? ஊர்ல இருக்கற மனுஷா தலையை உருட்டுவா...'' தர்மாவின் கண்களில் நீர் முத்தாகத் திரண்டது.

பெண்ணின் கட்சிக்கு வந்தார் ராமநாதன்.

''அந்தப்பொண்ணு ரொம்ப சமர்த்தா இருக்காம்மா. ...நானும் பார்த்தேன்... வீணா எதையாவது பேசிக் கொழப்பாதே...ராஜம் மோர் கொண்டா...''

ஆரம்பத்தில் எழுந்த ஒரு சின்னத்தடையும் நீங்கி விட்டதால், அடுத்த ஒரு ஆண்டுக்குள் தர்மா, மங்களாவின் நட்பு மேலும் வளர்ந்து, பள்ளியில் மட்டுமல்லாமல், சனி, ஞாயிறு கிழமைகளிலும் ஒன்று மங்களா திருவையாறிலோ அல்லது தர்மா கண்டியூரிலோ, இரவைத்தவிர பாக்கிப்பொழுதெல்லாம் ஒன்றாகக் கழிப்பது எல்லோருக்கும் சகஜமாகிப் போனது

## 3

**ப**ள்ளி முடிந்து வீடு திரும்பின தர்மா வாசற்படி ஏறி, முன் கட்டைத்தாண்டி கூடத்தைக் கடந்து, அலமாரியை அடைந்து, அதில் தன் பையை வைத்தான். அவனுடைய அலமாரி அது. அதை யாரும் அவன் உத்தரவின்றித் தொடக்கூடாது சின்னவயசிலிருந்தே தர்மாவின் காரியங்கள் நேர்த்தியாய் சுத்தமாய் இருக்கும். தூசி தும்பில்லா



மல் புத்தகங்களை அடுக்கி, பென்சில், ரப்பர், பேனா முதலியவைகளை ஒரு டப்பாவில் போட்டு ஓரமாய் வைத்து, அது அதை அதனதன் இடத்தில் அழகாய் வைத்திருப்பான். இரண்டே தட்டுகள் கொண்ட அந்த அலமாரியின் மேல் தட்டில் பள்ளி சமாசாரங்கள்; கீழ் தட்டில் அலங்காரப் பொருட்கள்—பவுடர், மை, கலர்சாந்து, ரிப்பன், ஸ்லைட், வளையல்கள், மங்களாவிடமிருந்து பெற்றுவந்த பவுடர் பெட்டி இப்படி. அன்றாடம் சாமான்களைத் துடைத்து வைத்து விட்டுக் கதவைச் சாற்றிக் கொண்டு பள்ளிக்குப் போனால், மறுபடி இவன் வந்து தான் திறக்க வேண்டும். நடுவில் யாராவது பென்சில் எடுத்தேன்,ரப்பர் எடுத்தேன் என்று திறந்து எதையாவது எடுத்தால் அன்றைக்கு பிடித்தது அனர்த்தம்.

பெண் செய்யும் விதரணையான காரியங்களால் ராமநாதனுக்கு ஏகப் பெருமை.

''எங்க தர்மாவிற்கு என்ன குறைச்சல்? பார்க்கறதுக்கு சாட்சாத் அம்பாள். தலை பூராவும் மூளை—படிப்போ கேட்க வேண்டாம். கைக்காரியங்கள் வெகுஜோர். கண் பார்த்தா கை செய்யறது... பெரியவளானாக்க எனக்கு, எனக்குனு இவளைக் கொத்திண்டு போக க்யூ வரிசை நிக்கப்போறது...நீ வேணாப் பாரேன்...'' என்று அடிக்கடி பெண்டாட்டியிடமும் தாயிடமும் பீற்றிக் கொள்வதைத் தர்மாவே பல முறைகள் கேட்டிருக்கிறான்.

'சின்னப் பெண்ணுக்கு என்ன சவரணை!' என்று அக்கம் பக்கத்தார் வியக்கும்போது, இவனுக்கு ஒரே பெருமிதமாய் இருக்கும்.

நித்தம் போல அன்றைக்கு தன் சாமான்கள் ஒழுங்காக இருக்கின்றனவா என்று நோட்டமிட்டபடியே அலமாரிக்குள் பையை வைத்த தர்மா, கை கால் முகம் கழுவக் கொல்லைப் பக்கத்துக்குப் போனான்.

பள்ளியிலிருந்து வரும் குழந்தைகளுக்கு டிபன் செய்து கொண்டிருந்த ராஜம் சப்தம் கேட்டு ''யார் அங்கே?'' என்றாள், சமயற்கட்டிலிருந்தவாறே...

''நான் தான்...''

''யாரு—தர்மாவா?.....மூஞ்சி அலம்பிண்டுட்டயா, டிபன் சாப்பிட வா...''

சாதாரணமாய் கிராமப் பக்கங்களில் இருக்கும் அக்ரஹாரத்து வீடு போன்றதுதான், ராமநாதனின் இல்லமும்.

தெருவை ஒட்டின வீடு—வாசற்படி ஏறினால்இரண்டு பக்கமும் அகலமாய் திண்ணைகள்—தலையை இடிக்கும் வாசற்படியில் குனிந்து உள்ளே நுழைந்தால் 'கும்'மென்ற இருள்சூழ்ந்த முன்நடை. இடது பக்கச் சுவரை ஒட்டிப் பெரியதாய் நெல் வைக்கும் பத்தாயம்—நடையைத் தாண்டினால் நாலு பக்கமும் தாழ்வாரங்கள் ஓட நடுவில் திறந்த முற்றம். இடது, வலது தாழ்வாரத்திலிருந்து இரண்டு அறைகள் பிரிந்தன. அவை தான் உக்கிராண, படுக்கை, உடைமாற்றும், அதிகப்படி சாமான்கள் வைக்கும், இன்னும் என்னென்னவோ காரியங்களுக்கு உபயோகப்படும் அறைகளாக இருந்தன. கிழக்குத் தாழ்வாரத்தில் இருந்த வாசற்படியில் நுழைந்தால் சமயல் அறை. அதை ஒட்டியிருந்த நீள நடையைத் தாண்டி பின்கட்டு—கிணறும், தோய்க்கிற கல்லும் பெரிய தொட்டியும் உண்டு. தொட்டிக்குச் சற்றுத் தள்ளி நாலு பக்கமும் மொட்டைச் சுவரினாலான ஒரு சின்ன குளியல் அறை; அதற்குக்கதவும் கிடையாது: மேலே கூரையும் கிடையாது. பெரியவர்களெல்லாம் தேமெனென்று குளித்துவிட்டு வந்தாலும் உழக்குப்போல இருக்கையிலே ''நான் குளிக்கறேன்; யாரும் வராதீங்கோ'' என்று கத்திக்கொண்டே குளிப்பான் தர்மா.

பின் கட்டைத் தாண்டிப் படி இறங்கினால் கொல்லைக் காடு.



அடர்த்தியாய் வளர்ந்திருந்த மல்லிகை, கனகாம்பரம், டிசம்பர், அரளிச் செடிகளைத்தாண்டி மா, பலா, தென்னை மரங்கள் நிறைந்த பசுமைத்தோப்பு அம்பாரமாய் குவித்து வைத்திருக்கும் வைக்கப்போர். அருகிலேயே தரையில் முளை அடித்து பசுமாட்டைக் கட்டுவார்கள், சாணி போட்டு மொழுகின மாதிரி லழ, வழவென்ற அந்தத் தரையில் தான் பசு நிற்கும், உட்காரும், படுக்கும். அதற்கெனத் தனி கொட்டகை கிடையாது. வானம் தெரியாமல் படர்ந்திருந்த மாமரத்தின் இலைகளே கூடாரமாய் இருந்தது.

கிணற்றடியிலிருந்து வெளிவந்து கொல்லையில் ஓடும் சாண் அகல வாய்க்காலைத் தொடர்ந்து நடந்தால் ஐம்பதடி தள்ளி ஒரு சின்ன மண் சுவரானலான கக்கூஸ் அறை வரும்—அதற்கும் கதவு கிடையாது. கூரையும் கிடையாது. கக்கூஸைச் சார்ந்து வளர்ந்திருந்த முருங்கை மரத்திலிருந்து அவ்வப்போது கம்பளிப் பூச்சிகள் அந்த அறையில் விழுந்து எங்கும் நெளிந்து ஓடும்.

அந்த கக்கூஸ் என்றாலே தர்மாவுக்கு சிம்ம சொப்பனம். அன்றாடம் அங்கு போக நேரிடும் போது சின்னகைக் குட்டை ஒன்றில், துளி முகப் பவுடரைக் கொட்டிக் கொண்டு, அதை முகத்தில் வைத்து வாசனையை இழுத்தபடியே — நாற்றம் தெரியாமல் — காரியத்தை முடித்துக் கொண்டு ஒடி வந்து விடுவான்.

''கதவு இல்லாமல் குளிக்க முடியலைப்பா...''

''ராத்திரி நேரத்திலே வெளியே போறதுன்னா பயமா இருக்குப்பா...நாத்தம் சகிக்கலை...''என்றுதகப்பனாரிடம் தர்மா கெஞ்சுவது எல்லோருக்கும் சிரிப்பைத்தான் தரும்.

''இத்துணூண்டுக்கு இருந்துண்டு இவனுக்கு நாசூக்கைப் பாரேன்'' என்று அம்மாவும்—

''குளிக்கறதுக்கும், காலலம்பிக்கறதுக்கும் எத்தனை நாழி எடுத்துக்கப் போறது? இஞ்க நிமிஷம்கூட ஆகாது... அதுக்கு இதுக்கு மேல என்ன? இந்தப் பொறுமை கூட இல்லாம, என்னடிம்மா? நான் கொழைந்தையா இருக்க றச்சே இப்படி கிணறா, ஜலமா, மின்சார லைட்டா, இல்லை தனிக்குளிக்கிற அறையா? ஒண்ணும் இல்லை, தூங்கி எழுந்து வயக்காட்டிலே காலலம்பிண்டு, காவேரிக்கு போய் குளிச்சிட்டு, சமயலுக்கு வேணுங்கற தண்ணியை குடத்திலே நாலு நடை நடந்து கொண்டு கொட்டுவோம். இப்போ எங்களுக்கு என்ன— குறைஞ்சா போயிட்டோம்? பொண்ணாய் பொறந்தவா எப்படியும் இருக்கக் கத்துக் கணும்டி தர்மா'' என்று வழக்கம் போல பெரிய புராண மாய் பாட்டியும்—

''அக்ரஹாரத்திலே எல்லார் ஆத்துலேயும் இப்படித் தானேம்மா இருக்கு... நாம்ப மட்டும் என்ன பண்ண முடியும்? உனக்குனு ஒருத்தன் வருவான் பாரு — அப்ப உங்காத்திலே அத்தனையும் ஜோராய் மாத்திடலாம்... என்ன?'' என்று வேடிக்கையாய் அப்பாவும் பேசி அதோடு பேச்சை முடித்து விடுவார்கள்.

'அக்ரஹாரத்திலே எப்படி இருந்தா என்ன? நமக்கு வேணுங்கற சௌகரியத்தை நாம பண்ணிண்டா என்ன? மங்களாவாத்தில் கூடத்தான் இந்த மாதிரி சுக்கூல் இருந்த தாம்—அப்புறம் அவா வந்து ஜோரா புதுமாதிரி மாத்திக் கலையா? அதே தினுசுலே நாம்பளும் இடிச்சுக் கட்டினா என்ன?'' என்றெல்லாம் 'நெஞ்சில் கேள்விகள் எழுந்தா லும் பாட்டி வாய்க்கு பயந்து கொண்டு பேசாமல் இருந்து விடுவாள் தர்மா.

அன்றாடம் பள்ளியிலிருந்து திரும்பும் தர்மா கிணற்றடிக்குப் போய் கை கால்களை மட்டும் சுத்தம் செய்து கொண்டு உள்ளே திரும்ப மாட்டாள். வாசனை சோப்பினால முகத்தை அலம்பி, கூடத்திற்குச் சென்று



தலையை வாரி, பொட்டு இட்டுக்கொண்டுதான் சமையல் கட்டுக்கே போவாள்.

நேரம் கிடைத்தபோதெல்லாம் இவள் முகம் அலம்பு வதும், கண்ணாடிக்கு முன் நின்று இப்படியும், அப்படியும் பார்த்துக் கொண்டு தலையை வாருவதும், திலகம், வட்டம் நட்சத்திரம் என்று தினுசு தினுசாய் ஒரு நாளைக்குப் பத்து தரம் பொட்டு வைத்துக் கொள்வதும், காது வரை மையை நீட்டிக் கொள்ளுவதும், ஒத்தைப்பின்னல், இரட் டைப் பின்னல் என்று ரகம் ரகமாய் பின்னி அதை மடித்து ரிப்பன் வைத்து முடிச்சுப் போடுவதும் அவள் தாய் ராஜத் துக்கு வேடிக்கையாக இருக்கும்.

மங்களாவுடன் பழக ஆரம்பித்த பிறகு இந்த அலங் காரங்கள் கூடுதலாய்ப் போய், நவநாகரிகமாய்த் தோன்ற பெண் பாடுபடுவதைக் காணும் சமயத்தில், 'இவளுக்கு தான் என்னென்ன ஆசை! இப்படியெல்லாம் சிங்காரிச்சுக் கொள்ள யார் கத்து கொடுத்தா?' என்றும் தனக்குத் தானே நினைத்துக் கொள்வாள்.

'நிலா மாதிரி இருக்கற மொகத்துக்கு என்னடி அலம் பல் வேண்டிக்கிடக்கு? இது என்ன சினிமாக்காரியாட்டம் கண் மை, தனக்கு எல்லாம்?' என்று மகளைக் கேட்டாலும் 'இத்தனை சின்ன வயசிலேயே இவளுக்கு என்னெல்லாம் தெரிஞ்சிருக்கு!' என்று மனசுக்குள்ளேயே வியந்து போவாள்.

வழக்கம் போல அன்றைக்கும் கிணற்றிலிருந்து ஒரு வாளி நீரை இழுத்து வைத்துக் கொண்ட தர்மா சோப்பை எடுத்து வருவதற்காக குளியலறைக்குள் நுழைந்தாள். வீட்டில் உள்ள எல்லோருக்கும் ஒரு சோப் என்றால், இவளுக்கு மாத்திரம் தனி சோப், தனிப் பெட்டி.

அதிலும் இந்த மாசம் அப்பா வாங்கிக் கொடுத்தது ரொம்ப உயர்ந்தது ஆயிற்றே! ஏதோ வேலை விஷயமாய் திருச்சிக்குப் போன ராமநாதன் மலைக்கோட்டைக்கருகில் இருந்த பர்மா பஜாரைத் தாண்டிப் போக நேர்ந்தபோது

'மங்களா அமெரிக்கா சோப்பு பூசிண்டு இருந்தாப்பா... ம்... என்ன வாசனை தெரியுமாப்பா...'' என்று கண்களை வட்டமாய் விரித்துக் கொண்டு மூச்சை ஒருதரம் பெரியதாய் உங்களுக்கு இழுத்து—அதே நேரத்தில் அமெரிக்கா சோப்பின் மணத்தை அனுபவிப்பது போல பெண் பேசினது நினைவுக்கு வர, ஒரு கடையில் நுழைந்து ஐந்துருபாய் கொடுத்து வாங்கி வந்த சோப்பாயிற்றே! நீல நிறத்தில், துளிகுழைத்தாலும் நுரைத்து, தன் மணத்தினால் தர்மாவை மயக்கிய சோப்பாயிற்றே!

குட்டிச் சுவரின் மேலே சோப்புக்காகக் கையைஎட்டித் துழாவினவள், தன் சிகப்புப் பெட்டியை எடுத்தாள். எடுத்து பார்த்தவளின் முகம் சட்டென்று எழுந்த கோபத்தால் சிவந்து பளபளத்தது.

''அம்மா...''

அடித்தொண்டையிலிருந்து அவள் கத்தவும் என்னவோ என்று பதறிக் கொண்டு வந்தாள் ராஜம்.

''என் சோப்பை எடுத்தது, யாரு?''

''இதுக்காகவா இப்படிக் கத்தினே? நான் பயந்து போயிட்டேன்...உன்னதை யார் எடுப்பா? உன் சுபாவம் தெரியாதா?''

தாயை முடிக்கவிடாமல் கத்தினாள் தர்மா.

''யாரோ எடுத்து பூசிண்டு இருக்கா. இதப்பாரு கரைஞ்சு போயி... நுரைச்சிண்டு இருக்கிறதை... என்னதை எடுக்கக் கூடாதுன்னு எத்தனை தடவை சொல்லி இருக்கேன்? யாரு எடுத்தா?''

துருவித் துருவி, அவள் ஆத்திரத்துடன் கேட்கவும், அம்மாவுக்குப் பின்னால் ஒடுங்கி நின்றிருந்த விசாலி ''நான்தான் பூசிண்டேன்... ஆசையா இருந்தது...'' என்று ஒப்புக் கொண்டாள்.

அவ்வளவுதான்.



ஆத்திரம் அழுகையாய் மாற சோப்பையும், பெட்டியையும் மூலைக்கு ஒன்றாய் எறிந்துவிட்டு கொல்லைப் பக்கத்துப் படிக்கட்டில் போய் உட்கார்ந்து கொண்டாள் தர்மா.

பெண்ணுக்குக் கோபம வந்தால் என்னாகும் என்பது ராஜத்துக்குத் தெரிந்ததுதான்.

''ஏண்டி அவளுதை எடுத்தே... எடுக்காதேன்னு எத்தனை தரம் சொல்லியிருக்கேன்'' என்று விசாலியை கோபித்தவள், நங்கென்று அவள் தலையில் ஒரு குட்டு வைத்து, ''போ வாசலுக்கு'' என்று விரட்டிவிட்டு திரும்ப தர்மாவிடம் வந்தாள்.

''அவ தெரியாம எடுத்துட்டா... நான் கண்டிச்சுட்டேன்; இனிமே எடுக்க மாட்டா... நீ வாம்மா உள்ளே... ஸ்கூல்லேந்து வந்து வெறும் வயத்தோட இருக்கே... பசிக்கும்... வாம்மா தர்மா......''

'நான் ஒண்ணும் வரலை... எனக்கு டிபனும் வாண்டாம், ஒரு மண்ணும் வாண்டாம்... நீ போ...''

வயக்காட்டுக்குப் போயிருந்த ராமநாதன் அந்தநேரம் பார்த்து வந்து சேர்ந்தார்.

''ஏண்டி கொழந்தை அழறா? சந்தியால வேளையிலே வயசுக்கு வரப்போற பெண்ணை என்னத்துக்கு கொல்லையிலே உட்கார வைச்சிருக்கே?'' என்று மனைவியிடம் சிடுசிடுத்துவிட்டு மகளிடம் வந்தார்,

''என்னம்மா தர்மா?''

அப்பாவைக் கண்டதும் 'ஹோ' என்று மகள் அழ, அவர் துடித்துப் போனார்,

''ராஜம்...என்னடி விஷயம்? ஏன் கொழந்தை அழறா?'' விஷயத்தை அவருக்குச் சொன்னாள் ராஜம்.

இவ்வளவு அல்ப விஷயத்துக்கா இந்த ஆர்ப்பாட்டம் என்று ராமநாதன் நினைக்கவில்லை. மாறாக 'தர்மாவின் சாமான்களை யார் தொட்டாலும் அவளுக்குப் பிடிக்

காதே... இந்த விசாலி ஏன் எடுக்கணும்?' என்றே சிணுங்கிக் கொண்டார்.

அன்றைக்கு யார் என்ன கெஞ்சியும் கொஞ்சியும் வெங்கலப்பானை மாதிரி முகத்தைத் தூக்கிவைத்துக் கொண்ட தர்மாவின் கோபம் மாறவேயில்லை. சாயங்காலம் டிபன் சாப்பிடாமல் இருந்தவள், இரவு சாப்பாட்டையும் ஏனோ தானோ என்று கொறித்துவிட்டு எழுந்தாள். ''என்னடீ இந்தப் பொண் இப்படி அடம் பண்ணறது!''என்று பாட்டி கடிந்தபோது, கண்கள் சிவக்க அழுதாள். அழும் அருமை மகளைக் காணச் சகியாத ராமநாதன் 'அல வம்புக்கு யாரும் போகாதிங்கோ' என்று ஒரு அதட்டல் போட்டுவிட்டு, மாறுநாளே திருச்சிக்குப் பேரல் அதே சோப்பை ஒன்றுக்கு இரண்டாக வாங்கி வந்து 'இனிமேல் உன் சோப்பை யாரும் தொடாமே நான் பார்த்துக்கறேன்ம்மா...' என்று தேற்றின பிறகே சமாதானமுற்றாள் தர்மா.

சின்ன வயசு முதற்கொண்டே தர்மாவுக்கென்றே தனியாகக் காரியங்களைச் செய்து வந்ததால், பெரியவர்களுக்கு இது தவறானது என்பதோ, மற்ற குழந்தைகளுக்கும் இது அதிகப்படியான சலுகை என்பதோ புரியவேயில்லை.

தர்மா என்றால் தனி, தர்மா ரொம்ப உசத்தி என்ற எண்ணம் எல்லோர் மனதிலும் சகஜமாகிப் போனதால், இந்த சூழ்நிலையிலேயே ஓரளவுக்கு அகம்பாவத்துடன் வளர்ந்த தர்மா,நெஞ்சு-நிறைய இனிமையான கனவுகளையும், கற்பனைகளையும் தேக்கிக் கொண்டதில் என்ன விந்தை இருக்கிறது?

தர்மா வளர வளர, அவள் ஆசைகளும் பெருமளவுக்கு வளர்ந்து போயின.

தன்னைவிட மேல் மட்டத்தில் இருப்பவர்களையே அவள் கரண்பதும், அவர்களோடு தன்னை ஒப்பிட்டுக்



கொள்வதும் அவளுக்கு ஒரு பழக்கமாகவே ஆனதால், அவளிடம் இருக்கும் பொருள்களால் அவளுக்கு திருப்தி ஏற்படாமல் இன்னும் இன்னும் என்ற ஏக்கமே எழுந்தது.

வருஷத்திற்கு ஒருமுறை அப்பா எடுத்துக் கொடுக்கும் பட்டுப் பாவாடையால் அவளுக்குச் சந்தோஷம் எழவில்லை. 'அப்பாவுக்கு வாழைத் தோப்பில் இத்தனை பணம் வருகிறது; இன்னும் ஒரு பாவாடை வாங்கினால் என்ன? மங்களா காதில் போட்டுக் கொண்டு வந்தானே, அந்தமாதிரி வளையம் வாங்கித் தந்தால் என்ன?' என்று தனக்கு தானே ஆதங்கப்படலானாள்.

மேலும் ஒரு வருஷம் போனதும், பருவத்தை எட்டிபிடிக்கும் பெண்ணானதும், பெரியவளாகி விட்டோம் என்ற சுதந்திரத்தில் தன் ஏக்கத்தை மனம் விட்டுத் தந்தையிடம் கேட்கவே செய்தாள்.

'வருஷத்துக்கு ஒரே ஒரு பாவாடை சட்டைதான் நல்லதா வாங்கறே—தஞ்சாவூர் தெற்குவீதிக் கடையிலே என்னென்ன துணியெல்லாம் வைச்சிருக்கான் தெரியுமா? எனக்கு ஆசையாயிருக்கப்பா...'' என்றாள் மெல்ல—

பெண் சொல்லும் வார்த்தைகளைக் கவனமாய் கேட்டார் ராமநாதன். பிறகு ''துணியிலே கொண்டு போய் ஊர்ப்பட்ட பணத்தைப் போட நம்மகிட்ட கொட்டியா கிடக்கு?'' என்று பதிலுக்குக் கேட்டார்.

''வாழைத் தோப்பிலே நல்ல வரும்படி வரதேப்பா...''

''வாழைத் தோப்பு வரும்படிலேதான் அடுத்த வருஷ வீட்டுச் செலவு நடக்கிறது. அது தெரியுமோன்னோ? உனக்கும் வயசாச்சு, நகை நட்டுப் பண்ணி வைச்சாத்தானேம்மா சௌகர்யம்... திடீர்னு மாப்பிள்ளை அமைஞ்சா என்னபண்ணறது?''

2400

''சரி...துணி வாங்க வேண்டாம்... மங்களா போட்டுண்டு இருக்கிற மாதிரி காது வளையம் வாங்கித் தாப்ப...''

அப்பா வழியிலேயே போய் அவரை மடக்கவும், சரி என்று தலையை ஆட்டினார் ராமநாதன். ''அதுக்கென்ன வாங்கினாப் போச்சு...நீ அவகிட்டேந்து மாதிரி வாங்கிண்டு வா...நான் கும்பகோணம் போறச்சே பண்ணிக் குடுக்கறேன்'' தர்மாவுக்கு சாந்தோஷமான சந்தோஷம்.

ஆனால் இது மறுநாள் மாலை வரைக்கும் கூட நிற்கவில்லை.

மாதிரிக்கு அவள் வாங்கிக் கொண்டுவந்த வளையத்தைப் பாட்டி பார்த்தாள். 'எதுக்கி இது?' என்றாள் ராமநாதன் விவரம் சொன்னார்.

பாட்டிக்குக் கோபம் வந்துவிட்டது.

''வீட்லே இத்தனை பொம்மனாட்டிகள் நாங்க குதிர் குதிரா இருக்கோம், எங்களை ஒரு வார்த்தை கேட்காம கொழந்தைக்கு சரியாப் பேசறியே ராமநாதா. இந்த வளையமெல்லாம் நம்மாத்துக் கொழந்தைகள் போட்டுண்டா எப்படி இருக்கும்? லாம்பாடிச்சி போட்டுக்கற மாதிரி என்ன கோரம் இது? நன்னா பொண்ணு கேட்டா நீயும் சரின்னே...போ...''

சோப்பு, சீப்பு என்று சில்லரை விஷயங்களில் மகளுக்காகப் பரிந்து தாயிடம் பேசினாலும் நகை போன்ற பெரிய சமாசாரங்களில் எதிர்க்கத் தெரியாதவர்.

ஆயிரம் இருந்தாலும் ராமநாதன் தாய்க்கு அடங்கின பிள்ளை—வாயைத் திறக்கவில்லை. அப்பாவிடம் பேசி ஜெயிக்கும் தர்மாவுக்கு, பாட்டியிடம் தன் ஜம்பம் பலிக்காது என்று தெரிந்திருந்ததால், முகத்தை ஒரு முழத்துக்கு நீட்டி வைத்துக் கொண்டு, ஒரு நாள் முழுவதும் பேசாமல் இருந்தாள்.



நைலான் தாவணி கட்டிக் கொள்ளக் கூடாது. அடுப்படியில் போனால் பற்றிக் கொள்ளும்.

தழையத் தழைய பாவாடை உடுத்தக்கூடாது. இது என்ன தரை பெருக்குகிற மாதிரி பாவாடை?

நகம் வளர்க்கக் கூடாது. ஆசார அசுத்தம்.

இப்போது காதில் வளையம் போடக்கூடாது. லம்பாடிச்சி மாதிரி இருக்கும்.

என்ன பாட்டியோ—என்ன கட்டுப்பாடோ!

தர்மாவுக்குப் பற்றிக் கொண்டு வந்தது.

சீறிக் கொண்டு எழுந்த கோபம் அன்று மாலை 'கோல்ட் கவரிங்' வளையம் ஒன்றை அப்பா வாங்கி கொண்டுவந்து அவள் தனியாக இருக்கும்போது கொடுத்து ''பாட்டி வயசானவம்மா...அவ வளர்ந்த தினுசு வேறே... நன்னா இருக்கணும்னு உன் நலத்துக்குத்தான் சொல்லறா... புரிஞ்சுக்கோ கொழந்தே...'' என்ற போது 'பாவம் அப்பா...' என்று தோன்றியதால் அடங்கிப் போயிற்று.

தன் ஆசா பாசங்களுக்குப் பல விதத்திலும் வீட்டில் கட்டுப்பாடு இருக்கிறது என்பதைச் சரியாகப் புரிந்து கொண்ட தர்மா, எந்த விஷயங்களிலெல்லாம் அவள் சுதந்திரமாக இருக்க முடிந்ததோ அவைகளில் தன் கவனத்தை அதிகமாகத் திருப்பலானாள்.

வகுப்பில் மூன்றாவது, நான்காவது என்று வந்து கொண்டிருந்தவள் தனக்கு மிஞ்சி யாரும் இருக்கக் கூடாது என்ற உந்தலில் தீவிரமாய் படித்து, ஆண்களும், பெண்களும் சேர்ந்து படித்த அந்தப் பள்ளியில் வகுப்பில் முதலாவதாக வர ஆரம்பித்தாள்.

'மங்களா மாதிரி அலங்காரம் பண்ணிக் கொள்வதைத் தானே பாட்டி எதிர்க்க முடியும்! மங்களாவைப் போல

இங்கிலீஷ் பேசுவதைத் தடுக்க முடியுமா?' என்று ஒரு சவாலைத் தனக்குள் உருவாக்கிக் கொண்டு, அந்த ஒரு ஆண்டு கடப்பதற்குள் பிரமாதமாக ஆங்கிலத்தில் பேசவும் முற்பட்டாள் தர்மா.

## 4

கொல்லையில் தேங்காய் இறக்கிக் கொண்டிருந்தார்கள். காய் இறக்கும் ஆளுக்கு காவலாய் பாட்டியும் அவளுக்கு உதவியாய் தர்மாவும் நின்று கண்காணித்துக் கொண்டிருந்தார்கள்.

மேலேயிருந்து மரமேறி, காய்களைக் குலையுடன் அறுத்துத் தள்ளினால், அது பறக்கும் தட்டுப்போல பறந்து வந்து பொத்தென்று கீழே விழ, காய்கள் நாலு பக்கமும் சிதறி ஓடும்

''இளநீயா அறுக்காதேடா... மித்தின குலைகளை மாத்திரம் வெட்டு...''

பாட்டி கொல்லைப் படிக்கட்டில் உட்கார்ந்திருக்க, மரமேறி கீழே இறங்கினதும் காய்களை எண்ணி ஒருபக்கமாய் போட்டாள் தர்மா.

''எத்தனை தர்மா?''

''ரெண்டு சொமையும்-கூட பதினெட்டுக் காயுமிருக்கு பாட்டி...''

''பதினெட்டு காயைஉள்ளே கொண்டு போடு... ரெண்டு சொமைய இவன் எடுத்துண்டு போகட்டும்... ஆத்துக்கு வேணும்னா கொடி மரத்திலே மித்தின குலை இருக்கு... வெட்டிக்கலாம்...''

வேலைக்காரி உதவியுடன் காய்களை குளியலறையில் அடுக்கினாள் தர்மா.



''எவ்வளவுடா ஆச்சு? எம்பளதும், எம்பளதும்...'' பாட்டி மனக் கணக்கில் இழுத்த போது ''நூற்று அறுபது பாட்டி'' என்றாள் தர்மா.

''எளுபத்தஞ்சினு போடுக்கம்மா... வெலலாசி ஏறி கிடக்கு... பாத்து போறிடுங்க பாட்டிம்மா...'' மரமே கெஞ்சினான்.

''அக்ரஹாரத்துலே எல்லார் ஆத்துலேயும் எண்பதுனு தான் போடறா... நீ என்ன பேரம் பேசரே? வேணும்னா எடுத்துக்கோ... இல்லேன்னா போயிடு... காலங்காத்தால பிராணனை வாங்காதே...'' பெரிய மனுஷி போல கறாராய் பேசினாள் தர்மா.

அந்த ஊர் வழக்கம் தேங்காய்களை சுமை கணக்கில் எடுப்பது. ஊருக்கு ஊர் சுமை வித்தியாசப்படும். திருவையாறைப் பொறுத்தவரை ஒரு சுமைக்கு இருநாத்தி நாற்பது காய்கள்.

மரமேறியுடன் பேரம் பேசுகையில் ஒரு சமயம் மங்களா கூறினது நினைவுக்கு வர, தனக்குத்தானே புன்னகைத்துக் கொண்டாள் தர்மா.

''என்ன தர்மா எம்பளத்துநாலு எம்பளத்தஞ்சுனு சொல்லறே; அழகா, எண்பத்துநாலு, எண்பதத்தஞ்சுன்னா என்ன?'' என்று ஒரு தரம் இவள் கணக்கு போடும்போது கேட்டாள் மங்களா.

''இந்த ஊர் வழக்கம் மங்களா'' என்று சிரித்த தர்மா அன்று முதல் இந்த மாதிரி சொல்லுவதைவிட்டு விட்டாள்

மரமேறி தர்மா பேச்சுக்கு ஒப்புக்கொண்டு பணத்தை எண்ணிக் கொடுத்து காய்களை எடுத்துப் போனதும் இவர்கள் உள்ளே வந்தார்கள்.

மணி ஒன்பதை நெருங்கிக் கொண்டிருந்தது.

இன்னும் அரைமணியில் மங்களா வந்து விடுவாள். நாழியாகிவிட்டது.

பரபரவென்று தயாரானாள் தர்மா—தலையை வாரி, முகத்தை சீர்செய்து கொண்டவள் பாவாடை, தாவணியை மாற்றின பிறகு சாப்பிட உட்கார்ந்தாள்.

''இன்னிக்கு என்ன இவ்வளவு, அவசரம் தர்மா?''

''மங்களா வந்துடுவாம்மா... காலம்பர பத்து மணி ஆட்டத்துக்குப் போகப் போறோம்... பாட்டி கிட்டே சொல்லாதேம்மா'' குழந்தைத் தனமாய் கெஞ்சினாள் தர்மா.

''பணம்?''

''நேத்தே அப்பாகிட்ட வாங்கிண்டுட்டேன்ம்மா... இதோ பாரு' இரண்டு ரூபாய்ந்தாள் ஒன்று தர்மா கையில் சிரித்தது.

''சரி, சரி போயிட்டு வெயில் மண்டையை உடைக்க சுத்திண்டு இருக்காம சுருக்க வந்து சேரு...''

தர்மா கிளம்பி விட்டாள்.

''எங்கேடீ இந்தப் பதைக்கிற வெயில்லே?'' கழுகுக்கு மூக்கில் வேர்க்குமோ வேர்க்காதோ, இந்தப் பாட்டிக்கு வேர்க்கும்.

''மங்களாவோட சித்த வெளியிலே போயிட்டு வரேன் பாட்டீ'' பாட்டியின் பதிலுக்குக் காத்திராமல் இறங்கி ஓடினாள் தர்மா.

இன்றைக்கு பாட்டி ரொம்ப ஆட்சேபணை எதுவும் சொல்ல மாட்டாள் என்பது தர்மாவுக்குத் தெரியும்.

காலையிலிருந்து இரண்டு மணிநேரம் கொல்லையில் தேங்காய்களைப் பறிக்க, எண்ணிப் பணம் வாங்க தர்மா உதவினாளில்லையா? அதனால் இன்றைக்கு பாட்டி ஒன்றும் சொல்லமாட்டாள் என்று தெரியும்.

''தேரே மேரே சப்னே'' என்ற ஹிந்திப்படம் — கலர் படம். அதிகமாய், அத்திப் பூத்தாற் போல மார்னிங் ஷோவில் வரும் ஹிந்திப்படம்.



இரண்டு நாட்களுக்கு முன்பே சினேகிதிகள் இந்தப் படத்துக்குப் போவதென்று தீர்மானித்துவிட்டார்கள்.

''தேவ் ஆனந்த், மும்தாஜ் நடிச்ச படம் தர்மா — பிரமாதமாய் இருக்கும்...போலாமா?''

மங்களாவுடன் ஓரிரண்டு ஹிந்திப்படங்கள் போயிருந்ததால் தர்மாவுக்கும் ஆசை எழுந்தது.

''தனியாப் போக விடமாட்டாளே—''

''யூ டோண்ட் வொரி... நான் எங்கம்மாவைக் கூட இழுத்துண்டு வரேன்...''

சொன்னபடி மங்களா செய்வாள் என்பது தர்மாவுக்குத் தெரியும்... அவள் தாயும் கண்டிப்பாய் வருவாள்.

நேற்று அப்பா நல்ல குஷியாய் இருக்கும்போது இதைப்பற்றிக் கேட்டாள்.

''படத்துக்கா? வாண்டாம்மா... கூட்டம் வரும்மா...''

''இந்தப் படத்துக்கு வராதுப்பா... ஹிந்திப் படம்... இங்கே யாருக்குப் புரியப் போறது? மங்களா அம்மாவும் வறாப்பா... ப்ளீஸ்... அப்பா''

ராமநாதன் இளகிவிட்டார்.

'பாவம்—இந்தப் பெண்ணும்தான் எங்கே போறது? வரது? போகட்டும்' என்று பணமும் கொடுத்துவிட்டார்.

''பாட்டிக்குத் தெரிய வேண்டாம்மா. பெரியவளான பொண்ணை ஊர் திரியவிட்டேன்னு கோவிச்சுப்பா...''

தர்மாவுக்கு அது தெரிந்ததுதான்.

போன வருஷம் பெரிவளானதிலிருந்து கட்டுக் காவலை பாட்டி அதிகமாக்கி விட்டாளே!

அந்தத் தினம்—அதன் விளைவுகள் — மறப்பாளா தர்மா?

அன்று ஸப்தஸ்தானம் திருவிழா. ஊரே களை கட்டி இருந்தது. இடிபட்டுக் கொண்டு போவது தர்மாவுக்குப் பிடிக்காதுதான் என்றாலும்—குடும்பம் பூராவும் மங்களாவின் ஊருக்கே ஏழு பல்லக்குகளையும் பார்க்கப் போனதால் இவனும் போனான்.

''அன்னிக்கு எங்காத்திலேயே சாப்பிடலாணும்னு அப்பாசொன்னார் மாமா...பல்லக்குகள் எப்பவரதோ' என்னமோ?'' மங்களா கேட்டுக்கொண்டபடி ராமனாதன் குடும்பசமேதராய் காலையில் புறப்பட்டு, கண்டியூருக்குப் போய்விட்டார்

சுந்தரேசன்வீட்டில் சாப்பாடு ஆனதும் கண்டியூர் பிரம்ம சிரக்கண்டீஸ்வரர் கோவிலில் முன்னேற்பாடாய் இடம்பிடித்துக் கொண்டார்கள்.

தஞ்சாவூர் வட்டாரத்தில் வாழ்பவர்களுக்கு ஸப்தஸ்தானம் ரொம்ப விசேஷமான திருவிழா, இல்லையா?

திருப்பணம், திருச்சோற்றுத்துறை, திருவேதிக்குடி திருக்கண்டியூர், திருப்பூந்துருத்தி, திருநெய்த்தானம், திருவையாறு என்ற ஏழு ஸ்தலங்களிலிருந்தும் ஸ்வாமிகள் புறப்பாடு ஆகி, மேளதாளத்தோடு முத்தும், மணியும், ஜன்னாடியும் ஆன பிரமாதமான பல்லக்குகளில் ஆடிக் கொண்டு வரும்போது தரிசனம் செய்தால், மஹாபுண்ணியம் என்று ஆஸ்திகர்கள் கருதினதால், ஆங்காங்கே முண்டிக் கொண்டு நின்றிருந்தார்கள்.

கூட்டம் அதிகமாகிப்போனதால் கசகசப்பு உண்டாகி ''ஆத்துக்குப் போய் தூத்தம் குடிச்சிட்டு வறோம்'' என்று மங்களாவும், தர்மாவும் கிளம்பினார்கள்.

''எனக்கென்னமோ இந்தக் கூட்டங்களே பிடிக்கறதில்லை-'' என்றான் தர்மா.

''ஏனாம்?''

''கண்டவன் எப்படி முறைச்சிப் பார்க்கறான் பாரு...'

சிரித்தாள் மங்களா.



''இங்கே பார்க்கத்தானே பார்க்கறான்...மெட்ராஸிலே நம்ப மேலயே இடிப்பான்; சிலசமயம் கிள்ளக் கூடக் கிள்ளுவான்...''

''ஓ''

தண்ணீர் குடித்துவிட்டு வாசலுக்கு வந்தார்கள்.

திடீரென்று நினைத்துக் கொண்டு சிரித்தாள் மங்களா

''என்ன விஷயம்?''

''ஒண்ணுமில்லை—ஒரு வேடிக்கை பார்த்தியா? உங்க ஊர் அம்மன்பேரை எனக்கு வச்சிருக்கா...என்ன ஒத்துமை பார்த்தியா?

''இதிலே சிரிக்கிறதுக்கு என்ன இருக்கு மங்களா?''

''இல்லை தர்மா...நமக்கு அந்தந்த ஸ்வாமி பேர் கொண்டவனே ஆம்படையானா வந்த எப்படி இருக்கும்னு கற்பனை பண்ணினேன்...உனக்கு பஞ்சநாதப்—எனக்கு பிரும்ம சிரக்கண்டி...''

பாதிப் பேச்சிலேயே மங்களா சிரிக்க, அது தர்மாவுக்கும் தொற்றிக் கொண்டது

''நீயாவது அவனை 'பஞ்சு'னு கூப்பிடலாம்... நான் என்னனு கூப்பிடறது? பிரம்மான்னா, இல்லை சிரக்கண்டன்னா... இல்லை பிரம்ம சிரகண்ட...ஈ...'' கொனஷ்டையாய் இழுக்கவும் இருவருக்கும் சிரிப்புத் தாள முடியவில்ல.

வயிற்றைப் பிடித்துக் கொண்டு சிரித்த தர்மா ''ரொம்ப சிரிச்சுட்டேன்... வயிற்றை வலிக்கிறது மங்களா...'' என்றான். அந்த வயிற்று வலி சிரிப்பினால் அல்ல என்பது அன்று பகலே தெரிந்து போயிற்று.

மங்களா தர்மாவைவிட ஒரு வயது மூத்தவள்—ஆறு மாசங்களுக்கு முன்பு பெரியவளானவள்-

''இடுப்பை வலிக்கிறது...என்னமோ மாதிரி இருக்கு மங்களா'' என்று தோழி கையைப் பிசைந்ததும் மனசுக்குள் ஏதோ உறுத்த, மறுபடியும் தன் வீட்டுக்கு அழைத்துப் போனாள்; விவரத்தைப் புரிந்து கொண்டாள்.

தர்மா பெரியவளாகி விட்டது பெரியவர்களுக்குத் தெரிந்ததும், எழு பல்லக்குகளைப்பார்க்காமல் அவசரமாய் வீட்டுக்குத் திரும்பினார்கள்.

''கௌரி கல்யாணம்'' பாடிக்கோலமிட்டு மனையில் தர்மாவை அமர்த்திப் பாலும்,பழமும் கொடுத்த பாட்டி, தனியாய் இருக்கச் செய்தாள்.

நாலாம் நாள் ஊரறிய புட்டு செய்து, மங்களாவுக்கு ஸ்நானம் செய்வித்தார்கள். மறுநாள் வழக்கம்போல குளித்துவிட்டு தர்மா பள்ளிக்கு கிளம்பின ''போது எங்கேடீ...'' என்று பதறிப் போன பட்டிடியும், தாயும் கேட்டார்கள்.

''ஸ்கூலுக்குத்தான்'' என்றாள் தர்மா.

''நன்னாப் போனேடீ...இனிமே ஸ்கூலுமாச்சு... கிலும் ஆச்சு... தேமேனு பெரிய பொண்ணா லட்சணமா ஆத்தோட இரு''

என்னது... ஸ்கூல் கிடையாதா?

அதிர்ந்து சோனாள் தர்மா.

''இதுக்கும் நான் ஸ்கூலுக்குப் போறதுக்கும் என்ன சம்பந்தம...? நான் போவேன்...''

பாட்டிக்கு கோபம் வந்து விட்டது.

',போனாப் போறது, போனாப் போறதுன்னு இடம் கொடுத்தா பதிலா பேசறே? நம்மாத்திலே பெரியவளான பொண்ணு படிதாண்டக் கூடாது...இதுதான் வழக்கம்...நீ படிச்ச படிப்பு போதும்... வாய மூடிண்டு இரு...''

ஹோ வென்று அழுது விட்டாள் தர்மா.



''கிளாஸ்லே நான்தான் பஸ்ட்... அடுத்த வருடம் எஸ். எஸ். எல். சி. இப்ப நிறுத்த மாட்டேன், மங்களாவும் தான் பெரியவளானா... அவ படிக்கலையோ?''

''அவா ஆசாரமில்லாத குடும்பம்... அவா மாதிரியா நாம்ம?'...வாய மூடிக்கோ... நீ படிச்சு எந்தக் குடும்பத்தைக் காப்பாத்தனும்? பெரியவா பேச்சைக் கேளு...'' பாட்டி பதிலுக்குக் கத்தினாள்.

அன்று பூராவும் சாப்பிடவேயில்லை. தர்மா மூலையோடு மூலையாய் கிடந்தாள்.

மகளின் மன ஏக்கத்தைப் புரிந்து கொண்ட ராஜம் இரவு கணவனிடம் மாமியார் கோவிலுக்குப் போயிருக்கும் போது பேச்செடுத்தாள்:

''பாவம் குழந்தை... ஸ்கூலுக்குப் போகட்டுமே இந்தக் காலத்திலே எல்லோரும் தானே படிக்கறா?

மனைவி தாய் பக்கம் இருப்பாளோ என்று அஞ்சி இது நாழிகை வாய் திறவாமல் இருந்த ராமநாதன், அவள் தன் பக்கம் என்று புரிந்துகொண்டதும் ''நானும் அப்படித்தான் நினைக்கிறேன்'' என்று சொல்லிவிட்டு, மறுநாள் அம்மாவை எப்படியோ சரிகட்டி விட்டார்.

எல்லாரும் ஒரு பக்கமும், தான் மட்டும் இன்னொரு பக்கமும் இருப்பது புரிந்ததாலும், அக்ரஹாரத்தில் பல பெண்கள் பெரியவர்களாகியும் படிப்பைத் தொடருவதாலும் பாலாம்பாள் மௌனம் சாதித்து விட்டாள்.

தான் மீண்டும் பள்ளிப் படிப்பைத் தொடருவதில் பாட்டிக்கு அவ்வளவாக விருப்பம் இல்லாததைப் புரிந்து கொண்ட தர்மா, தன் காரியங்கள் சுலபமாய் நடக்க வேண்டுமென்றால், பாட்டி மெச்சும் பேத்தியாக இருக்க வேண்டும் என்பதையும் உணர்ந்து கொண்டு விட்டாள்.

அன்று கூட அப்படித்தான். விடிந்ததிலிருந்தே பாட்டி செய்யும் காரியங்களில், கூட மாட ஒத்தாசை

செய்து காலை படக்காட்சிக்குக் கிளம்பும்போது பாட்டி வாயைத் திறக்க முடியாமல் பண்ணி விட்டாள்.

தெருவில் இறங்கி, அக்ரஹாரத்தைக் கடந்து இவள் கொட்டகையை நெருங்கும்போது, மங்களாவும் அவள் தாயும் வாசலில் காத்திருப்பதைப் பார்த்து நடையை எட்டிப் போட்டாள்.

மூவரும் உள்ளே சென்று அமர்ந்து கொண்டனர். வழக்கமாய் காட்டப்படும் 'நல்வரவு' ஸ்லைடைத் தொடர்ந்து செய்திகள் ஓடி முடிந்ததும் படம் ஆரம்பமானது.

தன்னை மறந்து படம் பார்க்கத் தொடங்கினாள் தர்மா. அவளுக்குப் புரியாத வசனங்களை, தான் புரிந்து கொண்ட மட்டும் மங்களா மொழி பெயர்த்தாள்.

ஆஹா? என்ன அருமையான படம்—காதலுணர்வை எவ்வளவு மென்மையாகக் காட்டி இருக்கிறார்கள்!

கதையின் நிஜத் தன்மையில் ஒன்றிப்போனாள் தர்மா. கதாபாத்திரங்கள் அழுதபோது இவளும் அழுதாள். சிரித்தபோது சிரித்தாள். காதலித்தபோது நாணினாள்.

மும்தாஜ் தான்-பளிங்குப் பொம்மை மாதிரி எப்படி இருக்கிறாள்.

''மும்தாஜைப் பார்க்கறபோது எனக்கு உன் ஞாபகம் தான் வரது, தர்மா! நீ அவளை மாதிரியே இருக்கே...நல்ல நிறம், தூக்கின மூக்கு, உடம்பு தளதளப்பு...எல்லாம்...'' என்று மங்களா சொன்னபோது பரவசமாகிப் போனாள் தர்மா.

நிஜமாகவா?

நான் மும்தாஜ் மாதிரி இருக்கிறேனா? அப்போ, அவள் மாதிரியே நடக்க சிரிக்க ஒயிலாய் இருக்கக் கற்றுக் கொண்டால் எவ்வளவு கவர்ச்சியாய் இருக்கும்?



படம் முடிந்து வெளியே வந்தார்கள். படத்தைப் பற்றி தோழியிடம் மனம் விட்டுப் பேச ஆவல்; ஆனால் அவள் தாய்கூட இருந்ததால் அடக்கிக் கொண்டாள்.

மங்களா புரிந்து கொண்டாள்.

''நீ ஆத்துக்குப் போயிடும்மா...நான் கொஞ்சம் சாயங்காலமா வரேன்...''

''எப்படி வருவே?''

''எங்க வண்டிலே அனுப்பிடறேன் மாமி...''

மங்களாவின் தாயார் புறப்பட்டுப் போனாள்.

''ஆத்தங்கரைக்குப் போய் கொஞ்ச நாழி உட்காரலாமா?''

இருவரும் தியாகராஜர் சமாதிக்குப் போனார்கள். சமாதியை ஒட்டி ஓடின காவேரியில் கால்களை அலம்பிக் கொண்டு, நிழலாய் கவிந்திருந்த மரத்தடியில் உட்கார்ந்தார்கள்.

''ஸோ—ஹௌ வாஸ் த பிக்சர்?''

''எனக்கு ரொம்ப பிடிச்சது...உனக்கு?''

''எனக்கும்தான்...?'' கண்களை மூடிக்கொண்டாள் மங்களா. பிறகு ''லவ் சீன்ஸ் ரொம்ப நாச்சுரல் ஆக இருந்தது இல்லை?'' என்றாள்.

தர்மா பதில் பேசவில்லை.

மனசில் மீண்டும் அந்தக் காட்சியை நினைத்துப் பார்த்தாள்.

சைக்கிள் ஹாண்டில்பாரில் மும்தாஜை உட்கார வைத்துக் கொண்டு பாடிக்கொண்டு ஓட்டுகிறார் தேவ் ஆனந்த்.

அன்யோன்யமான காதல்—மனசு கிளுகிளுத்தது.

"இந்த மாதிரி லவ் சீன்ஸ் எவ்வளவு நன்னா இருக்கு... இதை விட்டுட்டு பார்க்கிலே ஓடறதும், கட்டறதும், புரளறதும்."

".........."

"பெரியவா பார்த்து பண்ணற கல்யாணத்தைவிட இதுலே ஒரு தனி சுகம் இருக்கும் போலத் தோணலை...? என்ன தர்மா பேசாமலிருக்கே?"

"நீ சொல்றது சரியாத்தான் தோணறது... ஆனா அதுக்கெல்லாம் நாம்ப ஆசைப்படறது எப்படி? ஆத்துலே தெரிஞ்சா முதுகுத் தோலை உரிச்சு ஊறுகாய் போட்டுடுவா?"

வாஸ்தவம்தான்—சினிமாவிலே வந்தது போல ஒரு கதாநாயகன் கிடைத்து காதலித்து, ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு கல்யாணம் செய்துக் கொண்டால் நன்றாகத்தான் இருக்கும் போலிருக்கிறது. ஆனால் அது சாத்தியமா? — இந்த கிராமந்திர சூழ்நிலையில்? இப்படி ஒரு அசாதாரண குடும்பத்து நடுவில் கற்பனை பண்ணிக் கூட பார்க்க, முடியுமா?

பட்டப் பகலாயிருந்த போதிலும், காவேரியின் குளிர்ச்சியாலும், பச்சை மரங்களாலும், தென்றலின் தழுவலாலும் வெயிலே தெரியாமல் சுகமாயிருந்தது.

கொஞ்ச நாழிகை பேசாமல் அமர்ந்துவிட்டு. "நாழியாறது போகலாம்" என்று கிளம்பி வீட்டுக்குப் போனார்கள்

அன்று இரவு முதன் முதலாய் கலர் கலராய் கனவு கண்டான் தர்மா. பச்சை பசேலென்ற காடுகள்—நடுவில் ஒத்தை அடிப்பாதை; காட்டுப்பூக்கள் வழியெல்லாம் சம்பளமாய் பரவிக் கிடக்கிறது. மும்தாஜ் மாதிரி அழகே உருவாக தர்மாவும், அகன்ற மார்பும் உயரமும் சிரிக்கும் கண்களும் கொண்ட ஒருவனும் கைகோர்த்துக் கொண்டு போகிறார்கள். அவளை ஓர் இடத்தில் அமரச் செய்து



கண்ணெல்லாம் காதலில் சிரிக்க, அவன் மரக்கிளையைப் பற்றி ஆட்டி, பூக்களை உதிர்க்கிறான். சிரித்து சிரித்து மலர்கிறாள் தர்மா.

மனசில் ஒரு மலர்ச்சி உண்டான இந்தக் கனவிற்குப் பிறகு, அடிக்கடி இப்படி பகல் கனவு காணுவதும், சிரிப்பதும், நெகிழ்வதும் தர்மாவுக்கு சகஜமாகிப் போனது.

## 5

அன்றோடு மங்களா, அவள் குடும்பம் ஊரைவிட்டு போய் ஒரு மாசமாகிவிட்டது. 'மங்களா இல்லாமல் என்னால் எப்படி இருக்க முடிகிறது?' என்று அன்றாடம் கேட்கும் கேள்வியை அன்றும் தனக்குத்தானே கேட்டுக் கொண்டாள் தர்மா.

அவளுடைய பேச்சு, சிரிப்பு, அலங்காரம், நாகரிகம் எல்லாமே மங்களாவுடன் போய் விட்டதாகக் கூடத் தோன்றியது.

ஐந்து வருஷ காலமா? எவ்-எவ்வளவு அன்யோன்யமாய் இருந்தார்கள். ஒரு விளையாட்டுச் சண்டை, மூஞ்சியைத்தூக்கிக் கொள்வது, ஏதாவது? ம்ஹூம் இல்லை.

அவளிடமிருந்து இவள் எத்தனை, எத்தனை தெரிந்து கொண்டாள்!

சின்ன வயசுக் குறையான 'இங்கிலீஷில் பேசணும்' என்பது அவள் மூலமாகத்தானே நிறைவேறியது!

காமிக்ஸில் ஆரம்பித்து—சார்லஸ் டிக்கன்ஸ், டுமாஸ் என்று தொடர்ந்து மனசைக் கிளுகிளுக்க வைக்கும் காதல் நவீனங்கள் முதலான புத்தகங்களைப் படிக்கும் அனுபவத்

இன்று தர்மாவின் ஆங்கில அறிவு வளர்ந்திருக்கிறதென்றால், அது யாரால்?

வகுப்பில் முதலாவதாக நின்றும், ஆங்கிலம் வெகு நேர்த்தியாக எழுத, படிக்கத் தெரிந்தும் சரளமாகப் பேச வராததை எண்ணி தர்மா குறைபட்டுக் கொள்ளும் போதெல்லாம் என்ன சொல்வாள் மங்களா?

''நீ சரியான அசடு தர்மா—இங்கிலீஷ்லே க்ளாஸ்லே நீதான் ஃபர்ஸ்ட்—பிரமாதமா எழுதறே, படிக்கிறே...பேச வரலைன்னு குறைபட்டுண்டா எப்படி? பேசிப் பேசிப் பழகினா, தானா வந்துடும்...யூ ஷுட் நாட் ஒர்ரி ஃபார் தட்...'' என்று எத்தனை முறை நம்பிக்கையூட்டியிருக்கிறாள்.

ஆரம்ப நாட்களில் 'காமிக்ஸ்' படிப்பதென்றால் தர்மாவுக்கு ஏக குஷி. டனால்ட் டக், மூன்று மருமான்கள்; அங்கில் ஸ்க்ரூஜ்— அதன் கருமித்தனம்—பக்ஸ் பன்னி; அது' எல்மர் ஃபட் ஐ ஏமாற்றும் விதங்கள்.

குப்புறப் படுத்துக் கொண்டு சுவரசியமாய் படித்துக் கொண்டிருப்பவள், தன்னை மறந்து 'கடகட' வென்று சிரித்துவிடுவாள்.

''இதென்ன பைத்தியம் மாதிரி!—தானே படித்துக் கொண்டு தானே சிரிக்கிறது? என்பது போல அம்மாவும் பாட்டியும் பார்ப்பார்கள்.

''என்னடி தர்மா— எதுக்கு சிரிக்கிறே?'' என்றாள் ஒரு சமயம் பாட்டி, பொறுக்க முடியாமல்—

''காமிக்ஸ்—பாட்டி, சிரிப்பு வரது...''

''அப்படின்னா?''

''கா மி க் ஸ் ன னா...காமிக்ஸ்...ம்...ஆ...தமாஷ் புத்தகம் பாட்டீ''



''என்ன தமாஷ்? எனக்கும் சொல்லேன்...நானும் சிரிக்கறேன்—''

காமிக்ஸ் கதையை பாட்டி கேட்கவும் தர்மாவுக்கு உற்சாகம் உண்டாக, ஒரு கதையை விளக்க ஆரம்பித்தாள்.

''வந்து பாட்டி...அங்கிள் ஸ்க்ரூஜ்னு ஒரு கோடீஸ்வரவாத்து...ஆனா மஹா கஞ்சன்...அதுக்கு டனால்ட் டக்னு ஒரு மருமான்...ஒரு சமயம் தன் பணத்தை யாரோ திருடப் போறான்னு ஸ்க்ரூஜுக்கு பயம் வந்துடறது... உடனே, ஹா...ஹா...உடனே அந்தப் பணப் பெட்டியை எப்படியெல்லாமோ ஒளிக்கப் பாக்கறது...ஹா...ஹா'' பாட்டிக்குச் சரியாக சொல்ல முடியாமல் கதையின் ஓட்டம் தர்மாவைச் சிரிப்பில் ஆழ்த்தியது.

வெறித்துப் பார்த்தாள் பாட்டி.

''இதுலே சிரிக்கறதுக்கு என்னடி இருக்கு?''

''ஓ...ஹ்ம்...ஹ்ம்...இரு பாட்டி...நான் இன்னும் கதையே ஆரம்பிக்கலை...ஹா...ஹா...! அந்த மருமான் இருக்கே... அது பெட்டியை நகத்தறேன்னு...சறுக்கி...ஹா'' மீண்டும் சிரிக்க ஆரம்பிக்கிறாள் தர்மா.

இப்போது பாட்டிக்குக் கோபம் வந்து விட்டது.

''நன்னா சிரிச்சே...அசட்டுபிசட்டுனு...என்ன கதைடி இது...வாத்தாம்... பேசறதாம்... கஞ்சனாம்... பித்துக் குளித்தனமானா இருக்கு! இதைப் புடிச்சிட்டு சிரிக்கிற நாழிலே அபிராமி அந்தாதி படிச்சா புண்ணியமாவது உண்டு'' நறுக்கென்று பேசிவிட்டு உள்ளே போய் விட்டாள்.

அன்றிலிருந்து தம்பி சேதுவை அழைத்துக் கொண்டு கோவில், ஆற்றங்கரை என்று போய் அமர்ந்து, அவனுக்குக் கதையை படித்து காட்டிவிட்டு தானும் சிரித்துத் தீர்ப்பாள் தர்மா.

வயசு ஏற, காமிக்ஸிலிருந்த மோகம் போய், நல்ல கதைகளை அனுபவித்துப் படிக்கவும் கற்றுக் கொண்டாள் தர்மா.

விடுமுறை நாட்களில் அப்பாவோடு வயலுக்கு கிளப்பி விடுவாள், நடுக்கடைக்கு மங்களா வந்து விடுவாள். கால்வாயில் கால்களைத் தொங்கப்போட்டுக்கொண்டு அமர்ந்து எதையாவது படித்துக் கொண்டோ இல்லை, வருங்காலத்தைப்பற்றிப் பேசிக்கொண்டோ பொழுதைக் கழிப்பார்கள்.

நடுக்கடை ஒரு அழகான இடம். காவேரியின் கருணையால் சதா சர்வ காலமும் பச்சை பசேலென்று ரம்யமாயிருக்கும்.

உயரே, உயரே வளர்ந்த பச்சை மூங்கில் புதர்களும், வாழைத் தோப்புகளும், காற்றில் அலைபாயும் நெற்கதிர்களும் மனசை அள்ளும்.

பக்கத்துக் காய்கறித் தோட்டங்களில் முள்ளங்கி, கத்தரி பயிர் செய்து, காய்களை அம்பாரமாய் அறுத்துப் போட்டு வண்டியில் ஏற்றுவதை, தோழிகள் வேடிக்கை பார்ப்பார்கள்.

அகத்திக்கீரை மரங்களைத் தழுவிக் கொண்டு வளர்ந்திருக்கும் வெற்றிலைக் கொடிகள் ஊடே புகுந்து புறப்படுவார்கள்.

அப்பா இளநீர் வெட்டித் தர ஆட்களை ஏவுவார். தலைக்கு இரண்டு குடித்துவிட்டு, வெயில் தெரியாமல் நிழலில் சுற்றுவார்கள்.

பகல் பொழுதெல்லாம் இப்படிக் கூத்தடித்துவிட்டு, அப்பாவுடனேயே நல்ல பெண்ணாய் மாலையில் வீடு திரும்பி விடுவாள்.

இந்தக் கொட்டமெல்லாம் தர்மா பெரியவளான பிறகு ஓரளவுக்குக் குறைந்ததே தவிர, அடியோடு நிற்கவில்லை



''வயசு வந்த பொண்ணு...என்னத்துக்கு ஊர் சுத்தணும்'' என்றால் ''அப்பாவோடு நான் தோட்டத்துக்குத் தானே போறேன்...ஊரா சுத்தறேன்? என்று சமாளித்து விடுவாள். பெண் தன் கண்ணெதிரில் தான் சிநேகிதியுடன் பொழுதைக் கழிப்பதால் தந்தையும் ரொம்ப ஒண்ணும் சொல்ல மாட்டார்.

நடுக் கடைக்குப் போகாவிட்டால், காவேரிப் படித்துறையில் மாலையில் தோழிகளைக் காணலாம்.

ஆட்கொண்டார் சன்னதிக்கு எதிரே செல்லும் பாதை முடிவில் இருக்கும் காவேரிபடித்துறை இவர்களுக்கு ரொம்பப் பிடித்தமானது. மேல் படியில் அமர்ந்து கொண்டு வருவோர், போவோரைப் பற்றிக் குறும்பாய் குறிப்பிட்டுப் பேசி மகிழ்வார்கள்.

மதகில் ஏறி ஓடும் ஆற்றில் குதித்துக் குளிக்கும் சின்னப் பையன்களைக் கண்டு பிரமிப்பார்கள்.

''அந்த குண்டம்மாவைப் பாரேன்-ஸ்விம்மிங் ஷூட்டில இருப்பதாக நினைப்பு-கையும் காலும் தெரிய எத்தனை அசிங்கமாய் குளிக்கிறாள பாரேன்'' என்பாள் ஒருத்தி. வாயை மூடிக்கொண்டு சிரிப்பாள் மற்றவள்.

குழந்தைத்தனம் கொஞ்சம் கொஞ்சமாய் குறைந்து குமரித்தனம் புகுந்ததும்—பெமினா, ஈவ்ஸ் வீக்லி போன்ற புத்தகங்களை எங்கிருந்தோ சேகரித்து விடுவார்கள். தியாகராஜன் சமாதி மணலில் அமர்ந்து 'இந்த மாதிரி கொண்டை போட்டால் எப்படி இருக்கும்?' என்று நினைப்பு கொஞ்சம் பால் ஏடில் எலுமிச்சை சாறை பிழிந்து முகத்தில் தடவி, பத்து நிமுஷம் ஊறினால் முகம் பளபளக்குமாமே?' என்றும் கேட்டுவிட்டு, மறுநாளே முடிந்த மட்டும் அந்தக் குறிப்பைச் செய்து பார்ப்பார்கள்.

ஒரு நாளா, இரண்டு நாளா? ஐந்து வருஷங்கள் என்றால் எத்தனை நடக்கலாம்?

போன இரண்டாம் மாசம் திடீரென்று ஒருநாள் "எங்கப்பா, திரும்ப நாங்க மெட்ராஸ் போயிடலாம்னு தீர்மானம் பண்ணி இருக்கார் தர்மா" என்று மங்களா சொன்னபோது அவள் முகத்தில் துக்கமும், சந்தோஷமும் கலந்து பரவியிருப்பதைத் தர்மா புரிந்து கொண்டாள்.

தன்னை விட்டுப் பிரிவதால் துக்கம்—

இந்தக் கிராம வாழ்க்கையை விட்டுவிட்டு, அவள் மெட்ராஸ் போகப் போவதால் சந்தோஷம்.

தர்மா பதில் பேசவில்லை.

அந்த வருஷம் வாழைத் தோப்பை நம்பின பல குடும்பங்களில் நஷ்டம் என்பது தர்மாவுக்குத் தெரியும். அசுரத் தனமாய் வீசின புயலால் பாதிக்கப்பட்டது, பெருமளவுக்கு வாழைத் தோட்டங்கள்தான். தர்மாவின் அப்பா எப்படியோ சமாளித்து விட்டார். ஆனால் மங்களாவின் தந்தைக்கு நஷ்டம் அதிகமே. இதுமட்டும் காரணமில்லை, சென்னையில் யாரோ தெரிந்தவர் புதுசாய் கம்பெனி ஆரம்பித்துவிட்டு இவரை வேலைக்குக் கூப்பிடுகிறாராம். போய் புது வாழ்க்கை ஆரம்பித்தால் என்ன என்று எண்ணுகிறாராம்.

அடுத்த மாசம் மங்களா குடும்பம் பட்டணத்துக்குப் புறப்பட்டுப் போய் விட்டது.

நாலு நாட்கள் பிரமை பிடித்தாற்போல இருந்தாள் தர்மா. ஐந்தாம் நாள் பழகி விட்டது என்றாலும் அடிமனசில் ஒரு வெறுமை. இந்த ஒரு மாச காலத்தில் இவள் இரண்டும் அவள் மூன்றுமாய் லெட்டர் போட்டு விட்டார்கள்.

"உனக்கு மாசாமாசம் இனிமேல் பெமினா, டைம் அண்ட் ஸ்டைல் எல்லாம் அனுப்பறேன்...இங்கே வீடு சௌகரியமாய் இருக்கு...ஐ விஷ் யூ கான் கம் அண்ட் ஸ்டே வித் மீ..." என்று மங்களா எழுதியிருந்தாள்.



கடிதத்தைக் கையில் வைத்துக்கொண்டு அமர்ந்திருந்த தர்மாவின் கண்களில் நீர் திரண்டு விட்டது.

இவளாவது பட்டணத்துக்குப் போவதாவது? இவள் ஆசைப்பட்டால் மட்டும் போதுமா?

இவளைப் போகத்தான் இவள் குடும்பம் அனுமதிக்குமா?

இவள் ஒரு கிணற்றுத் தவளை. இந்தக் கிணற்றுக்குள் தான் வாழ்ந்து, மடிய வேண்டுமா?

பக்கத்து ஊரான தஞ்சாவூருக்கு மேல் படிப்புக்கு அனுப்ப மறுத்த இவள் குடும்பத்தாரா—சென்னைக்கு அனுப்பப் போகிறார்கள்? ஊஹூம்...ஒரு நாளுமில்லை.

எஸ். எஸ். எல். சி. முடித்ததும் நடந்த போராட்டம் தர்மாவுக்கு நினைவுக்கு வந்தது.

பெரியவளான பிறகு பள்ளிக்குப் போகக்கூடாது என்று எழுந்த எதிர்ப்பை எப்படியோ சமாளித்தவள் கல்லூரியில் படிக்க வேண்டும் என்று போட்ட போராட்டத்தில் தோற்றுப் போனாள்.

பள்ளியில் முதலாவதாய் தேறி இருந்தாள் தர்மா.

கல்லூரியில் சேர்ந்து படிக்க வேண்டும் என்று கொள்ளை ஆசை.

"காலேஜாவது... கீலேஜாவது... கிடந்து அலையாதே..." என்று ஒரே போடாய் போட்டாள் பாட்டி.

அழுதாள், புலம்பினாள், சத்யாகிரஹம் செய்தாள். உண்ணாவிரதம் இருந்தாள் தர்மா.

"தஞ்சாவூரிலே பெண்கள் காலேஜ் தனியா ஆரம்பிச்சு இருக்காப்பா...நான் போய் படிக்கறேன்ப்பா...கொஞ்சம் கூடப் பயம் வேண்டாம். பஸ்ஸிலே போயிட்டுத் தினம் இருட்டறதுக்கு முன்னாலே வந்துடறேன்ப்பா... அப்பா..."

ஒன்றுக்கும் பலன் இல்லை.

"போனாப் போறதுன்னு திரண்ட பொண்ணை நீ படிக்க வைச்ச போது நான் வாய மூடிண்டு இருந்தேன், ராமநாதா, இப்ப ஊர்விட்டு ஊர்போய் படிக்க பொண்ணை அனுப்பிச்சயோ நான் பொல்லாதவளா மாறிடுவேன், ஆமாம்... பஸ்ஸிலே போறதாம்... வரதாம்... என்ன அதிகப் பிரசங்கித்தனம்; அழகாயிருக்காது. எவனாவது காலாடி கையைப் பிடிச்சு இழுத்தா என்னாறது?... காது, மூக்கிலே இருக்கிறதை கழட்டறேன்னு கத்தியாலே சீவி தள்ளிட்டு போறான்னு பொழுது விடிஞ்சா பொழுது போனா பேசிக்கறா... காலம் கெட்டுக் கிடக்கு... நாளைக்கு நல்ல இடத்திலே கல்யாணம் ஆக வாண்டாமா? புத்தி கெட்டு நடக்காதேடா..." என்ற பாட்டியின் தர்க்கத்தில் நியாயம் கண்டு அம்மாவும், அப்பாவும் மகன் பக்கம் பேசவேயில்லை.

தர்மாவின் படிப்பு பள்ளியோடு நின்றது.

மங்களாவுக்கு என்றுமே படிப்பில் நாட்டமில்லாதலால் அவளாகவே 'நான் மேலே படிக்கலை' என்று சொல்லி விட்டதால் வம்பே இல்லை.

தர்மா படிப்புக்கு முழுக்குப் போடும்போது வயது பதினைந்துதான் என்பதால், ஓரிரண்டு வருஷங்கள் கழித்து மாப்பிள்ளை பார்க்கலாம் என்று ராமநாதன் எண்ணியதும் ஒரு விதத்தில் தர்மாவுக்கு உதவி செய்தது.

மூன்று மாச காலங்கள் வாயை மூடிக் கொண்டிருந்தவள், தந்தை தனியாக இருக்கும்போது ஒரு நாள் மெல்ல தன் புது அஸ்திரத்தைச் செலுத்தினாள்.

"மேலே படிக்க கூடாதுன்னே... சரினு நான் கேட்டேன்... இப்ப ஆத்திலே எத்தனை நாழி சும்மா உட்கார்ந்துண்டு இருக்கிறது? அக்ரஹாரத்து மத்த பொண்கள் மாதிரி வம்படிச்சிண்டு, ஊரார் தலையை உருட்ட எனக்கு இஷ்டமில்லை. நான் டைப்ரைட்டிங் இன்ஸ்டிடியூட்லே



சேர்றேன்பா... உள்ளூர் தானே... ஒரு நாளைக்கு ஒரு மணி நேரம்... நீ சரினு சொல்லித்தான் ஆகணும்பா..."

அடிக்கிற அடியில் அம்மியும் நகரும் அல்லவா?

ராமநாதன் சம்மதித்து விட்டார்.

எப்படியோ தாயையும் சம்மதிக்கச் செய்துவிட்டாள்

இவள் சேர்ந்தாள் என்று மங்களாவும் சேர, இருவருமாய் மேட்டுத் தெரு இன்ஸ்டிட்யூட்டுக்குப் போனார்கள்

காலம் ஓடியது.

இரண்டே வருஷங்களில் டைப் லோயர், ஹையர், ஷார்ட் ஹேண்ட் எல்லாவற்றிலும் தேர்ச்சி பெற்றார்கள்.

தர்மாவின ஆடிகை இங்கும் கைகொடுத்துப் பிரமாதமான ரிசல்ட்டுடன் பாஸ் செய்தாள்.

சொல்லி வைத்தாற்போல இந்தப் பயிற்சியை முடிக்கவும், மங்களாவின் குடும்பம் இடம் மாறவும் சரியாக இருந்தது.

படிக்கப் பாடமும் இல்லை, டைப்பிங் வகுப்பும் இல்லை, மங்களாவும் இல்லை.

இயற்கையிலே துறுதுறுப்பான தர்மாவுக்கு எப்படிப் பொழுது போகும்?

பகலெல்லாம் சமையற் கட்டில் உதவுவாள். பின்பு கரி படிந்து போன கால், கை நகங்களை சோப்புப் போட்டுத் தேய்ப்பாள். அழகுக் குறிப்பில் கண்டபடி விரல்கள் அழகாயிருக்கின்றனவா என்று பார்ப்பாள், தலைமுடியைச் சீவிப் பளபளக்க வைப்பாள். நிலைக் கண்ணாடி முன் நின்று தன் அழகைத் தானே ரசித்துக் கொண்டு மங்களாவுடன் மெட்ராஸில் இருந்தால் எப்படியெல்லாம் அலங்கரித்துக் கொள்ளலாம் என்று எண்ணிப் பெருமூச்சு விடுவாள்.

மாலையில் தம்பி சேதுவை அழைத்துக் கொண்டு ஆற்றங்கரைக்கோ, இல்லை கோவிலுக்கோ போவாள்.

பிரகாரத்தைச் சுற்றி வரும்போது வெளியூர் பிரயாணிகளின் குழந்தைகள் மதிற்சுவரிடம் நின்று ''இங்கே வடக்குப்புறமாய் நின்று 'ஐயா' என்று கூப்பிட்டால் ஏழு முறை எதிரொலி கேட்கும்' என்று எழுதியிருப்பதைப் படித்துவிட்டு 'ஐயாறா, ஐயாறா' என்று அலறிக்கொண்டிருப்பார்கள். இரண்டு, மூன்று முறைகளுக்கு மேல் எதிரொலி எழும்பாது ஏமாற்றத்துடன் திரும்பத் திரும்ப கத்துபவர்களைக் கண்டால் தர்மாவுக்கு எரிச்சல் வரும்.

'வாடா ஆத்துக்குப் போகலாம்' என்று தம்பியை அழைத்து வந்து விடுவாள்.

ஆக, தர்மாவுக்குத் திருவையாறு வாழ்க்கை அலுப்புத் தட்டியது.

# 6

ரொம்ப நபளாய் பூட்டிக்கிடந்த பக்கத்து வீட்டுக்கே சாம்பு மாமாவும், ருக்கு மாமியும், அவர்கள் குழந்தைகளும் குடி வந்து விட்டார்கள். உண்மையைச் சொல்ல வேண்டுமானால் சாம்பு மாமா, இல்லை தாத்தா ஐம்பத்தேழு வயசான அவருக்கு இறந்து போன இரண்டாம் தாரத்தின் மூலம் நான்கு குழந்தைகளிருந்த அவருக்கு— ருக்மணி மூன்றாம் தாரம். அவளுக்கு வயசு இருபத்திஏழு.

வீட்டில் வேலைகளை முடித்த பின்பு, பல சமயங்கள் பக்கத்து வீட்டு மாமா, மாமியைப் பார்த்துப் பொழுதைப் போக்கிக் கொண்டிருந்த தர்மாவுக்கு அவர்களின் தாம்பத்யமே புரியாத புதிராய் இருந்தது



ருக்கு மாமியின் தாய்க்கு எட்டுக் குழந்தைகள். இவள் இரண்டாவது பெண்—சமயல்காரராய் இருந்த தந்தை மரணமடைந்தபோது கடனோ, உடனோ வாங்கி மூத்த பெண்ணுக்கு மாத்திரம் திருமணத்தை முடித்திருந்தார்.

பத்தொன்பதாம் வயதில் தந்தையை இழந்த ருக்மணி இருபத்திநாலு வயதை எட்டிப் பார்ப்பதற்குள் உலக வாழ்க்கையில் எத்தனை அவலங்கள் உண்டோ அத்தனையும் பார்த்துவிட்டாள். வறுமையின் கொடுமை; பசியின் வேதனை; இல்லாமையின் அவமானம், ஆள்பலம் இல்லாத குடும்பத்தின் கஷ்டங்கள் என்று ஒன்று மாற்றி ஒன்றாய் சம்சார அலைகள் அவள் குடும்பத்தை உலுக்கி எடுத்தன.

இந்த லட்சணத்தில் அவர்களுக்குக் கல்யாணம் என்பதை நினைத்துப் பார்க்கக் கூட இயலுமா, என்ன?

ருக்மணி பார்ப்பதற்கும் ரொம்ப சுமார்தான்.

உயரமும், இடுப்பும், மார்புமாய் உருவம் மட்டும் ஓரளவுக்கு எடுப்பாய் இருந்ததே தவிர, மற்றபடி முகம் காசு பெறாது.

இந்தச் சமயத்தில் சமய சஞ்சீவியாய் வந்தார் தரகர் ஒருவர்.

'ஐம்பத்திநாலு வயதான சாம்பசிவம் என்ற சாம்பு மாமாவுக்கு மூன்றாம் தாரமாய் ருக்குவைக் கொடுக்க இஷ்டமா?' என்றார்.

சாம்புமாமா சின்ன வயசிலேயே முதல் தாரத்தை இழந்துவிட்டு, இரண்டாம் கல்யாணம் செய்து கொண்டார். அவள் மூலம் நான்கு குழந்தைகளைப் பெற்றார். மூத்த பெண்ணுக்கு கல்யாணமான கையோடு இரண்டாம் மனைவியை வைசூரியில் வாரிக்கொடுத்தார். மூன்று, நாலு வருஷங்கள் குழந்தைகளுடன் மன்றாடிப் பார்த்தவருக்கு வீட்டுப் பொறுப்பைச் சுமக்க ஒரு பெண்டாட்டி இருந்

தால் தேவலை என்று தோன்றியதாலும்-இரவு தனியாகப் படுப்பது சிரமமாக இருந்ததாலும், தரகரை விட்டுப் பெண் பார்க்கச் சொன்னார்

அந்த தரகர் கண்ணில் திருக்காட்டுப் பள்ளியில் கஷ்ட ஜீவனம் செய்து கொண்டிருந்த ருக்மணி விழுந்தாள்.

பிறகு என்ன ?

சாம்பு, ருக்கு கல்யாணம் நடந்தது.

அடுத்த வருஷமே இன்னொரு மகனுக்கு ஐம்பத்தி ஐந்தாவது வயதில் தந்தையானார் சாம்பு மாமா.

தன் வீட்டுக்குப் பக்கத்தில் குடிவந்த ஆறு மாச காலங்களாய், பல கோணங்களில் அவர்களைப் பார்த்ததும் ஏனோ சாம்பு மாமாவின் மனநிலையோ, ருக்குவின் மனநிலையோ, இல்லை, அவர்கள் வாழும் வாழ்க்கையின் அர்த்தமோ புரியாததால், தர்மா குழம்பிப் போனாள். விடியற்காலை நாலு மணியளவில் எழுந்து விடுவாள் ருக்கு மாமி மாடு மாதிரி வீட்டு வேலைகள் அனைத்தையும் லொங்கு லொங்கு என்று செய்வாள். உட்கார்ந்த இடத்தை விட்டு எழாமல் அதிகாரம் பண்ணும் சாம்பு மாமாவின் அட்டகாசத்துக்கு வாயே திறக்காமல் பணிந்து போவாள்.

அந்த வீட்டில் காசு பெறாமல் வேலை பார்க்கும் வேலைக்காரியாக, யந்திரமாக ருக்கு மாமி இருந்ததாகவே தர்மா நினைத்தாள்.

ஒரு நல்ல புடவை கிடையாது—ஒரு நாளைக்கு முகம் அலம்பிப் பளிச்சென்று குங்குமம் இட்டுக் கொண்டு இவள் பார்த்தது கிடையாது.

காலெல்லாம் பித்த வெடிப்பு.

கரி, சாணி புகுந்து கொண்டு கறுத்துப் போன நக இடுக்குகள்—



ஒரு நாளாவது அந்த மாமி நன்றாய்ச் சாப்பிட்டிருப்பாளா என்று கூட தர்மா எண்ணுவதுண்டு.

'ருக்கு' என்று மாமா பேர் சொல்லி அழைத்து இவள் கேட்டதில்லை.

எப்போதும் மாட்டு வண்டி ஓட்டுகிறார்போல 'ஏய்' 'ஏய்' என்கிற திமிர்க்குரல்.

குழம்பில் ஒரு கொத்து கறிவேப்பிலை கூடப் போட்டு விட்டால்கூட 'ஆ... ஊ...' என்று கத்திக் குதிப்பார்.

''உன் அப்பன் வீட்டுச் சொத்தாடி... இப்படி விரயம் பண்ணறே... பணத்தோட அருமை உனக்கெங்கே புரியப் போறது ?... அன்னக்காவடி... பரதேசி...'' என்று நாக்கில் நரம்பில்லாமல் சத்தம் போடுவார்.

பல நாட்கள் கையைக்கூட நீட்டி இருக்கிறார்.

ஒன்றுக்கும் மாமி பதிலே சொல்லாமல் நிற்கும்போது தர்மாவுக்குப் பாவமாக இருக்கும்... ஓடிப்போய் அந்த மனுஷனை நாலு அறை விட்டால் என்ன— என்று பாபரப்பாள்.

ஒரே சுவரின் இந்தப் பக்கம் இவர்கள் வீடும், அந்தப் பக்கம் அவர்கள் வீடும் இருந்ததால் காதைப் பொத்திக் கொண்டால் கூட செவிப்பறையில் சாம்பு மாமா ஏசுவது வந்து மோதும்.

ஒரு நாள் மாமி தவறிச் செய்த தவறுக்கு விறகுக் கட்டையால் மாமா விளாசி விட்டார். அவர் வெளியில் போனதும் மாமி கிணத்தடியில் உட்கார்ந்து விசும்பிக் கொண்டிருந்ததை தர்மா பார்த்தாள். உள்ளம் நெகிழ, தேங்காய் எண்ணெய் எடுத்துப்போய் மாமியின் புண்களுக்குத் தடவி விட்டாள்.

''ஏன் மாமி, மாமா இப்படித் துர்க்குணமா இருக்கார் ?... அக்கம் பக்கத்துக்காரா ஏதாவது புத்தி சொன்

னால்கூட, ''என் பெண்டாட்டியை நான் என்ன வேணும்னா செய்வேன்னு'' தூக்கி எறிஞ்சு பேசுகிறார்... உங்காத்துக்கு வேணா போய் கொஞ்ச நாள் இருந்துட்டு வாங்களேன் மாமி...'' என்ற போது ருக்கு பதிலே பேசாமல் இன்னும் சத்தம் போட்டு அழுதாள், அவ்வளவுதான்.

ஆனால் அன்று இரவு நடந்த காட்சி ஒன்றை ஏதேச்சையாய் காண நேரிட்ட தர்மாவுக்கு, அதிர்ச்சியே உண்டானது.

அம்மாவும், பாட்டியும் கோவிலில் கதை கேட்கப் போயிருந்தார்கள். அப்பா தஞ்சாவூர் போனவர் திரும்பவில்லை. முன் கூடத்தில் பசங்கள் சாப்பாடு முடிந்து படுத்து விட்டார்கள்.

எட்டு, எட்டரை மணி இருக்கலாம்—

ஏதோ காரியமாய் கிணத்தடிக்குப் போன தர்மா பேச்சுக் குரல் கேட்டு நின்றாள்.

குட்டைச் சுவர் வழியாய் ருக்கு மாமியும் சாம்பு மாமாவும் பேசுவது அவளுக்குக் கேட்டது.

''சமயல் கட்டை அலம்பிவிட எத்தனை நாழி ருக்கு... ஹி... ஹி... சுருக்க வாயேன்...''

மாமி பதில் சொல்லவில்லை— 'சரக் சரக்' என்று துடைப்பம் தேயும் சப்தம் மட்டும் கேட்டது.

''ருக்கு... கடைலேந்து பூ வாங்கிண்டு வந்தேனே... ஏன் வைச்சுக்கலை? கிட்ட வாயேன்... ருக்கு... குழந்தைகள் தூங்கிட்டாளோ... ?''

பதினெட்டு வயசை நெருங்கிக் கொண்டிருந்த தர்மாவுக்கு விஷயம் விளங்கி ஓட்டமும் நடையுமாய் உள்ளே திரும்பி விட்டாள்.



''ு— என்ன மனுஷன் இவர் !''

''கார்த்தாலே விறகாலே அடிச்சுக் கொன்றார்... இப்ப கொஞ்சல் என்ன வேண்டிக் கிடக்கிறது? இந்த மாமிதான் ஆகட்டும்; 'தூ—போங்கோ அந்தண்டை'னு தள்ளக் கூடாது... இவளும் மேலே போய் விழறாளே... !'

மறு நாள் காலை திரும்ப 'ஏ ருக்கு... மூதேவி... உன்னை உங்கம்மாவாத்துக்கு அனுப்பிச்சிட்டுத்தான் மறுவேலை' என்று மாமா கத்துவது கேட்கவும் தர்மாவுக்குத் தான் முதல் நாள் இரவு கண்டது கனவோ என்ற சந்தேகம் எழுந்தது.

இன்னும் பல முறைகள் இப்படி— காலையில் ஒன்றும் இரவு ஒன்றும் என்று கண்ட பிறகு, ஒரு சமயம் தன் தாயிடம் மனசை விட்டுக் கேட்கவே செய்தாள்.

''பக்கத்தாத்து மாமாவும், மாமியும் ஏம்மா இப்படி இருக்கா ?''—

''எப்படி இருக்கா ?''

''ப்... ம்...'' தன் கருத்தைத் தெளிவாய் சொல்லத் தெரியவில்லை தர்மாவுக்கு.

''மாமாவுக்கு இத்தனை வயசாயிடுத்து... சின்ன பொண்ணு மாமி. இது நல்லாவேயில்லயேம்மா...''

ராஜம் சிரித்தாள்—

''அவளுக்கு நன்னா இருக்கே...''

''போம்மா... கார்த்தால எழுந்தா 'மூதேவி அது இது'னு சொல்லிக் கத்தறார்! அடிக்கிறார்... ராத்திரியானா என்ன கொஞ்சல் வேண்டியிருக்கு...? தூ... அசிங்கம்'' முகத்தைச் சுளித்தாள் தர்மா...

''எதுடீ அசிங்கம்... ஆம்படையானுக்கு அடங்கி இருக்கறதா ?''

''நான் சொல்லறதே உனக்கு புரியலையம்மா... அந்த மாமா கூப்பிட்டதும் இல இளிச்சுண்டு போவானேன் ? கொஞ்சமாவது சூடு, சொரணை இருக்கா ? நா... விவஸ்தை இல்லை... நானாயிருந்தா நீட்டி அடிக்கிற கையை ஒடிச்சு அடுப்பிலே வைப்பேன்...''

''வயதுதான் பதினெட்டாறதே ஒழிய உனக்கு மனசு வளரலை தர்மா... அந்த மாமி பண்ணறதுலே என்ன தப்பு ?... ஆயிரம் இருந்தாலும் ஒரு பொண்ணுக்கு ஆம்படையான்தான் எல்லாம்... அவர் மேலே கோவிச்சுண்டு அவ எங்கே போக முடியும் ? இல்லை என்ன பண்ண முடியும் ? அவ பொறந்தகம் இருக்கற நிலையிலே ஆத்துக்காரர் கிட்ட கோவிச்சிண்டு அங்கே போய் அவ ஒரு நாள் இருக்க முடியுமா, என்ன ? பொண்ணுங்கறவ நாணல் மாதிரி இருக்கணும் தர்மா... ஆத்துலே வெள்ளம் வரச்சே வளைஞ்சு கொடுத்து நிக்கற நாணல் மாதிரி, புருஷனுக்கு வளைஞ்சு கொடுத்து இருந்தாத்தான் பெண்ணுக்கு நிம்மதி... நான் சொல்லறது உனக்கு ஒரு கல்யாணமாகி, ஒருத்தன்கிட்டே நீ குடுத்தனம் பண்ணறச்சே புரியும்... இப்பப் புரியாது.''

அம்மா கொடுத்த வியாக்கியானத்தைக் கேட்டு தர்மாவுக்குச் சிரிப்பு வந்தது. முதுகெலும்பு இல்லாமல் ஒரு பெண் கோழையாக இருக்கிறாள் ; அவளை ஒருத்தன் அநியாயமாக அடக்கி மிருகத்தை மிரட்டுகிற மாதிரி வைத்துக்கொண்டு இருக்கிறான், இதைக் கண்டிக்காமல் இதற்கு ஒரு சமாதானமா ?

''அம்மா உன் காலம் வேறே... இந்த மாதிரி நாணல், வெள்ளம் பேச்செல்லாம் உங்களோட சரி... எங்ககிட்டே நடக்காதும்மா...'' என்று கூறிவிட்டு எழுந்து வாச லுக்குப் போய் விட்டாள்.

எழுந்துபோன மகளைப் பார்த்தபடி சிந்தனையில் ஆழ்ந்தாள் ராஜம்.



இந்தச் சித்திரைக்குத் தர்மாவுக்குப் பதினெட்டு நிரம்பப் போகிறது.

''கல்யாணமா ? இப்ப எனக்கு வாண்டாம்மா...'' என்று அவள் கெஞ்சியதால் மகள் டைப்பிங் முடிக்கும் வரை வாளாவிருந்த ராமனாதன் சென்ற ஒரு வருஷ காலத்திற்கும் மேலாய் தீவிரமாய் வரன்பார்க்க முனைந்த போது—

''தேவதைபோல பெண் இருக்கிறாள்— அதி புத்தி சாலி ; இவளைக் கொத்திக்கொண்டு போக பையன்கள் க்யூ வரிசையில் நிற்பான்'' என்று போட்டது தப்புக் கணக்கு என்று புரிந்தது.

பணம் தான் பிரதானம்— பிறகுதான் அழகு, குணம் படிப்பு எல்லாம் என்றும் தெளிவாகியது.

முதலில் தர்மாவுக்குப் பெரிய இடமாய்ப் பார்த்தார் ராமநாதன்.

திருச்சியில் பையன் எஞ்ஜினியராய் இருந்தான். நில புலன்கள் எல்லாம் உண்டு.

பெண்ணைப் பார்த்து விட்டு எங்களுக்குப் பெண் பிடித்து விட்டது. லௌகிக விஷயங்களைப் பேசுவோமா ? என்று ஆரம்பித்த பிள்ளையின் தகப்பனார் குண்டைத் தூக்கிப் போட்டார்.

நாற்பது சவரன்களுக்கு நகை ; கையில் எட்டாயிரம் ரொக்கம் ; மூவாயிரத்துக்கு எவர்சில்வர் பாத்திரங்கள் ; இரண்டாயிரத்துக்கு வெள்ளிப் பாத்திரங்கள், வைர மோதிரம்—இப்படி லிஸ்டு நீண்டுபோய் அந்த இடம் கை நழுவிப் போயிற்று.

அடுத்து வந்த பையன் ஹைதராபாத்தில் உத்யோகம் என்பதால் கண்காணாத தேசத்திலே பெண்ணைக் குடுக்கக் கூடாது என்று பாட்டி மறுத்து விட்டாள்.

அப்புறம் வந்த பையன்களின் ஜாதகங்கள் பொருந்த வில்லை.

இப்படி ஒன்று மாற்றி ஒன்றாய் எதுவும் குதிராமல் நாள் ஓடிக்கொண்டிருந்தது.

சமயத்தில் விதி சதி செய்யும் என்பதை நிரூபிப்பது போல, சென்ற வருஷம் வீசின புயலால் வாழைத் தோப்பு கள் தஞ்சை, திருச்சி மாவட்டம் பூராவும் அழிந்து போயின.

ராமனாதன் மட்டும் விதிவிலக்கா என்ன ?

எப்படியோ சேர்த்து வைத்த பணத்திலிருந்து பணம் எடுத்து அந்த நஷ்டத்தைச் சமாளித்தார் அவர்.

ஆனால் அந்த இழப்பு ஓரளவுக்குப் பெரிய இடமாய் பெண்ணுக்குப் பார்ப்பதைப் பாதிக்கவே செய்தது.

தர்மாவுக்கு வயசாகி விடவில்லை. கொஞ்சம் நிதான மாய் பார்த்தால் நல்ல இடமாக முடித்து விடலாம் ஆனால்...

கண்ட புஸ்தகங்களையும், வேண்டாத விவரங்களை யும் ஏகமாய் அறிந்து கொண்டு விட்டதால் பெண்ணுக்கு வாய் நீண்டு விட்டது; புத்தியில் என்னென்னவோ கேள்விகள் தோன்றிவிட்டன என்பது யாருக்குப் புரிந்ததோ இல்லையோ, தாய் ராஜத்துக்கு நன்கு புரிந்த தால், கூடிய சீக்கிரம் பெண்ணை ஒருவன் கையில் ஒப்படைத்தால் நல்லது என்றே நினைத்தாள்.

தை பிறந்தது.

தியாகராஜர் உற்சவமும் வந்தது.

திருவையாறே திருவிழாக்கோலம் பூண்டு நின்றது.

சமாதிக்கு எதிரே இருந்த அக்ரஹாரத்தில் எப்போதும் ஜே ஜே என்று கூட்டம்.



உற்சவம் மூன்று நாட்கள்தான் என்றாலும் ஒரு வாரம் முன்பிருந்தே இடம் களை கட்டி விட்டது. ஊர் ஜனங்கள் பூராவும் அவரவர் வேலையை மறந்து, சமாதி பந்தலில் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டே இருந் தார்கள்.

பகுள பஞ்சமி அன்று நாட்டின் பிரபல பாடகர்கள், பாடகிகள், சங்கீத வாத்ய வித்வான்கள் வழக்கம் போல வந்து குவிந்து விட்டார்கள், உஞ்சவிருத்தி ஆன பிறகு ஊர்வலம் பந்தலுக்கு வந்ததும் பஞ்சரத்ன கீர்த்தனை பாட ஆரம்பித்து விட்டார்கள்.

''ஜகதா... ஆ... நந்தகா...''

கூட்டமே சேர்ந்து பாட ஆரம்பித்தது.

சாதாரணமாய் கர்னாடக சங்கீதத்தில் அதிக ஈடுபாடு இல்லாத தர்மாகூட, பந்தலுக்கு வெளியே இருந்த அரச மரத்து மேடையில் அமர்ந்து பஞ்ச ரத்ன கீர்த்தனை களைக் கேட்டுக் கொண்டிருந்தாள். ஆயிரக் கணக்கில் ஜனங்கள் பந்தலுக்கு உள்ளும், வெளியிலும் வழிந்து நின்றார்கள். பந்தலுக்கு வெளியே ஆங்காங்கு எழுந் திருந்த கடைகளில் தனிக் கூட்டம்.

நாலு கீர்த்தனங்கள் முடிந்து, 'எந்தரோ மஹானு பாவு' தொடங்கி விட்டார்கள். இது நாழிகை சங்கீதத்தில் லயித்திருந்த தர்மா' யாரோ தன்னை உற்று நோக்குவது போன்ற உள்ளுணர்ச்சி எழ, தலையைத் திருப்பினாள், இவள் அமர்ந்திருந்த இடத்திலிருந்து பத்து அடிகள் தள்ளி, பந்தக்கால் ஒன்றின் மேல் சாய்ந்து கொண்டு ஒருவன் இவளையே பார்ப்பது புரிந்தது.

தலையைத் திருப்பிக் கொண்டு மீண்டும் பாட்டைக் கேட்க முனைந்தாள் தர்மா.

ம்ஹூம்... அவன் பார்வை இவள் உடலைத் துளை யிட்டதால் இவளால் உட்கார்ந்து பாட்டுக் கேட்க முடியவில்லை.

எழுந்து வீட்டுக்குப் போகப் புறப்பட்டாள்.

வழியில் அவனைக் கடந்து செல்லும் போது தலையை லேசாய் நிமிர்த்தி நன்றாகப் பார்த்தாள்.

குட்டை, கட்டையான உருவம்.

தெற்றிப்பல்—

யாரிவன் ?

அடுத்த சில மாதங்களில் ஸ்கூட்டரில் இங்கு, அங்கு என்று போகும் அவனைப் பல முறைகள் பாத்துவிட்டாள் தர்மா.

பணக்கார இடத்துப் பையனோ? உள்ளூர்காரனா? என்னையே ஏன் எப்போது பார்த்தாலும் முறைத்துப் பார்க்கிறான் என்று தனக்குத்தானே தர்மா கேட்டுக் கொண்ட கேள்விகளுக்கு, சித்திரை மாதம் பதில் கிடைத்தது.

## 7

சூரிய புரத்து மிராசு பிள்ளை நம்ம கொழந்தையை எங்கயோ பார்த்திருக்கானாம்,மனசுக்குப் பிடிச்சுப் போச்சாம். இப்ப என்னத்துக்கு எனக்கு கல்யாணம்னு மறுத்துண்டிருந்தவன் நம்ம குழந்தைன்னா பண்ணிக்கறேங்கறானாம். 'ஜா கத்தை வாங்கிண்டு வாரும்...பொருத்தம் பார்ப்பம்னு பெரிய மிராசுதார் என்னை அனுப்பிச்சிருக்கார்... உங்க கதலை சாக்ஷாத் மஹாலட்சுமியே வந்து தட்றாங்காணும்... ப்ராப்தம் இருந்து ஜாதகங்கள் பொருந்தணும்...''

தரகர் ஒரு வெள்ளிக்கிழமை வீட்டுக்கு வந்து பேசின போது யாருக்கும் நம்பிக்கைப்படவில்லை,

சூரியபுரத்து மிராசா?



ரொம்ப பெரிய இடமாயிற்றே!

தரகர் தவறுதலாய் வந்து விட்டாரோ?

''அவா எங்கே... நாம்ப எங்கே... ஆசைப்படறதிலேயும் கொஞ்சம் நியாயம் வேணும்...'' ராமனாதன் இழுத்தார்.

''பிள்ளையாண்டான் ஆசைப்பட்டப்றம் நியாயமாவது, ஒண்ணாவது...பிள்ளை ரொம்ப புத்திசாலிங்காணும்...மிராசு நிலபுலன்களை எல்லாம் அவன்தான் இப்ப கவனிச்சுக்கறான்... வெகு சமர்த்தன்... உங்க பொண்ணுக்கு அதிருஷ்டம்தான்...அம்பாளை நமஸ்காரம் பண்ணிட்டு ஜாதகத்தை எடுத்துக் கொடும்...

ஜாதகத்தை வாங்கிக் கொண்டு தரகர் போய் விட்டார்

வீட்டில் நிலவிய சந்தோஷத்தைச் சொல்லி மாளாது-

மிராசு பிள்ளையா ?

கெட்டிக்காரனா ?

......என் கனவுகளில் வரும் ஆணழகனைப் போல கம்பீரமாய் வந்து அணைப்பானா?

வாட்ட சாட்டமய்... உயரமாய்... அகன்ற தோள்களுடன்...சிகப்பாய்... என் அழகுக்கு ஈடு செய்பவனாய்... பணக்காரனாய்......

தர்மாவின் கற்பனைகள் குதிபோட்டன.

தன் அழகில் மயங்கி ஏதோ ஒரு பெரிய வரன் வந்திருக்கிறது என்று மகிழ்ந்த அவளுக்கு ஏனோ தான் சில முறைகள் கண்டு வெறுத்து ஒதுங்கியுள்ள பையனே இந்த வரனாக இருக்கலாம் என்று தோன்றவேயில்லை.

ஜாதகத்தை வாங்கிக் கொண்டு போன தரகர் மறு வாரமே வந்து விட்டார்.

''பேஷான பொருத்தம்... உம்ம மகள் ராஜ வாழ்க்கை தான் வாழப் போறாங்காணும்...

பையன் ஏற்கனவே தர்மாவைப் பார்த்து இருப்ப தால் பெரியவர்களும் பெற்றவர்களும் வந்து பெண்ணை பார்ப்பார்கள். ஒருத்தருக்கொருத்தர் பிடித்து விட்டால் மேற்கொண்டு பேசலாம் என்றும் கூறின தரகர், அடுத்து வந்த வெள்ளிக் கிழமையை பெண் பார்க்க வரும் நாளாகக் குறிப்பிட்டு விட்டுப் போனார்.

சூரியபுரத்து மிராசு வீட்டிலிருந்து தர்மாவைப்பெண் பார்க்க வரப்போவது தெருவுக்கெல்லாம் தெரிந்து போயிற்று.

''அந்தப் பொண் அழகுக்கு இந்தமாதிரி எடம்தான் குதிரும்னு எனக்கு முன்னமே தெரியும்.''

''முகத்திலேயே ராஜ களைன்னா...''

''ஜாதகத்திலே ராஜயோகம் இருக்குடி... அதுதான் இப்படி ஒரு யோகம்...''

வாய் ஓயாமல் அக்ரஹாரத்து மனுஷர்கள் தர்மாவின் அதிருஷ்டத்தைப் பேசி வியந்து போனார்கள்.

வெள்ளிக்கிழமை அன்று வீடு கல்யாணம் பட்ட பாடு பட்டது. பின் கட்டில் கோட்டை அடுப்பு மூட்டி திரட்டுப் பால், சொஜ்ஜி, பஜ்ஜி, வடை, தயிர் போண்டா வகைய றாக்கள் தயாராகிக் கொண்டிருந்தன.

அலங்காரம் பண்ண என்று ஒருவரும் என்னைத் தொடக் கூடாது என்று தர்மா சொல்லி விட்டதால் அவளை யாரும் நெருங்கவில்லை.

தங்கக் குடத்துக்கு வைரத் திலகம் சூட்டினது போல தனக்குத்தானே சிங்காரித்துக் கொண்டு தகதகத்தாள் தர்மா.

மனசின் சந்தோஷம் அலை அலையாய் எழுந்து அவள் உடம்பும், முகமும் ஜொலித்தன.



மாலை நான்கு மணி இருக்கும்.

வாசலில் வண்டி வந்து நின்றது—

டாக்ஸியிலிருந்து நாலைந்து பெரியவர்களும், நண்டும் சிண்டுமாய் குழந்தைகளும் இறங்கினார்கள்.

சொந்தக்காரில் ஆடம்பரமாய் வந்து இறங்குவார்கள் என்று நம்பிய தர்மாவுக்கு, அவர்கள் டாக்சியில் வந்தது பெரும் ஏமாற்றத்தைத் தந்தது.

உச்சிக் குடுமியும் பஞ்ச கச்சமுமாய் பிள்ளையின் தகப்பனாரும், முப்பாகு புடவையாக மடிசார் கட்டிக் கொண்டு தாயாரும் உள்ளே நுழைந்தார்கள்.

'வாங்கோ...வாங்கோ...'

வந்தார்கள், உட்கார்ந்தார்கள்.

தரகர் அறிமுகம் செய்தார்.

முக்கியமானவர்களை அறிமுகப் படுத்திக் கொண்டு வரும்போது இருபது, இருபத்திரண்டு வயதுள்ள இரண்டு பெண்களைக் காட்டி ''பிள்ளைக்குத் தங்கைகள்—மாமா வுக்கே ஒருத்தியும், அத்தானுக்கு ஒருத்தியும் வாக்கப்பட்டு சூரியபுரத்திலேயே இருக்கா...அந்தக் குழந்தைகள் இவா குழந்தைகள்'' என்றார்.

உக்கிராண அறை இருட்டில் உட்கார்ந்து கொண்டு இடுக்கு வழியால் எட்டிப் பார்த்த தர்மாவுக்கு தூக்கி வாரிப் போட்டது.

தன்னைவிட ஓரிரு வயசே பெரியவர்களாய் இருந்த அந்தப் பெண்கள் மடிசார் புடவை கட்டிக் கொண்டதிலி ருந்து தானும் மணமானதும் ஒன்பது கஜப் புடவை கட்ட வேண்டி வரும் என்பது புரிந்து போய் அதிர்ந்து போனாள்.

பதினெட்டு முழப்புடவையா?

நானா? ஓ காட்!

கடுகை சிதறினாற் போல இருந்த குழந்தைகள் இவர்களுடையதா?

இந்தச் சின்ன வயசில் தலைக்கு நாலு என்றால் இன்னும் எவ்வளவு?

அந்தப் பெண்கள் கட்டுப் பெட்டிகளாய் இழுத்துப் போர்த்திக் கொண்டு உட்கார்ந்திருப்பதைப் பார்த்ததுமே அந்த வீட்டில் இருக்கும் அடக்கம் தர்மாவுக்குப் புரிந்து போயிற்று.

பிள்ளையின் தகப்பனாரின் உச்சக் குடுமி, கழுத்து ருத்ராட்சம் அவரின் ஆசாரத்தைக் காட்டியது.

காபி, டிபன் கொண்டுவரப்பட்டது.

''எனக்கு டிபன் வாண்டாம் ... வெறும் பால் போதும்...'' பிள்ளையின் தாயார் மறுத்து விட்டாள்.

''கொஞ்சம் கேசரி மட்டுமாவது...''

''இல்லை நான் ஆத்தைத் தவிர வெளியே சாப்பிட மாட்டேன்...வாண்டாம்...''

இவ்வளவு 'மடி' மனுஷியா? தர்மாவுக்குப் பகிரென்றது.

பெண்ணை வரச் சொன்னார்கள்.

தர்மாவைப் பார்த்ததும் அவர்கள் முகத்தில் திருப்தி நிலவியது, வெளிப்படையாகவே தெரிந்தது.

''பெண்ணை எங்களுக்கு பிடிச்சிருக்கு—மேற்கொண்டு காரியங்களைக் கவனிக்கலாம்'' என்று சொல்லிவிட்டுத் தகப்பனார் எழுந்து விட்டார்.

ராமநாதன் வாசல் வரைக்கும் கூடவே போனார்...

''மாப்பிள்ளை பெண்ணைப் பார்க்கணும்-சம்பிரதாயம் இருக்கோன்னே... வந்தார்னா பொண்ணும், பிள்ளையும் நன்னா பார்த்துக்கலாம்...''



''அதுக்கென்ன...ஒரு நல்ல நாள் பார்த்து வரச் சொல்றேன்... அப்ப நான் வரட்டுமா?''

பிள்ளை வீட்டார் அந்தண்டை போனதுமே இங்கு ஒரே கசமுசா.

''அந்த மாமி கழுத்திலே வைர அட்டிகை பார்த்தியோ?''

''நாத்தனார் ரெண்டும் என்ன பதவிசா இருந்தா... பெரிய இடத்து பொண்ணுங்கற மமதை இல்லை.''

''சம்பந்தி பிராமணரும், சம்பந்தியம்மாளும் ரொம்ப ஆசாரமாய், பூஜை புனஸ்காரம்னு இருப்பா போலிருக்கே!''—இது பாட்டி.

எல்லாருக்கும் திருப்தி—தர்மாவைத் தவிர.

பிள்ளை வீட்டார் ரொம்ப மடிசஞ்சியாக இருப்பார்களோ?...தன்னையும் அப்படியே இருக்கணும் என்று கட்டாயப் படுத்துவார்களோ என்ற பயம் நெருடிக் கொண்டே இருந்தது.

அடுத்த புதன்கிழமை பையன், தாய்மாமனுடன் பெண் பார்க்க வந்தான்.

மிராசுப் பையனைக் காண வீட்டில் அக்ரஹாரத்து கூட்டம் அத்தனையும் கூடியிருந்தது.

குடும்பம் எப்படியிருந்தாலும் பணம் இருக்கிறது. பிள்ளை ஜோராய் இருப்பான்...என்ற கற்பனையில் மூழ்கி இருந்த தர்மாவும் மாப்பிள்ளையைக் காண வெகு ஆவலுடன் இருந்தாள்.

அவர்கள் வந்து விட்டார்கள்.

கூடத்தில் கூட்டம் அதிகமாய் இருந்ததால் தர்மாவுக்குப் பையனைப் பார்க்க முடியவில்லை.

சம்பிரதாய உபசரிப்புகள் முடிந்தபிறகு ''பெண்ணை அழைச்சுண்டு வாங்கோ'' என்று சொல்ல, ராஜம் வந்து அழைத்துப் போனாள்.

''நமஸ்காரம் பண்ணிக்கோம்மா...''

தலையை நிமிர்ந்த தர்மாவுக்கு நெஞ்சில் கனலால் சுட்ட மாதிரி இருந்தது.

இவனா ?

இந்தக் கருப்பனா ?

கட்டை குட்டையாய்... தொந்தியுடன்... தெற்றிப் பல்லுடன்... இவனா ?

கற்பனை மாளிகை மணல் வீடு போலச் சரியக் குலைந்து போனாள் தர்மா.

நமஸ்காரம் பண்ணிவிட்டு உள்ளே வந்தவளுக்கு அழுகை பொத்துக் கொண்டு வந்தது.

பையனின் மாமா பேசினார் ; ''எங்களுக்கு ரொம்ப திருப்தி...சீக்கிரத்திலே முகூர்த்த நாளைப் பாருங்கோ நாங்க...பெரிய இடம்னு பயந்துக்க வாண்டாம். உங்க பொண்ணுக்கு உங்க சக்திக்கு, ஆசைக்குத் தகுந்தபடி செய்யுங்கோ. அத்திம்பேர் சொல்லச் சொன்னார்—நாங்க. பொண்ணுக்கு எட்டு பவுன்லே சங்கிலி, திருமாங்கல்யம், கூரைப் புடவை, வைர மோதிரம் போடறோம்... உங்க இஷ்டப்படி நீங்க பண்ணுங்கோ—அப்ப நாங்க கிளம்பறோம்...''

வந்தவர்கள் புறப்பட்டுப் போய் விட்டார்கள்.

முதல்வாரம் பிள்ளை வீட்டார் வந்தபோது உரக்கப் பெருமையுடன் விமர்சித்த தெரு ஜனங்கள் இன்று பிள்ளை யைப் பற்றி ரொம்ப ஒன்றும் பேசாமல் அவரவர் மனசில் உண்மை குத்தி நிற்க, தர்மாவின் அதிருஷ்டத் தைப்பற்றி மட்டுமே பேசிவிட்டுக் கலைந்து போனார்கள்



பையன் அவ்வளவு லட்சணமாய் இல்லாதது எல்லாருக்குமே புரிந்தது.

''பையன் நல்லவனா இருக்கான்—கலகலனு பேசறான்... நீ என்னம்மா சொல்றே ?'' என்றார் ராமநாதன்.

''நான் என்னடாப்பா சொல்றது ?... ஸ்ரீதேவி வீடு தேடி வந்திருக்கா... நாலு நிறைஞ்சுஇருந்தா ஒரு சின்னக் குறை இருக்கத்தான் செய்யும்-மொத்தத்திலே நமக்கு ரொம்ப உசந்த இடம்...'' என்று பேசி முற்றுப் புள்ளி வைத்து விட்டாள் பாட்டி.

தர்மாவை ஒரு ஆத்மா ஒரு வார்த்தை கூடக் கேட்க வில்லை.

'உனக்குப் பிடிச்சிருந்ததா, தர்மா ?' என்று அம்மா அப்பா யாராவது கேட்பார்கள் என்று நம்பிய தர்மா ஏமாந்து போனாள்.

பெரிய மிராசின் தாராளத்தைப் பற்றியும், தர்மா வின் வருங்கால வாழ்க்கையைப் பற்றியுமே பேசினவர் களுக்கு வேறு எதுவுமே தோன்றவில்லை.

இரவு சாப்பாடு ஆகி எல்லோரும் ஓய்ந்த பிறகு' அம்மாவைத் தேடிப் போனாள் தர்மா.

சமயலறையை அலம்பிக் கொண்டிருந்தாள் ராஜம்—

''அம்மா...''

''என்னம்மா''...

''அம்மா...'' தர்மாவின் கண்கள் கலங்கிக் குரல் தழு தழுத்தது.

''என்னடி... என்னாச்சு ?'' பதறிப்போனாள் ராஜம்.

அம்மாவைக் கட்டிக் கொண்டாள் தர்மா.

'அம்மா எனக்கு அவனைப்புடிக்கலைம்மா... எனக்கு இந்தக் கல்யாணம் வேண்டாம்மா...' என்று தாயின் தோளில் முகம் புதைத்து விம்மியவாறே பேசினாள்.

திடுக்கிட்டாள் ராஜம்—

என்ன வந்தது இவளுக்கு ?

''என்னடி உளர்றே? என்னாச்சு உனக்கு?'' கூடத்தில் படுத்திருக்கும் மாமியாருக்குக் கேட்காமல் அடிக்குரலில் அதட்டினாள்.

''எனக்கு அவனைப் புடிக்கலைம்மா...''

''பித்துக்குளியாட்டம் பேசாதே தர்மா—அவனைப் பத்தி உனக்கு என்ன தெரியும், புடிக்கும், புடிக்கலைங்கறதுக்கு? சின்னப் பொண்ணா லட்சணமா இரு... பெரியவர் செய்ற காரியம் நல்லதுக்குத்தான்னு பேசாம இரு...''

''அம்மா... என்னம்மா நீ...''

தர்மாவின் அழுகை பெரியதாயிற்று.

''என்னடி அங்கே ? யாரு அழற சத்தம் கேக்கறது ?'' கூடத்திலிருந்து பாட்டி குரல் கொடுத்தாள்,

''ஒண்ணுமில்லை—தர்மாவுக்குத் தலை வலிக்கிறதாம்...'' ராஜம் சமாளித்தாள்.

''ஏன் வலிக்காது ? எத்தனைபேர் திருஷ்டிபட்டிருக்கு... ? ராஜம் கொஞ்சம் உப்பு மிளகாய் சுத்திப் போடு...'' கூடத்திலிருந்தபடியே விரட்டினாள் பாட்டி.

அதோடு பேச்சு முடிந்தது.

படுக்கையில் விழுந்த தர்மா சப்தம் வராமல் அழுது கொண்டிருந்து விட்டு, விடியும் சமயத்துக்கு உறங்கினாள்.

நிச்சயதார்த்த ஏற்பாடுகள் துரிதமாய நடைபெறலாயின.

நாலைந்து முறைகள் அப்பாவிடமும், அம்மாவிடமும் தனக்கு இந்த சம்பந்தத்தில் விருப்பமில்லை என்று தெரிவித்தும் கூட அவர்கள் இலட்சியம் செய்யவில்லை



அடுத்த வாரம் நிச்சயதார்த்தம் என்று நிச்சயிக்கப்பட்டதும் தர்மாவின் வெறுப்பு இன்னும் அதிகமாகிப் போனது.

வீட்டில் இருந்தால் கல்யாணப் பேச்சுதான் காதில் விழுகிறது என்பதால், ஒரு வியாழக்கிழமை மாலைப் பொழுதில் தியாகராஜர் சமாதிக்குப் போய் உட்கார்ந்தாள்.

கூட்டமே இல்லை,

இருந்த ஓரிருவர் கூட, சற்று இருள் படிந்ததும் புறப்பட்டு விட்டனர்.

தேக்கு மரம் ஒன்றில் சாய்ந்து கொண்டு காவேரியை வெறித்துப் பார்த்தாள் தர்மா.

தண்ணிழலும், பச்சைப் புதர்களுமாய் கண்ணை மயக்கிய காவேரி, எல்லாம் வற்றிப்போய் மணல் தட்டிக் கிடந்தாள்.

''தர்மா—''

திரும்பினாள்.

அவன்தான்—அவளை மணக்கப் போகும் மிராசு பையன் நின்றிருந்தான்

இவன் எப்படி இங்கு வந்தான் ?

யாராவது பார்க்கப் போகிறார்களே என்று தவித்தாள் தர்மா.

''என்ன தர்மா பேச மாட்டேங்குறே ?... இந்த மாதிரி ஒரு சந்தர்ப்பத்துக்காக எத்தனை நாளாய் காத்துண்டிருக்கேன், தெரியுமா ?''

சுற்றிலும் ஒருவரும் இல்லை என்ற தைரியத்தில் அவன் நெருங்கி வந்தான்.

குப்பென்று வியர்வை நாற்றம்.

அருகில் வந்த அவன், தர்மா சற்றும் எதிர்பாராத விதமாய் அவள் வலது கையைப் பற்றினான்.

''உனக்கு ஒரு பரிசு கொண்டு வந்திருக்கேன் தர்மா... இந்தா... நம்ப நிச்சயதார்த்தத்துக்கு நான் கொடுக்கற பரிசு...'' அவன் கை வியர்வையால் கசகசத்தது.

சட்டென்று கைகளை இழுத்துக் கொண்டாள் தர்மா. அவள் கையை இழுத்த வேகத்தில் ஒரு தங்க மோதிரம் கீழே விழுந்து இருளில் தகதகத்தது.

''என்ன தர்மா...'' வெகு உரிமையுடன் அவன் அவள் பெயரைச் சொல்லி அழைத்துக் கையை மீண்டும் பற்ற வந்தபோது இவளுக்கு ஆத்திரம் எழுந்தது.

''சீ... என்னைத் தொடாதே...'' என்று உமிழ்ந்தவள் அவன் நிதானிப்பதற்குள் ஒரே பாய்ச்சலில் ஒடித் தெருவுக்கு வந்து விட்டாள்.

தர்மாவின் மேனி நடுங்கியது.

என்ன துணிச்சல்?...

வீட்டுக்குச் சென்று குளியலறைக்குள் நுழைந்தாள்.

அவன் தொட்ட இடம் கசகசத்தது, எரிந்தது.

ஏதோ படக் கூடாத அழுக்குப் பட்டு விட்டதைப் போன்ற கூச்சம்.

தண்ணீர் விட்டு அலம்பிக் கொண்டாள்.

அவன் மூஞ்சியும்—அவன் வேர்வைக் கையும்—அவளுக்குக் குமட்டியது.

கனவில் வரும் ஆடவன் அவளைத் தொடும்போது உடம்பு சிலிர்க்குமே. இப்போது இவன் தொடும்போது ஏன் அசிங்கப்படுகிறது?

நாளைக்குக் கல்யாணமாகி இவன் தொட வந்தாலும் இதே உணர்வு எழுந்தால்?



மறுபடி அன்று இரவு அம்மாவை நாடிப்போனாள் தர்மா.

மாலை நடந்ததைச் சொல்லிவிட்டு ''அவனைக் கண்டாலே எனக்கு எரிச்சல் வரதும்மா...என்னாலே அவனைக் காதலிக்கவே முடியாது...'' என்றாள் தைரியத்துடன்.

அம்மாவுக்குக் கோபமான கோபம்.

அந்தப் பிள்ளை மனசு நோகும்படி நடந்து கொண்டு விட்டாளே என்ற துடிப்பில் பேசினாள். ''அவன் வந்து உன்னைத் தொட்டு, ஒரு மோதிரம் கொடுத்தா என்ன தப்பு? நாளைக்குக் கல்யாணமாகப்போறது...இந்த காலத்துலே இதெல்லாம் சகஜம்தான்... ஏன் பெரிசு பண்ணறே? கண்ட கண்ட புஸ்தகத்தைப் படிச்சுட்டு எதையாவது உளறாதே... காதலாம் காதல்... உங்கப்பாவை நான் கல்யாணம் பண்ணிக்கறதுக்கு முன்னாலே காதலிச்சேனா? என்னமோ பெரியவா சொன்னா, பண்ணிண்டேன்... இப்ப என்ன குறைஞ்சு போயிட்டேன்? நீங்க எல்லாம் பிறக்கலையா? நான் காதலைக் கண்டேனா, எதைக் கண்டேன்?...ஏதாவது தத்து பித்துனு பேசி என் மானத்தை வாங்காதே...போ போய்ப் படு'' என்று அதட்டி விட்டுப் போய்விட்டாள்.

தர்மாவுக்குத் தீர்மானமாகத் தெரிந்து விட்டது அந்தத் தெத்திப்பல்காரனுடன் தன்னால் வாழ முடியாது என்று—

மனசில் உள்ள குழப்பம் அதிகரிக்க, அதிகரிக்கத் தவித்தவள், அவள் நிச்சயதார்த்தம் நடக்க ஒரு நாள் இருக்கையில் மனம் தெளிந்து ஒரு முடிவுக்கு வந்து விட்டதால் 'எனக்கு இந்தக் கல்யாணம் பிடிக்கவில்லை. நான் போறேன். நான் சாகமாட்டேன். அதனாலே என்னைத்

தேடவேண்டாம்' என்று ஒரு சின்னக் கடிதம் எழுதி வைத்துவிட்டு, திருவையாறை விட்டு ஓடியே போனாள்.

# 8

பாலாம்பாள் பாட்டி தன் சகாக்களோடு பத்து கட்டம் விளையாட்டில் மும்முரமாய் ஈடுபட்டிருந்தாள். வெள்ளைக் காண்டுக் காயைப் பிடித்துக் கொண்டு மற்ற ஒன்பது கறுப்புச் சோழிகளையும் பலுக்கிப் பலுக்கி வேண்டிய விருத்தத்தைப் போடும் பலே பேர்வழி அவள். அக்ரஹாரத்தில் எல்லோரும் அவளை 'சகுனி' என்று அழைப்பதென்றால் சும்மாவா, என்ன? மாலை ஆறரை மணி அளவில் உட்கார்ந்த ஆட்டம் ஏழு மணிக்குள் சூடு பிடித்துவிட்டது. மற்றவர்களெல்லாம் ஜோடு கட்டி இழுப்பதற்குள் பாட்டி இரண்டு ஜோடுகளை மலையில் சேர்த்துவிட்டாள். மூன்றாவது ஜோட்டினால் மற்றவர்களின் ஜோடுகளை உற்சாகமாய் சீவித் தள்ளிக் கொண்டிருந்தவள், கடைசியாய் விழுந்த நான்கு சோனாலை வைத்து விட்டு நிமிர்ந்தபோது, பாப்பா அருகில் உட்கார்ந்திருப்பதைப் பார்த்தாள்.

''என்னடி... அதிசயமாய் நீ கூட இங்க வந்து உட்கார்ந்துண்டு ஆட்டம் பார்த்துண்டு இருக்கே?''—என்று கேட்கவும் செய்தாள்.

''தர்மா தையல்காரன் கடைக்குப் போயிருக்கா, பாட்டீ...சேதுவும், விசாலியும் இன்னும் விளையாடிட்டு வரலை... எனக்கு ஆத்துல தனியா இருக்க பயம்மா இருந்தது... பூட்டிண்டு வந்துட்டேன்...''

பேத்தி பேசுவது பாட்டிக்குக் கோபத்தைக் கொடுத்தது.



''சந்தியால வேளைலே இந்த தர்மா என்னத்துக்கு தையக்காரன் கடைக்குப் போனா? கார்த்தாலே எழுந்து கொடுத்தா என்ன...? என்ன கெட்ட பழக்கமோ...'' பாட்டி பேசி முடிப்பதற்குள் அவள் ஜோடு அம்புலு மாமியால் வெட்டுப்படவே பாலாம்பாளின் கவனம் ஆட்டத்துக்குப் போய் விட்டது.

அடுத்த அரை மணிக்குள் மீண்டும் ஜோடு கட்டி, தன்னை வெட்டின, அம்புலுவின் காய்களை வெட்டி, காய்களை மலையில் சேர்ப்பதற்கும், ''பசிக்கிறது பாட்டி... சாதம் போடு'' என்று விளையாட்டிலிருந்து திரும்பின சேது முறையிடுவதற்கும் சரியாக இருக்கவே 'நான் போறேன்டியம்மா... ராமநாதன் கும்பகோணத்துலேந்து திரும்பற நேரமாச்சு...வீடு பூட்டியிருந்தா கத்துவான்...'' என்று சொல்லி விடை பெற்றுக் கொண்டு திரும்பினாள்.

பாப்பா, விசாலி, சேதுவை அமர்த்தி சாதம் பரிமாறுகையில் 'அப்பவே போன பொண்ணு! இவளை இன்னும் காணுமே!' என்ற விசாரம் பாட்டிக்கு எழவே செய்தது.

வாசலுக்கும், உள்ளுக்கும் குட்டி போட்ட பூனை போல நடந்து களைத்துப் போனதும் திண்ணையிலேயே உட்கார்ந்தாள் பாலாம்பாள்.

தெருவில் சந்தடி அடங்கி விட்டது.

மங்கலாய் எரிந்த விளக்குகள் தந்த வெளிச்சத்தில் தெருவை உன்னித்துப் பார்த்தவர்களுக்கு அதன் வெறுமை பயத்தைத் தரவே சாப்பிட்டு எழுந்து வந்த பாப்பாவிடம் 'சேதுவை அழைச்சுண்டு ஒத்தத் தெரு முனை வரைக்கும் போய்ப் பார்த்துட்டு வாடீ' என்று அனுப்பினாள்.

கால்மணி போது சென்றிருக்கும்.

தர்மாவையும் காணோம், அவளைத் தேடிக் கொண்டு போனவர்களையும் காணோம்.

பிள்ளை வந்தால் கலாட்டாவாகப் போகிறதே என்று பாட்டி தவித்ததற்கு ஏற்றாற் போல கும்பகோணத்துச் சாமான்களை வண்டி கொள்ளாமல் நிரப்பிக் கொண்டு வந்து சேர்ந்தார்கள் ராமநாதனும், ராஜமும்—

'என்னம்மா...வாசலிலே உட்கார்ந்துண்டு இருக்கே!... பேத்திக்கு நிச்சயதார்த்த சாமானெல்லாம் சரியா வாங்கிண்டு வருவேனாமாட்டேனோங்கற பயமா?'' ராமநாதன் குஷியாய் இருந்தார். நல்ல இடத்தில் வாழ்க்கைப் படப் போகும் மகளுக்கு அவன் மனசுக்குப் பிடித்தாற் போல பொருட்கள் வாங்கிவிட்ட திருப்தி அவனுக்கு.

''சாமான்களைக் கூடத்திலே எறக்கி வைச்சுட்டு, நீ மாட்டை அவிழ்த்து விட்டுட்டுப்போடா முனியாண்டி...'' ஆளிடம் பணித்தவர் ஒரே ஒரு புடவைப் பொட்டலத்தை மட்டும் கையில் எடுத்துக் கொண்டு 'தர்மா ஆசைப்பட்ட நிறுசிலே ஒரு புடவை கிடச்சுது... செலவைப் பார்த்தா எப்படி... நாளைக்குக் கல்யாணமாகி இன்னுத்தர் ஆத்துக்குப் போறப் பொண்ணுக்கு குறை என்னத்துக்குனு வாங்கிட்டேன்... உள்ளே வாம்மா காட்டறேன்... தர்மா எங்கே?... தர்மா... தர்மா...' உரக்கக் கூவிக் கொண்டே உள்ளே போனார் ராமநாதன்.

பாலாம்பாளுக்கு வாயைத் திறந்து பேசவே பயம் உண்டாயிற்று...

'தர்மா வெளிலே போயிருக்காப்பா' என்று வாயைத் திறந்தபோது சேதுவும், பாப்பாவும் 'தடதட' வென்று ஓடி வந்தார்கள்.

''அவளைக் காணலை பாட்டி... எத்தனை நாழி நிற்கிறது?...''

பாப்பாவின் குரல்கேட்டு வாசல் தாழ்வாரத்துக்கு வத்தார் ராமநாதன்.

''எவளைக் காணோம்?...''

''தர்மாவைத்தானப்பா...''



தூக்கிவாரிப் போட்டது ராமநாதனுக்கு. ''என்னது? என்ன உளர்றே?... என்னம்மா சொல்றா இவ?''

பாலாம்பாளின் கண்கள் பயத்தினால் கலங்கி விட்டன

''நேக்குத் தெரியாதுடா ராம்நாதா - பத்துக் கட்டம் ஆட அம்புஜுலாத்துக்குப் போயிருந்தேன் தர்மா தையக்காரன் கடைக்குப் போறேன்னு போயி ஒரு ஜாமமாச்சு... இன்னும் காணப்டா... அதான் போயி பார்த்துட்டு வாங்கோனு இதுகளை அனுப்பினேன்...''

''மணி எட்டரை ஆறது!... தர்மா வெளிலே போனவ இன்னும் வரலைனு சவகாசமா சொல்றயே... உனக்கு வர வர புத்தியே சரியில்லையம்மா'' என்று தாயிடம் கோபித்த ராமநாதன் ''முனியாண்டி, மாட்டை அவிழ்க்காதே. தர்மா கடைத் தெருவுக்குப் போயிருக்களாம்... நீ சித்த வண்டி எடுத்துண்டு போய் கூட்டிண்டு வந்துடு...'' என்று உத்திரவிட்டார்.

அதிகமாய் இருட்டின பிறகு பெண் வெளியே போய் பழக்கமில்லாவிட்டாலும், அவ்வப்போது மற்றதெருப் பெண்களுடன் கடைத் தெருவுக்குப் போய்விட்டு சற்றுத் தாமதமாய் திரும்புவது ராமநாதனுக்குத் தெரியும். ஆனாலும் ''இப்ப தையற்காரன் கடைக்குப் போகாட்டா என்ன? விடிஞ்சப்புறம் கொடுக்கறது... அவதான் போறேன்னா நீயும் எப்படி சரின்னே? நாளைக்கு நிச்சயதார்த்தம்... பிள்ளை வீட்டுக்காரா யாராவது அவளைக் கடைத் தெருவிலே பார்த்தா என்ன நினைச்சுப்பா... என்னம்மா நீ?'' என்று கடிந்து கொண்டே இரேழிக்குப் போய்விட்டார்.

மணி ஒன்பதை நெருங்குகையில் திரும்பி வந்தான் முனியாண்டி.

''தையற்காரன் கடைக்குச் சின்னம்மா வரலேயில்லையாங்க...''

2003

அடி வயிறு முதல் முறையாய் ராமநாதனுக்கு கலங்கியது.

''வரலையா... ?... சரியா கேட்டியாடா ?'' அவனிடம் பதைத்து விட்டு ''என்னாம்மா... உன் கிட்டே சரியாத் தானே சொன்னா ?'' என்று தாயிடம் கேட்டார்.

''பாட்டிக்குத் தெரியாதுப்பா... நான் தான் ஆத்துலே இருந்தேன்... 'தா தையற்காரன் கடைக்குப் போயிட்டு வரேன்னு' என் கிட்டே தர்மா சொல்லிண்டு போனா'' என்றாள் பாப்பா.

''கூட யாரு போனா ?''

''நேக்குத் தெரியாதுப்பா...''

பாயில் படுத்து விட்ட சேது சட்டென்று எழுந்து உட்கார்ந்து ''யாருமில்லேப்பா, அக்கா தனியாத்தான் போனா கையிலே பை வச்சண்டு இருந்தா... நான் கோலி விளையாடிண்டு இருந்தப்போ போனாப்பா...'' என்றான்.

ராமநாதனுக்கு உடம்பு ஆட்டம் காண ஆரம்பித்து விட்டது.

தனியாகவா ? தர்மாவா ? கூடப் பெண் ஒருத்தரும் போகவில்லையா ? தையக்கடைக்குப் போறேன் என்று சொல்லிவிட்டு, வேறு எங்கே போனாள் ? ஏன் மணி ஒன்பதாகியும் திரும்பவில்லை ?

அவருக்குப் பயம் எழுந்தது.

துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டவர் ''நானே போய் பார்த்துட்டு வரேன்... முனியாண்டி வாடா...'' என்று கிளம்பி விட்டார்.

''எங்கேன்னா போயிருப்பா ? நேக்கு பயமா இருக்கே ?... காலம் கெட்டு கிடக்குன்னா... எவனாவது இழுத்துண்டு போய் காதிலே, கழுத்திலே இருக்கறதுக்காக



ஏதாவது பண்ணிடப் போறான் ?'' என்று புலம்பின ராஜத்தை லட்சியம் பண்ணாமல் ராமநாதன் புறப்பட்டுப் போனார்.

போனவர் கடைத் தெரு, பஞ்சநதீஸ்வரர் கோவில், காவேரிப் படித்துறை, தியாகராஜர் சமாதி என்று ஒரு இடம் விடாமல் தேடிப் பார்த்தவர்—வழியில் தர்மாவைப் பார்த்தேளா என்று கேட்டபோது—

''இல்லையே ஸ்வாமி''

''நான் பார்க்கலியேங்காணும்...''

''எங்காத்துக்கு வரலியே மாமா'' என்று கையை விரித்தும்,

''ஏன் காணுமா ?... எங்கே போறேன்னு சொல்லிட்டு போனா?'' என்று இவரையே மறுகேள்வி கேட்கவும் செய்தார்களே தவிரவும் ஒருத்தராவது நிம்மதியான பதிலைத் தரவில்லை.

மணி பதினொன்று நெருங்கும்போது வீட்டுக்குத் திரும்பின ராமநாதனுக்கு, பளிச் சென்று எரிந்த விளக்குகளையும், வாசலில் நின்ற ஓரிருவர்களையும் கண்டதுமே, தர்மா இன்னும் வீடு திரும்பவில்லை என்பது புரிந்தது.

என்னாயிற்று ? தர்மா எங்கே ?

ராஜும உரக்கவே அழ ஆரம்பித்து விட்டாள்.

''என் பொண்ணு எங்கேன்னா ? அவளுக்கு என்னாச்சு ? எனக்குப் பயம்மா இருக்குன்னா...''

ராஜத்தின் வேதனை ராமநாதனுக்கும் தொற்றிக் கொண்டது.

''எல்லா இடத்தையும் பார்த்துட்டேன்... அவளைக் காணும் ராஜம்... எனக்கு என்ன பண்றதுன்னு

புரியலையே'' என்று தவித்தவர் கண்களில் மாலை மாலையாய் கண்ணீர் இறங்கி வழிந்தோடியது.

எதிராத்து சுப்புலி, பக்கத்தாத்து சாம்புமாமா, அடுத்த வீட்டு ராமானுஜம் எல்லோரும் வந்து கூடி விட்டார்கள்.

''படித்துறைப்பக்கம் பார்த்தேளா ?'' என்று ஒருவர் கேட்கப் பயத்தினால் நடுங்கிப் போனாள் ராஜம்.

''ஐயோ... நான் என்ன பண்ணுவேன் !... ஏன்னா நிக்கறேள் ? ஏதாவது பண்ணுங்கோளேன்'' என்று தாய் நெஞ்சம் துடித்தபோது, அனைவருமே பரிதாபப் பட்டுப் போனார்கள்.

''நாளைக்கு நிச்சயதார்த்தம்... தர்மாவுக்கு ஒண்ணுனா நாங்க அவா மூஞ்சிலே எப்படி முழிப்போம்?' என்றும்.

''அப்பாளாட்டம் இருக்கிற பெண்ணோட அழகுக்கு ஆசைப்பட்டு எவனாவது இழுத்துண்டு போயிட்டானா?'' என்றும்—

''கழுத்திலே ரெட்டை வடம் பளபளத்துதே— அதுக்காக யாராவது மடக்கிட்டானா?'' என்றும்—என்னென்னவோ பேச்சுகள்.

'போலீஸ்லே வேணா சொல்லுங்கோளேன் மாமா' என்று ஒருவர் சொல்ல, ஒட்டு மொத்தமாய் எல்லோரும் ஆமோதித்தார்கள்.

கண்களைத் துடைத்துக்கொண்டு ராமநாதன் எழுந்திருக்க முற்பட்டபோது, அவசர அவசரமாய் உள்ளே நுழைந்தார், நாலு வீடு தள்ளி இருந்த மணி அய்யர்.

பஸ் ஸ்டாண்டுக்குப் போகும் வழியில் இருந்த 'மணி அய்யர் பிராமணாள் கபே'யின் உரிமையாளர் அவர்.



''என்னடா ராமநாதா... தர்மாவைக் காணோம்னு தேடறாளாமே...நிஜமாடா?'' என்று அவர் கேட்டதும், ஆமாம் என்பது போலத் தலையை ஆட்டினார் ராமநாதன்.

''தையற்காரன் கடைக்குப் போறேன்னு கிளம்பினபொண்ணு அங்கே போகலைன்னா...வண்டி எடுத்துண்டு ஊர் பூரா அலைஞ்சுட்டேன்...என் தர்மாவைக் காணோம்...எங்கே போனா தெரியலையேன்னா...'' பரிதாபமாய் துடித்த ராமநாதன், வாயில் துண்டை வைத்துக்கொண்டு முணங்கினார்.

''தையற்காரன் கடைக்குப் போறேன்னாளா? நிச்சயமாத் தெரியுமா? '

கேள்வி கேட்ட மணி அய்யரை நிமிர்ந்து பார்த்த ராமநாதன் ''அப்படித்தான் அவ பாப்பாகிட்டே சொல்லி விட்டுப் போனாளாம்''—என்றதும் மணி அய்யரின் கண்கள் வியப்பினால் விரிந்தன.

''என் கிட்டே அவ அப்படிச் சொல்லலியே?''

''நீங்க தர்மாவை பார்த்தேளாண்ணா? எப்போ...? என்ன சொன்னா?''

''மணி ஏழு சுமாருக்கு இருக்கும்...நான் கல்லாலே இருந்தேன்... எதேச்சையாய் தெருவைப் பார்த்தா நம்ப தர்மா, பை ஒண்ணைத் தூக்கிண்டு போயிண்டுஇருந்தா...

'எங்கே கொழந்தே, போறே...இருட்டிப் போச்சேன்னேன்'—தனியா போகலை மாமா...பின்னால் அப்பா வறா...தெரிஞ்சவா ஊருக்குப் போறா, சாமான்கள் கொடுக்கணும்னு சொல்லிட்டுப் போனா...நின்னு நீ வரயானு பார்க்க நேக்கு நேரமில்லை...கூட்டம்ஜாஸ்தியா இருந்தது...அப்புறம் இதைப் பத்தி மறந்து போயிட்டேன்...ஆத்துக்கு வந்தா எங்காத்துக்காரி விஷயத்தைச்

சொன்னா...நான் ஓடி வரேன்...நீ போகலியாடா? ... அவளை மாத்திரம் எங்கேடா அனுப்பிச்சே?''

என்ன சொல்லுவார் ராமநாதன்?

கும்கோணம் போனவன் இப்பத்தான் திரும்பறேன் என்பாரா? மகள் சொன்னது பொய் என்பாரா? 'அவள் வீட்டைவிட்டு எதற்காகக் கிளம்பினாள் என்பது யாருக்குமே புரியவில்லை' என்பாரா? என்னவென்று சொல்லுவார்?

எங்கோ, ஏதோ பெரிய தவறு நேர்ந்து விட்டது என்பது மட்டும் புரிந்து போயிற்று. வாசலில் இறங்கி போலீசுக்குச் சொல்லக் கிளம்பியவர் மனசில் எதுவோ நெருட உள்கூடத்திற்கு வந்து பெஞ்சில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டார்.

'என்ன கிளம்பலை?'

'தேட வாண்டாமா?'

'போலீசிலே புகார் எழுதலாம் வாங்கோ' என்று தலைக்குத்தலை கிளப்பியும்' ஒன்றுமே புரியாமல் பிரமைப் பிடித்து உட்கார்ந்து விட்டார்.

பத்து நிமிஷ காலம் அப்படியே இருந்தவருக்கு என்ன தோன்றியதோ, தடக்கென்று எழுந்து உள் அறைக்குச் சென்று தன் பெட்டியைத் திறந்து பார்த்தார்.

தர்மாவின் கடிதம் மொட்டுப் போல உட்கார்ந்து கொண்டிருந்தது.

ராமநாதனுக்கு எல்லாம் வெட்ட வெளிச்சமாகிப் போனது.

சூரியபுரத்து மிராசு பையனைத் திருமணம் செய்து கொள்ள பிடிக்காத தர்மா வீட்டை விட்டு ஓடிப் போய் விட்டாளா?



இனி ராமநாதன் எந்த முகத்தோடு ஊரார் முகத்தில் விழிக்கப் போகிறார்?

விடிந்தால் மாப்பிள்ளை வீட்டில் நிச்சயதார்த்தம்—

காலையில் அவர்கள் வீட்டுக்குப் போய் எந்தத் தைரியத்தில் 'இந்தக் கல்யாணம் நடக்காது' என்று சொல்லுவார்?

மானம் காற்றில் பறக்க, உள்ளம் நொறுங்க, உயிருக்குயிரான மகள் ஓடிவிட்டாள் என்பது தெளிவானதும் ராமநாதன் துக்கத்தை அடக்கமாட்டாமல் 'ஹோ' என்று கதறி அழுதார்.

அழுது முடித்துத் தன்னைத் தேற்றிக்கொண்டவர், தர்மா பேரில் இதுநாள் வைத்திருந்த கண்மூடித்தனமான அன்பு அளவிட முடியாத வெறுப்பாக மாறி 'சீ—எனக்குப் பிறந்த மகள் இறந்து போனாள்' என்று எப்படி வைராக்கியம் கொண்டார் என்பதும், மறுநாள் மாப்பிள்ளை வீட்டாரிடம் என்ன பேசிக் கல்யாணத்தை நிறுத்தினார் என்பதும், ஊருக்கெல்லாம் விஷயத்தை எப்படி எடுத்துச் சொன்னார் என்பதும் நம் கதைக்குத் தேவையில்லாத விவரங்களாதலால், அவைகளை அப்படியே விட்டுவிட்டு தர்மா என்ன ஆனாள் என்று பார்ப்போம்.

# 9

காலை எட்டு மணி அளவில் எக்மோர் ஸ்டேஷனில் வந்து இறங்கின தர்மாவுக்கு 'நானா மெட்ராசுக்கு வந்துவிட்டேன்!'—என்ற பிரமிப்பே மனசில் பரவிக் கிடந்தது.

கடந்த பன்னிரண்டு மணி நேரங்களாய் என்னென்ன பாடுபட்டிருப்பாள்? இதயம் 'பக்பக்' சென்று அடித்துக் கொள்ள எப்படியெல்லாப் தவித்திருப்பாள்?

முந்தின நாள் மாலை ஓடிப்போவது என்ற நிர்மானத்திற்கு வந்தவுடனேயே, செய்ய வேண்டிய செயல்களைத் திட்டமிடலானாள் அவள்.

ஒருத்தருக்கும் சந்தேகம் ஏற்படாத தினுசில் கொஞ்சம் நாகரிகமாய் இருந்த பையில் நாலு நைலான் புடவைகளையும், அதற்குப் பொருத்தமாய் நான்கு-ரவிக்கைகள் இரண்டு உள் பாவாடை, இரண்டு பாடிகள் என்று எடுத்து வைத்தாள். பையை பெரியதாய் சாமான்கள் போட்டு அடுக்கி விட்டால் யார் கண்ணிலும் படாமல் எடுத்துப் போவது சிரமமான காரியம் என்று புரிந்தவளாய் செயல்பட்டாள் தர்மா.

சென்னைக்குப் போனதும் போகாததுமாய் கடைக்குப் போக முடியுமோ என்னவோ! அதனால் நல்லதாய் நாலு புடவைகள் இருந்தால் போதும். பார்க்கிறவர்கள் மதிக்கிறாப்போலக் காட்சியளிக்கத் தேவையான அலங்கார சாமான்கள்; உடனடி தேவைக்கு வேண்டிய சோப்பு, சீப்பு, ஒரு டவல்-இவைகளையே தனக்காக எடுத்துக் கொண்டாள் தர்மா.

கழுதை கெட்டால் குட்டிச்சுவர் என்பது ஊரறியும்.

தர்மா வீட்டை விட்டு ஓடினால் மங்களாவிடம்தான் போய் நிற்பாள் என்பது குழந்தைக்குக்கூட தெரியும்.



அதனால் மங்களாவின் விலாசத்தை யாரும் அறிய முடியாதபடி அவளிடமிருந்து வந்திருந்த கடிதங்களை எல்லாம் ஒட்டு மொத்தமாய் கட்டி, பையின் அடியில் போட்டாள்.

பையை ஒருவழியாய் அடுக்கிவிட்டு, யார் கண்ணிலும் தெரியாதபடி மரபீரோ இடுக்கில் வைத்தவள், மறுபடியும் வெளியில் வந்து பாட்டி செய்து கொண்டிருந்த காரியத்தில் தானும் கொஞ்சம் கை கொடுத்தாள்

துணிமணி விவகாரம் ஆயிற்று. இனி கைச்செலவுக்குப் பணம் வேண்டுமே!

'நீ வேணா அம்புலு மாமியாத்துக்குப் போய் பத்து கட்டம் ஆடிட்டு வாயேன் பாட்டீ... நாளைக்கு நிச்சயதார்த்தம்... அப்புறம் உனக்கும் கல்யாணக் காரியம் சரியா இருக்கும். எங்கே ஒழியப் போறது?' என்று கரிசனத்துடன் பேசிப் பாட்டியை அம்புலு மாமி வீட்டிற்கு அனுப்பி வைத்தாள்.

சேதுவும், விசாலியும் விளையாடப் போய்விட்டார்கள். பாப்பா நைலான் ஒயர்களை வைத்துக் கொண்டு கூடை பின்னுவதில் ஆழ்ந்திருந்தாள்.

அப்பாவின் அறைக்குள் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டாள் தர்மா.

தன் மனசில் ஏற்கனவே தீர்மானித்திருந்தபடி ஒரு கடிதத்தை எழுதினாள். அப்பாவின் பெட்டிக்கு சாவி இருக்குமிடம் அவளுக்குத் தெரியுமாதலால், ஓசைப்படாமல் பெட்டியைத் திறந்து, மேலாக கடிதத்தை வைத்தாள். பக்கத்திலேயே அப்பா ஒரு டப்பாவில் போட்டு வைத்திருந்த பணத்திலிருந்து ஆயிரம் ரூபாயை எடுத்துக் கொண்டாள்.

'இவ்வளவா?' என்று தோன்றினாலும் 'என் கல்யாணத்துக்காக செலவழிக்க இருந்தது இன்னும் எத்தனையோ

ஆயிரங்கள்... அதைத் தடுத்துவிட்டு, இந்த ஒரு ஆயிரத்தைத் தானே எடுத்துக் கொள்ளுகிறேன்'' என்ற சமாதானமும் தோன்றியதால், அந்த எண்ணத்தை அமுக்கி விட்டாள் தர்மா.

ஒன்பது நூறு ரூபாய் நோட்டுக்களை ஒரு சின்ன பிளாஸ்டிக் பையில் போட்டு ஜாக்கெட்டுக்குள் செருகிக் கொண்டவள், நூறு ரூபாய்க்கு மாத்திரம் பத்து, ஐந்து ஒன்று என்று சில்லரையாக எடுத்து கை பர்ஸில் போட்டு கர்ச்சிப்பில் சுற்றி வைத்துக் கொண்டாள்.

'நாளைக்குக் கல்யாணமாகப் போறப்பொண்ணு, கையில் நாலு வளை, கழுத்துலே ரெட்டை வடம் சங்கிலி, காதுலே வைரத்தோடு எல்லாம் போட்டுண்டு லட்சணமாய் இரு...'' என்று பாட்டி சொன்னதினால் அலங்கார பூஷிணியாய் இருந்த தர்மா, இன்று ஏனோ மனசாட்சி உறுத்த வைராத்தோடு, ரெட்டைவடம் சங்கிலி, இரண்டு ஜோடி வளையல்கள் இவைகளைக் கழற்றி அப்பாவின் பெட்டியிலேயே பத்திரமாய் வைத்துவிட்டு சின்னத் தங்கத் தோட்டையும், மெல்லிசு கருகமணி சங்கிலியையும் எடுத்து அணிந்து கொண்டாள்.

உடுத்திக் கொண்டிருந்த பழைய புடவையைக் களைந்து; முந்தின வருட தீபாவளிக்கு வாங்கியிருந்த 'டெரின்' புடவையை உடுத்திக் கொண்டாள்.

அறையை விட்டு வெளியே வந்து, பாப்பா தன் காரியத்திலேயே கண்ணாயிருந்ததைக் கண்டு திருப்தி கொண்டவளாய், சமையலறைக்குள் சென்றாள். பாட்டி வார்த்து மூடி வைத்திருநத தோசைகளில் மூன்றைத்தின்று ஒரு டம்ளர் மோரைக் குடித்தாள்.

எல்லாம் தயார். கிளம்ப வேண்டியதுதான். பாப்பாவின் கவனத்தைத் திருப்பாமலேயே மெள்ள பையைக் கொணர்ந்து வாசலில் வைத்துவிட்டுத் திரும்பின தர்மா



சின்ன பர்ஸைக் கைத்துண்டில் வைத்துச் சுற்றிக்கொண்டு பாப்பாவின் அருகில் வந்து நின்றாள்.

''என்ன பாப்பா பண்ணறே?''

''தெரியலை? கூடை பின்னறேன்'.

''சரி, நான் டெய்லர் கடை வரைக்கும் போயிட்டு வரேன்... பாட்டி கேட்டா சொல்லறையா?''

தலையை நிமிர்த்தி அக்காவை 'இந்த நேரத்துக்கா போகப்போறே' என்பது போல பார்த்துவிட்டு, 'சரி' என்று பாப்பா தலையாட்டவே, வாசலுக்கு வந்து அவள் அறியாவண்ணம் பையை எடுத்துக் கொண்டு தெருவில் இறங்கி நடந்தாள் தர்மா.

இதுவரை தைரியமாய் இருந்தவளுக்குத் திடீரென்று படபடப்புத் தோன்றி உடல் வியர்த்துப் போயிற்று.

யாராவது பார்த்துவிட்டால்?

அப்பா, அம்மா கும்பகோணத்திலிருந்து திரும்பி வந்துவிட்டால்?

விசாலி எதிரில் வந்து 'என்னடி பை கையில்?' என்று கேட்டுவிட்டால்?

'கடவுளே! நான் யாருக்கும் ஒரு தீங்கும் நினைக்கலை. எனக்கு இந்த கிணத்துத் தவளை வாழ்க்கை பிடிக்கலை. அதனாலே போகிறேன்... என்னைத் தடுக்காதே' என்று தனக்குத்தானே வேண்டிக் கொண்டு நடையை எட்டிப் போட்டாள்.

தெரு முனையில், விளக்கு வெளிச்சத்தில் கோலிஆடிக் கொண்டிருந்த சேது தர்மாவைக் கண்டதும் பாதி ஆட்டத்தில் ஓடிவந்தான்.

''எங்கே போறேக்கா...?''

விரிந்த கண்களும், முகத்தில் கூத்தாடும் குறும்புமாய் சேது பேசினதும் ஒரு நிமிஷம் நெகிழ்ந்து போனாள் தர்மா.

அப்பா, அம்மா, பாட்டி, தங்கைகள் இத்தனை பேரை யும் விட்டுவிட்டுப் போவதை நினைத்து வருந்தாத அவள் உள்ளம், தன் அன்புத் தம்பியை விட்டுப்பிரிவதில் மட்டும் வேதனையை உணர்ந்தது.

நெருங்கி அவனை இறுக அணைத்துக் கொண்டாள் தர்மா.

''தையற்காரன் கடை வரைக்கும் போயிட்டு வரேன் சேது...''

''நானும் வரேன்க்கா...''

'வாண்டாம் கண்ணா... நீ ஆத்துக்குப் போய்படி... நான் இதோ வந்துடறேன்...' கை பர்ஸிலிருந்து ஒரு ரூபாய்த்தாளை எடுத்துத் தம்பியிடம் நீட்டினாள் தர்மா. 'சாக்லேட் வாங்கிண்டு போ...நன்னா படிக்கணும் சரியா?' நெடுநேரம் கண்கள் கலங்குவதைப் புரிந்து கொண்ட தர்மா, சேதுவை பிடித்திருந்த பிடியை விட்டுவிட்டுச் சாலையில் நடக்கலானாள்.

அதிருஷ்ட தேவதை தர்மாவின் பக்கமே இருந்தாள். குங்கிலியக் கிணற்றைத் தாண்டும் வரை தெரிந்தவர்கள் ஒருவர் கூடத் தட்டுப்படவில்லை.

பத்து அடி தள்ளிச் சென்றதும் படித்துறைகிருப்பத்தி லிருந்து அவளுடன் பள்ளியில் படித்த ராதையும் அவள் தாயாரும் வந்து கொண்டிருந்தார்கள்.

''யாரு—தர்மாவா? எங்கேடி இந்நேரத்திலே...''

என்ன சொல்லுவது?

பொய் சரளமாய் வந்தது தர்மாவின் வாயில்.



''தெரிஞ்சவா ஊருக்குப் போறா... பஸ் ஸ்டாண்டு வரைக்கும் போயி சாமான் கொடுக்கப்போறோம்...அப்பா பின்னாலே வறா...நாழியாச்சு... நின்று பேசநேரமில்லை... நான் வரட்டுமா?'...சமாளித்துவிட்டு நகர்ந்தாள் அவள்.

பஸ் ஸ்டாண்ட் எதிரில் இருந்த மணி அய்யர் கபே முதலாளி மாமாவிடம் மாட்டிக் கொண்ட போதும் இதே பல்லவியைப் பாடிவிட்டு எப்படியோ தப்பித்து பஸ் ஏறி னாள் தர்மா.

பஸ்ஸில் வெளிச்சம் தன் முகத்தில் விழாதபடி ஒரு மூலையில் அமர்ந்துகொண்டு பார்வையைச் சுழற்றினாள். தெரிந்த பையன்கள் ஓரிருவர் இருந்தாலும் பேசும் அள விற்குப் பழக்கம் இல்லாதவர்கள். ஆதலால் திருவையா றில் புறப்பட்ட பஸ் தஞ்சைக்குப் போகும் வரை தர்மா நிம்மதியாய் இருந்தாள்.

தஞ்சாவூர் பஸ் ஸ்டாண்டில் இறங்கி, மாட்டு வண்டி ஒன்றை அமர்த்திக் கொண்டு ரயிலடிக்குத் தர்மா வந்த போது, மணி இரவு ஒன்பதைத் தாண்டி விட்டது.

சென்னைக்கு டிக்கட் எடுத்த பிறகு, ரயில் வர இன்னும் ஒருமணி நேரமிருந்ததால், வாரப்பத்திரிகை ஒன்றை வாங் கிக் கொண்டு, பெண்கள் காக்கும் அறையில் அமர்ந்து காலத்தைக் கடத்தினாள்.

ரயில் பயணத்திலும் கடவுளின் கருணை அவளுக்குக் கிடைக்கவே செய்தது.

ராமேஸ்வரம் சென்று திரும்பும் வடநாட்டுப் பெண் யாத்திரிகர்கள் நிறைந்த பெட்டியிலேயே தர்மாவும் ஏறிக்கொண்டதால் வம்புப் பேச்சுக்கு யாரும் இழுக்கவும் இல்லை; அனாவசியமாய் தர்மா பயந்து சாக வேண்டி யிருக்கவுமில்லை.

ரயில் தஞ்சையை விட்டுக் கிளம்பி, கும்பகோணத்தில் நின்று, மீண்டும் தன் பயணத்தைத் தொடங்கிய பிறகு,

'இனி கவலை இல்லை' என்ற சந்தோஷம் எழ, தர்மாவின் மனசு சற்று லேசானது.

பெட்டியில் இருந்த விளக்குகளை அணைத்து, விடி விளக்கைப் போட்டு விட்டு, சகபயணிகள் உறங்க ஆரம்பித்து விட்டார்கள்.

பையை ஒரு பக்கத்திற்கு முட்டுக் கொடுத்த வண்ணம் நாளைக்கு செய்யப் போவது என்ன என்பதைத் தர்மா சிந்திக்கத் தொடங்கினாள்.

சென்னைக்கு தர்மா போவது இதுவே முதல் தடவை.

பட்டினத்தில் நடக்கும் அக்கிரமங்களைப் பற்றியும் அசிங்கங்களைப் பற்றியும் தர்மாவே நன்றாக புத்தகங்கள் மூலமும், முக்கியமாய் மங்களா மூலமும் அறிந்திருந்தாள்.

ஊருக்குப் புதுசு என்பது புரிந்தால், கீழ்த்தரமான வாழ்க்கை வாழ மயக்கி இழுத்துப் போய்விடுவார்களாமே!

எப்படி இதையெல்லாம் சமாளிப்பது?

இரவு வெகு நேரம் யோசித்து யோசித்து, ஒரு முடிவுக்கு வந்தாள் தர்மா.

ஊருக்குப் புதிசுப் போல நடந்து கொள்ளக் கூடாது, பயப்படக் கூடாது; யாரிடமும வலியச் சென்று ஏதும் பேசக் கூடாது.

எல்லாம் தெந்தவள் போலத் தைரியத்துடன் நடந்து கொள்ள வேண்டும். முதல் வேலையாய் மங்களாவுடன் தொடர்பு கொள்ள வேண்டும்.

அவள் வீட்டுக்குப் போகலாமா?

எப்படிப் போவது? யாரிடம் வழி கேட்பது? அப்போது இவள் ஊருக்குப் புதுச என்று காட்டிக் கொள்ள வேண்டுமே?



திருவையாற்றிலிருந்து தன்னைத் தேடிக் கொண்டு யாரேனும் எப்படியாலது மங்களாவின் வீட்டுக்குச் வந்து விட்டால்?

சரி—நாலையும் யோசிக்கும் போது மங்களாவின வீட்டுக்குப் போக வேண்டாம் என்றே தோன்றுகிறது.

வேறு என்ன பண்ணலாம்?

மங்களாவின் கடிதங்களில் அவள் ஆபீஸ் விலாசம், போன் நம்பர் இருக்கிறது. பத்து மணிக்கு மேல் அவளுக்கு போன் பண்ண வேண்டியது. அது வரைக்கும் எக்மோர் ஸ்டேஷனிலே தங்க வேண்டியது. பிறகு மங்களா என்ன சொல்லுகிறாளோ அப்படி நடக்க வேண்டியது.

இந்தத் தீர்மானத்துக்கு வந்த பிறகு தர்மாவின் குழப்பங்கள் ஓரளவுக்குத் தெளிந்தன.

''கத்தி போய் வாலு வந்தது' என்ற கதையாய் இந்த எண்ணம் தோன்றி முடிந்ததும் இன்னொன்று எழுந்தது.

மங்களா நளைக்கு ஆபீசுக்கு வராவிட்டால்?

தர்மாவுக்கு உடம்பு நடுங்கியது.

வருவாள்—கண்டிப்பாய் வந்தே தீருவாள்.

நான் வீட்டைவிட்டு ஓடி வந்ததை மங்களா எப்படி வரவேற்பாள்?

'நீ செய்தது சரி' எல்பாளா? இல்லை 'எப்படி இப்படி ஒரு காரியம் பண்ணத் துணிஞ்சே, தர்மா?' என்பாளா?

மங்களா நிச்சயமாய் தனக்கு ஆதரவு தருவாள் என்ற என்ற நம்பிக்கையே தர்மாவின் நெஞ்சில் நிலைத்து நின்றது.

கடந்த இரண்டு வருஷங்களாய் என்னென்ன திறுசில் அன்பாய் ஆதரவாய் எழுதியிருக்கிறாள்!

''உலகம் பரந்து கிடக்கு—உன் போன்ற புத்திசாலிகளுக்கு, அழகிகளுக்கு ஏற்ற இடம் திருவையாறு இல்லை இங்கே இந்த மெட்ராஸ்தான்' என்று ஒரு தரமா, இரு தரமா? இல்லை இல்லை, எத்தனை முறைகள் எழுதி இருக்கிறான்!

ஏன் இந்தக் கல்யாணம் பிடிக்கவில்லை என்று தர்மா அவளுக்கு எழுதினபோது, பதிலுக்கு என்ன எழுதினாள் மங்களா?

'பிடிக்காத கல்யாணத்துக்குத் தலையை நீட்டாதே... காலம் மாறிவிட்டது. முன்போல பெண்கள் அடிமை வாழ்வு வாழ முடியாது... யூ மஸ்ட் சூஸ் யுவர் ஓன் லைஃப்...'' என்றெல்லாம் எழுதவில்லையா?

மங்களா என்னைக் கைவிட மாட்டாள்.

ஷி வோண்ட்—

ஷி ஷுட் நாட்...

எப்போது தர்மா உறங்கிப் போனாளோ அவளுக்கே தெரியாது. ரயில் ஒரு இடத்தில் நின்ற வேகத்தில் குலுங்கிக் கண் விழித்தாள்.

செங்கல்பட்டு—

பாத்ருமிற்குள் சென்று முகம் அலம்பிக் கொண்டு பிளாட்பாரத்தில் விற்ற காபியை வாங்கி அருந்தினாள். ஒரு பொட்டலம் இட்லி வாங்கிப் பசியை அடக்கினாள்

வண்டி எக்மோரை அடைவதற்குள் முகத்தை சீர் செய்து கொண்டு, தலையை வாரி, தர்மாவும் இறங்கத் தயாராகிவிட்டாள்.

தன் மனசில் செய்துகொண்ட முடிவின்படி, ரொம்பத் தெரிந்தவள் மாதிரி பையைக் கையில் எடுத்துக் கொண்டு பயப்படாமல் நடந்து வந்தாள் தர்மா.



எதிரில் வந்த டிக்கெட் பரிசோதகரிடம் ''மே ஐ நோ வேர் இஸ் த லேடீஸ் வெயிட்டிங் ரூம், ப்ளீஸ்'' என்று கேட்டு, அவர் காட்டின வழியில் சென்று அறையில் அமர்ந்து கொண்டாள்:

எதிர்பார்த்ததைவிட எல்லாம் சுலபமாய் நடந்து விட்டதால் 'என்னால் எதையும் சாதிக்க முடியும்' என்ற குதூகலம் தர்மாவினுள் நிறைந்தது.

எக்மோரின் சந்தடி தர்மாவுக்குப் புதிதாய் இருந்தது.

ஜனங்கள், ஜனங்கள்-விதவிதமான மனிதர்கள்-நாகரிகமான பெண்கள் — சிரித்து மகிழ்ந்த சின்னஞ் சிறிசுகள் கம்பீரமான ஆண்கள்... மெட்ராஸ்... அதன் சூழ்நிலை... தர்மாவுக்கு நேரம் போகப் போகக் கொஞ்சம்நஞ்சமிருந்த பயமும் அறவே போய், கனவுலகம் ஒன்றில் இருப்பதைப் போன்ற சுகம் உண்டாயிற்று.

மணி பத்தரை ஆகும்போது, போர்ட்டர் ஒருவனின் உதவியுடன் ஸ்டேஷன் மாஸ்டரின் அறைக்குச் சென்று ''கான் ஐ யூஸ் யுவர் போன், ப்ளீஸ்'' என்றாள் மெல்ல.

மங்களாவின் அலுவலக போன் நம்பரை இவள் கூற அவர்களே டயல் செய்து கொடுத்தார்கள்.

மணி அடித்தது-மறுமுனையில் யாரோ எடுத்தார்கள்.

''குட் மார்னிங்... இன்டர் நேஷனல் அட்வர் டைஸிங்...''

''குட் மார்னிங்... கேன் ஐ டாக் டு மிஸ் மங்களா ப்ளீஸ்?'' ரொம்ப சகஜமாய் வார்த்தைகள் தர்மாவிடமிருந்து வெளிவந்தன.

''ஜஸ்ட் எ மோமெண்ட்''—

காத்திருக்கும் நாழிகையில் இது நாழிகை இல்லாத படபடப்பு தர்மாவுக்கு உண்டானது.

மங்களா இல்லாவிட்டால்?

இதயம் துடிப்பது அவளுக்குக் காதுக்குள் கேட்டது. அருகிலிருந்தவர்களுக்குத் தன் இதயம் பெரியதாய் சப்தம் போடுவது கேட்டுவிடுமோ?

எத்தனை நாழிகை ஆகிறது.

மங்களா இல்லையா?

''ஹலோ... மங்களா ஹியர்—''

இரண்டு வருஷ காலங்களுக்கும் மேலாய் கேட்காத தோழின் குரலைப் போனில் கேட்டதும் குபுக்கென்று தர்மாவின் கண்களில் நீர் திரண்டது.

நெஞ்சு மிதந்து தொண்டைக்குழியை அடைத்துக் கொண்ட மாதிரி அவளுக்கு வார்த்தை எழும்பவில்லை.

''ஹலோ...'' என்றாள் மறுபடியும் மங்களா.

''மங்களா... நான்தான் தர்மா...'' எப்படியோ பேசி விட்டாள்.

''ஹீ...யாரு? தர்மாவா?'' மங்களாவின் குரலில் வியப்பு கொப்பளித்தது.

''எப்போ வந்தே?... எங்கேயிருந்து பேசறே... தர்மா ஆர் யு ஆல்ரைட்'' கேள்வி மேல் கேள்வி அடுக்கினாள் மங்களா...

''விவரமெல்லாம் நேர பார்க்கறப்போ சொல்ல றேன்—நான் எக்மோரிலிருந்து பேசறேன்... வேர் கேன் ஐ சீ யூ?''



ஆபீசுக்கு லீவு போட்டுவிட்டு உடனே வருவதாகவும், அதுவரை தர்மாவை அங்கேயே இருக்கச் சொன்ன மங்களா, சொன்னபடி அடுத்த அரைமணிக்குள் வந்து சேர்ந்தாள்.

ஸ்டேஷன் என்றும் பாராமல் ஓடிவந்து அணைத்துக் கொண்ட மங்களாவைக் கண்டதும் தன் மனசின் சந்தேகங்களெல்லாம் பொய்யாகிவிட்ட நிம்மதியில் அழுது விட்டாள் தர்மா.

''வா எல்லா விவரத்தையும் காப்பி சாப்பிட்டுண்டே பேசலாம்'' என்று எதிரிலிருந்த ஹோட்டல் ஒன்றுக்கு மங்களா கையைப் பிடித்து இழுத்து அழைத்துச் சென்ற போது, கஷ்டங்கள் எல்லாம் நீங்கி புது வாழ்வில் காலடி எடுத்து வைத்து விட்ட உற்சாகத்தில் தர்மாவுக்கு எல்லாமே இனித்தது.

1973

# 1

இண்டர்காம் ஒலித்தது.

''தர்மா''

''எஸ் சார்''

''வாட் ஹாபண்ட் டு தமஜாரா கால் தர்மா?... சேஷனை காண்ட்டேக்ட் மண்ணினாயோ? பாம்பே மில் லெட்டர் டியா? அகெண்டெண்ட். எக்ஸிக்யூடிவ் மானேஜர் இரண்டு பேரையும் இங்கு வரசொல்...இன்றைக்கு எனக்கு என்னென்ன வேலைகள் என்று திரும்பச் சொல்...காலையில் நீ எனக்குச் சொன்னது மறந்து விட்டது...''

''மதுரை கால் கேட்டேன் ஸார்—பி.பி. நாட் அவெய்லபில்...அரைமணி கழித்து வருவாராம்...ஜஹால் கெப்ட் த கால் பெண்டிங்...ஷேசன் இன்னும் பதினைந்து நிமிஷங்களுக்குள் உங்களுக்கு போன் பண்ணுவதாகச் சொன்னார். அக்கெளண்டண்ட் இன்று லீவு... எக்ஸிக்யூடிவ் மானேஜரை மட்டும் வரச் சொல்லவா ? இன்று உங்களுக்குப் பதினோரு மணிக்கு சேம்பர் ஆஃப காமர்ஸில் மீட்டிங்... விஸிடிங் இங்கிலீஷ் அட்வர்டைஸிங் குருப்புடன் ஒரு மணிக்கு கன்னிமேராவில் லஞ்ச். பகல் மூன்று மணிக்கு ஸ்டுடியோவில் லாவண்யா மில்லின் ஷூட்டிங்... நீங்களே போய் கவனிக்க வேண்டும் என்றீர்கள்... தென்...''

''ஓ! இனஃப்... ஸ்டாப் இட் தர்மா ? எனக்குத் தலையைச் சுற்றுகிறது...''

''உங்கள் மேஜை மேலேயே இன்றைய அப்பாயிண்ட்மென்ட்ஸ் டைப் செய்து வைத்திருந்தேனே... ஷல் ஐ கம் இன அண்ட் கெட் இட் ஃபார் யூ?''

''வேண்டாம் தர்மா... நானே பார்க்கிறேன்... நீ லெட்டர்களை முடித்துக் கொண்டு வா... குட் கேர்ல்...''

''தாங்க்யூ ஸார்.''

தர்மா டைப்ரைட்டரிடம் தன் கவனத்தைச் செலுத்தினாள்.

ஏர் கண்டிஷண்ட் செய்யப்பட்ட அறை—பச்சை கார்பெட்—வெனிஷியன் ப்ளைண்ட்ஸ், வழ வழ மேஜை, சுழலும் சௌகரியமான நாற்காலி— ஐ. பி. எம். எலெக்ட்ரிக் டைப் ரைட்டர்— அதில் தவழ்ந்து விளையாடும் மெல்லிய விரல்கள்— கூர்மையாக வளர்க்கப்பட்ட நகங்களில் ஷாக்கிங் பிங்க் நகப் பூச்சு ; கழுத்து இறங்கின ரவிக்கை, மேல் நாட்டு உல்லி ஜார்ஜெட் புடவை, முகத்தை அழகு படுத்திக் காட்டும் கொண்டை, காதில் பெரிய வளையம், கண்களில் ஐ ஷேடோ, மணக்கும் இன்டிமேட் மணம் அழகான சூழ்நிலையில் உற்சாகமாய் வேலையில் ஈடுபட்டிருந்தாள் தர்மா.

யார் !

நம் தர்மாவா ?

திருவையாற்றிலிருந்து, 'வேண்டாம் இந்த கிராமாந்திர வாழ்க்கை' என்று ஓடி வந்தாளே, அந்த தர்மாவா ?

எஸ்—அவளே தான்.

எப்படி இப்படி ஒரு அந்தஸ்தான வாழ்க்கையை அடைந்தாள் என்று தெரிய வேண்டுமானால்—அவள் சென்னைக்கு வந்த அந்த நாளை, அதாவது இரண்டு வருஷங்களுச்கு முந்தின நாளை, அதைத்தொடர்ந்த நாட்களைப் பார்க்க வேண்டும்.

என்ன போகலாமா ?

ஆதியோடந்தமாய் மங்களாவிடம் தனக்குப் பிள்ளை பார்த்தது, பிடிக்காதது,பெற்றோரிடம் சொன்னது,அவர்



கள் காதில் வாங்காதது, தான் புறப்பட்டது எல்லாவற்றையும் கூறின தர்மா ''நான் பண்ணது தப்போ, ரைட்டோ...உன்னை நம்பி எல்லாரையும் விட்டுட்டு வந்துட்டேன் மங்களா...இனிமே நீதான் எனக்கு வழிவழி சொல்லணும்'' என்றும் கூறி முடித்தாள்.

கொஞ்சம்கூடத் தயங்கவில்லை மங்களா.

''உன் நிலைமையிலே நான் இருந்தா இப்படித்தான் பண்ணியிருப்பேன்...அந்தப் பட்டிக்காட்டானைக் கல்யாணம் பண்ணிண்டு வாழ்நாள் பூரா அவஸ்தைப் படாமல் தப்பிச்சுண்டு வந்தியே... யூ ஹாவ் டன் த ரைட் திங்...வா ஆத்துக்குப் போகலாம்...யோசிச்சு எதையும் பண்ணலாம்.''

தோழியின் கைகளை ஆதரவாய் பற்றிக் கொண்டு எழுந்தாள் மங்களா.

''உங்கப்பாம்மா என்ன சொல்லுவா, மங்களா?''

தர்மாவின் பயம் இன்னும் தெளியவில்லை.

''ஒண்ணும் சொல்லமாட்டா? அவா யாரு? என்னைப் பெத்தவா—அவாளைப் பத்தி எனக்குத் தெரியாது?''

''திருவையாத்துலேந்து யாராவது உங்காத்துக்கு தேடிண்டு வந்துட்டா?''

''ம்...அது வேணா நடக்கலாம்...அவா கிட்டே எங்க அட்ரஸ் இருக்கா?''

''ம்ஹூம்...நான் எல்லா லெட்டரையும் எடுத்துண்டு வந்துட்டேன். உங்கப்பாவுக்குத் தெரிஞ்சவா இருந்தாத்தான்...''

''தட் ஈஸ் நாட் பாஸிபிள்...நாங்க யார்கிட்டேயும் தொடர்பே வைச்சுக்கலை...தவிர நாங்க அண்ணாநகர் வீட்டுக்குக் குடித்தனம் வந்து ஒரு மாதம்தான் ஆறது... அதனாலே நீ தைரியமா வரலாம்...வா...'' முகத்தில் சிரிப்

போடு மங்களா பேசினதும் தர்மாவின் மனசும் தெளிந்து போயிற்று.

டாக்ஸி பிடித்துக் கொண்டு அண்ணாநகர் வீட்டுக்குப் போனார்கள். மங்களாவைப் போலவே அவளுடைய வீடும் நாகரீகமாய் இருந்தது. சின்னதாய் தனி பங்களா. மொஸைக் தரை, அட்டாச்டு பாத் ரூம், டிஸைன் போட்ட ஜன்னல் கம்பிகள், டிஸ்டெம்பர் பூசப்பட்ட சுவர்கள், அதில் தொங்கிய அலங்காரச் சித்திரங்கள், காற்றில் ஆடும் மெல்லிய திரைச்சீலைகள், அழகான ஸோபா செட்... வீட்டைப் பார்த்து வியந்து போனாள் தர்மா...

''இதுவா? இதுவா உங்க வீடு?...''

''ஏன் அப்படிப் பார்க்கறே தர்மா?''

''எத்தனை அழகா இருக்கு மங்களா? இப்படியெல்லாம் வீட்டை வைச்சுக்கத் தெரிஞ்சவா எப்படி அந்தக் கண்டியூர் கிராம வீட்டிலே இருந்தேள்?''

புன்னகையுடன் தோழியை உள்ளே அழைத்துப் போனாள் மங்களா.

''இது மெட்ராஸிலே சாதாரணம் தர்மா...இன்னும் அபாரமான வீடெல்லாம் இருக்கு...நீ பார்த்தியோ மலைச்சுப் போயிடுவே...!''

மங்களாவின் தாய்கூட மாறிப் போயிருந்தாள்.

அவர்கள் இப்போது வசதியாக இருப்பது வெளிப்படையாகவே தெரிந்தது.

அம்மாவிடம் எதையும் மறைக்கவில்லை மங்களா. அதற்காக வேண்டாத பேச்சும் இல்லை, சொல்ல வேண்டியதைச் சொன்னதும் அவள் தாயும் புரிந்து கொண்டாள். மங்களாவின் தாய் இல்லையா?

''உன்னைப் பத்தி எங்களுக்குத் தெரியும் தர்மா...நீ தப்புப் பண்ண மாட்டே...இதுவும் உன் வீடுதான்...



சுவாதீனமா நடந்துக்கோ...'' என்று மட்டும் சொல்லி அவளை வரவேற்றபோது, தர்மாவுக்கு அழ வேண்டும் போல இருந்தது.

தன் அறைக்கு அவளை அழைத்துப்போனாள் மங்களா. தோழிகளுக்கு சந்தோஷமான சந்தோஷம்—பிரிந்தவர்கள் கூடினால் பேச்சுக்குக் கேட்க வேண்டுமா?

மாலையில் வீடு திரும்பிய மங்களாவின் தந்தை ''அடடே! தர்மாவா, வாம்மா!'' என்று வரவேற்றாரே தவிர வேறு எதுவும் கேட்கவில்லை. மங்களாவின் தாய் அவரிடம் முன்கூட்டியே பேசிவிட்டாள் போலிருக்கிறது.

இரவு உணவுக்குப் பிறகு சிநேகிதிகள் கதவைச் சார்த்திக்கொண்டு மீண்டும் பேச உட்கார்ந்தார்கள்.

தன்னைப் பற்றி, தான் வேலை பார்க்கும் இடத்தைப் பற்றி, தன் வேலையைப் பற்றி எல்லாம் விவரமாய்ச் சொன்னாள் மங்களா.

சென்னையில் பெரிய விளம்பர அலுவலகங்களில் ஒன்றான இன்டர்நேஷனல் அட்வர்டைஸிங்கில் மானேஜருக்கு பி.ஏ. வாக இருக்கிறாள் மங்களா. கிட்டத்தட்ட ஐம்பது பேர்கள் வேலை பார்க்கும் அந்த அலுவலகத்தில் நான்கு லேடி டைப்பிஸ்டுகள் உண்டு. இவள் அவர்களுக்கு ஒரு படிமேல், மானேஜருக்குப் பி.ஏ. அல்லவா? மானேஜருக்கு அதிகாரியான எம்.டியிடம் ஒரு ஆங்கிலோ இந்தியப் பெண் பி.ஏ. வாக இருக்கிறாள். இவர்களைத் தவிர மற்றவர்களெல்லாம் ஆண்களே. பெரிய பெரிய துணி மில்கள் இவர்களின் வாடிக்கைக்காரர்கள். அவர்களின் துணிகளுக்கு விதவிதமாய் விளம்பரங்கள் தயார் செய்வது இவர்கள் வேலை.

''வேலை ரொம்ப சுவாரசியமா இருக்கு தர்மா. அறுநூற்றி எண்பது ரூபா சம்பளம், போனஸ் உண்டு. இது எல்லாத்தையும் விட, எங்க ஆபீஸ் ஒரு குடும்பம் மாதிரி. எம்.டி., என் பாஸ் எல்லோருமே ரொம்பப் பிரியமா நடந்துக்கறா—ஐ ஆம் ஹாப்பி இன் திஸ் பிளேஸ்...''

மங்களா தன்னைப் பற்றின விபரங்களை விரிவாகக் கூறி முடிப்பதற்குள் மணி இரவு பன்னிரண்டைத் தாண்டி விட்டது. மங்களா பேசப் பேச இது நாழிகை மனசில் நெருடிக் கொண்டிருந்த விஷயம் பெரியதாய் வளர்ந்து போகவே, அதை வெளியில் கொணர்ந்தாள் தர்மா.

''நான் இனிமே என்ன பண்ணறது மங்களா! எனக்கு ஏதாவது வேலை கிடைக்குமா? இல்லே ரொம்ப கஷ்டப் படணுமா? நீ என்ன நினைக்கிறே?''

''ம்—?''

தர்மாவிடமிருந்து மங்களா எதிர்பார்த்த கேள்வி தான்—என்றாலும் பதில் சொல்ல ஒரு நிமிஷம் தயங்கி விட்டுப் பேசினாள்.

''உன்னைப் பார்த்ததுலேந்து என் மனசுலே உன் அழகுதான் நிறைஞ்சு கிடக்கு...என் தர்மா...நீ மாடலாக இருக்கியா? நான் எங்க ஆபீஸிலே சொல்லி உன்னை எங்க விளம்பரங்களுக்கு மாடலாக எடுத்துக்கச் சொல் றேன்...யூ வில் கெட் குட் இன்கம்...எனக்கு மட்டும் உன் அழகு இருந்தா நான் மாடல் பண்ணுவேன்'' என்றாள்.

மாடலா? நானா?...பதில் பேசவில்லை தர்மா.

''என்ன பதிலே காணோம்!''

''மாடலா இருக்கிற தொழில் வேண்டாம்?'' என்றாள் மெல்ல—

''ஏனாம்?''

''அழகா இருக்கிறது பெருமைதான்; அதனால் புகழ் நிறைய வரும். நான் இல்லேங்கலே... ஆனா எனக்கு அப்படி இருக்கப் பிடிக்கலை...'' 'தர்மா புத்திசாலி'னு எல்லோரும் சொல்லணும்...என் புத்தியால் எனக்குப் பேர், புகழ் வரணும்...இதுதான் என் ஆசை...தப்பா மங்களா?''

தர்மா சொல்லுவது மங்களாவுக்குப் புரிந்தது.



என்றைக்குமே வகுப்பில் முதலாவதாக இருந்தவளுக்கு, கண் கண்டால் கை காரியம் செய்யும் அளவுக்குப் புத்தி சாலியான தர்மாவுக்கு அப்படி ஒரு ஆசை இருப்பது நியாயமே!

''ஆல் ரைட்... ஐ வோண்ட்... ஃபோர்ஸ் யூ... நாளைக்கு யோசிச்சுப் பார்க்கலாம்... இப்போ நீ நிம் மதியா தூங்கு...''

வேலை கிடைக்குமா? சீக்கிரம் கிடைக்குமா? அதுவும் நல்லதாய், கௌரவமானதாய் கிடைக்குமா?

தர்மாவினுள் என்னென்னவோ யோசனைகள்.

கையில் இருக்கும் ஆயிரம்ரூபாய் எத்தனை நாட் களுக்குத் தாங்கும்? மங்களா வீட்டிலேயே எத்தனை தினங்களுக்குத் தங்குவது? இப்படி ஏதேதோ—

தூங்கி எழுந்து காப்பி குடித்துவிட்டு வாசலில் உட் கார்ந்தார்கள் தோழிகள். பேப்பர்காரன் புதுபெமினாவை போட்டுவிட்டுப் போனான்.

தர்மா எடுத்துப் புரட்ட, அருகில் அமர்ந்து மங்களாவும் பழைய நாட்களை ஞாபகப்படுத்திப் பேசிக் கொண்டே ஒரு பக்கத்தைத் தாண்டும் போது 'ஷாக்' அடித்தவளைப் போல பத்திரிகையைப் பிடுங்கிக் கொண்டு 'நான் ஒரு மண்டு; எனக்கு ஏன் தோணலை? வொய் டிண்ட் இட் ஸ்ட்ரைக்?' என்று குதிக்கத் தொடங்கினாள் மங்களா.

தர்மாவுக்கு ஒன்றும் புரியவில்லை.

''என்ன மங்களா?''

''உனக்கு வேலை தர்மா... இங்கே... பாரு இங்கே'' சந்தோஷமாய் மங்களா காட்டிய பக்கத்தைப் பார்த்தாள் தர்மா.

''நீங்கள் கர்ப்பமாயிருக்கிறீர்களா? அப்படியானால் நிறைய கால்ஷியம் சாப்பிடுங்கள்'' என்ற ஒரு பக்க விளம்பரம்.

தர்மாவுக்கு தலையும் புரியவில்லை, காலும் புரிய வில்லை.

''என்ன மங்களா? இதுக்கும் எனக்கு வேலைக்கும்... வாட் ஹேப்பண்ட் யூ?''

''இருக்கு டியர் தர்மா... இருக்கு... எங்க டைப்பிஸ்ட் மாலினி அடுத்தவாரம் முதல் மெடர்னிடி லீவில் மூணு மாசம் போறா—அவ இடத்துக்குப் புது ஆள் எடுக்கணும்னு என் பாஸ் என் கிட்டே பேசிண்டு இருந்தார். உன்னைப் பார்த்த உடனே எனக்கு ஏன் தோணலை...? இன்னிக்கே பாஸ் கிட்டே பேசிடறேன். உனக்கு வேலை கிடைச்ச மாதிரிதான் தர்மா...'' குதூகலத்துடன் அவளை அணைத்துக் கொண்டாள் மங்களா.

அதிருஷ்ட தேவதை தர்மாமேல் கடைக் கண்ணைத் திறந்துப் பார்க்கத் தீர்மானித்த பிறகு, தடை என்ன இருக்க முடியும்?

மங்களாவுக்கு அவள் ஆபீசில் ஏக செல்வாக்குப் போலிருக்கிறது. அன்று மாலை அவள் வீடு திரும்பும் போது முகம் பூவாய் பூத்திருந்தது.

''ஸக்ஸெஸ்... நாளைக்கு இன்டர்வ்யூ. பிறகு அடுத்த திங்கட் கிழமை நீயும் நானும் ஜோடியாய்... ஆபீஸ் போவோம்... ஓ! தர்மா... ஐ ஆம் ஸோ ஹாப்பி....''

தர்மாவுக்குப் பெருமை தாங்கவில்லை.

நான் நினைத்ததெல்லாம் சுலபமாக நிறைவேறப் போகின்றனவா?

நான் அவ்வளவு அதிருஷ்டக்காரியா?

''நீ சிபாரிசு செய்யும் பெண் உன் மாதிரி சாமர்த்திய சாலியா?'' என்றாராம் மங்களாவின் பாஸ்—''என்னைவிட நூறு மடங்கு கெட்டிக்காரி, அழகி'' என்றாளாம் இவள்.

'நாளைக்குக் கூட்டிக் கொண்டு வா—பிடித்தால் அப்பாய்ண்ட்மெண்ட் ஆர்டர் கொடுக்கிறேன்' என்று



சொல்லி இருக்கிறாராம் — தர்மாவின் திறமை மேல் மங்களாவிற்கு அசைக்க முடியாத நம்பிக்கை.

அவள் நம்பிக்கையைத் தர்மாவும் வீணடிக்கவில்லை— முதல் நாளிலிருந்தே வெகுசிரத்தையாய் வேலையைக் கற்றுக் கொண்டு, மூன்று மாதங்கள் தாண்டுவதற்குள் பிரமாதமாய் பேர் வாங்கினாள் அவள்.

கடைக்கண்ணால் பார்த்த அதிருஷ்ட தேவதை இன்னும் கொஞ்சம் கண்களை விரித்துப் பார்க்கத் தீர்மானித்து பிள்ளை பெறப்போன மாலினியின் கணவனை வேறு ஊருக்கு மாற்றி, மாலினி தொடர்ந்து வேலைக்கு வர விடாமல் செய்து, தர்மாவை இன்டர் நேஷனலின் நிரந்தர டைபிஸ்டாக ஆக்கினாள்,

சென்னைக்கு வந்த நான்காம் மாசம் தர்மாவுக்கு ஒரு பெரிய கம்பெனியில் நிரந்தர வேலை, மாசம் ஐநூற்றி இருபது சம்பளம்—எப்படி? நம்ப முடிகிறதா?

பணமும், இதமான சூழ்நிலையும், சந்தோஷமும் ஒருங்கே சேர்ந்ததால் பூரித்துப்போன தர்மா, தன் சின்ன வயசுக் கனவுகளையெல்லாம் நனவாக்க முற்பட்டாள்.

கொடி போன்ற உடலை அழகாய் துவளவிட, அவள் கற்றுக் கொண்டாள். ஜார்ஜெட் புடவை தோளில் சரிந்து நிற்கவும், கோவில் சிலை போன்ற வாளிப்புத் தெரிய நாபிக்குக் கீழ் புடவை உடுத்தவும், கண்களை வட்டமாய் விரிக்கவும். மோகனமாய் புன்னகைக்கவும், சன்னமான குரலில்பேசவும், சற்றே கவர்ச்சியாய் தோள்களை குலுக்கவும், தர்மா மெள்ள மெள்ளக் கற்றுக் கொண்டாள்.

கொடுக்கும் தெய்வம் கூரையைப் பிய்த்துக் கொண்டு அல்லவா கொடுக்கும் என்பார்கள்? அரைக் கண்ணால் பார்த்த இறைவனுக்கு திருப்தி இல்லை. முழுக் கண்ணால் பார்க்க எண்ணினான் போலும்! மானேஜிங் டைரக்டர் ரமணனின் பர்ஸனல் செக்கரட்டரியான சில்வியா

ஆஸ்திரேலியாவுக்குக் குடி போக, என்றோ விண்ணப்பித்திருந்த அனுமதி அவளுக்கே நம்பிக்கையில்லாமல் ஒரு நாளில் அவளுக்குக் கிடைத்தது.

அலுவலகத்தில் நடக்கும் அனைத்தையும் ஊன்றிக் கவனிக்கும் எம்.டி.யின் கண்களில் சூடிகையான, சாமர்த்தியமுள்ள தர்மா விழுந்தாள்.

பிறகு!

பிறகென்ன?

திருவையாற்று தர்மசம்வர்த்தினி, சென்னைக்கு வந்த இரண்டாண்டு காலத்தில் இன்டர் நேஷனல் அட்வர்ட்டைசிங் கம்பெனி மானேஜிங் டைரக்டரின் அந்தரங்கச் செயலாளராக நியமிக்கப்பட்டு, மாசம் ஆயிரத்து நூறு ரூபாய் வாங்கும் கெட்டிக்காரி என்ற பேர் மட்டும் எடுக்காமல், கண்டோர் சிலிர்த்துப் போகும் நவநாகரிகமான யுவதியாகவும் மாறிப் போனாள்.

## 2

"ஹேய்! மங்களா... லுக் தேர்... சுருக்கப்பாரேன்... அம்பாரமாய் குவிக்கப்பட்டிருந்த புடவைகளிலிருந்து தேவையானதைப் பொறுக்கிக்கொண்டிருந்து கண் நிமிர்ந்த தர்மா, தன் ரகசியக் குரலில் தோழியின் கவனத்தைத் திருப்பினாள்.

"என்ன?"

"அங்கே பாரு வாவ்! வாட் ஏ ஹாண்ட்ஸம் சாப்!... யாராவது ஹிந்தி சினிமாக்காரனா?" திறந்த கண்களை இமைக்காமல் தர்மா காட்டிய திசையில் நோக்கினாள் மங்களா.



நகரின் பெரிய துணிக்கடையில் அவர்கள் நின்றுகொண்டிருந்தார்கள். இவர்கள் இருந்த இடத்திலிருந்து பார்த்தால் வாசற்படி நேராகத் தெரிந்தது.

படிகளுக்கு இரண்டு பக்கமும் அழகான பொம்மைகளை விதம் விதமாய் அலங்கரித்து நிறுத்தியிருந்ததை வேடிக்கை பார்த்தவாறே அவன் நின்றிருந்தான்.

வெள்ளை டபுள் ரிட் பேண்ட்...லேடஸ்ட் கட்டிங்...

வெள்ளை புல் ஷர்ட்... லேடஸ்ட் கட்டிங்...

பெரிய பெரிய பூப்போட்ட வண்ண டை... லேடஸ்ட் தினுசு.

தலை கொள்ளாமல் முடி.

காலில் வெள்ளை கறுப்பு பட்டையிட்ட ஷூ.

சிவந்த நிறம்.

அந்த நிறத்தைக் கூட்டிக் காட்டுகிற மாதிரி மேல் உதட்டில் தடிமனாய், வழிந்த கறுப்பு மீசை.

கண்களை மறைத்த கூலிங் கிளாஸ்.

இடுப்பில் பட்டை பெல்ட்.

உயரம்...பரந்த மார்பு.

அவன் நின்றது, பார்ப்பது எல்லாமே கம்பீரமாய் இருந்தது.

"ஓ! முரளி!..." மங்களாவுக்குத் தெரிந்தவனா!

"எந்த முரளி."

"முரளி தெரியாது? நம்ப முரளி தர்மா...முரளி த கிரேட்..."

இப்போது தர்மாவுக்குக் கோபம் வந்தது.

"மினிஸ்டர்மாதிரி, முரளி தெரியாது, நம்ப முரளின்னா என்ன அர்த்தம்?... ஹூ... ஈஸ் ஹி."

''ஒன் ஆப் த டைரக்டர்ஸ் ஆப் லாவண்யா மில்ஸ்... அதின் ஜெனரல் மேனேஜர் கூட...உனக்கு எப்படித் தெரியலை தர்மா? அதான் நம்ப முரளின்னேன்...''

தெரியாது என்பது போலத் தலையை அசைத்தான் தர்மா.

''நான் எம். டி. கிட்டே மாறி மூணு மாசம் ஆறது... ஆனாக்க இந்த நம்ப முரளியை நான் பார்த்தது கிடையாது...அவனோட பேசினது கிடையாது...ஏன்...இப்படி நம்ப முரளினு ஒருத்தன் இருக்கானு கேள்விப்பட்டதுகூட கிடையாது.''

''ஓ! யெஸ்...உனக்குத் தெரிய சந்தர்ப்பம் இல்லை தான்... முரளியை நான் கடைசியாய்ப் பார்த்தபோது தான் அப்ராட் போகப்போறதா சொன்னான் 'எத்தனை நாட்கள்'னேன்?... சில மாசங்கள் ஆகலாம்ன்னான்...ஸோ ஐயா ஊர் திரும்பிட்டார் போலயிருக்கு...ம்...இந்த ஆளு ரொம்ப இன்டிரஸ்டிங் பேர்வழி தர்மா...வீட்டுக்குப் போகறச்சே சொல்றேன்'' மங்களா சொல்லுவதற்கும், கொடி போன்ற உடலைக் கொண்ட ஒரு நாகரீகப் பெண் கடையிலிருந்து வெளிப்பட்டு முரளியை அடைவதற்கும் சரியாக இருந்தது.

''அது மோனிகா தானே மங்களா? பம்பாய் மில் களுக்கு மாடல் பண்ணறாளே, அவ தானே...''

'ஆமாம்' என்று தலையாட்டினாள் மங்களா.

பார்த்துக்கொண்டு இருக்கையிலேயே மோனிகாவின் கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு முரளி கடையை விட்டு இறங்கிவிட்டான்.

வீட்டுக்குப் போகும்போது மங்களா முரளியின் தலையை உருட்டினாள்.

முரளி ஒரு லேடி கில்லனாம். சரியான முற்போக்கு யுவன். பெரிய இடம்... நல்ல புத்தி, உயர்ந்த வேலை. ஜம்மென்று பர்ஸனாலிடி...லாவண்யா மில்லில் நல்லபேர்.



மாடல் செய்யும் பெண்களோடு அவனை இங்கே, அங்கே என்று நிறையப் பார்க்கலாமாம்.

கிட்ட நின்று சிரித்துப் பேச ஆரம்பித்தால் மயங்காத பெண்ணில்லையாம்... முரளி என்றால் பலபெண்களுக்குப் பைத்தியமாம்.

மங்களா சொல்லுவதைத் தீவிரமாய் கேட்டுக் கொண் டாள் தர்மா.

இரண்டு வருஷ காலமாய் இண்டர் நாஷனலில் வேலை செய்தும் முரளியை, தான் நேருக்கு நேர் இது நாள் பார்க்காததின் காரணம் ஓரளவுக்குத் தர்மாவுக்குப் புரியவே செய்தது.

இண்டர் நாஷனல் அட்வர்டைசிங் இரண்டு மாடியை அடைத்துக் கொண்டிருந்தது. கீழே ஒரு பக்கம் ஸ்டூடியோ மறுபக்கம் மானேஜர், எம்.டி.யின் அலுவலகங்கள் மாடியில். அக்கௌண்டண்ட் டைப்பிஸ்ட், காபி ரைட்டர்ஸ் எல்லோரும் இருப்பார்கள்.

சாதாரண டைப்பிஸ்டாகவே ஒன்னரை ஆண்டுக் கும் மேலாய் தர்மா வேலை பார்த்ததால், ஆபீசுக்கு வரு வாள், மாடிக்குப் போவாள், வேலையைக் கவனிப்பாள். அவ்வளவுதான்—கீழே நடக்கும் விவரங்களை அவ்வப் போது மங்களா தான் இவளுக்கு ஒலிபெருக்குவாள். மாலை யில் இடைவேளையில் யார் யாரையோ பற்றி இவர்கள் வம்பு பேசியிருந்தாலும் 'இதுநாள் வரை எப்படியோ இந்த 'நம் முரளி' மட்டும் தப்பித்து விட்டான்.

வீட்டை இருவரும் அடைந்தபோது மணி மாலை ஆறரை ஆகி இருந்தது. கடைக்குப் போய்விட்டு வீட்டில் சாப்பாடு என்று தீர்மானித்திருந்ததால் அவர்கள் வேறு எங்கும் போகவில்லை.

சென்னைக்கு வந்த முதல் நான்கு மாதங்கள் மங்களாவுடன் இருந்த தர்மா, வேலை பர்மனென்ட் ஆனதும் தன் இருப்பிடத்தை லேடீஸ் ஹாஸ்டலுக்கு மாற்ற விரும்பினாள்,

''எதுக்காக இப்போ எங்களை விட்டுட்டு போகணுங்கறே, தர்மா?'' என்றாள் மங்களா.

''இல்லே...தனியா இருந்தா எனக்கும் பொறுப்பு வரும். உங்களுக்கும் எத்தனை நாள் பாரமா இருக்கிறது...''

கோபமான கோபம் மங்களாவிற்கு—

''உன் இஷ்டம்போல பண்ணு—'' என்றவள் மேற்கொண்டு பேசவில்லை.

தர்மாவுக்கு சங்கடமாயிருந்தது:

''இங்கே பாரு...மங்களா...வொய் டோண்ட் யூ ட்ரைடு அண்டர்ஸ்டாண்ட் மீ...ப்ளீஸ்...இப்போ எனக்குச் சம்பளம் வரது...தனியான நானே செலவழிச்சுண்டு இருந்தா எனக்கு நம்ப கால்லியே நாம்ப நிக்கறோம்னு பெருமையா இருக்கும். அதுக்குத்தான் மங்களா...ப்ளீஸ்...
...ப்ளீஸ்...''

''ஸோ...உனக்குத் தானே செலவழிச்சுண்டு இருந்தா பெருமையா இருக்கும் அப்படித்தானே?...ஓ. கே...நீ லேடீஸ் ஹாஸ்டலுக்குக் கொடுக்கப் போறதை நாங்க வாங்கிக்க சம்மதிச்சா...எங்களோடேயே இருப்பியா?''

மங்களாவுக்குத் தன்மேல் எத்தனை பிரியம் இருந்தால் இப்படியெல்லாம் யோசித்துப் பேசுவாள்?

'சரி' என்றாள் தர்மா.

அந்த மாசத்திலிருந்து சம்பளம் வாங்கினதும் மாசம் இருநூற்று ஐம்பது ரூபாய் மங்களாவின் தாயிடம் கொடுத்து விடுவாள் தர்மா.

''இவ்வளவு ஜாஸ்தி...'' என்று மறுத்தபோது ''இல்லே மாமி...இதுவே குறைச்சல்'' என்று வாதாடினாள் தர்மா. கடைசியில் அவளே வென்றாள்



நாட்கள் செல்லச் செல்ல—அந்த குடும்பத்தில் இன்னொரு பெண்ணானாள் தர்மா.

நடுவில் ஒரே ஒரு தடவை ''நான் செளக்கியமாய் நல்ல வேலையில் இருக்கிறேன். என்னைப்பற்றிக் கவலைப் படவேண்டாம்...அங்கே அம்மா, பாட்டி, குழந்தைகள் செளக்கியமா?... நான் பண்ணினது தப்பு என்று உங்கள் மனசுக்குத் தோன்றினால் என்னை மன்னித்து விடுங்கள்...
...நான் என்றும் உங்கள் தர்மாதான்'' என்று கடிதம் எழுதி அப்பாவுக்குப் போட்டாள் அதில் தான் எங்கு இருக்கிறேன், வேலை பார்க்கும் இடம் எது என்று ஒன்றுமே குறிப்பிடாமலேயே எழுதினாள் விலாசம் தெரிந்தால் வந்துவிடுவார்களோ— 'நட திருவையாறுக்கு' என்று கட்டி இழுத்து விடுவார்களோ என்ற பயம்!

மூன்று மாசங்களுக்கு முன்னால் எம். டியின் பி.ஏ வாக நியமிக்கப்பட்டதும் மங்களாவின் தாய்க்குத் தான் மாசம் கொடுப்பதை, நானூறாக ஏற்றினாள்.

மங்களாவோடு தர்மா வாழ்ந்த இந்த இரண்டு ஆண்டுகளை அவளால் மறக்க இயலாது.

என்னென்ன கேளிக்கைகள், இனிய அனுபவங்கள், எத்தனை எத்தனை ஹோட்டல், ப்யூடி பார்லர், ஆங்கில சினிமா விஜயங்கள்.

ஒன்றுமே தெரியாத தர்மா ஊரை விற்றுவிடும் சாமார்த்தியமுள்ளவளாய் மாறினது இந்தச் சமயத்தில் தானே!

எல்லளவு நாகரிகமாய் மாறினாலும் ஆண் பிள்ளைகளோடு வெகுவாகச் சுற்றுவது மட்டும் இருவருக்குமே பிடிக்காத ஒன்று

ரொம்பத் தெரிந்த ஆபீஸ் ஆண் நண்பர்களோடு சினிமா, ஹோட்டல் என்று போவார்களே தவிர

என்றைக்குமே மற்ற விஷயங்களுக்கு ஆசைப்பட்டதும் இல்லை, பெண்மையின் வரம்பை மீறியதும் இல்லை.

அவர்கள் வேலை செய்யும் இடத்தில் எத்தனையோ தூண்டில்கள்—

மீண்டும், மீண்டும் தர்மாவை மாடல் செய்ய அழைத்தவர்கள் ஏராளம்.

இருந்தாலும் ஒன்றுக்கும் இவர்கள் அசையவில்லை.

அவனுக்கு இவள், இவனுக்கு அவள் என்ற திருப்தியே போதுமானதாக இருந்தது.

முரளியைக் கடையில் பார்த்த அந்தத் தினத்தில் இரவு சாப்பிட்டுக் கொண்டிருக்கையில், தடக்கென்று நினைத்துக் கொண்டு தர்மா சொன்னாள். "நான் அவனை எங்கேயோ பார்த்திருக்கிறேன் மங்களா... ஹிஸ் அப்பியரன்ஸ் ஈஸ் வெரி ஃபெமிலியர்..."

"எவனை!"

"அதான் அந்த 'நம்ப' முரளியை"

சிரித்துவிட்டாள் மங்களா.

அவன் சரியான பெண் மயக்கினு நான் சொன்னதுக்கு நீயே சாட்சி...இன்னுமா அவனைப் பத்தி நினைச்சுண்டு இருக்கே?" கேலி செய்த மங்களா தொடர்ந்து "இங்கே அங்கே அவன் போறப்போ எங்கேயாவது பார்த்திருப்பே. நான்தான் சொன்னேனே! அவன் கொஞ்சம் சுத்தற டைப்!" என்று சொன்னாள்.

பேச்சு அதோடு முடிந்து விட்டது-

படுக்கும்போது அவன் சிரித்த, கம்பீர முகம் மீண்டும் நினைவுக்கு வந்து 'எங்கே பார்த்திருக்கிறோம்' என்று யோசித்துக் கொண்டே உறங்கிப் போன தர்மா... மறுநாளே 'நம்ப முரளி'யை வெகு நெருக்கத்தில் சந்திக்கப் போகிறோம், என்று சற்றும் எதிர் பார்க்கவில்லை.



மறுநாள் காலை பதினொரு மணி, எம். டி. ரமணன் ஸ்டுடியோவுக்குப் போகப் புறப்பட்டுக் கொண்டிருந்தார்.

ஸ்டுடியோ என்றால் வாஹினி, விஜயா மாதிரி என்று எண்ணப் போகிறீர்கள்.

கீழ்த்தளத்தில் நடுத்தர சைஸில் இரண்டு அறைகள் ஒரு பக்கமாய் இருந்தன. அவற்றில்தான் விளம்பரதாரர்களுக்குத் தேவையான புகைப்படங்களை எடுப்பார்கள். அவைகளே இவர்களுக்கு ஸ்டுடியோ.

ஸ்டுடியோவுக்கு வழி வேறுபக்கம் இருந்தது. ஆபீஸ் வேலை, ஸ்டுடியோவுக்கு வருபவர்களால் தடைபடாமல் இருக்கவே இந்த ஏற்பாடு.

புறப்பட்ட எம். டி. நின்றார்.

"நீயும் என் கூட வர முடியுமா, தர்மா? விஷயங்களைக் குறிப்பு எடுக்க உதவும்."

தர்மா உடன் சென்றாள்.

தனக்கும் ஸ்டுடியோவுக்கும் நேரடித் தொடர்பு இல்லையாதலால் ஒரே ஒரு தடவை எம். டி. கேட்டதைக் கொடுக்கப் போயிருக்கிறாளே தவிர, தர்மா அங்கு அடிக்கடி போனதில்லை.

ஸ்டுடியோவில் லாவண்யா மில்லின் விளம்பரப் படங்களை எடுத்துக்கொண்டிருந்தார்கள்.

பெட்ஷீட்டையும், டவலையும் சுற்றிக் கொண்டு இரண்டு பெண்கள் நின்றிருந்தார்கள். ஓஹோ! பெட்ஷீட்-டவல் விளம்பரமா?

இன்னும் ஷூட்டிங் ஆரம்பிக்கவில்லை.

அந்தப் பெண்களில் ஸ்வப்னாவைத் தர்மாவுக்குத் தெரியும்.

'ஹலோ' என்று அவள் கையை அசைத்ததும், இவள் கிட்டே போனாள்.

ஓரிரு நிமிஷங்கள் சென்றிருக்கும். யார் யாரோ உள்ளே வந்தார்கள்.

விளக்குகள் போடப்பட்டன.

ஷாட் எடுக்கப் பிரயத்தனம் ஆரம்பமாயிற்று.

எம். டி. யின் அருகில் நெருங்கி நிற்கலாம் என்று தர்மா இரண்டடி எடுப்பதற்குள் ''ஹேய்...'' என்ற குரல் கேட்டு நின்றாள்.

அவன்தான், நம்ப முரளி.

இன்றைக்கு எல்லாம் 'நீல' மயம்.

''ஹொய் ஹாவண்ட் யூ சேன்ஜ்ட்?...ப்ளீஸ் ஹரி அப்...''

அவளையும் ஒரு மாடல் என்று நினைத்து விட்டான் போலிருக்கிறது!

''நான்...ஐ...''

அவள் தடுமாற்றம் அவனுக்கு கோபத்தைக் கொடுத்தது.

''வில் யூ ப்ளீஸ் கெட் ரெடி?...ஃப்யூ டவல்ஸ் ஆப் தேர்...ப்ளீஸ் ஹரி...''

டவலையா நான் உடுத்துவதா?

எல்லாம் ஒரு நிமிஷத்தில் நடந்துவிட்டன.

''முரளி! யூ ஆர் மிஸ்டேகன்...அவள் மாடல் இல்லையப்பா. என் பி ஏ. தர்மா!'' உதவிக்கு வந்தார் ரமணன்.

இப்போது முரளி முகம் சிவந்தான்.

''ஐ...ஐ...ஆம் சாரி''

சிரித்தார் எம். டி.

''தர்மாவைப் பார்த்தால் மாடல்மாதிரி இருக்கா, நான் கூடக் கேட்டுவிட்டேன்...பட்...அவளுக்கு விருப்பம் இல்லை...தர்மா...இது முரளி...லாவண்யாவின் ஜி. எம்.''



''ஹலோ'' என்றாள் தர்மா.

''ஹாய்'' என்றான் அவன்.

அடுத்த அரைமணியில் எப்போதாவது திரும்பினால் முரளியின் பார்வை தன்மேல் ஊன்று கொண்டிருப்பது புரிந்ததால் தர்மாவுக்குச் சற்றே பரபரத்தது.

அவனைப் பார்க்கப் பார்க்க எங்கோ பார்த்திருக்கிறோம் என்ற உணர்வும் அதிகரித்தது.

எம். டி—யின் வேலை முடிந்து அவர் புறப்பட்டதும் இவளும் கூடவே புறப்பட்டாள்.

''ஸோ...நான் வரேன்...யூ கேரி ஆன்'' என்ற ரமணன் புறப்பட்டார்.

'பை' என்று கையை வீசினான் முரளி. பிறகு தர்மாவைப் பார்த்து 'ஸாரி கெர்ள்' என்று சொல்லித் தலையைச் சற்றே வணங்கினான்.

அன்று மாலை மூன்று மணி இருக்கும். ஆபீஸ் ப்யூன் பெரிய மலர்க்கொத்து ஒன்றைக் கொண்டுவந்து தர்மாவிடம் கொடுத்தான்.

''யாருக்குப்பா ?''

''உங்க பேர்தாம்மா அந்த சீட்டிலே இருக்கு.''

எனக்கா ? எனக்கு யார் ?

மலர்க்கொத்தை டேபிள்மேல் வைத்துவிட்டு, கவரைப் பிரித்தாள் தர்மா.

'இன்று காலை கடினமாய் பேசியிருந்தால் மன்னிக்கவும், முரளி.'

ஓ! இப்படித்தான் இந்த 'நம்ப முரளி' பெண்களை தன் வயப்படுத்துகிறானோ ? புன்னகை எழுந்தது தர்மாவின் அதரங்களில்.

## 3

நல்ல வேளையாக எம். டி. ஆபிஸில் இல்லை என்று நினைத்துக் கொண்டாள் தர்மா. இருந்திருந்தால் அரை மணிக்கு ஒரு தடவை எதையாவது சொல்ல எண்ணி 'தடக்'கென்று இவள் அறைக்கு வருபவர் கண்ணில் பூதாகாரமாய், ஆனால் அழகாய் மேஜைமேல் உட்கார்ந்திருக்கும் மலர்க்கொத்து படாமல் போகாது.

எம். டி. ரமணனுக்குத் தர்மாவிடத்தில் ஒரு குடும்ப நண்பருக்கான பாசம் இருந்ததால், வாயை மூடிக்கொண்டு போக மாட்டார்.

''எதும்மா ?''

''யார் அனுப்பினா''

''என்ன விசேஷம் ?''

''பிறந்த நாளா ?''— என்று கேள்வி மேல் கேள்விகள் கேட்டிருப்பார். பதில் சொல்லத் தெரியாமல் தர்மா விழித்திருப்பாள்.

டைப்ரைட்டருக்கு அருகில் மணத்துக் கொண்டிருந்த பூங்கொத்தைப் பார்க்கப் பார்க்கத் தர்மாவினால் தன் வேலையில் கவனமாய் ஈடுபட முடியவில்லை.

'இவன் எதுக்கு எனக்கு பூ அனுப்பணும் ?'

'அப்படி என்ன சொல்லி என் மனசைப் புண்படுத்தி விட்டான் ?'

ஒரு மணி நேர காலம் பல்லைக்கடித்துக்கொண்டிருந்தவளுக்குத் தாங்காமல் போகவே டெலிபோனில் மங்களாவை அழைத்தாள்.

''ஹாய் தர்மா ! என்ன?''—என்றாள் மங்களா.

''ரொம்ப பிஸியா !''



''ம்ஹூம்...பாஸ் வீட்டுக்குப் போயாச்சு...இரண்டு லெட்டர்ஸ் இருக்கு...முடிச்சுட்டா கிளம்பிடலாம்... உனக்கு வேலை ஆயிடுத்தா ?...''

''ம்...? ஆனா மாதிரிதான்...மங்களா சுருக்கவேலையை முடிச்சிட்டு இங்கே வாயேன்... ஐ ஹாவ் எ ஸர்ப்ரைஸ் ஃபார் யூ...''

''என்ன தர்மா—ப்ளீஸ் சொல்லேன்!''

''மாட்டேன்...நீ வா...''

அடுத்த இரண்டாவது நிமிஷம் தர்மாவின் அறைக்கு வந்து விட்டாள்.

''வேலைலை முடிக்கலையா ?'' என்று கேட்ட தர்மாவிடம் ''நாளைக்குப்பார்த்துக்கலாம்...அவசரம் ஒண்ணும் இல்லை... ஆமாம்...என்ன ஸர்ப்ரைஸ் ?'' என்று ஆர்வத்துடன் கேட்டாள் மங்களா

நாற்காலிக்குப் பக்கத்தில் வைத்திருந்த மலர்ச் செண்டைத் தூக்கிக் காட்டினாள் தர்மா.

''வாட் எ லவ்லி பொக்கே !...ஏது தர்மா ?'' மங்களாவின் கண்கள் வியப்பாய் விரிந்தன.

''அந்தக் கவரைப் பாரு''

பகல் உணவு இடைவேளையின்போது காலையில் நடந்த ஸ்டுடியோ அமர்க்களத்தை தர்மா சொல்லியிருந்ததால் மேற்கொண்டு எதுவும் விளக்கமாமலிருந்தாள்.

கவரைப் பிரித்துப் படித்தாள் மங்களா.

''அடி சக்கை...'நம்பமுரளி'கிட்டேயிருந்தா? கார்த்தால ஒரு வார்த்தையைத் தப்பா சொல்லிட்டதனாலே இந்த பொக்கேயா?தேவலையேம்மா ...என்னை யாரும் அப்படிக் கேட்கமாட்டேங்கறாளே'' பெரியதாய் மங்களா சிரிக்கவும் தர்மாவும் சேர்ந்து கொண்டாள்.

''அவனுக்குப் போன் பண்ணி தேங்க் பண்ணினாயா?''— மங்களாவின் கேள்வியில் குறும்பு விரவி கிடந்தது.

''எவனுக்கு ?''

''நம்ப முரளிக்கு''—

''எதுக்கு ?''

''சீ பாவம்...எவ்வளவு பணம் செலவழிச்சு இந்தப் பொக்கே அனுப்பியிருக்கான்...ஒரு தேங்க்ஸ் எதிர்பார்க்க மாட்டானா என்ன ?''

''வேறு வேலை இல்லை...நானா கேட்டேன் ? அவனுக்கா தோணித்து... அனுப்பியிருக்கான்...இதுக்கு தேங்க்ஸ் என்னத்துக்கு ?''

''வேறு எந்த பொண்ணுக்காவது அனுப்பியிருந்தா அவனுக்குப்பதிலுக்கு என்னென்னமோ கிடைச்சிருக்கும்... போயும் போயும் உனக்கு அனுப்பினானே... தண்டம்...'' கேலி செய்து சிரித்தாள் மங்களா.

''அதுக்கு வேற ஆள் பாரும்மா ...நான் இல்லை...'' என்றுஇடக்காகப் பதில்சொன்ன தர்மா, 'கிளம்பலாமா?' என்று கேட்டுப் பேச்சை அத்துடன் நிறுத்தினாள்.

வீட்டுக்குப் போனதும் ஒரு ஜாடியில் நீர்வார்த்து மலர்களைப் பாங்குற அடுக்கி வைத்தாள் மங்களா, மாலை மங்கி இருள் சூழ ஆரம்பிக்கும் தருணத்தில் பூச்செண்டில் இருந்த ரஜனி கந்தா மலர்கள் மலர்ந்து, அந்த அறை முழுமதும் அதன் இனிய மணம் பரவியது. நாசியில் தாக்கிய இனிய வாசனையை உணர்ந்த தர்மாவுக்கு முரளி யின் ஞாபகம் வர 'நல்ல ஆசாமி' என்று தனக்குத்தானே முனகிக் கொண்டு சிரித்தாள்.

முரளியைப் பற்றின நினைவு அதோடு தர்மாவுக்கு மறந்து போயிற்று.

ஆனால் அவன் மறக்கவில்லை என்பது மறுநாள் காலை பதினோரு மணி அளவில் புரிந்தது.



முக்கியமான மெமோராண்டாவை டைப் செய்து கொண்டிருந்த தர்மா, டெலிபோன் ஒலிக்கவும், எடுத்துப் பேசினாள்.

எம். டி-க்கு வரும் எல்லா போன் அழைப்புகளும் இவளைத் தாண்டித்தான் அவரிடம் போக முடியும். ஆதலால் ரமணனுக்கு வரும் எந்தக் காலையும் தர்மாவுக்குத்தான் கொடுப்பாள் ஆபரேட்டர்.

''குட்மார்னிங்...எம். டி.'ஸ் ஆபீஸ்.''

''குட் மார்னிங்''... கனத்த குரலில் ஒலித்த குரலைத் தர்மாவினால்அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை.

''ஈஸ் தட் மிஸ தர்மா ?''

''எஸ்,''

''நான் முரளி...''

சில கணங்களுக்கு என்ன பதில் சொல்வதென்றே தர்மாவுக்குப் புரியவில்லை.

இது என்ன இத்துணை ஆண்மை ததும்பும் குரல் ?

வசியம் பண்ணுகிறாப் போல எத்தனை கனமாக ஒலிக்கிறது !

''எம். 'டி—யிடம் பேச வேண்டுமா ? தொடர்பு கொடுக்கட்டுமா ?''

அவன் மறுமுனையில் லேசாய் சிரிப்பது அவளுக்குப் புரிந்தது.

''எனக்கு ரமணனிடம் பேசவேண்டாம் ?'' அவன் நிறுத்தினான.

தர்மாவின் நெஞ்சு பெரியதாய் பரபரக்க ஆரம் பித்தது.

அவனே மேலும் பேசினான்.

''என்மேல் கோபமா மிஸ் தர்மா? நேற்று நான் செய்தது தெரியாமல் செய்த பிழை...உணர்ந்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன்.''

'சின்னத்தவற்றை, அறியாமல் செய்தவற்றை இவன் என் இவ்வளவு பெரிதாக்க வேண்டும்?' என்று நினைத்தாள் தர்மா.

''பரவாயில்லை...நான் தவறாக எடுத்துக் கொள்ள வில்லை...'' மெல்லிய குரலில் பதில் சொன்னாள் அவள்.

ஓரிரு கணங்கள் மௌனம்.

''நாளைக்குப் பிற்பகல் சாப்பாட்டின்போது தங்களைப் பார்க்கலாமா? முடிந்தால் என்னோடு உணவருந்த வெளியே வர முடியுமா?'' முரளி சுற்றி வளைக்காமல் பேசி விட்டான்.

சாப்பிடவா? தானா? முரளியுடனா?

எத்தனைப் பெண்களோடு இப்படிப்பேசி இவனுக்குப் பழக்கமோ?

தர்மா யோசிக்கவில்லை.

''மன்னிக்க வேண்டும்... எனக்கு நாளைக்குச் சரிபட்டு வராது.''

''நாளை மறுநாள்?'' அவன் விடவில்லை.

''அன்றைக்கும் வேலை இருக்கிறது...உங்கள் அழைப்புக்கு நன்றி...'' தர்மாவுக்கு இப்போது தைரியம் வந்துவிடவே அழுத்தமாகவே பேசினாள்.

''இந்த வாரத்தில் ஏதாவது ஒரு நாள் ஒழிந்தால் எனக்குத் தெரிவிக்கிறீர்களா?...என் நம்பர்...''

விடாக்கண்டனாக இருப்பான் போலிருக்கிறதே!

போனை வைத்தால் போதும் என்று எண்ணிய தர்மா 'சரி' என்று சொல்லிவிட்டுக் கடைசி வார்த்தையாய்



'நீங்கள் அனுப்பின மலர்களுக்கு நன்றி'' என்று கூறி தொடர்பைத் துண்டித்தாள்.

போனை வைத்துவிட்டு நிமிர்ந்தால் கை கசகசத்தது; இதயம் பெரியதாய் துடிப்பது அவளுக்குப் புரிந்தது.

ஒரு ஆணோடு மதிய உணவுக்கோ, சினிமாவுக்கோ எப்போதாவது போய் தர்மாவுக்குப் பழக்கம்தான் என்றாலும் முரளியின் அந்தஸ்துடைய ஒருவனிடமிருந்து அழைப்பு வந்தது புதுமையாக இருந்தது.

ஆண்களோடு தனியாய் வெளியே போவது வரம்புக்கு உட்பட்டதாக இருந்தால் தவறு இல்லை என்று தர்மா நம்பிக்கை கொண்டிருந்தாலும் முரளியின் அழைப்பை அவளால் ஏனோ சட்டென்று ஏற்றுக்கொள்ள முடியவில்லை,

மங்களா சொன்னபடி அவன் ஒரு லேடி கில்லர். பெண்களோடு சுற்றுபவன் என்ற எண்ணம் அவளுக்கு உண்டாயிருந்ததாலா? தெரியவில்லை.

என்னதான் தர்மா வேண்டாம் என்று ஒதுக்கினாலும் விதி வேறு விதமாய் வேலை செய்கிறதே. அதை யார் தடுக்க முடியும்?

இரண்டு நாட்கள் சென்றிருக்கும்.

மாலை மணி ஐந்தை நெருங்கிக் கொண்டிருந்தது. இன்னும் பத்து நிமிஷங்களில் கிளம்பி விடலாம்,

எம். டி. ஒரு க்ளையண்டோடு வெளியே போய் விட்டார்.

முதல் நாள் நடந்த போர்டு மீட்டிங் குறிப்புகளின் நகல்களை எடுத்துக் கொண்டிருந்த தர்மா தன் அறைக் கதவு தட்டப்படும் ஒலி கேட்டுத் தலையை நிமிராமலேயே 'கம் இன்' என்றாள்.

கையிலிருந்த பேப்பர்களை அடுக்கிவிட்டு நிமிர்ந்தாள், எதிரில் முரளி,

''ஓ!...'' தர்மா அவனைக் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை என்பது அவள் முகத்தில் எழுதி ஒட்டியிருந்தது.

முன்பொரு நாள் கடை வாசலில் பார்த்தாளே, அதே மாதிரி 'மேன் இன் வொயிட்' ஆக நின்றிருந்தான் முரளி.

முகத்தில் குறும்பான புன்னகை.

கண்ணை மறைத்த கறுப்புக் கண்ணாடி வழியாகக் கண்கள் சிரிப்பதும் தர்மாவுக்குப் புரிந்தது.

'இவன் எத்தனை கம்பீரமாக இருக்கிறான்!' அவன் நினைப்பை அவளால் கட்டுப்படுத்த முடியவில்லை.

''நான் உட்காரலாமா ?''

''எம். டி. இல்லையே...வெளியே போய்விட்டாரே!''

அவன் உதடுகள் விரியச் சிரித்தான்.

''நான் எம். டி.—யைப் பார்க்க வரவில்லை...'' என்று சொல்லிவிட்டு ஒற்றை விரலை நீட்டி 'உன்னை' என்பது போலக் காட்டினான்.

''நான் உட்காரலாமா ?''

''ப்ளீஸ்...'' அவள் நாற்காலியைக் காட்டினாள்.

அவன் உட்கார்ந்தான்.

அவன் பார்வையை தவிர்ப்பதற்காகத் தர்மா மேஜை அறைகளைத் திறந்தாள்; பேப்பர்களை எடுத்தாள், மீண்டும் உள்ளே வைத்தாள், தூசி தட்டினாள், குனிந்தாள், நிமிர்ந்தாள்.

ம்ஹூம்... பிரயோஜனமில்லை. அவளால் தன் படபடப்பை மறைக்க இயலவில்லை.

''காபி சாப்பிடும் நேரம் தானே...ஒரு கப் காபி சாப்பிடலாமா?''

அவன் அதே நிதானத்துடன் கம்பீரமாய் பேசினான்.



காபியைக் கொடுத்து இவனை இந்த இடத்திலிருந்து கிளப்பினால் போதும் என்று தவித்த தர்மா ''ஓ!...சாப்பிடலாமே...'' என்று பதிலளித்துவிட்டு ஆபீஸ் பையனை அழைப்பதற்காக மேஜைக்கடியில் இருந்த மணியை அடித்தாள்.

'நான் இந்த காபியைச் சொல்லவில்லை...வெளியே...' முரளி பேசி முடிப்பதற்குள் ஆபீஸ் பையன் வந்துவிட்டான்.

அவனிடம் என்ன சொல்வது என்று தர்மா தடுமாறிய போது ''கொஞ்சம் ஐஸ் தண்ணி கொண்டு வாப்பா'' என்று சொல்லி அவனை அனுப்பி வைத்தான் முரளி.

பையன் போய்விட்டான்.

தர்மாவால் சும்மா உட்கார்ந்திருக்க முடியவில்லை. தவித்தாள்...கை விரல்கள் பிரிந்து பிரிந்து கூடின.

''வொய் ஆர் யு நர்வஸ்?'' என்றான் முரளி.

''பயமா? எனக்கா? எதற்கு?''

''லெட் அஸ் கோ அவுட் அண்ட் ஹாவ் ஸம் காஃபி.''

அதே புன்னகை.

ஆண்மை ததும்பும் முகம்.

நெகிழ்ந்த மனசில் 'அவன் ஒரு பெண் பித்தன்' என்ற வார்த்தை ஞாபகம் வர, நிமிர்ந்து அவனை நேருக்கு நேர் பார்த்தாள் தர்மா.

''ஸாரி...எனக்கு இப்போது வர முடியாது.''

''வொய்?''

தர்மா பதில் பேசவில்லை. தலையை சற்றே குனிந்து கொண்டாள்.

''ஆல்ரைட்...உங்களுக்கு விருப்பமில்லை என்றால் வேண்டாம்...ஐ வோன்ட்...ஃபோர்ஸ் யூ...'' முரளி எழுந்துவிட்டான்.

போக வேண்டும்...வேண்டாம்...தர்மா தவித்தாள்

அவளை இக்கட்டிலிருந்து காப்பது போல வந்து சேர்ந்தாள் மங்களா

''என்ன தர்மா, கிளம்பலாமா?'' என்று கேட்டுக் கொண்டே வந்தவள் முரளியைக் கண்டு திகைப்படைந்தாள்.

''ஹலோ...மிஸ் மங்களா...ஹௌ ஆர் யூ?''

''ஓ! ஐ'ஸ்பைன்''நீங்கள் சௌக்யமா?...பாரிஸிலிருந்து எப்போது ஊர் திரும்பினீர்கள் மிஸ்டர் முரளி?''

சில முறைகள் பார்த்து பழகியிருந்ததால் அவர்களின் உரையாடல் சகஜ பாவத்துடன் இருந்தது.

ஒரிரு நிமிஷங்கள் பேசின பிறகு ''வாருங்களேன்... டிரைவ் இன் ரெஸ்ட்ராண்ட் போய் காபி சாப்பிடலாம்'' என்றான் அவன்.

தர்மாவை முரளி பார்க்கும் விதத்திலிருந்து அவனுக்கு அவள் மேல் உண்டாயிருந்த கவர்ச்சி மங்களாவிற்கும் புரிந்து போனது.

சாதாரணமாய் இருவர் சிநேகமாயிருந்து வெளியில் போனால் என்ன தவறு என்ற எண்ணம் கொண்ட மங்களா. தர்மாவைப் பார்த்தாள்.

ஆசை இருந்தாலும் அதைக் காட்டிக் கொள்ள விரும்பாமல் தர்மா தவிப்பது அவளுக்குத் தெளிவானது.

''ஒ யெஸ் போகலாமே...வா...தர்மா...'' என்று சொல்லிக் கிளபபினாள்.

அன்று மாலை முரளி தன்னையும், தர்மாவையும் அண்ணா நகர் வீட்டில் இறக்கினபோது தர்மா, முரளி சந்திப்பு இத்துடன் நிற்கப் போவதில்லை என்று மங்களாவுக்குள் எதுவோ சொன்னது.



கறுப்புக் கண்ணாடியைக் கழட்டிவிட்டு முகமும், கண்களும் பளபளக்க முரளி சிரித்தது நினைவில் ஆட, உறக்கம் வராமல் புரண்டு படுத்தாள் தர்மா.

ரொம்ப நாட்களுக்குப் பின் பழையபடி அன்று அவள் கனவு கண்டாள்.

ஒரு ஆணும், ஒரு பெண்ணும் தாஜ்மஹாலுக்கு எதிரில், நிலவொளியில், புல்வெளியில் அருகருகே அமர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

ஆண் பெண்ணை நெருங்கி வந்து அணைத்துச் சிரிக்கிறான். அந்த முகம் திடீரென்று முரளியின் முகமாக மாறுகிறது.

கண் விழித்துவிட்டாள் தர்மா.

சின்ன வயசுக் கனவுக் கதா நாயகன் முரளியா? என்ற சந்தேகம் தோன்றி, அவள் மேனி சிலிர்த்தது.

# 4

பீச்சுக்குப் போய்விட்டு தர்மாவையும், மங்களாவையும் அவர்கள் வீட்டில் முரளி இறக்கி விட்டபோது, மணி இரவு எட்டை நெருங்கி விட்டது.

சாப்பாடு முடிந்து படுக்கும் வரை ஒருவருக்கொருவர் அதிகம் பேசிக் கொள்ளவில்லை.

அன்று ஒரு நாள் 'காபி சாப்பிட' என்று முரளி அழைத்துப் போனபோது மங்களாவிற்குத் தோன்றிய எண்ணம், நாளாக ஆக வலுப்பெற்று விட்டது. முரளி—தர்மா நடுவில் அலாதி கவர்ச்சி ஒன்று நிலவியதை அவள் புரிந்து கொண்டு விட்டாள். முதல் சில நாட்கள் முரளி

அழைத்து வெளியே செல்லத் தர்மா மறுத்துவிட்ட பிறகு, மங்களாவின் உதவியை அவன் நாட ஆரம்பித்தான்.

மங்களாவிற்கு போன் செய்து, ஆபீஸ் காரியம் பேசுவது போல ஒரிரு நிமிஷங்கள் பாவனை புரிந்துவிட்டு, 'வெளியே உங்கள் தோழியையும் அழைத்து வாருங்களேன்' என்று சாதாரணக் குரலில் கஷ்டப்பட்டுக் கேட்கும் போது மங்களாவிற்கு சிரிப்புதான் வரும்.

தர்மா மேல் உண்டாயிருந்த ஈடுபாட்டை முரளி வெளிப்படையாகவே காட்டினதாலும், தர்மாவுக்கும் அவனிடத்தில் ஒரு லயிப்பு உண்டாகி விட்டது என்பதைப் புரிந்து கொண்டதாலும் மங்களா அந்தச் சிநேகிதத்தின் வளர்ச்சிக்குத் தடையாக நிற்கவில்லை.

முரளியுடன் பழக்கம் ஏற்பட்ட இந்த ஒரு மாச காலத்திற்குள் பீச், டிரைவ் இன் ஹோட்டல், இரண்டு மாட்னி சினிமா என்று போய் வந்து விட்டார்கள்.

தர்மாவைப் பற்றின விவரங்கள் அறிந்து கொள்ளுவதில் முரளி காட்டின பரபரப்பு,மங்களாவுக்கு வேடிக்கையாக இருந்தது.

இவன் விரலசைத்தால் ஓடிவர நூற்றுக் கணக்கான பெண்கள் இருக்கையில்,இவன் நாய்க் குட்டி போல தர்மாவினிடத்தில் மயங்கிச் சுற்றுவது மங்களாவிற்குப் புதிதாகத் தோன்றியது.

தர்மா சிறந்த அழகி, புத்திசாலி—இல்லை என்று சொல்லவில்லை.

என்றாலும் முரளி பார்க்காத பெண்களா?

அன்று பீச்சுக்குப் போய்விட்டு வந்த பிறகு, உறங்குவதற்கு முன்னால் என்னென்னவோ யோசித்த மங்களா, ஒரு முடிவுக்கு வந்தவளாய் தர்மாவிடம் பேசினாள்.

21003



374390

''தூங்கிட்டாயா தர்மா?''

''ம்ஹூம்...''

''நாளைலேந்து முரளி வெளியே கூப்பிட்டா நான் வரப்போறதில்லை...''

தடக்கென்று எழுந்து உட்கார்ந்தாள் தர்மா.

''ஏன்? வாட் ஹாப்பண்ட்?''

சிரித்தாள் மங்களா

''எனக்கு ஒண்ணும் நடக்கலை... உங்களுக்கு நடுவில் நான் எதுக்கு பூஜை வேளையில் கரடி மாதிரி...''

''சீ—டோண்ட்பீ ஸில்லி...! அவன் உனக்கும் தான் ஃப்ரெண்ட்...ரெண்டு பேரையும் தானே கூப்பிடறதால் தான் நானும் வரேன்...'' தர்மா கட்சி கட்டிக் கொண்டு பேசினாள்.

எழுந்து உட்கார்ந்து விளக்கைப் போட்டுவிட்டு தோழியை ஊன்றிப் பார்த்தாள் மங்களா.

''அவன் ஏன் என்னைக் கூப்பிடறான்? தெரியாத மாதிரி பேசாதே தர்மா...என்னைக் கூப்பிட்டாதான் நீ வருவேனு அவனுக்குத் தெரியும். அதனாலேதான்...உன் மேலே அவனுக்கு தனி இண்டரஸ்ட் இருக்கிறது. உனக்கே தெரியும். அப்புறம் ஏன் நாடகமாடணும்...?''

தர்மா பதில் பேசாததால், தொடர்ந்தாள் மங்களா.

''இதுலே என்ன தப்பு தர்மா? ஒருத்தனுக்கு உன்னை ஸ்பெஷலா பிடிச்சா, நீ மட்டும் அவனோட சினிமா, அங்கே, இங்கேனு போவதிலே என்ன தப்பு?...அண்ட்...யூ ஆல்ஸோ லைக் ஹிம்...நீ என்ன சின்னக் குழந்தையா?... இனிமே நீ மட்டும் போறதுதான் சரி...''

கஷ்டப்பட்டு தன் முகத்தை சாதாரணமாய் வைத்துக் கொள்ளப் பிரயத்தனப்பட்டாள் தர்மா. ''இப்போ என்ன பேச்சு? அவன் திரும்ப வெளியே போக கூப்பிட்டும்

பார்த்துக்கலாம்...குட்நைட்'' என்று சொல்லி விளக்கை அணைத்து விட்டான்.

இருட்டில் கொஞ்ச நாழிகை சும்மா இருந்த மங்களா என்ன நினைத்துக் கொண்டாளோ, சற்றே உரக்க சிரித்தாள். பிறகு, ''நீ என்ன இருந்தாலும் எமன்தான் தர்மா... ஆனானப்பட்ட மாடல்களெல்லாம் அவன் பின்னாலே சுத்தின காலம் மாறி, இன்னிக்கு அவனை உன் பின்னாலே ஓடிவர வைச்சுட்டியே! யூ ஆர் ரியலி க்ரேட்...'' என்றாள் அந்த வார்த்தைகளில் பொதிந்து கிடந்த உண்மை மெதுவாய் தர்மாவின் தலைக்குள் புகுந்து அங்கு ஒரு பக்கமாய் உறங்கிக் கொண்டிருந்த 'நான் உசத்தி' என்ற சின்ன வயசுத் திமிரை அசைத்து எழுப்பியது.

வாஸ்தவம் தான்.

தர்மாவைச் சந்தித்த குறுகிய காலத்தில்,முரளி அவள் வயப்பட்டு விட்டான் என்பது நன்றாகவே தெரிந்தது.

முரளியிடம் ஏதோ ஒரு வசியத் தன்மையை தர்மாவும் உணர்ந்ததால், அவன் பின்னால் அவன் சுற்றுவது அவளுக்கு இன்பத்தைத் தந்தது.

அவன நேரடியாக போன் செய்தால் சரியாய் பேச மாட்டாள். வெளியே போனால் மங்களாவும் அவனுமே பேசித் தீர்ப்பார்கள். இவள் அதிகம் வாயைத் திறக்க மாட்டாள்.

ஆனால் அவன் போன் செய்யாவிட்டாலோ, அவனை நான்குநாட்கள் பார்க்காவிட்டாலோ- 'மோனிக்காவுடன் சுற்றுகிறானோ? இல்லை ஸ்வப்னாவுடன் சினிமா போயிருக்கிறானோ?' என்று சங்கடப்படுவாள்.

எதற்கு அவனைப் பத்தின எண்ணங்கள்? என்று தனக்குத்தானே என்ன கட்டுப்பாடு விதித்தும், முரளி விஷயத்தில் அவள் மனம் அவளை மீறியே செயல்பட்டது.



பல தடவைகள் முரளியைப் பற்றின விவரங்களை மங்களாவினிடத்தில் கேட்க வேண்டும் என்ற துடிப்பு எழுந்தாலும் 'ஸோ... அவன் வலையில் நீயும் விழுந்துட்டாயா?' என்று மங்களா கேலி செய்வாளோ என்ற பயமே தர்மாவை வாளாவிருக்கச் செய்திருக்கிறது.

பேச்சின் நடுவில் முரளி பரம்பரைப் கணக்காரன், பெற்றவர்களைச் சமீபத்தில் இழந்தவன்,கூடப்பிறந்தவர்கள் என்று யாரும் கிடையாது என்ற விவரங்கள் தெரிந்தன.

முதல் நாள் வெளியில் போய்விட்டு வந்த பிறகு, கனவில் கண்ட நாயகன் முகம் முரளியினுடையதாக மாறியதில் இருந்தே, தர்மா அவன்பால் கொண்டுள்ள ஈடுபாடு அதிகரித்து விட்டது என்றாலும், வெளிக்குத் தன் உணர்ச்சிகளை அவள் அதிகம் காட்டிக் கொள்ளாமலே இருந்தாள்.

மங்களா சொன்னபடி செய்துவிட்டாள்.

அடுத்த முறை முரளி போன் பண்ணி 'சினிமா போகலாமா?' என்றபோது ''நான் வரலை முரளி'' என்று தட்டிக் கழித்து விட்டாள். அடுத்த ஒருமணிக்குள் ஏதோ வேலையைச் சிருஷ்டி செய்து கொண்டு, மங்களாவின் அலுவலக அறைக்கே வந்து விட்டான் முரளி.

''ஏன் வரலை மங்களா?'' என்றவனைச் சீண்ட எண்ணி ''நான் எதுக்கு முரளி...வேண்டியவர்கள் மட்டும் போதாதா?'' என்று புன்னகையுடன் கேட்டாள்.

இனியும் வேஷம் போட முரளி விரும்பவில்லை.

''எஸ்...ஐ ஆம் வெரி மச் இன்ட்ரஸ்டட் இன் தர்மா?'' என்று ஒப்புக்கொண்டு விட்டான்.

''நீங்கள் வராவிட்டால் தர்மா வரமாட்டாளே!'' என்ற சந்தேகத்தை அவன் கிளப்பினதும் ''அதுக்கு நான் பொறுப்பு...நீங்கள் அவளுக்கு மத்தியானம் போன் பண்ணுங்கள்'' என்று தைரியம் சொன்னாள் மங்களா.

சரியாகப் புரிந்துகொண்டு அளவாய் பேசும் மங்களாவைப் பார்த்தான் முரளி.

''தேங்க் யூ வெரி மச்...'' என்று சொல்லி அழகாய் சிரித்துவிட்டு, உற்சாகத்துடன் வெளியே போனான்.

தர்மாவை முரளியுடன் சினிமாவுக்குப் போக சம்மதிக்க வைப்பது மங்களாவுக்கு சிரமமாக இல்லை. தர்மா முரளியிடம் மயங்கியிருந்தது அவளுக்குப் புரிந்து தானே இருந்தது.

''உன்னை விட்டுட்டு நான் இன்னிவரைக்கும் எங்கேயுமே தனியா போனதில்லை. நான் மாட்டேன்'' என்று தர்மா மறுத்தபோது...

''அசடு மாதிரி பேசாதே தர்மா...முரளி ஆசைப்படறான்...உனக்கும்தான் விருப்பம் அப்புறம் வீணா ஜம்பம் என்னவேண்டிக்கிடக்கு'''என்றுஅடக்கிவிட்டாள்

மறுநாள் மாலை அலுவலக வேலை முடிந்ததும் முரளி தர்மாவை வந்து அழைத்துக் கொண்டான்.

''ஹாவ் எ நைஸ் டைம்'' என்று சொல்லி மங்களா அனுப்பி வைத்தாள்

முரளி அக்கறையுடன் அலங்கரித்துக் கொண்டு வந்திருந்தான்.

வீட்டுக்குப் போய் ஷேவ் பண்ணி, உடை மாத்தி வந்திருக்கிறானோ?

தனக்காக அவன் இவ்வளவு சிரத்தை காட்டுவது தர்மாவுக்குப் பெருமையாய் இருந்தது.

நகரின் சிறந்த தியேட்டருக்குப் போனார்கள். முரளி முன்பே டிக்கெட் எடுத்து விட்டான் போலிருக்கிறது.

சௌகரியமான ஆசனங்கள்.

இதமான ஏஸி—யின் ஓட்டம்.



அதிகக் கூட்டமில்லை.

இருவரும் உள்ளே சென்று அமர்ந்து கொண்டனர்.

படம் ஆரம்பித்தது.

கனத்த இருளில் முகம் தெரியாவிட்டாலும், முரளி திரையை அதிகம் பார்க்காமல் தன் பக்கமே திரும்பிப் பார்ப்பது தர்மாவுக்குத் தெரிந்தது.

நடுநடுவில் என்னவோ சொல்ல அவன் இவளிடம் குனிந்தபோது, வாழ்நாளில் இதுவரை ஏற்படாத இனிய உணர்வு உண்டாகி, தர்மாவின் தேகம் எங்கும் கிறுகிறுத்தது.

படம் ஆரம்பித்த பிறகு நெருங்கி அமர்ந்திருந்த முரளி, தர்மாவின் தோள்களைத் தொடுகிற மாதிரி, ஸீட்டின்மேல் கையைப் போட்டுக் கொண்டான்.

அவன் விரல்கள் தர்மாவின் தோளில் இறங்கி மேல் புஜத்தைச் சற்றே அழுந்தப் பிடித்தன.

நெகிழ்ந்து போனாள் தர்மா.

என்றோ அவள் கனவில் வந்த ஆடவன் இவளைத் தொட்டபோது உண்டான அதே சுகானுபவம்.

தர்மா நகரவில்லை. முரளியின் கையைத் தள்ளவில்லை.

படம் முடிந்து வெளியே வந்தார்கள்.

டிரைவ் இன் ஹோட்டலுக்குப் போய் வண்டியை நிறுத்தினான் முரளி.

சர்வர் ஓடி வந்தான்.

''உங்களுக்கு என்ன வேணும் தர்மா?''

''உங்க இஷ்டம்' என்றாள் அவள்.

முரளி பாதாம் ஹல்வா, கட்லெட் இவைகளுடன் காபியையும் ஆர்டர் பண்ணினான்.

''ஸோ? ஹௌ வாஸ் த பிக்சர்? உங்களுக்குப் பிடித்ததா?''

லேசாகப் புன்னகைத்தாள் தர்மா.

''பிக்சர் பிடித்தது...ஆனால் நீங்க எனக்கு மரியாதை கொடுத்து, நீங்கள், நீங்கள் என்பதுதான் பிடிக்கலே...'' தர்மா மெதுவாய்ப் பேசினாள்.

அவள் பேச்சு முரளிக்கு சந்தோஷத்தைக் கொடுத்தது.

''அந்த உரிமையை எனக்குக் கொடுத்ததற்குத் தாங்க்ஸ்'' என்றான் அவன்.

டிபன் வந்தது.

மௌனத்திலேயே சாப்பிட்டார்கள்,

பணம் கொடுத்துவிட்டு காரை எடுக்கும்போது மணி ஏழாகி விட்டது.

''இன்னும் கொஞ்ச நாழி கழித்து திரும்பலாம் இல்லையா?'' என்று கேட்டுவிட்டு மரீனாவுக்கு வண்டியை ஓட்டினான் முரளி.

காந்தி சிலைக்குப் பின்னால் உள்ள சாலையில் சென்று, தனியான இடத்தில் காரை நிறுத்தினான்.

பௌர்ணமி நிலா கடலுக்கு மேல் தங்கத் தாம்பாளமாய் ஜொலித்தது.

''மனைக்குப் போகணுமா?''

''உங்க இஷ்டம்'' என்றாள் தர்மா.

அவளையே உற்று நோக்கின முரளி ''என் இஷ்டம் என்ன தெரியுமா?'' என்று மெல்ல வினவினான்.

பிறகு குனிந்து தர்மாவின் வலது கையை எட்டி எடுத்து அவள் விரல்களைத் தன் விரல்களோடு கோர்த்துக் கொண்டான்.



''இதுதான் எனக்கு இஷ்டம்... யூ டோண்ட் மைண்ட்?'' என்றான் கனத்த குரலில்.

முரளியை நிமிர்ந்து பார்க்க தர்மாவின் நெஞ்சுக்கு வலுவில்லை. பார்த்தால் அவன் பார்வையில் சிக்கி அவனுக்குப் பணிந்துவிடுவோம் என்ற பயம்.

ஆனாலும் கையை இழுத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம்கூட எழாமல் அமர்ந்திருந்தாள்.

''என்னைப் பார்த்தால் பயமாக இருக்கிறதா? ஏன் உன் கை இப்படி சில்லென்று இருக்கு? ம்...?''

''.........''

''யூ டோண்ட் வாண்ட்டு டாக் டு மீ?'' என்றான் மறுபடி முரளி.

இப்போது தலையை நிமிர்த்தி அவனைப் பார்த்தாள் தர்மா 'நான் என்ன பண்ணுவேன்.. இப்படி செயலிழந்து நிற்கிறேனே' என்று அந்தப் பார்வை முரளியிடம் கெஞ்சியது.

கைக்குள் பிடித்திருந்த தர்மாவின் விரல்களை தன் முகத்திற்கு எடுத்துப் போனான் முரளி.

மிருதுவான அந்த விரல்களைத் தன் கன்னங்களில் மெல்ல தேய்த்துக் கொண்டான்.

''நானும் எத்தனையோ பெண்களோடு பழகி இருக்கிறேன். பட்நோ படி லைக் யூ... ஜஸ்ட் நோ படி லைக் யூ தர்மா— யூ ஆர் ஸோ ப்ரிட்டி... உன் அழகு எனக்கு மயக்கம் தருகிறது தர்மா... இது ஏன்? உன்னைப்பார்க்கா விட்டால் உன்னோடு பேசாவிட்டால் எனக்குப் பைத்தியம் பிடித்த மாதிரி இருக்கு... இது ஏன்? எனக்கு இதெல்லாம் புது அனுபவமாய் தோணறது தர்மா... கான் யூ டெல் மீ வொய்? நான் சொல்வது உனக்குப் புரியுதா, தர்மா?... யூ... அண்டர்ஸ்டாண்ட் மீ?...'' மெல்லப் பேசி முரளி

தர்மாவின் உள்ளங்கையை தன் வாயிடம் கொணர்ந்து அதில் திரும்பத் திரும்ப மென்மையாய் முத்தமிட்டான்.

## 5

தர்மா வீடு திரும்புவதற்காகவே காத்துக் கொண்டிருந்த மங்களா, அவள் வந்ததும் தனி அறைக்கு அழைத்து போய் ''ஏய்! என்னாச்சு?'' என்று கேட்டாள்.

மங்களாவிடம் இத்தனை வருஷ காலமாய் ஏதும் மறைத்தறியாத தர்மா, அன்று நடந்ததை மட்டும் அப்படியே சொல்லத் தயங்கினாள். தயக்கத்தைவிட பயமே அதிகம் இருந்தது எனலாம்.

முரளி தன் கையைப் பற்றினதையும் என்னென்னவோ சொன்னதையும் மங்களா தெரிந்து கொண்டால் 'நான் அப்பவே சொல்லலியா? அவன் பெண்களுடன் பழகுவதில், மயக்குவதில் எக்ஸ்பர்ட்?' என்று சொல்லி கோபிப்பாளோ என்ற நடுக்கம் தோன்றினது நிஜம். தவிர, இன்று எனக்கு நடந்த அனுபவம் தான் ரகசியமாக வைத்துக் கொள்ள வேண்டிய ஒன்று என்ற எண்ணமும் தோன்றியதால், மங்களாவிடம் எல்லாவற்றையும் சொல்லக் கூடாது என்றே தீர்மானித்தாள் தர்மா.

''தர்மா — நான் கேக்கறேன் — என்ன நீ ஒண்ணும் சொல்ல மாட்டேங்கறே'' தர்மாவின் சிந்தனையைக் கலைத்தாள் மங்களா.

சாதாரணமாய் முகத்தை வைத்துக் கொண்டு சிரித்தாள் தர்மா.

''சொல்ல ஒண்ணும் விசேஷமா இல்லை மங்களா. சினிமாவுக்குப் போனோம். ஓ! தட் வாஸ் எ நைஸ் பிக்சர்''



நீயும் நானும் சேர்ந்து இன்னொரு தடவை போகணும்— அப்புறம் டிரைவ் இன்னுக்கு போய் டிபன் சாப்பிட்டோம் அப்புறம் இங்கே வந்தாச்சு... தட்ஸ் ஆல்'' பீச்சுக்குப் போனதை மறைத்துவிட்டாள் தர்மா.

''இவ்வளவுதானா?''

''இவ்வளவுதான்''

''நிஜம்மா?''

''நிஜம்மா!''

'பூ... சுவாரசியம் இல்லையே! மங்களாவின் முகம் தொங்கிவிட்டது. ''சரி... என்ன பேசினான் முரளி'' அவள் விடவில்லை.

''சாதாரணமாய் தான்... என் வேலை பிடிச்சிருக்கான்னான்... அவன் வேலையைப் பத்தி சொன்னான்... இப்படி...''

'உன்னைப் பத்தி ஒண்ணுமே சொல்லலையா?'

ஒண்ணுமே இல்லை என்றால் கண்டிப்பாய் மங்களா நம்பமாட்டாள்... அதனால் கொஞ்சம் தயங்கிவிட்டு 'நீ ரொம்ப அழகாயிருக்கேன்னான்...' என்றாள்.

'ஹ! பாத்தியா — இந்த மாதிரி ஏதாவது விஷயம் வெளியிலே வரும்னு எனக்குத் தெரியும்... ஒரு தடவை சொன்னானா இல்லை, திரும்பத் திரும்பச்சொன்னானா?''

''சொன்னான் சுரைக்காய்க்கு உப்பில்லைன்னு...விடு மங்களா...... போர் அடிக்காதே... எனக்குத் தூக்கம் வரது...''

ஆக, அன்று சாதாரணமாய்த்தான் வெளியே போய் வந்திருப்பதாக மங்களாவை நம்ப வைத்து விட்டாள் தர்மா.

ஆனால் திரும்பத் திரும்ப அடுத்தடுத்து முரளி தர்மாவைத் தனியே அழைத்துப் பேச ஆரம்பித்தபோது அவளால் மங்களாவிடம் ரொம்ப மறைக்க முடியவில்லை.

'இத்தனை வருஷங்களாக என்னென்னவோ விதத்தில் உதவி செய்த மங்களாவிடமிருந்து, என் மனசின் உண்மை நிலையை மறைக்கிறேனே' என்று தனக்குள் தர்மா வருந்தவே செய்தாள்.

முரளியுடன் நான்கு தடவைகள் தனியாகப் போவதற்குள் மனசில் மண்டிக் கிடந்த பயம் நீங்கி, கொஞ்சம் தைரியத்துடன் பழக ஆரம்பித்தாள்.

அவன் தொடுவதை, அணைப்பதை ஒருவித கர்வத்தோடு ரசிக்கவும் ஆரம்பித்தாள் தர்மா'

பத்து நாட்கள் ஓடுவதற்குள் முரளிமேல் தான் கொண்டுள்ளது வெறும் கவர்ச்சி மட்டுமல்ல, அழுத்தமான அன்பு என்பதையும் தர்மா உணர்ந்துவிட்டாள்.

முரளி அவளைக் கவனித்த விதம், அவளுக்கு முக்கியத்துவம் கொடுத்தவிதம், அவளை கண்டாலே பூரித்துபோன விதம் எல்லாம் அவனுக்கும் அவள் மேல் அலாதி அன்பு தோன்றியிருக்கிறது என்பதைஅவளுக்கு உணர்த்தி- 'நான் எல்லோரையும் போல சாதாரணமானவள் இல்லை. ரொம்ப ரொம்ப உயர்ந்தவள்... சிறந்தவள்' என்ற கிறுகிறுப்பை அவளுக்குக் கொடுத்தது.

அன்று ஞாயிற்றுக்கிழமை.

காலை பதினொரு மணி அளவில், சொல்லாமல் கொள்ளாமல் அண்ணா நகர் வீட்டுக்கே வந்துவிட்டான் முரளி

அவனை தர்மா எதிர்பார்க்காததால் தடுமாறிப் போனாள்.

''என்ன தைரியம் இருந்தா வீட்டுக்கே வறான் பாரேன்... உங்கப்பா வேறு வீட்டில் இருக்கார்...' அவள் மங்களாவிடம் தனிமையில் பதைத்தாள்,



கடந்த சில நாட்களாய் தர்மா மாறி இருப்பது மங்களாவுக்கு நன்கு புரிந்திருந்தது. என்னவாக இருந்தாலும் தர்மாவாக சொல்லட்டும் என்றிருந்தவர்களுக்கும் முரளியின் திடீர் வருகை அதிசயமாக இருந்தது.

''இந்தப் பக்கம் வரவேண்டிய வேலை இருந்தது... அப்படியே உங்களையும் பார்க்கலாமென்று...''

அப்பா, அம்மாவுக்கு முரளியை அறிமுகம் செய்து வைத்தாள் மங்களா.

காபி கொணர்ந்த மங்களாவிடம் ''ஐ வாண்ட் டு டேக் தர்மா அவுட்'' என்று யாருக்கும் கேட்காதபடி கிசுகிசுத்தான்.

மங்களாவிடம் தர்மா எல்லாவற்றையும் சொல்லியிருப்பாள் என்ற ஊகத்தில், அவளிடம் அந்த உதவியை முரளி கேட்டான்.

மங்களாவுக்கு ஏதோ புரிந்த மாதிரி இருந்தது.

''அந்தப் புது காண்ட்ராக்ட் விஷயமாகப் பேசணும் என்று எம்.டி சொன்னதாகச் சொன்னாயே தர்மா... மிஸ்டர் முரளியுடன் போய் முடித்துவிட்டு வந்துடேன்.''

எப்படியோ பத்து நிமிஷத்தில் தயாராகி தர்மா கிளம்பி விட்டாள்.

காரில் போகும்போது ''ஹாய் ஸ்வீட்டி'' என்றான் முரளி.

''இப்படியா முன்பின் சொல்லாமல் வருவது?''... தர்மா பொய்க் கோபம் காட்டினாள்.

''உன்னைப் பார்க்காமல் இருக்க முடியலை அதுதான்...'' தலையைத் திருப்பி அழகாய் சிரித்தான் முரளி.

எட்டி தர்மாவின் கையை இழுத்து 'ம்...' என்று முத்தமிட்டான்.

"நீ எவ்வளவு அழகா இருக்கே, தெரியுமா?" என்றான்,

சிரித்து விட்டாள் தர்மா.

"உன்னை இன்னிக்கு முக்கியமான இடத்துக்கு அழைத்துப் போய், முக்கியமான சமாச்சாரம் சொல்லப் போறேன். அதுதான் இந்த சர்ப்ரைஸ் விசிட்" என்றான்.

தர்மாவுக்கு ஆர்வம் எழுந்தது.

"என்ன புது இடம்? என்ன சர்ப்ரைஸ்?"

"வெயிட்... அனதர் டென் மோர் மினிட்ஸ்."

என்னவாக இருக்கும்?

கார் அடையாறை அடைந்தது.

அடர்ந்த மரங்கள் நிரம்பிய சாலையில் சென்று, பெரிய பங்களா காம்பௌண்டில் கார் நுழைந்தது.

கூர்க்கா ஸல்யூட் அடித்தான்.

இருபது, முப்பது வருஷத்து கட்டிடம், பிரும்மாண்டமான மாளிகையாய் வீடு இருந்தது.

கேட்டிலிருந்து தள்ளி இருந்த வீட்டிற்குப் போகும் பாதையின் இரு மருங்கிலும் பூச்சொரியும் மரங்கள்—பச்சைப் புல்வெளி, வண்ண வண்ண பூம்பாத்திகள்.

ஓ! எவ்வளவு அழகான இடம்!

வாசல் போர்டிகோவில் கார் நின்றது.

சின்னப் பையன் போல துள்ளி வந்து, அவளுக்குக் கதவைத் திறந்து பிடித்தான் முரளி.

"இது யார் வீடு முரளி?"

"வாயேன்... யூ வில் ஸீ..." அவள் கையைப் பிடித்து அழைத்துச் சென்றான் அவன்.



படிக்கட்டுகளில் ஏறினால், பெரிய தேக்கு மர கதவுகளைக் கொண்ட ஹால்—சுவர்கள் பதித்து பளபளத்தது.

அந்தக் காலத்து சாமான்களின் தோரணை ஒவ்வொன்றிலும் தெரிந்தது.

பெரிய பெரிய கண்ணாடிச் சாளரங்கள்; ப்ரோகேட் திரைச்சீலைகள், காஷ்மீர் கம்பளங்கள், விலை உயர்ந்த சோபா நாற்காலிகள்.

இங்கு எதற்கு வந்திருக்கிறோம்?...

முரளியின் முகத்திலிருந்து தர்மாவினால் எதுவும் புரிந்து கொள்ள இயலவில்லை.

தர்மாவின் கையைப் பற்றி ஒரு சோபாவில் அமர்த்தினான் முரளி.

அங்கு வந்த ஆளிடம் "மத்தியான சாப்பாடு இரண்டு பேருக்கு ஸ்பெஷலாய் தயார் பண்ணச் சொல்லு" என்றான். பிறகு தர்மாவின் பக்கம் திரும்பி "இப்போ என்ன சாப்பிடுகிறாய்? காபி, டீ, கோக், ஆரஞ்ச் ஜூஸ்?" என்று அடுக்கினான்.

முரளியின் குழந்தைத்தனமான துள்ளலும், அந்த வீட்டில் அவன் செய்யும் அதிகாரமும் தர்மாவுக்கு வேடிக்கையாக இருந்தன.

"வேர் ஆர் வீ?... இது யார் வீடு?" அவன் கேட்டதற்குப் பதில் ஒன்றும் சொல்லாமல் பதிலுக்கு கேள்வி கேட்டாள் தர்மா.

"இரண்டு கிளாஸ் ஜூஸ் கொண்டு வா" என்று சொல்லி அந்த ஆளை அனுப்பினான் முரளி.

பிறகு "உன் கிட்டே சொல்லவில்லையா? வாட் எ ஃபூல் ஐ ஆம்... இதுதான் என் வீடு தர்மா... நீ லைக்கிட்?"

முரளியின் வீடா ?

இந்த மாளிகையா ?

குட்னஸ் !

முரளி இப்படியொரு பணக்காரனாக இருப்பான் என்று தர்மா கனவிலும் நினைக்கவில்லை.

ஜூஸ் வந்தது-

இருவரும் குடித்தார்கள்.

''வா...வீட்டைக் காட்டுகிறேன்'' என்று முரளி கூப்பிட இவளும் கிளம்பினாள். கீழே பூராவும் பார்த்துவிட்டு மாடிக்குப் போனார்கள். வீட்டில் பாதிக்கு மேற்பட்ட அறைகள் பூட்டியே கிடந்தன.

மாடிப்படி வளைவில் பிரும்மாண்டமாய் இரண்டு படங்கள்.

''அது என் அப்பா...இது அம்மா''...அப்பா எட்டு வருஷம் முன்னால் ஆக்ஸிடெண்டில் போயிட்டார்,அம்மா இப்பத்தான் லாஸ்ட் இயர்...''

''ஐ ஆம் ஸாரி'' என்று முனகின தர்மா, வலிய அவன் கைகளைப் பிடித்து ஆதுரத்துடன் அமுக்கினாள்.

''என்னைப் பத்தி உனக்கு நான் ஒண்ணுமே சொல்லலை,இல்லியா?நான் தனி மனுஷன் தர்மா...ஏதோ தூரத்து உறவுக்காரர்கள் இருக்கா...பட் நான் யாரிடமும் நெருங்கிப் பழகறதில்லை...இதோ பாரு... எங்க தாத்தா பாட்டி படம்...'' லைப்ரரி போன்ற அறையிலிருந்து இன்னொரு படத்தை முரளி காண்பித்தான்.

பஞ்ச கச்சம் கட்டிக்கொண்டு ஒரு பெரியவரும் மடிசாரில் ஒரு பெண்மணியும் முறைத்தவாறு நின்றிருந்தனர்.



தர்மாவுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

''இது யாரு?''

''மை கிராண்ட் பேரண்ட்ஸ்.''

''நீங்க. நீங்க...பிராமணரா?'' தர்மாவுக்கு ஆச்சரியமான ஆச்சரியம்.

'ஆமாம்' என்று பெரியதாய் தலை ஆட்டினான் முரளி

''உனக்கு ஒரு சர்ப்ரைஸ் என்று சொன்னேனே...அது இதுதான்...உனக்கு நம்ப முடியலை, இல்லை,

முரளியும் அவளும் ஒரே வகுப்பைச் சேர்ந்தவர்களா?

ஏனோ திடீரென்று தர்மாவுக்கு ரொம்ப சந்தோஷமாக இருந்தது

''இதுதான் என் ரூம்''—பையிலிருந்து சாவியை எடுத்து கதவைத் திறந்தான் முரளி.

முதல்நாள் இரவு ஏ.ஸி. ஓடியிருந்ததால், அறை 'சில்'லென்று இருந்தது. விசாலமான அறை. நாகரீகமாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. அந்தப் பக்கம் டிரெஸிங், பாத்ரூம் அறைகள்...இந்தப் பக்கம் பால்கனி...அதில் ஊஞ்சல் நாற்காலி, நாலு ஈஸி சேர்கள், ஒரு சின்ன மேஜை.

பால்கனியில் போய் நின்றுகொண்டாள் தர்மா...

பச்சைப் புல்வெளியும், நீலமான ஆகாயமும், தென்றல் காற்றும் அவளை மயக்கின. என்றோ கண்ட சின்ன வயசுக் கனவு இன்று நேரில் உயிர் பெற்று வந்து விட்டதைப் போன்ற குறுகுறுப்பு.

அவளுக்குப் பின்னால் வந்து நின்று கொண்டான் முரளி

அவன் மூச்சு தர்மாவின் கழுத்தில் மெதுவாய் பட்டது.

''உங்க வீடு ரொம்ப அழகா இருக்கு முரளி...இப்படி அரண்மனை மாதிரி வீட்டை நான் சினிமாவில்தான்

பார்த்திருக்கிறேன்...ப்யூடிஃபுல் ஹவுஸ், ரியலி'' என்றாள் தர்மா.

தர்மாவின் தோள்களைப் பற்றி தன்னை நோக்கித் திருப்பினான் முரளி. இது நாழிகை காணப்பட்ட விளையாட்டுத்தனம் மாறிப் போனவனாய், தீவிரத்துடன் அவன் பேசினான். ''நான் எத்தனையோ பெண்கள் கிட்டே ரொம்ப நெருக்கமாப் பழகிஇருக்கிறேன்...ஆனால் ஒருத்தரைக்கூட இந்த வீட்டுக்குள் வர அனுமதிச்சதில்லை... இங்கே வந்திருக்கிற முதல் பெண் நீதான்...யூ பிலீவ் மீ தர்மா ?''

தர்மாவுக்கு எதையோ உணர்த்த வேண்டும் என்று அந்த குரல் ஒலித்தது.

''நேற்று இரவு என்னால் தூங்கவே முடியலை தர்மா... உன்னைப் பற்றின நினைவுகள்தான்...உன்னை நான் தெரிந்து கொண்டு இரண்டு மாசங்கள்கூட ஆகலை... அதற்குள் என்னை இப்படி ஆட்டி வைக்கிற சக்தி உனக்கு எப்படி வந்தது தர்மா ?''

தோள்களைச் சுற்றி இருந்த அவன் விரல்கள் இறுகின.

''இந்த வீடு உனக்கு பிடிச்சிருப்பதைக் கேட்க சந்தோஷமா இருக்கு தர்மா. ஏன் தெரியுமா? ஐ ஆம் கோயிங் டு ஆஸ்க் யு டு கம் அண்ட் லிவ் இன் திஸ் ஹவுஸ் ...எஸ் தர்மா...ஐ லவ் யூ...வில் யூ மாரி மீ...தர்மா...?'' பேசிக்கொண்டு போன முரளி, தர்மாவை இழுத்து நெஞ்சோடு அணைத்துக் கொண்டான்.

கண்ணை மூடிக்கொண்டாள் தர்மா.

''நான் உன்னைக் காதலிக்கிறேன்...என்னை மணந்து கொள்வாயா? இந்த வீட்டில் வசிக்க உனக்கு விருப்பமா?'' என்று முரளி கேட்டது காதில் ரீங்காரமிட்டது.

'இத்தனை வருஷங்களாய் நீ தவமிருந்தது இந்த வாழ்வுக்காகத்தான்!' என்று தர்மாவின் இதயம் பாடியது.



இது எனக்குச்சொந்தமான இடம் என்பதுபோல அவன் மார்புக்குள் தன் முகத்தைப் புதைத்துக் கொண்டாள் தர்மா.

# 6

மாலை மணி நாலு சுமாருக்கு தர்மாவை அவள் வீட்டில் முரளி இறக்கினான். வாசலில் கார் நின்றவுடன் அவளை ஏறிட்டுப் பார்த்து ''ஐ லவ் யூ தர்மா—தட் ஈஸ் த ட்ரூத்...ப்ளீஸ் கிவ் மீ எ குட் ஆன்சர்'' என்று மெல்லச் சொன்னான். சரி என்பது போல தலையை ஆட்டிவிட்டுத் தர்மா இறங்கிக் கொண்டாள்.

வண்டி நகர்ந்தது.

''என்னைக் கல்யாணம் பண்ணிக்கொள்ள உனக்கு விருப்பமா?'' என்ற கேள்வியைச் சற்றும் எதிர்பார்க்காமல் முரளி கேட்டதும் தர்மா திக்கு முக்காடிப் போனாள். கடைசியில் எப்படியோ ''கொஞ்சம் அவகாசம் கொடுங்கள்... யோசித்துச் சொல்கிறேன்...'' என்று சொல்லி விட்டு ''நானாக உங்களோடு தொடர்பு கொள்ளும் வரையில் நீங்கள் என்னைப்பார்க்க,என்னோடு பேச முயல வேண்டாம். உங்கள் நெருக்கம் இல்லாமல் யோசிக்க விரும்புகிறேன்'' என்றும் கூறினபோது முரளி அதற்குக் கட்டுப் பட்டான்.

உள்ளே போகத் திரும்பினாள் தர்மா.

எதிரில் மங்களா நின்றாள்.

தர்மாவின் தலைமுடி கலைந்திருந்தது. முகத்தில் ஒரு ஜிவுஜிவுப்பு...என்ன விஷயம்?''

"அவன் உன்னே வரலையா?" என்றாள் மங்களா.

"அவருக்கு வேலை இருக்காம்" என்றாள் தர்மா.

அவரா?

நேற்று வரை அவனாய் இருந்தவன் இப்போது அவரா?

ஓஹோ; ஏதோ நடந்திருக்கிறது!

காரில் வரும்போதே மங்களாவிடம் இனி எதையும் மறைக்கக்கூடாது என்ற முடிவோடு தர்மா வந்திருந்தாள். தோழியை நெருங்கி அணைத்துக்கொண்டாள். "உன் கிட்டே நிறையப் பேசணும் மங்களா" என்றாள்.

இருவரும் தங்கள் அறைக்குச்சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டனர். தர்மாவே விஷயத்தை ஆரம்பிக்கட்டும் என்று பேசாமலிருந்தாள் மங்களா.

"முரளி தன வீட்டுக்கு என்னைக் கூட்டிண்டு போயிருந்தார் மங்களா" என்று ஆரம்பித்தாள்.

"அடையாறிலே மாளிகை மாதிரி பெரிய வீடு—அழகான தோட்டம்—அத்தனாம் பெரிய வீட்டில் அவர் தனியாகத்தான் இருக்கார்...குடும்ப போட்டோ எல்லாம் காண்பிச்சார்...ஒரு ஆச்சரியம் மங்களா! அவர் நம்ப ஜாதியைச் சேர்ந்தவர். உன்னால நம்ப முடியறதா? அவர் பாட்டி போட்டோவைக் காட்டினார்...மடிசார் வைச்சுக் கட்டிண்டு ஆசாரமா இருந்தா... 'அப்படிப்பட்ட பாட்டிக்கு இப்படி ஒரு பேரனா?'னு நம்பறது எனக்குக் கஷ்டமா இருந்தது..." அசட்டுச் சிரிப்பு ஒன்று சிரித்து விட்டு நிறுத்தினாள் தர்மா.

முக்கியமான விஷயத்தைச் சொல்லாமல் எதை யெதையோ தான் பேசுவது அவளுக்குப் புரிந்தது.

விஷயத்துக்கு வந்துவிடுவதே புத்திசாலித்தனம் என்று உணர்ந்த தர்மா குரலைச் சன்னமாக்கிக்கொண்டு பேசினாள்.



"முரளி என்னைக் காதலிக்கிறாராம் தர்மா...ஐ வாண்ட் டு மாரி யூ..."

விஷயம் இத்தனை சீக்கிரம், இவ்வளவு உச்சாணிக் கொம்பில் போய் நிற்கும் என்று மங்களா எதிர்பார்க்கவில்லை

"வாட்? என்ன சொல்றே?"

"நிஜம்தான்...அவர் என்னைக் கல்யாணம் பண்ணிக்க ஆசைப்படறார்..."

முரளியா.

விதவிதமான பெண்களுடன் உல்லாசமாகப் பொழுதைக் கழித்துக் கொண்டு திரிந்த முரளியா மணம் செய்து கொள்ள விரும்புகிறான்?

தர்மாவை அவனுக்குத் தெரிந்து இன்னும் இரண்டு மாசங்கள் பூர்த்தியாகவில்லை. அதற்குள் கல்யாணப் பேச்சா?

இதுதான் காதலா?

மங்களாவுக்கு ஒன்றும் புரியவில்லை.

"அவர் கேட்டபோது எனக்கும் இப்படித் திகைப்பாத் தான் இருந்தது. அதனாலே யோசிச்சு சொல்றேன்னு சொல்லியிருக்கேன்."

தர்மாவின் முகத்தில் நாணமும், ஆசையும் கலந்து பரவிக் கிடந்தன.

முரளியை அவள் விரும்புவது வெளிப்படையாகவே தெரிந்தது.

சரி, இவளுடன் மனம் விட்டுப் பேச வேண்டிய நேரம் வந்துவிட்டது என்ற முடிவுடன், தர்மாவிடம் தன் மனதில் தோன்றிய கேள்விகளைக் கேட்டாள் மங்களா.

''அவன் கேட்டது இருக்கட்டும்...உனக்கு என்ன தோணறது'''

குனிந்திருந்த தர்மாவின் தலையை நிமிர்த்தினாள் மங்களா.

''டூ யூ லவ் ஹிம்?...நீயும் அவனை விரும்பறயா? சொல்லு தர்மா?''

ஆமாம் என்று தலையை ஆட்டினாள் தர்மா.

''முரளி கலகலப்பானவன்; சட்டென்று யாரையும், முக்கியமாகப் பெண்களைக் கவரக் கூடியவன். இந்தக் கவர்ச்சிலே மயங்கிய நீயும் அவனை விரும்பறேன்னு சொல்றே?''

''......''

''அவன் நிறையப் பெண்களோடு பழகியிருக்கான் தர்மா...அவனுக்குப் புரிந்த நாகரிக உலகத்திலே இப்படி 'ஐ லவ் யூ'ன் சொல்லறது சாதாரணமாய் இருக்கலாம்... அதனாலே உன்கிட்டேயும் அந்த அர்த்தத்திலேயே பேசியிருக்கலாம் இல்லையா?...''மேலே மங்களாவைப் பேச விடாமல் குறுக்கிட்டாள் தர்மா.

''உன்னைக் காதலிக்கிறேன்னு மட்டும் சொல்லி இருந்தா சரி மங்களா...ஹி வாண்ட்ஸ் டு மாரி மீ... என்னைக் கல்யாணம் பண்ணிக்க ஆசைப்படறார்...இது வரைக்கும் ஒரு பெண்ணையும் அவர் வீட்டுக்கு அழைச்சுண்டு போனதில்லையாம். என்கிட்டே உண்டாயிருக்கிற பிணைப்பு யார் கிட்டேயும் ஏற்பட்டதில்லையாம்...அவர் சொன்னார்...நானும் அதை நம்பறேன் மங்களா...''

தீர்மானமாகத் தர்மா பேசின பிறகு மங்களா என்ன சொல்ல முடியும்?

இருந்தாலும் அவள் விடவில்லை.



''முரளி கிட்டே என்னத்தைக் கண்டு நீ அவனை விரும்பறே? அவன் பணமா? அழகா? இல்லை புதுசா அவன் நம்ப ஜாதின்னே தெரிஞ்சிருக்கே, அதைக் கண்டா?''

மங்களா இப்படிக் கேள்விகள் கேட்கிறாளே என்று தர்மா கோபப்படவில்லை. மாறாக அவளுக்கு உரிமை இருக்கிறது; கேட்கிறாள் என்ற நோக்கில் யோசித்துப் பதில் சொன்னாள்.

''பணம் மட்டும்தான்னா அன்னிக்கு மிராசு பையனை வேண்டாம்னு வருவேனா? முரளி கிட்டே எல்லாம் இருக்கு... அவர் அழகாயிருக்கார்... நாகரீகமாய் இருக்கார் ...பணம் இருக்கு; நம்ப ஜாதியைச் சேர்ந்தவர் என்ற ப்ளஸ் பாயிண்ட்டும் இப்போ சேர்ந்திருக்கு'' இது எல்லாமா சேர்ந்து அவரை எனக்குப் பிடிக்க வைக்கறது மங்களா''

''சரி...அவன் இதுநாள் பல பெண்களோடு பழகியிருக்கானே...அது பரவாயில்லையா?...

''அவர் இனிமே என் கிட்டே எப்படி இருக்கப் போறார்ங்கறது தானே முக்கியம் மங்களா?...நீயே அன்னிக்குச் சொல்லலை? இவர் பின்னாலே நாறு பெண்கள் சுத்தின காலம் மாறி, இன்னிக்கு என் பின்னால் நாய்க்குட்டி மாதிரி முரளி சுத்தரான்னு நீயே சொல்லலை?''

''சொன்னேன் இல்லேங்கல்லே... ஆனா... ஆனா...யூ ஹார்ட்லி நோ ஹிம் தர்மா... நீங்க பழக ஆரம்பிச்சு கொஞ்ச நாள் தானே ஆறது?...முரளி உன்னை விரும்பறதா இன்னிக்குத்தானே சொல்லியிருக்கார், நீ ஏன் அவசரப்பட்டு ஒரு முடிவுக்கு வரணும்?''

''அவர் என்னை விரும்பறதாக எனக்குக் கொஞ்ச நாளாகவே 'தெரிந்ததுதான் மங்களா.''

''பின்னே ஏன் என்கிட்டே சொல்லலை?''—மடக்கினாள் மங்களா.

''என் மனசுலே தோணினதைத் தீர்மானமாகத் தெரியாம எப்படி வெளியே சொல்றது மங்களா?''

தர்மா ஒரு முடிவுக்கு வந்துவிட்டாள். அதுதான் இப்படிப் பிடிவாதம் பிடிக்கிறாள் என்பது மங்களாவுக்கு நிச்சயமாய்ப் புரிந்து போனது.

மேற்கொண்டு என்ன கேட்பது என்று அவள் யோசிக்கையில், தர்மா எழுந்து வந்து மங்களாவின் மடியில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

"முரளியைப் பார்த்த நாள்லேந்து இவரை எங்கேயோ பார்த்திருக்கேன்னு உன்கிட்டே சொன்னது ஞாபகம் இருக்கா, மங்களா? என் கண்ணுக்கு முரளி நான் என்னிக்கோ கண்ட கனவின் கதாநாயகன் மாதிரி இருக்கார்...அவரை நினைச்சாலே என் மனசு சிலிர்க்கிறது... முரளியைக் கல்யாணம் பண்ணிண்டா நான் சந்தோஷமாய் இருப்பேன்னு தோணறது மங்களா...அவரை என் வழிக்குத் திருப்பி என் கிட்டேயே வைச்சுக்க முடியும் என்கிற நம்பிக்கை எனக்கு இருக்கு...ஓ! ஐ லவ் ஹிம் அண்ட் ஹி லவ்ஸ் மி...நீ ஏன் புரிஞ்சுக்க மாட்டேங்கறே?" உணர்ச்சி வயப்பட்டு போனதால் தர்மா அழ ஆரம்பித்தாள்.

சின்ன வயசு முதற்கொண்டே செய்யும் எந்தக் காரியத்துக்கும் மங்களாவிடமிருந்து பாராட்டுக்களைப் பெற்று பழகிப்போன அவள் மனம், இன்று முரளியைத் தன்வாழ்க்கைத் துணையாகத் தேர்ந்தெடுத்திருப்பதையும் அவள் வரவேற்க ஆசைப்பட்டாள்.

மங்களா புரிந்து கொண்டு விட்டாள்.

முரளிமேல் அவளுக்கு அவநம்பிக்கை இல்லை...இந்தக் காலத்தில் இப்படிப் பெண்களுடன் சுத்துவது ஒன்றும் தவறு இல்லை...பணம் இருக்கிறது...பெரியவர்கள் யாரும் இல்லை... நாகரீக மோகம் இருக்கிறது...அதனால் அவன் வாழ்ந்த வாழ்க்கை வேறு விதமாய் இருந்திருக்கிறது... உண்மையிலேயே அவன் தர்மாவிடம் மயங்கி இருக்கலாம், மனப்பூர்வமாக அவளை மணக்க எண்ணம் கொண்டிருக்கலாம்... இல்லையென்றால் இத்தனை குறுகிய காலத்தில்



திருமணம் வரை பேச்சு போகுமா? இப்போது நிதானமாய் யோசிக்கையில் தர்மாவைக்கண்ட நாளிலிருந்தே முரளி தனி ஆர்வத்துடன் நடந்துகொண்டது புரிந்தது.

கண்களில் ஒரு துறுதுறுப்பு—முதன் முதலில் ஒரு பெண்ணிடம் தன்னை இழந்த பரபரப்பு—இருக்கத்தான் செய்தது.

தர்மாவும் ஒரு வினோத மனுஷிதானே! தனக்கென்று ஒரு உலகத்தைச் சிருஷ்டி செய்துகொண்டு, அதற்காகப் பெற்ற தாய், தந்தை எல்லாரையுமே உதறிவிட்டு ஓடி வந்தவள் தானே!

தர்மா சொன்னதுபோல முரளி அவள் கனவின் கதாநாயகனாக எல்லாத் தகுதிகளையும் கொண்டவன். அழகு, பணம், நாகரீகம், அந்தஸ்து எல்லாம். திருவையாறு பட்டிக்காடு வாழ்க்கை வேண்டாம் என்று தர்மா ஓடி வந்தது இந்த மாதிரி ஒரு திருப்பத்துக்காகத்தானே? தர்மா ஒரு சந்தர்ப்பவாதி...அவளுக்கு இதைவிட அருமை சந்தர்ப்பம் வேறு நிச்சயமாக கிடைக்காது...எப்படியோ அவள் சந்தோஷமாக இருந்தால் சரி.

யோசித்துப் பார்க்கப் பார்க்க முரளி—தர்மா ஜோடிப் பொருத்தம் நன்றாகவே இருக்கும் என்று மங்களாவுக்குத் தோன்றியது.

மடியில் படுத்து விசும்பிக் கொண்டிருந்த தர்மாவை எழுப்பினாள்.

"உன்னைப் புரிஞ்சுக்காம நான் கேள்விகள் கேட்கலை தர்மா...உன்னையே நீ நிச்சயம் பண்ணிக்கணும் பாரு. அதுக்காகத்தான் கேட்டேன். உன் மனம் ஸ்திரமாக இருக்கிறது எனக்கு சந்தோஷமாக இருக்கு...முரளியும், நீயும் கல்யாணம் பண்ணிண்டு ஹாப்பியா இருந்தா என்னைவிட சந்தோஷப்படறவா யாரு இருக்கமுடியும்?... ம்..."

ஆத்மார்த்தமான அன்புடன் மங்களா பேசினதும் தர்மாவுக்கு தோழி தன் பக்கம் என்ற உண்மை புரிந்து குதூகலம் உண்டாயிற்று.

இரவு சாப்பாடான பிறகு மறுபடி பேச உட்கார்ந்தார்கள் சிநேகிதிகள்.

''மேற்கொண்டு என்ன பண்ண உத்தேசம்? முரளி கிட்ட உன் சம்மதத்தைச் சொல்ல வேண்டாமா?'' என்றாள் மங்களா.

''ஆயிரம் இருந்தாலும் என் கல்யாண சமாச்சாரம்... அதனால் அப்பா, அம்மாவுக்கு ஒரு வார்த்தை சொல்லிவிட்டு முரளிகிட்டே சொல்லலாம்னு நினைக்கிறேன்...நீ என்ன சொல்றே?''

மங்களாவுக்கு வியப்பு எழுந்தது.

'உனக்குக்கூட உன் குடும்ப ஞாபகம் இருக்கா?... அவாளை துடைச்சிப் போட்டுட்டேன்னு நினைச்சேன்!,'

''என் சுதந்திரத்துக்கு அவா குறுக்க நின்னா... அதனாலே நான் விலகிண்டேன்...மத்தப்படி எனக்கு அவாகிட்டே என்ன பகை? முரளி வேறு ஜாதிக்காரனாயிருந்தா இந்தப் பேச்சுக்கு இடமே இல்லை. ஆனா அதிருஷ்டவசமா அவர் நம்ம ஜாதியாகவே இருக்கார்... அதனாலே அப்பா கிட்டே சொல்லலாமேன்னு ஒரு நப்பாசை தப்பா மங்களா?''

தர்மாவின் வாதத்தில் நியாயத்தை உணர்ந்தாள் மங்களா.

தர்மா என்ன கெட்டுப் போனாளா? திருடினாளா? வரம்பு மீறி நடந்து கொண்டாளா? ஒன்றும் இல்லை உண்மை புரிந்தால் அவள் தந்தை இந்தத் திருமணத்தை ஆதரிக்கக்கூடும் என்றே மங்களா நினைத்தாள்.

''இப்போ நாழியாறது...படுத்துக்கலாம்...கார்த்தால எழுந்து யோசிக்கலாம்...என்ன?...குட்—நைட் தர்மா...



அண்ட் ஸ்வீட் ட்ரீம்ஸ்''...மங்களா பேச்சை முடித்துவிட்டுப் படுத்து விட்டாள்.

பாதி ராத்திரி இருக்கும்.

விளக்கைப் போட்டுவிட்டு மங்களாவை எழுப்பினாள் தர்மா.

''என்ன?''

''ஒரு சந்தேகம்?'' என்றாள் தர்மா.

''சந்தேகம் கேட்க நல்ல நேரம் பார்த்தே...என்ன?''

''எத்தனையோ பெண்கள் இருக்கறச்சே என்னைக் கல்யாணம் பண்ணிக்க முரளி ஏன் தீர்மானிக்கணும்? என்கிட்டே அப்படி ஸ்பெஷலா என்ன இருக்கு?''

கண்களை விரித்துக் கொண்டு, குழந்தைத்தனமாய் கேள்வி கேட்கும் தர்மாவைப் பார்த்தாள் மங்களா. அவள் மனம் அலை பாய்வது இவளுக்குப் புரிந்தது.

''உன்கிட்டே அழகு இருக்கு. புத்தி இருக்கு. நீ நல்ல குடும்பத்தைச் சேர்ந்த பெண்; அவன் கூப்பிட்ட உடனே இளிச்சுண்டு போயிடலை; அவனுக்கு மதிப்பு வரும்படி நடந்துண்டு இருக்கே. இதெல்லாம் சேர்த்து தான் அவன் உன்னை செலக்ட் பண்ணியிருக்கணும்...அதுமட்டுமில்லை தர்மா—மத்த பெண்கள் எப்படி இருந்தாலும் தன் வீட்டு பெண்கள் மட்டும் ஒழுங்கா இருக்கணுங்கற ஆண்கள் நிறைஞ்ச நாடு இது. சுத்தறபோது எப்படிப்பட்ட பெண்ணோடும் சுத்துவான், ஆனா கல்யாணம்னு வரச்சே நம் ஜாதிப் பெண்ணா நல்ல குடும்பத்துப் பெண்ணா, எல்லாம் நிறைஞ்சவளா, தெரிஞ்சவளாய் தன் மனைவி இருக்கணும்னு ஆசைப்படற பல ஆண்களை நான் பார்த் இருக்கேன்...முரளியும் அப்படிப்பட்டவனாகத்தான் இருக் கணும். நீ ரொம்ப அதிருஷ்டம் பண்ணியிருக்கே தர்மா... நீ எங்கினெ வாழ்க்கை உனக்குக் கிடைக்கப் போறது...கால்

மேல் கால் போட்டு உட்கார்ந்துண்டு நீ மகாராணிபோல இருக்கப் போறே...பாரேன்...சரி...உன் சந்தேகம் தீர்ந்ததா?''

மங்களாவின் பேச்சைக் கேட்டுத் தர்மாவின் முகம் மலர்ந்தது.

'நான் உசத்தி...நான் ஸ்பெஷல்' என்ற எண்ணங்களோடு 'நான் மஹாராணி மாதிரி வாழப் போகிறேன்' என்ற பெருமையும் சேர்ந்து குதிபோடச் சிரித்த முகத்துடனேயே உறங்கிப் போனாள்.

மறுநாள் காலையில் இவள் எழுந்திருக்கும் முன்னரே மங்களா எழுந்து விட்டாள்.

''உன் பிரச்சினைக்கு நல்ல முடிவா யோசனை பண்ணி வைச்சிருக்கேன்'' என்றவள் அதை வெளியே சொல்லவும் செய்தாள்.

தன் தாய் தகப்பனிடம் விஷயத்தைச் சொல்ல வேண்டியது, இவர்கள் நேரே திருவையாறுக்குப் போய் தர்மாவின் பெற்றோரிடம் எல்லா விவரத்தையும்—தர்மா சௌக்யமாய் தங்களோடு இருப்பது, பெரிய பணக்கார வரன் நம்ம ஜாதியில் வந்திருப்பது எல்லாம்—சொல்லி அவர்களைத் சமாதானப் படுத்திக் கல்யாணத்துக்குச் சம்மதம் வாங்க வேண்டியது.

''அவர் முகம் கொடுத்துப் பேசாவிட்டாலும் ஒன்றும் குடிமுழுகிப்போகாது. தர்மா, உங்க கல்யாணம் நடக்கும்; நம்ப கடமையை நாம் செய்துவிட்டோம். அவ்வளவு தான்—என்ன சொல்றே?''

மங்களாவின் யோசனை தர்மாவுக்கு ரொம்பப் பிடித்திருந்தது...என்றாலும் ''என்னாலே உங்கப்பாம்மாவுக்கு ஏன் சிரமம்'' என்று மறுத்தபோது 'நீயும் அவாளுக்கு என்னை மாதிரி ஒரு பெண்தானே!' என்று வாயை அடைத்து விட்டாள் மங்களா.

எல்லாம் திட்டப்படி நடந்தது.



ஆபீசுக்கு இரண்டு நாட்கள் லீவு போட்டுவிட்டுத் தர்மாவும், மங்களாவும் நிலைகொள்ளாமல் தவித்தார்கள்.

மூன்றாம் நாள்...வெள்ளிக்கிழமை...காலை...வாசலில் டாக்ஸி நின்றது. வாசலுக்குப்போன மங்களா ஆச்சரியம் தாங்காமல் ''தர்மா ஓடிவா...'' என்று கத்தினாள்.

மங்களாவின் பெற்றோருடன் வண்டியிலிருந்து இறங்கின அப்பா அம்மாவைக் கண்டு நெகிழ்ந்து போனாள் தர்மா.

பெண் ஓடிப்போன முதல் வருஷம்தான் வைராக்கியத்துடன் ராமநாதனால் இருக்க முடிந்ததாம். தர்மாவின் இருப்பிடத்தை எப்படித்தெரிந்து கொள்ளலாம்; மறுபடி அவளைஎங்குகாணலாம் என்று அவரே தவியாய்தவித்துக் கொண்டிருந்த சமயத்தில், மங்களாவின் பெற்றோர் போய்ச் சேர்ந்திருக்கிறார்கள். தர்மா ஓடிப்போனாளே தவிர, இன்று வரை கெட்டு அழியாதது மட்டுமில்லை, உயர்ந்த மாப்பிள்ளையாகத்தானே பார்த்துக் கொண்டிருக்கிறாள் என்று கேட்டதும் பூரித்துப் போய், உடனே ரா ஜத்துடன் கிளம்பி விட்டாராம்.

அன்று மாலை சம்பிரதாய முறைப்படி முரளியிடம் சம்பந்தம் பேசி, கல்யாணத்துக்கு நாள் குறிக்க அப்பாவும், அம்மாவும் புறப்பட்டபோது 'நான் நினைத்ததை சாதிப்பேன்; நான் அதிருஷ்டக்காரி; ஆயிரத்தில் ஒருத்தி' என்ற திமிர் கலந்த பெருமை தர்மாவை உலுக்கி எடுத்தது.

## 7

ரூய்ங்ங்...என்ற சப்தத்துடன் ஓடிக்கொண்டிருந்தது ஏ. ஸி. மெத்தென்ற படுக்கையில் ஒரு தரம் புரண்டு படுத்தாள் தர்மா. அறையின் ஒருமூலையில் வைக்கப்பட்டிருந்த ரோஜாக்களின் மணமும் உபயோகிக்கும் சென்டின் மணமும் கலந்து நாசியில் ஏறி அவளுக்குப் போதை தந்தன.

கண்களை சற்றே திறந்தான் தர்மா. வெள்ளைவெளே ரென்ற பிளாஸ்டிக் விட்டத்தில் கண்ணாடி ஷாண்டிலியர் பளிச்சிட்டது.

இரண்டு பக்கச் சுவர்களிலும் உலகப்பிரசித்தி பெற்ற 'டேகாவின்' பாலே நடனக்காரிகள் தொங்கிக் கொண்டிருந்தார்கள். நைலான் கர்ட்டன்கள் அறையின் சுவருக்குப் பொருத்தமாய் பளபளத்தன.

எழுந்து உட்கார்ந்தான் தர்மா.

எதிரிலிருந்த டிரஸிங் டேபிளின் மூன்று கண்ணாடிகளிலும் அவன் அழகு உருவம் பிரதிபலித்தது.

இதெல்லாம் நிஜம்தான்.

திருவையாறில் கண்டது போலக் கனவுகள் இல்லை.

"எழுந்துருடா தர்மா..." என்று பாட்டி விடியற்காலையில் கத்தமாட்டாள்.

கண்ணைத் திறந்து சரம்சரமாய் தொங்கும் ஒட்டடைகளையும் ஓட்டு கட்டிடத்தையும் எண்ணி இனி தர்மா ஆயிசுக்கும் பயப்பட வேண்டியதில்லை.

இதெல்லாம் நிஜம்தான்.

மணிக்கட்டிலிருந்த 'ஒமேகா' வாட்சில் மணியைப் பார்த்தான் தர்மா.

மணி நாலு.

எழுந்து குளித்து, தயாரானால் முரளி வருவதற்குச் சரியாகயிருக்கும்.

பாத்ரூமில் இளஞ்சிவப்பு நிறக் குளியல் தொட்டியில் வெந்நீரைத் திறந்து விட்டான் அவன்.

இதமான நீரில் காலைநீட்டிப் படுத்து மறுபடியும் 'இதெல்லாம் நிஜம்' என்ற மயக்கத்தில் ஆழ்ந்துபோனான்.



மூன்று மாசங்களா?

ஆமாம். இதெல்லாம் அவனுக்குச் சொந்தமாகி மூன்று மாசங்கள் ஆகிவிட்டன.

தர்மாவின் தந்தையும், தாயும் சென்னைக்கு வந்ததும், முரளியிடம் சென்று முறையுடன் பெண் கேட்டதும் தடபுடலாய் கல்யாணம் நடந்ததும் மூன்று மாசங்களுக்கு முன்னாலா?

காலம் எவ்வளவு வேகமாய் ஓடுகிறது!

அப்பா பெரிய மனசுடன் தன்னை மன்னித்தது மட்டுமல்லாமல், பெரியவராய் முன் நின்று கல்யாணத்தை நடத்தி வைத்ததையும் நினைத்துப் பார்த்தால் 'நான் எல்லா விதத்திலும் அதிருஷ்டக்காரி' என்ற பெருமையே தர்மாவுக்கு ஏற்பட்டது.

ஏன் முரளி மட்டுமென்ன?

மாமனார் ஒரு காசு செலவழிக்கக்கூடாது. திருமண செலவு பூராவும் தன்னுடையதே என்றானே!

"உங்க விருப்பத்துக்கு அவனுக்கு ஏதாவது செய்யணும்னா செய்யுங்கள், ஆனால் கல்யாணச் செலவு மொத்தமும் என்னுடையது. இதுதான் நான் விதிக்கும் ஒரே நிபந்தனை" என்றானே!

பணம் தண்ணீராய் செலவழிந்தது.

ஆபட்ஸ்பரியில் கல்யாணம்.

காலையில் பெயருக்கு சம்பிரதாயப்படி மந்திரம் சொல்லித் தாலி கட்டினான் முரளி

"இந்தச் சடங்குகளில் எனக்கு ரொம்ப நம்பிக்கை இல்லை...உங்க இஷ்டத்துக்காக அவசியமானதை மட்டும் செய்யலாம்" என்ற போது அப்பா எப்படித் தலையை ஆட்டி ஒப்புக் கொண்டார்?

முரளியின் வீடு, அந்தஸ்து, கல்யாணத்தை அவன் நடத்தின விதத்தைத் தர்மாவின் குடும்பத்தார் பார்த்து அசந்துதானே போனார்கள்.

கல்யாணத்துக்குச் சில நாட்கள் இருக்கையில், அவனை அடையாறு வீட்டுக்குக் கூட்டிக் கொண்டு போய் "இனி மேல் இது நீ இருக்கப் போற வீடு...உன் இஷ்டப்படி என்னென்ன மாறுதல்கள் பண்ணணுமோ...பண்ணு..." என்று தர்மாவிடம் சொன்னானே அதைக் கேட்டு எல்லோரும் எப்படி வியந்து போனார்கள்.

திருமணத் தேதிக்கு பதினைந்து நாட்கள் இருக்கும்.

தர்மாவை அழைத்துக் கொண்டு வெளியே போன முரளி அவனுக்குத்தேவை என்று அவன் நினைத்ததையெல்லாம் வாங்கி நிரப்பிவிட்டு, திரும்ப அவனை வீட்டில் இறக்கும் முன் "நீ தப்பா எடுத்துக்காதே தர்மா...இனி உன் குடும்பம் என் குடும்பமும் கூட....அதனாலே கல்யாணத்துக்காக அவர்களுக்குத் துணி எடுக்க நான் ஆசைப்படறேன்...எனக்காக நீயே போய் எடுத்துக் கொடுத்துடு... இதிலே கொஞ்சம் பணம் இருக்கு...ப்ளீஸ் தப்பா எடுத்துக்காதே ..." என்று சொல்லி ஒரு கவரைக் கொடுத்து விட்டுப் போனான்.

அவன் போனபிறகு அதைப் பார்த்தான் தர்மா. ஐயாயிரம் ரூபாய இருந்தது!

அப்பாவின் பொருளாதாரம் இந்த மூன்று வருஷங்களில் நன்றாய் பாதிக்கப்பட்டிருந்ததை தர்மா உணர்ந்திருந்தான்.

மங்களாவின் தந்தையும் திருவையாற்றிலிருந்து வந்ததும் ராமநாதன் தொடித்துப் போய்விட்டதையும், குடும்பம் ஏனோ தானோ என்று ஓடுவதையும் பற்றி அவனிடம் பேசியிருந்தார்.

தானே அவர்களுக்கு நல்ல தினுசில் ஏதாவது செய்ய வேண்டும் என்று ஆசைப்பட்டதைப் புரிந்து கொண்டு முரளி நடந்ததும் தர்மாவுக்கு மகிழ்ச்சி கரையில்லாமல் பெருகியது



அம்மா, பாப்பா, விசாலிக்கு, நல்ல பட்டுத் துணிகளும், அப்பா, சேதுவுக்கு தினுசு தினுசாய் டெரிலினும் எடுத்தான்.

"எதுக்கும்மா?" என்று மறுத்தபோது... "எனக்குத் தெரியாதுப்பா, உங்க மாப்பிள்ளை கொடுக்கச் சொன்னார்" என்றபோது அவன் முகத்தில் எத்தனை பெருமை!

கல்யாணம்தான் எப்படி நடந்தது? ஜமீன்தார் வீட்டு வைபவம் மாதிரி!

மாலையில் ஊர் பிரமுகர்கள் அனைவரும் திரண்டு வந்து விட்டாற்போல ஒரு கூட்டம்.

சென்னையின் முக்கிய பிரம்மச்சாரிகளுள் ஒருவனான முரளிக்கு கொக்கி போட்டுவிட்ட பெண் யார் என்று தர்மாவைப் பார்க்கப் பெண்களின் கூட்டம் மொய்த்தது.

இரண்டாம் நாள் புறப்பட்டுக் காஷ்மீருக்குப் போய் தேனிலவைக் கழித்துவிட்டு வந்தார்கள்.

தர்மா இந்திரலோகத்தையே எட்டிவிட்ட மிதப்பில் இருந்தாள்.

"தர்மா, டார்லிங்... ஹனி' என்று உருகினான் முரளி.

அவளைத் தலையில் வைத்துத்தான் கொண்டாடினான்.

இந்த மூன்று மாசத்தில் என்னென்ன அனுபவங்கள்!

தினம் ஒரு பார்ட்டி இருக்கும்.

எத்தனை பெண்கள் இருந்தாலும் தனியாய், தீப்பந்தமாய் ஜொலிப்பாள் தர்மா.

புத்திசாலித்தனத்துடன், சாமர்த்தியமாய் பழகும் மனைவியைப் பார்த்துப் பிரமிப்பான் முரளி.

"நீ அதிருஷ்டக்காரன்."

''யூ ஹால் எ வொண்டர்புல் வொயிஃப்'' என்று நண்பர்கள் பாராட்டும்போது 'இவள் என் உரிமை' என்பது போலத் தர்மாவை இடுப்பில் கையை தவழவிட்டு அணைத்து நிற்பான்.

தர்மாவைக் கடைக்கு அழைத்துப் போனான் அவள் போதும் போதும் என்கிற அளவுக்கு நகைகள், துணிமணிகளை வாங்குவான்.

'உன் உடம்புக்கு நீ விதவிதமாய் உடுத்தணும் தர்மா' என்று சொல்லி ஒருநாள் பாண்ட்—ஸ்' வாங்குவான்; மறுநாள் ஸ்கர்ட் வாங்குவான்; இன்னுமொரு நாள் மாக்ஸி ஆர்டர் செய்வான்.

பார்ட்டிகளில் நாலுபேர் புகழும்படி இருக்கவேண்டும் என்பதற்காக ஆங்கில நடனம் தெரியாத தர்மாவுக்கு, தேனிலவின் போது தானே நடனம் கற்றுக் கொடுத்தான்,

இவன் எது சொன்னாலும் அப்படியே கிரஹித்துக் கொள்ளும் தர்மாவின் திறன் கண்டுவியந்து போனான்.

'ஹேய்—டார்லிங், யூ ஆர் ரியலி கிரேட்' என்பான் அடிக்கடி.

ஊருக்குத் திரும்பி வந்ததும் பார்ட்டிகளில்பலவருடங்களாக நடனமாடிப் பழக்கம் இருப்பதைப் போல தர்மா ஆடும் நளினத்தைக் கண்டால் 'இவளுக்கு நான் தான் சொல்லித் கொடுத்தேனா?' என்ற சந்தேகம் முரளிக்கு எழும்!

''திருவையாறுக்கு ஒருதரம் நீங்க வரணும்'' என்று அப்பா கேட்டுக் கொண்டிருந்ததால் ஒரு சனி, ஞாயிறு போகலாம் என்றான் முரளி.

தர்மாவுக்கு அடி மனசில் பயம்,

தன் ஓட்டை வீட்டையும், கிராமாந்திரமான பழக்க, வழக்கங்களையும் பட்டிக்காட்டு சூழ்நிலையையும்பார்த்து



'நீ வளர்ந்தது இவ்வளவு மோசமாகவா?'' என்று கேட்டு விடுவானோ என்ற திகில்!

கல்யாணத்து கலாட்டாவில் சில நாட்கள் தன் குடும்பத்தோடு முரளி பழகி இருந்தாலும் இப்பேது அந்தச் சூழ்நிலையில் அவர்களைப் பார்த்தால் என்ன நினைப்பானோ என்ற உதறல்—

ஆனால் இலைகளை எல்லாம் மீறிக்கொண்டு ''நான் உயர்ந்திருக்கும் உயரத்தை அந்த ஊர் ஜனங்களுக்குக் காட்ட வேண்டும். 'ஓடிப்போன தர்மா'— என்று ஒரு நாள் பழித்திருப்பார்களே, அந்தத் தர்மா இன்று மஹாராணி போல வாழ்வதை அந்த நாட்டுப்புறம் உணர வேண்டும்'' என்ற வெறி கிளம்பியதால் கணவனுடன் காரில் கிளம்பிப் போனாள்.

''அது ரொம்ப சின்ன ஊர்... அசௌகரியமாக இருக்கும்... ப்ளீஸ் பொறுத்துக் கொள்ளுங்கள்...'' என்று திரும்பத் திரும்ப அவனிடம் சொல்லிக் கொண்டே போய்ச் சேர்ந்தாள்.

முன்கூட்டியே தகவல் போயிருந்ததால் இவர்களின் கார் தெருவில் நுழையும்போது பரபரப்பு.

தலையை நிமிர்த்தியவாறு இறங்கினாள் தர்மா.

''டிரைவர் சாமான்களை இறக்கு'' என்று சொல்லிவிட்டு உள்ளே போனாள்.

கூடை கூடையாய்ப் பழங்கள்.

விதவிதமாய் சாமான்கள் என்று குடும்பத்தாருக்காகத் தர்மா வாங்கி வந்திருந்த பொருட்களால் அவர்கள் வீட்டுத் தாழ்வாரம் நிறைந்து போனது.

தர்மாவா?

இது, நம்ப தர்மாவா?

ஏதோ சினிமா ஸ்டார் மாதிரி இல்லே?

இது அவ ஆத்துக்காரரா?

இவனும் சினிமா ஸ்டார் மாதிரி இருக்கானே...என்று பார்த்தவர்கள் கிசுகிசுத்தது தர்மா காதில் விழுந்தபோது அவள் பூரித்துப் போனாள்.

முரளி சாதாரணமாய் இருந்தான்... 'அசிங்கம்' என்று முகம் சுளிக்கவில்லை... 'இது என்ன வீடு.' என்று முணு முணுக்கவில்லை.

இதையெல்லாம் எதிர்பார்த்தாற்போல சகஜமாய் இருந்தான்.

ஆனால் தர்மா?

மூன்று வருஷ இடைவெளிக்குப் பிறகு தான் வாழ்ந்த வீட்டை மறுபடி பார்த்தபோது அவளுக்குத்தான் பிடிக்க வில்லை.

இந்த வீட்டில் எப்படி பதினெட்டு வருஷங்கள் வாழ்ந்தோம் என்று தனக்குத்தானே வியந்தாள்.

தன் அந்தஸ்தை ஊருக்குக் காட்டும் விதத்தில் முரளி யுடன் பஞ்ச நதீஸ்வரர் கோயில், தியாகையர் சமாதிப் படித்துறை என்று எல்லா இடங்களுக்கும் போய்வந்தாள்.

ஒருநாள் முழுசுகத் தங்கின பிறகு, மறுநாள் சென்னை குக் கிளம்பிவிட்டார்கள்.

''நீங்களெல்லாம் இனிமே அடிக்கடி அங்கே வாங் கோப்பா... சேது, விசாலியை லீவுக்கு அனுப்புங்கோ...'' என்று வாய் நிறைய அழைத்துவிட்டுப் புறப்பட்டபோது அவள் நெஞ்சு நிறைந்திருந்தது.

அவள் பயந்தபடி முரளி அவள் குடும்பத்தின் சாதாரண நிலையையோ, அவள் வளர்ந்த கிராமசூழ்நிலை



யையோ மட்டமாகப் பேசாதது மட்டுமல்ல... ''நீ எவ்வளவு புத்திசாலியாக இருந்தால் கிராமத்தில் வளர்ந்தும் கூட இத்தனை நாகரிகமாய், விஷயம் தெரிந்தவளாய் இருப்பாய்'' என்று ஆச்சரியப்பட்டு 'ஐ ஆம் ப்ரவுட் ஆஃப் யூ டார்லிங்' என்றும் சொன்னான்.

இப்படி ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ''நீ எத்தனை அழகு, நீ எத்தனை புத்திசாலி, நீ எவ்வளவு திறமையான வள்'' என்று மனப்பூர்வமாக முரளி கொடுக்கும் பாராட் டுக்கள் எல்லாம் தர்மாவினுள் ஆழமாய்ச் சென்று அங்கு சின்ன செடியாக இருந்த 'நான் நான்' என்ற அஹங் காரத்தை ஒரு பெரிய மரமாக வளர்க்க உதவிகிறது என் பதை கொஞ்சம்கூட அவள் புரிந்து கொள்ளவேயில்லை.

★

# 1974-1975

# 1

ஒரு வருஷ காலத்தில் யாராவது இப்படி மாற முடியுமா? என்று கேட்டால் தர்மாவைக் காட்டலாம்.

அவள் குணத்தில், உருவத்தில் எல்லாவற்றிலும் ரொம்ப மாறிப் போயிருந்தாள்.

கொஞ்சநாளாக அவளைப் பார்க்காதவர்களுக்கு 'இது தர்மா தான்' என்று சொன்னால்தான் புரியுமளவுக்கு மாற்றங்கள்.

முரளியிடம் பணம் இருக்கிறது என்பது தர்மாவுக்குத் தெரிந்ததுதான்.

ஆனாலும் இப்படியா? மூட்டை மூட்டையாய்?

பணம், அதன் அருமை, முரளி காட்டும் அன்பு எல்லாமாகச் சேர்ந்து, தர்மாவை எங்கோகொண்டுபோய் விட்டன.

காலையில் எட்டு மணிக்கு கணவன், மனைவி எழுந்திருப்பார்கள்.

இன்டர்காமில் சொன்னால் மாடிக்கு காப்பி வரும்.

அங்கேயே குளித்து, பேப்பர் படித்துவிட்டு இருவருமாய் காலைச் சிற்றுண்டிக்குக் கீழே வருவார்கள்,

ராமையன்-சமையற்காரன்-எல்லாம் டேபிளில் தயார் செய்து வைத்திருப்பான்.

முரளி ஆபீசுக்குக் கிளம்பினதும் இவளும் ஒரு காரை எடுத்துக்கொண்டு புறப்படுவாள்.

கடை, ப்யூடி பார்லர், கிளப் என்று எங்காவது போவாள்.

வாரம் இரண்டு முறை தலையைச் சிங்காரிக்க, முகத்தை சீர் செய்ய ப்யூடி பார்லர் போவாள்.

நாற்காலியில் தர்மா அமர்ந்திருக்க ஒரு சைனாக்காரப் பெண்மணி புருவத்தை வெட்டுவாள். முகத்தில் க்ரீமை தடவுவாள், அலம்புவாள்...திரும்பத் தடவுவாள்...இப்படி ஏதோ செய்துவிட்டு நிலா போன்ற முகத்தை இன்னும் 'பளிச்' சென்று ஆக்கி விடுவாள்.

இது இல்லை என்றால் 'ஸானா' வுக்குப் போவாள் தர்மா. கொதிக்கிற நீராவிகள் சூழ்ந்த அறையில் பத்து நிமிஷங்கள் துண்டை உடுத்திக்கொண்டு அமர்ந்து விட்டு, வெளியே வந்து 'சில்' லென்ற தண்ணீரில் குளிப்பாள். சருமம் பொலிவுடன் இருக்க, உடல் தடிக்காது இருக்க இது ஒரு அழகுப் பயிற்சியாம்.

இரண்டும் இல்லையென்றால் க்ளப்புக்குப் போய் ஊரின் பெரிய மனிதர்களின் மனைவிகளோடு 'கார்ட்' ரூமில் உட்கார்ந்து ஐநூறு, ஆயிரம் என்று பந்தயம் கட்டிச் சீட்டு ஆடிவிட்டு வருவாள்.

மதிய உணவுக்கு முரளி வீட்டுக்கு வந்தால் இவளும் வருவாள். இல்லையென்றால் க்ளப்பிலோ அல்லது சிநேகிதியின் வீட்டிலோ எதையாவது உண்டுவிட்டுப் பிற்பகல் வீட்டுக்கு வருவாள்,

ஒரு மணி நேரம் 'ப்யூட்டி ஸ்லீப்'.

எழுந்து குளித்து தயாராகி ஒரு புஸ்தகத்தை கையில் எடுத்து வைத்துக்கொண்டு உட்கார்ந்தால், முரளி வரும் வரையில் சரியாக இருக்கும்.

மாலை ஏழு மணிக்கு இருவரும் மறுபடி வெளியே கிளம்பி விடுவார்கள்.



அனேகமாய் நித்தமும் ஒரு பார்ட்டி இருக்கும். இல்லாவிட்டாலும் எங்காவது சினிமாவாவது போய் விட்டு பதினொன்று, பன்னிரண்டு என்று வீட்டுக்குத் திரும்பி வந்து தூங்கினால் எழுந்திருப்பது காலை எட்டுதான்.

ஒரு சமயம் குழந்தைகளோடு லீவுக்கு வந்திருந்த ராஜத்துக்கு, இந்த ராக்கூத்து ரொம்பப் பிடிக்காமல் இருக்கவே, மகளிடம் கேட்கவே செய்தாள்.

''அது என்ன ஒரு நாளைப்போல சாயரட்சை வெளியே போனா ராத்திரி நடு ஜாமத்துக்கு வரேளே! அப்படி எங்கேதான் போவேள்? தினம் வீட்டை விட்டுட்டு போறதுன்னா அலுப்பாயில்லை?''

நகங்களுக்குச் சாயம் தீட்டிக் கொண்டிருந்த தர்மா தலையை நிமிர்த்தாமலேயே சிரித்தாள்.

''எங்களுக்கு அலுக்கலையேம்மா'' என்றாள்.

காரத்தாலே எட்டு மணிக்கு எழுந்துக்கறயே. தர்மா... இது நன்னாயிருக்கா?''

''விடியக்கார்த்தாலே எழுந்து என்ன பண்ணச் சொல்றேம்மா?''

''ஒரு பொம்மனாட்டிக்கு எத்தனையோ வேலை இருக்கும்...இது என்ன கேள்வி தர்மா?''

''இங்கே நான் பண்ணறதுக்காக எந்த வேலை காத்துண்டிருக்கும்மா? ம்? எல்லாத்துக்கும் ஆததுக்கு ஆள் இருக்கா...முரளிக்கு சாயங்காலம் வெளியே போறதுன்னா ரொம்ப பிடிக்கும்மா...ஏன்? எனக்குக்கூட வெளியே போகலைனா போர் அடிக்கும்...''

''அவா ஆம்பிளை அப்படித்தான் இருப்பா...நாம்பதான் எடுத்துச் சொல்லணும்...தினம் ராக் கண் முழிச்சா உடம்புக்கு என்ன ஆகும்? நீ வெள்ளிக்கிழமை எண்ணை தேய்ச்சுக்கிறதில்லை... இதெல்லாம் என்ன தர்மா...எனக்கொண்ணும் பிடிக்கலை போ...''

இது நாழிகை அம்மாவுக்குப் பணிந்து பதில்சொல்லிக் கொண்டிருந்த தர்மாவுக்கு இப்போது கோபம் எழுந்தது.

''நீ வாழ்ந்த திணுசு வேற...நாங்க வாழறது வேற... உனக்குப் புரியாது. அதனால விடு...'' என்று பேசிவிட்டு எழுந்து போனாள்.

பார்த்துக்கொண்டேயிருந்த ராஜத்துக்கு எரிச்சல் வந்தது. என்ன பெண் இவள்? என்னமோ பணத்திலேயே பிறந்து, பணத்துலேயே வளர்ந்த மாதிரி என்ன பேச்சு பேசுகிறாள்? ஒரு துரும்பை எடுத்துப் போடக்கூட உடம்பு வணங்கமாட்டேன் என்கிறது...எதற்கெடுத்தாலும் மணி அடித்து ஆளைக் கூப்பிடுகிறாள்...சாயங்காலம் வெளியிலே போகவில்லை என்றால் 'போர்' அடிக்குமாமே! பெற்று, வளர்த்த தாயிடமே தன் பணத் திமிரைக் காட்டுகிறாளே!

ஊரிலிருந்து வந்த நாளாய் தர்மா தம்பி, தங்கையிடம் கூட தன் அந்தஸ்தைக் காட்ட முனைவதும், பணிவாய், அடக்கமாய் கணவனிடம் நடந்து கொள்ளாததும் ராஜத்துக்கு வருத்தத்தை தந்தது.

சின்ன வயது முதற்கொண்டே நாகரிக மோகமும், தான் என்கிற அகந்தையும், பிறரை மதிக்காத சுபாவமும் கொண்டவள் தர்மா என்பதை நன்றாய் உணர்ந்திருந்த ராஜத்துக்கு, 'அற்பனுக்கு பவிஷு வந்தால் அர்த்த ராத்திரியில் குடை பிடிப்பான்' என்பது போல, தர்மா கண்மூடித்தனமாய் நடந்து கொள்ளுவதாகவே தோன்றியது.

புருஷனுக்கு வேணுங்கறதைக்கூட கவனிக்காமல் என்ன வெளியில் சுத்தல் வேண்டியிருக்கு?

வாய்க்கு வாய் முரளி முரளின்னு மாப்பிள்ளையை என்னத்துக்காக இப்படி இவள் அதிகாரம் பண்ணணும்?

பொண்ணாப் பிறந்தவளுக்கு இன்னும் கொஞ்சம் அடக்கம், பொறுமை வேண்டாமோ? என்றெல்லாம்



ராஜத்துக்கு தோன்றினாலும் அந்த நாளிலேயே சொன்னதைக் கேட்காத பெண்; இன்று பணம் வேறு சேர்ந்திருக்கு...நாம் சொன்னால் கேக்கப் போகிறாளா என்ன என்ற பயத்தில் தர்மாவிடத்தில் அதிகம் பேச்சு வைத்துக் கொள்ளவில்லை.

வர வர தர்மாவுக்குப் பொறுமை குறைந்துகொண்டு வந்தது என்பது உண்மையே.

இன்டர்காமில் சொல்லி ஐந்தாவது நிமிஷம் காபி மாடிக்கு வரவில்லையென்றால், ராமையனிடம் 'ஏஃலேட்?' என்று கத்துவாள்.

அவள் என் என்பதற்கு முன்னால் ஆட்கள் எதிரே யாக நிற்க வேண்டும்.

இல்லாவிட்டால் அன்று முரளியிடம் அந்த வேலைக் காரனைப் பற்றி புகார் செய்து விடுவாள்.

நின்றால் ஒரு ஆள், உட்கார்ந்தால் ஒரு ஆள் என்று இருந்ததால் இடுப்பை வளைத்துக் காரியம் செய்ய தர்மாவுக்கு அவசியம் நேர்ந்ததில்லை; விருப்பமும் இல்லை.

'நான் வேலை செய்யப்பிறந்தவளில்லை...பத்து ஆட்களை வேலைக்கு வைத்துக்கொண்டு சம்பளம் கொடுக்கும் அந்தஸ்து எனக்கு இருக்கிறது' என்ற மமதை நன்றாக வேர்விட்டு விட்டதால், சொகுசுடன் இருக்க தர்மா கற்றுக் கொண்டாள்.

இதையும் தவிர, முரளிக்கு இரவு நேரங்களில் மனைவியின் தேவை கட்டாயமாக வேண்டியிருந்ததும் தர்மாவின் குணத்தை வெகுவாக மாற்ற உதவியது.

பகல் நேரங்களில் எதற்காவது சின்ன வாக்கு வாதங்கள் எழுந்தால்கூட மாலை போய் இரவு வருவதற்குள் 'ஸாரி தர்மா' என்று அவளிடம் குழந்தைவிடுவான் முரளி

அவனுடைய இந்த பலவீனம், தர்மாவின் மிகப்பெரிய பலமாக அதிக நாள் தேவைப்படவில்லை.

முரளியிடமிருந்து அந்த கவனத்தைப் பெற்று, பழகி விட்ட தர்மாவுக்கு அவன் அப்படியொரு தனி கவனத்தை என்றாவது செலுத்த மறந்தால் அதுவே குற்றமாயிற்று.

ஒருநாள் கம்பெனியின் பார்ட்டி ஒன்றுக்குச் சென்றிருந்தார்கள். ஏகப்பட்ட விருந்தினர்கள்.

பம்பாயிலிருந்தும் சில முக்கியஸ்தர்கள் வந்திருந்தார்கள்.

எல்லோருக்கும் பிடித்தமானவன் முரளி ஆதலால் ஓரிடத்தில் நிற்காமல் அவன் கூட்டத்தில் ஊடுருவிக் கொண்டிருந்தான்.

தர்மாவைச் சுற்றியும் நண்பர்கள் கூட்டம்.

கையில் ஆரஞ்சு ஜூஸை வைத்துக் கொண்டு யாரோ சொன்ன எதற்கோ சிரித்த தர்மா 'ஸ்வீட்டி' என்று முரளி அழைப்பது கேட்டுத் திரும்பினாள்.

முரளியுடன் பம்பாய் மாடல் மோனிகா நின்றிருந்தாள்.

''மோனிஷ், திஸ் ஈஸ் தர்மா... தர்மா திஸ் ஈஸ் மோனிகா...'' என்று அறிமுகப்படுத்தினான் முரளி.

''வாவ்! யூ ஹாவ் பிக்ட் அன் ஏஞ்சல் முல்லூ...', என்று கண்களைச் சிமிட்டி குழைந்தாள் மோனிகா.

தேவதை மாதிரி இருப்பதாக பாராட்டிச் சொன்னது தர்மாவிற்கு சந்தோஷம் தரவில்லை.

முரளியின் கைகளுக்குள் உரிமையுடன் கையை விட்டுக் கொண்டு முல்லூ...என்ன...முல்லூ...?

முதன் முதலில் முரளியை கடை வாசலில் மோனிகாவுடன் பார்த்தது தர்மாவுக்கு நினைவுக்கு வந்தது.

அந்த மோனிகாவைவிட தான் சிறந்தவள் என்று நிரூபிக்க வேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டு அன்றைய விருந்தில் தர்மா நடந்து கொண்டாலும்...



அவனுடைய கோபத்தைத் அதிகமாக்குவதுபோல ஒரு சம்பவம் நிகழ்ந்தது.

தர்மாவின் ஆரஞ்சு ஜூஸ் தீர்ந்து விட்டது; அதே நேரத்தில் மோனிகாவின் கையிலிருந்த ஜின்னும் காலி.

ஏனோ தர்மாவின் க்ளாஸை கவனிக்காத முரளி, மோனிகாவின் டம்ளர் காலியாக இருப்பதைப் பார்த்து விட்டு 'ஐ வில் கெட் ஸம் மோர் ட்ரிங்க்' என்று எழுந்து போனான்.

தர்மாவுக்கு கோபமான கோபம்.

வீட்டுக்கு வரும்போது முகத்தை எட்டடிக்கு தூக்கி வைத்துக் கொண்டிருந்தாள்.

முரளி தொட வந்தான்; ஒதுங்கினாள்.

முத்தம் கொடுக்க வந்தால் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

''வாட் ஹாப்பெண்ட் டார்லிங்?'' என்று முரளி தவித்தான்.

இவள் வாயைத் திறக்க வேண்டுமே — ம்ஹூம் இல்லை...

ராத்திரி முரளி பல முறை கெஞ்சின பிறகு விஷயம் வெளியில் வந்தது. ''என்னை விட உங்களுக்கு அந்த மோனிகாதான் உசத்தி...என் ஜூஸ் தீர்ந்து போயிடுத்து; அதைக் கவனிக்கவில்லை. அவளது காலியானதும் எழுந்து ஓடறேள்...அவளை எதுக்காக நீங்க 'மோனி'னு கூப்பிடணும்? மோனிகானு சொல்லவேண்டியது தானே?... வொய் ஷூட் ஷீ கால் யூ முல்லூ?...யூ ஆர் முரளி டு ஹர்...' என்று பொரிந்து தள்ளினாள்.

''ஸாரி வெரி, வெரி ஸாரி'' என்றான் முரளி.

இனிமேல் கண்டிப்பா எந்தப் பெண்ணையும் செல்லப் பெயரில் அழைப்பதில்லை என்று அவன் வாக்குறுதி கொடுத்த பிறகே அன்று சமாதானமானாள் தர்மா.

இது சின்ன விஷயம்தான்.

ஆனாலும் அவளை நினைத்து உரலை இடிக்கும் கதையாய் முன்பு மோனிகாவுடன் பழகினதற்கு இன்று பழி தீர்த்துக் கொள்கிறாற் போலத்தான் தர்மா நடந்து கொண்டாள்.

'பூ! இவ்வளவுதானா?' என்று முரளியும் ஊதித் தள்ளாமல் ''ஸாரி—உன்னைக் கவனிக்காமல் இருந்தது தப்புதான்...என்னை மன்னித்துவிடு...'' என்று கனிந்து போறானே அதை என்னவென்று சொல்ல?

இந்த மாதிரி சின்ன சின்ன விஷயங்களிலெல்லாம் கூட விட்டுக் கொடுக்காமல் தர்மா இருந்ததால் ஒரு வருஷ காலத்திற்குள் 'ஹென் பெக்ட்' ஹஸ்பெண்ட் என்ற பெயர் முரளிக்கு வரவே செய்தது.

ஆபீசிலிருந்து வருகிறேன் என்று சொன்ன நேரத்திற்கு முரளி வராவிட்டால் கோபம்—அழைத்துப் போகிறேன் என்று சொன்ன இடத்திற்கு அழைத்துப் போகாவிட்டால் மூஞ்சியைத் தூக்கல்; இப்படி முரளி தன் மேல் கொண்டிருந்த அன்பை அளவுக்கதிகமாகவே சோதித்தாள் தர்மா.

எப்படியோ இருந்த தர்மா எந்த விதத்திலோ மாறிப் போனது யாருக்கு நன்றாகப் புரிந்ததோ இல்லையோ மங்களாவுக்குப் புரிந்தது.

முன் போல என்றால் 'என்ன தர்மா இது?' என்று அதட்டி விடலாம்.

ஆனால் இன்று அந்த ஸ்வாதீனத்தை மங்களாவால் தர்மாவிடம் எடுத்துக் கொள்ள இயலவில்லை.

தர்மா மனசில் நல்லவள் தான், மங்களாவிடம் ஆழமான அன்பு கொண்டவள்—ஆனாலும்-இப்போதெல்லாம் 'அகங்காரம்' என்ற காளான் தர்மாவின் மனசில் வெகுவாகப் பரவிக் கிடந்ததால் மங்களாவால் முன்போல அவளிடம் வெளிப்படையாக இருக்க முடிவதில்லை.

இந்த சமயத்தில் மங்களாவுக்குத் திருமணம் நிச்சயம் ஆயிற்று.



அவள் தந்தையின் நண்பர் பிள்ளை, பம்பாயில் வேலை.

பெரியவர்கள் நிச்சயித்த கல்யாணம்—

மங்களாவிடம் தனியாய் இருந்த போது தர்மாகூட கேலி செய்தாள். ''ஞாபகம் இருக்கா மங்களா? முன்னே ஒரு தடவை 'காதலிச்சுக் கல்யாணம் பண்ணிடா நன்னா இருக்கும்னு' நீ சொன்னே — நம்மாத்தில் அதெல்லாம் நடக்குமான்னு நான் கேட்டேன்! இன்னிக்கு எனக்கு லவ் மேரேஜ்; உனக்கு அரேன்ஜ்ட் மேரேஜ் — வேடிக்கை இல்லை?''

மங்களாவின் திருமணம் முடிந்த மறுநாள் பிரமாதமான விருந்தொன்று ஏற்பாடு செய்ய, தர்மா ஆசைப்பட்டாள். ஆனால் அதுமுடியாதபடி டெல்லியில் முரளிக்கு ஒரு மீட்டிங் வந்துவிட்டது.

''மங்களாவிற்கு நாம்ப இந்த விருந்தைக் கொடுத்தே ஆகணும்'' என்று பிடிவாதம் பிடித்தாள் தர்மா.

''ரொம்ப முக்கியமான மீட்டிங்' என்று முரளி எவ்வளவு எடுத்துச் சொல்லியும் தர்மா அசைந்து கொடுக்கவில்லை.

''ஐ டோண்ட் கேர்... நீங்க இந்த விருந்துக்கு இருந்துதான் ஆகணும்'' என்று சொல்லிவிட்டாள்.

தர்மாவின் விருப்பம் வென்றது.

ஆனால் முதன் முறையாக 'தர்மாவுக்கு ரொம்பத்தான் இடம் கொடுத்துவிட்டேன்' என்ற எண்ணம் முரளியினுள் எழுந்தது அப்போதுதான்—

# 2

உருண்டு போய் முரளியின் மார்பில் தலையை வைத்து படுத்தாள் தர்மா.

''ஹௌ டிட் திஸ் ஹாப்பன் தர்மா?''... என்றான் மறுபடியும் முரளி.

தான் கர்ப்பமாகியிருப்பதை முரளியிடம் தர்மா தெரிவித்ததிலிருந்து பத்தாவது தடவையாக அவன் இந்தக் கேள்வியைக் கேட்டுவிட்டான்.

தர்மா நிச்சயமாக கர்ப்பம்தான் என்பதை டாக்டர் பிற்பகலில் சொன்னவுடனேயே முரளிக்கு போன் மூலம் விஷயத்தைச் சொல்லிவிட்டாள் தர்மா.

முரளிக்கு அதிர்ச்சி!

எப்படி?

மூன்று வருஷ காலங்களுக்குப் பிள்ளை வேண்டாம் என்று அவர்கள் தீர்மானித்திருந்தபடி தர்மா நித்தமும் மாத்திரைகள் சாப்பிட்டு வந்தாளே!

பின் இது எப்படி நடந்தது?

சுதந்திரப் பறவைகளாக சில வருஷங்கள் இருந்து விட்டு; பிற்பாடு குடும்பத்தை விஸ்தரிக்க முரளி திட்டமிட்டிருந்தான்; தர்மா இதற்கு உடன்பட்டாள்.

எவ்வளவோ ஜாக்கிரதையாக இருக்கும்போது, திடீ வென்று 'கர்ப்பம்' நிச்சயம் என்றால் எப்படி?

கணவனின் மார்பில் முகவாயை ஊன்றி கொண்டாள் தர்மா.

மாலையில் அவன் கேட்டபோதெல்லாம் 'ஐ டோண்ட் நோ' என்று தோள்களைக் குலுக்கியவளுக்கு இப்போது



மட்டும் ஒரு உண்மையை ஒப்புக் கொள்ள வேண்டும் என்று தோன்றியதால் மெல்லப் பேசினாள்.

''மங்களா கல்யாணத்துக்காக நான் மும்முரமா அலைஞ்சுண்டு இருந்தேனா... அப்போ ஒருநாள் கடைக்கு போயிட்டு ரொம்ப நேரம் கழிச்சு வீட்டுக்கு வந்தேன். களைப்பா இருந்ததால் அன்னிக்கு மட்டும் மாத்திரை போட்டுக்க மறந்துட்டேன்... ஒரு வேளை அதனால் இருக்குமோ?

''என்ன? ஒருநாள் மாத்திரை சாப்பிட மறந்து போனாயா? வொய் டிண்ட் யூ டெல் மீ தென்?''... முரளிக்குப் ரொம்பக் கோபம்......

'ஐ ஜஸ்ட் பர்காட் டார்லிங்... கல்யாண கலாட்டாவிலே மறந்து போச்சு... ப்ளீஸ்... ஹனி... டோண்ட் பி ஸோ அப்ஸெட்...''

அவன் முகத்தில் தன் முகத்தை பதித்துக் கெஞ்சினாள் தர்மா.

''நாம் வேண்டாம்னுதான் இருந்தோம்... ஆக்ஸிடெண்டோ என்னமோ... இப்ப வந்தாயிற்று... இனிமே கோபப்பட்டு என்ன பிரயோஜனம் முரளி? டார்லிங் லுக் ஹியர்...''

படுத்துக் கொண்டிருந்த முரளி சட்டென்று எழுந்து உட்கார்ந்தான்.

''தர்மா...''

''ம்...?''

''இப்போ எத்தனை நாள்?''

''நாற்பத்தஞ்சு'.

''நான் ஒண்ணு சொல்கிறேன்... வில் யூ லிஸன்?''

''ம்...''

"யு அபார்ட் திஸ்..."

"என்ன?" கத்திவிட்டாள் தர்மா.

"என்ன தப்பு தர்மா?... இப்போ நாம்ப தயாரா இல்லை... பிறகு வராமலா போயிடும்?"

தர்மா இணங்கவில்லை.

மாட்டேன் என்பது போலத் தலையை ஆட்டினாள்,

"இது தப்பு முரளி... முதல் முதல்ல பிரக்னென்ட் ஆகியிருக்கேன்... இதைப் போய் அபார்ஷன் பண்ணச் சொல்றேளே! திஸ் ஈஸ ரியலி ராங்... நானும் குழந்தை வேண்டாம்னுதான் இருந்தேன்... நிஜம்மா... ஆனா என்னையும் மீறி இது உண்டானது தெரிஞ்சப்புறம் எனக்கு ஏனோ ரொம்ப சந்தோஷமா இருக்கு... நம்ம குழந்தை முரளி... ஜஸ்ட் திங்க... உங்க குழந்தை என் வயிற்றில்... ஓ! திஸ் ஈஸ் கிரேட் ஈவன டு திங்க்... இன்னொரு தடவை 'அபார்ஷன்' அது, இதுனு பேசாதிங்கோ முரளி... ஐ வோண்ட் லைக் இட்"

முரளியைச் சமாதானப்படுத்தும் வகையில் அவன் முடியில் விரல்களை விட்டுக் கோதினாள்.

கண்களில் முத்தமிட்டாள்.

காதுகளை மெல்லக் கடித்தாள்.

'ஐ லவ் யூ டார்லிங்' என்று முனகினாள்.

'நான் என்னென்னமோ ப்ளான்ஸ் வைச்சிருந்தேன் தர்மா... இந்த ஸம்மரில் எனக்கு ஸ்டேட்ஸ் போக சந்தர்ப்பம் இருக்கு... ஐ வாண்டட் டு டேக் யூ...கோ ரவுண்ட் த வோர்ல்டு...ம்... எல்லாம் அவுட்..." அவன் வருத்தம் தர்மாவுக்குப் புரிந்தது.

"யூ இவ்வளவுதானே? இப்போ என்ன மார்ச், ஜூன் ஜூலையில் எனக்கு ஆறு, ஏழு மாசம்தான் ஆகியிருக்கும்



தாராளமாய் நாம்ப ஸ்டேட்ஸுக்குப் போகலாம் முரளி... இதுக்காகவா இத்தனை டிஸப்பாயின்ட்மெண்ட்? சியர் அப்..." தர்மா சிரித்து, கொஞ்சி அவனைத் தேற்றினாள்.

அரை மனசுடன் முரளி சமாதானமுற்றான்.

முதல் மூன்று மாசங்கள் வரை தர்மா சாதாரணமாகவே இருந்தாள்

வழக்கம் போல பார்ட்டிகளுக்குப் போய்க்கொண்டு, முரளியுடன் சுற்றிக்கொண்டு, உருவ அமைப்பிலும் மாறுதல் இல்லாமல் சாதாரணமாகவே இருந்தாள்!

நான்காம் மாசம் பிறந்தது. தொல்லைகள் தொடங்கின.

காலையில் எழுந்த தர்மாவுக்கு நிற்க முடியாமல் கிறுகிறுப்பு...காபி குடித்ததும் வயிற்றைச் சுண்டிக்கொண்டு குமட்டலில் ஆரம்பித்தது. கொஞ்சம் கொஞ்சமாய் அதிகமாய்ப் போய் நாள் முழுவதும் தலைசுற்றல், வாந்தி என்று ஆனதும் டாக்டர் வந்து பார்த்தார்.

"நத்திங் டு ஓர்ரி...மார்னிங் ஸிக்னெஸ்" என்றுசொல்லி விட்டு மருந்து, டானிக் கொடுத்துவிட்டுப் போனார்.

தர்மாவுக்கு மசக்கை ஆரம்பித்தது.

மசக்கை என்றால் இப்படி ஒரு பிசாசுத்தன்மையா?

ஒருதரம், இரண்டு தரம் வாந்தி எடுத்தால் பரவாயில்லையே.

ஒரு வாய் ஜலம் குடித்தால் குடமாய் வெளியே வந்தது.

காலையில் எழுந்திருக்கையிலேயே துவண்டுபோனாள் தர்மா.

காபியை அருகில் வைத்துக்கொண்டு முரளி குடித்தால் கூட இவளுக்குக் குமட்டும்.

21003

''இங்கே குடிக்காதிங்கோ'' என்று அவனிடம் கத்துவான்.

டிபன் இல்லை, உணவு இல்லை, ஒன்றும் இல்லை.

கொஞ்சம் ஆரஞ்சு ஜூஸ், லைம் ஜூஸ் என்று மெள்ள மெள்ளக் குடிப்பாள் அவ்வளவு தான்

காரில் போனால் குமட்டல்.

லிப்டில் ஏறினால் தலை சுற்றல்.

யாராவது சிகரெட் பிடித்து விட்டு, இவள் முகத்துக்கு எதிரில் பேசினால் வம்பு.

மாசம் ஆறு ஆவதற்குள் தானும் படாத பாடுபட்டு முரளியையும் பம்பரமாய் ஆட்டி வைத்துவிட்டாள் தர்மா

'மாலையில் முக்கியமான விருந்து. ரெடியா, இரு' என்று முரளி சொல்லியிருப்பான்.

வந்து பார்த்தால் இவள் சோர்ந்து படுத்திருப்பாள்.

'வாட் கேன் ஐ டு ஹனி' என்பான் ஆயாசத்தோடு.

நடு ராத்திரியில் முரளியை எழுப்பி 'எனக்குப் பசிக்கிறது' என்பாள் தர்மா.

கீழே போய் ஐஸ் பெட்டியிலிருந்து பழங்களும், பாலும் கொண்டு வருவான் அவன்.

உண்டு விட்டு சமர்த்தாய் படுத்தாலும் படுப்பாள். இல்லையென்றால், 'கொட கொட' என்று வாந்தி எடுத்து ஊட்டி அடிப்பதும் உண்டு.

அவன் தான் என்ன பண்ணுவான்?

அவள் மசக்கையின் தீவிரம் அப்படி.

இது மட்டுமல்லாமல் இன்னொரு விநோதமும் சேர்ந்து கொண்டது.



கர்ப்பிணிகளுக்குப் பொதுவாக உண்டாகும் அர்த்தமற்ற பயங்களுக்கும் ஆளாக ஆரம்பித்தாள் தர்மா.

நடுத்தூக்கத்தில் கண்விழித்தால், திருடன் அறைக்குள் நடமாடுவது போலத் தோன்றும்.

''திருடன் வந்திருக்கான்...நம்ப கட்டிலடியில் இருக்கிறானா, பாருங்கள்'' என்பாள் முரளியிடம்.

''திருடனுமில்லைஒருத்தனுமில்லை...தூங்கு தர்மா...'' என்று அவன் புரண்டு படுத்தால், ''எனக்குப் பயமாக இருக்கு'' என்று அழ ஆரம்பித்து விடுவாள் தர்மா.

டாக்டரிடம் கூட இதைப்பற்றிக் கேட்டான் முரளி.

''கர்ப்பமுற்று இருக்கும்போது சுரக்கும் சில ஹார்மோன்களால் சில பெண்களுக்கு இப்படியெல்லாம் பயங்கர கற்பனை தோன்றும். பிள்ளை பெற்றுவிட்டால் எல்லாம் சரியாகி விடும்'' என்றார் அவர்.

முரளிக்குப் பிள்ளை உண்டானதிலேயே கோபம்

இப்போது அவனையும் அறியாமல் தர்மா இப்படி ஆட்டி படைத்ததால் அவனுக்கு எரிச்சல்தான் எழுந்தது.

தர்மாவுக்காக முரளியும், பார்ட்டிக்கும், வெளியிடங்களுக்கும் போகாமல் தங்கிவிடுவான். ஆனால் சில சமயங்கள் முக்கியமானதாக இருந்தால் போயாக வேண்டிய நிர்ப்பந்தம்; போவான்.

''பத்து மணிக்கு வந்துடறேன் தர்மா''என்றுசொல்லி விட்டு விருந்து மும்முரத்தில் மணியை கோட்டைவிட்டுக் வீட்டுக்கு வந்தால் ஒன்று தர்மா வெங்கலப்பானை மாதிரி முகத்தை வைத்துக்கொண்டு பேசமாட்டாள்; இல்லையென்றால் ''என்னை விட்டுட்டு போறதிலே உங்களுக்கு சந்தோஷம் தானே!'' என்று சீறுவாள். ''ஏன் நீயும வாயேன்...யார் வேண்டாம்னா?'' என்று ஒரு நாள் முரளி

பதிலுக்குக் கேட்டு விட்டு ''யார் கேட்டா இந்தப் பிள்ளையை? ஆல் பிகாஸ் ஆஃப் யூ'' என்று அவன் கத்த...

''என் உங்க பிள்ளை மட்டும் இல்லையோ...நீங்களும் தான் காரணம்...'' என்று இவள் கத்த, அன்றைக்குச் சண்டையே மூண்டுவிட்டது.

சரியானபடி சாப்பாடே உள்ளே போகாததால் தர்மா பாதி உடம்பாகி விட்டாள்.

சமையற்காரன் பண்ணும் சமையல் இவளுக்குக் கரித்தது. உடம்பும் முடியவில்லை; வயிறும் பசித்தது. அவன்தான் என்ன பண்ணுவான்? எல்லாம் சேர்ந்து கொண்டு முரளி மேல் தான் விழுந்தன.

அன்று தர்மாவின் தந்தையிடமிருந்து கடிதம் வந்திருந்தது.

''ஏழாம் மாசம் வளை அடுக்கணும்...தர்மாவை ரெண்டு நாள் இங்கே அனுப்பினா சாஸ்திரத்துக்காவது இதைச் செய்யலாம்'' என்று ராமநாதன் எழுதியிருந்தார். 'நீ மட்டும் போய் விட்டுவா தர்மா...என்னாலே இப்போ அசைய முடியாது. எக்ஸ்போர்ட் விஷயமா போர்டு மீட்டிங் நடக்கிறது'' என்றான் முரளி.

''ஏன் நீங்க வந்தா என்ன?'' என்று குறுக்குக் கேள்வி போட்டாள் தர்மா

''எனக்கு வேலை இருக்கு...நீ போகணும் என்றால் போ...இல்லையென்றால் உன் இஷ்டம்'' என்று சொல்லி விட்டு முரளி அலுவலகத்துக்குப் போய் விட்டான்.

யோசித்தாள் தர்மா...சரி ஒரு இரண்டு நாட்கள் போய்விட்டு வருவோம்...என்றே தீர்மானித்துக் கிளம்பினாள்.

ராமநாதன் பெண்ணை அழைக்க வந்தார்.



முதல் நாளே காரில் ஆயாவை அனுப்பிவிட்டு, மறு நாள் ரயிலில் மனைவியையும், மாமனாரையும் சௌகரியத்துடன் அனுப்பி வைத்தான் முரளி

இரண்டு நாட்கள் நான்கு நாட்களாயின.

திருவையாறில் இருந்த நாலு நாட்களும் எதிர் பார்க்காத சந்தோஷத்துடன் இருந்தாள் தர்மா.

அம்மா மடியில் தலை வைத்துப் படுத்துக் கொள்ளுவதும், அவள் கையில் பிசைந்து போடும் வத்தல் குழம்புச் சாதத்தை சாப்பிடுவதும், எதிர்த்து வாதாட ஒருவர் இல்லாமல் இருந்ததும் அவளுக்கு நிம்மதியைத் தந்தன.

திருவையாறு மாறவேயில்லை. அப்படியேதான் இருந்தது.

தியாகையர் சமாதி, படித்துறை, குங்கிலியக் கிணறு, ஒத்தைத்தெரு எல்லாம் அப்படியே இருந்தாலும் பக்கத்து வீட்டுச் சாம்பு மாமா, ருக்கு மாமியிடம் தெரிந்த மாறுதலை பார்த்தபோது தர்மா பிரமித்துப் போனாள்.

''சனியனே இங்கே வந்து தொலை...நாயே...பேயே...ஏய்...மூதேவி'' என்று ஆடுமாட்டை விரட்டுகிறாப்போல சதா சர்வகாலமும் ருக்குமாமியைப் படுத்தி எடுத்த மாமா இப்போது ''ருக்குமணி சித்தே வரயாம்மா?'' என்று இதமாகக் கூப்பிட்டதைப் பார்க்க நம்ப முடியாமல் இருந்தது.

விறகாலும், செருப்பாலும் மாமியை விளாசி எறிந்தவர்; அவள் ஏழ்மையை சதா சுட்டிக்காட்டின மாமா எப்படி இப்படி சாதுவாய், மனுஷராய், முக்கியமாய் நல்ல கணவனாய் மாறினார்.

மனசு பொறுக்காமல் அம்மாவிடம் கேட்டுவிட்டாள் தர்மா.

''எப்படிம்மா இந்த மாமா இப்படி மாறினார்?''

அம்மா சிரித்தாள்.

''சொல்லும்மா...தாயே... பேயேன்னு வைஞ்சுண்டே இருந்தார். இப்படி எதுனாலே மாமியைக் கொண்டாட றார்? முன்னே இருந்த மாதிரியே தான் இந்த ருக்குமணி இருக்கா? அதே பல்லு...அதே தேய்ஞ்ச மூஞ்சி...எதுனாலே இந்த மாமா மாறிப் போனார்?''

''அதே பல்லு...அதே தேய்ஞ்ச மூஞ்சிங்கறயே தர்மா... ஏன், அழகு இருந்தா ஒரு ஆம்பிளை மாறிடுவானா?'' பதிலுக்குக் கேள்வி போட்டாள் அம்மா.

''அதில்லேம்மா...ருக்குமணி மாறலேயில்லை; அந்த மாமா மட்டும் எப்படி மாறினாருனு கேட்டா, நீ என்னவோ சொல்லறயே...''

''சாம்புவை மாத்தினது ருக்குவோட குணம் தர்மா... அவ பொறுமை...அவ இவர் கிட்டேயும், தன் மூத்தாள் குழந்தைகள் கிட்டேயும் காட்டின அன்பு... எல்லாமா அவரை மாத்திடுத்து...''

''அப்பல்லாம் கூடத்தானே மாமி இதே மாதிரி இருந்தா...அது என்ன திடீர் ஞானோதயம்?''

''கஷ்டம் வந்தாத்தானேம்மா மனுஷாளோட சுயரூபம் தெரியும்...சாம்புக்கு மமதை கண்ணை மறைச்சிண்டு இருந்தது...போன ரெண்டாம் வருஷம் பெரிசா நிமோனியாவந்து மனுஷர் படுத்துண்டார்...ஜன்னிகண்டுபோற அளவுக்குப் போயிடுத்து...இந்த ருக்கு அவரைக் கண்ணுக்குள்ளே வைச்சு பார்த்துண்டா...ராத்திரி இல்லை, பகல் இல்லைனு ஓடாத் தேஞ்சா...கையிலே வைத்தியத்துக்குப் பணம் இல்லை... அப்பளம் இட்டு, நாலுபேர் ஆத்திலே இட்லிக்கு...அரைச்சு... சும்மா சொல்லக்கூடாது உசிரை கையிலே பிடிச்சுண்டுதான் உழைச்சா...அவ உத்தமி... பகவான் அவளுக்கு இறங்கிவிட்டார்...சாம்பு பொழைச்சது புனர்ஜென்மம் தன்...பெண்டாட்டி தனக்காகப் பட்ட பாட்டையெல்லாம் நினைச்சுப் பார்த்தவருக்குப் புத்தி வந்துடுத்து... அன்னிலேந்து மனுஷர் பெண்டாட்டியை வைச்ச இடத்திலே வைக்கலை... தாங்கறார்... குழந்தைகளும் சித்தி, சித்தினு ஆசையா இருக்குதுகள், புருஷன்வழியிலேயே போய், அவரை மாத்திட்டா ருக்கு... மூஞ்சி எப்படியிருந்தா என்ன தர்மா? அவ சமத்து... புத்திசாலி... அதுதானே முக்கியம்?''



ஏ! அப்பா இந்த ருக்குவை வடிகட்டின அசடு என்று தானே தர்மா நினைத்துக்கொண்டிருந்தாள்... அவளுக்கு இத்தனை பாராட்டுரைகளா?

''ஏதோ குருட்டு அதிருஷ்டம்...மாமா மனசு மாறி அவா இப்போ சந்தோஷமா இருக்கா... அவசமத்துக்கும், புத்திசாலித்தனத்துக்கும் இங்கே என்னம்மா வேலை?... எதுக்கும் எதுக்கும் முடிச்சு போடறே?...'' என்று கேட்ட தர்மா அன்று பூராவும் அம்மாவின் பேச்சையும் இந்த மனிதர்கள் 'மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும்' முடிச்சுப்போடுவதையும் எண்ணிச் சிரித்துக்கொண்டிருந் தாள்

நான்கு நாட்களுக்குப் பிறகு சென்னைக்குத் திரும்பி னாள் தர்மா.

''பிரசவத்துக்கா?... நானா? திருவையாத்துக்கு வரதா?... என்னப்பா கனவு காணறேளா?'' என்று எகத் தாளமாய் தர்மா புறப்படும் முன் சொன்னதுதான் நடக்கும் என்று ராஜம், ராமநாதனுக்குத் தெரியும்

அவர்கள் எதிர்பார்த்தது போலவே 'வைத்திய வசதி மெட்ராசில் நன்றாக இருக்கு... அதனால் பிரசவம் இங்கே தான்?'... என்று முரளி எழுதிவிட்டான்.

பேறு காலத்தில் அன்னை கிட்டே இருப்பதுதான் முறை, கடமை, என்று உணர்ந்த ராஜம் ஒன்பதாம் மாசம் முடிந்ததும் சென்னைக்கு வந்து சேர்ந்தாள்

பத்து நாட்கள் இட்டேயிருந்து பல நாட்களுக்குப் பிறகு மகளையும், மாப்பிள்ளையையும் கவனித்த ராஜத்துக்கு பகீரென்றது.

காரணமில்லாமல் விவாதம்.

அவசியமில்லாமல் சர்ச்சைகள்.

நேரம் காலம் இல்லாமல் பேச்சுக்கள்.

என்ன இதெல்லாம்?

பணமும், நாகரிகமும் கணவன் மனைவி சௌஜன்யத்தைக்கூட குறைத்துவிடுமா? இல்லை இதற்கெல்லாம் காரணம் தர்மாவின் 'நான்' என்ற அகங்காரமா? என்று அவளுக்குப் புரியவில்லை.

## 3

மரியா பிறந்தாள்

தர்மாவின் பெண் இல்லையா? அட்டகாசத்தோடு சிஸேரியன் மூலம் பிறந்தாள்.

ரோஜா நிறமும், சங்குப் பாதங்களும், குண்டுக் கண்களுமாய் பார்த்தவர் பிரமிக்கும் அழகுடன் பிறந்தாள்.

''என்ன அழகான குழந்தை!''... என்று ஆஸ்பத்திரி பூராவும் மாயாவைப் பற்றியே பேசினார்கள்.

''அம்மாவும், அப்பாவும் எப்படியிருக்காங்க... அதான் மகளும் கண்ணைப் பறிக்கிற அழகோடு பிறந்திருக்கா...'' என்று தலைக்குத் தலை ஆஸ்பத்திரி ஸ்டாஃப் பேசினார்கள்.

தர்மா பூரித்துப் போனாள்.
என் பெண்,
என் பெண் எத்தனை அழகு!



முதல் நாள் மயக்கத்திலிருந்து விடுபட்டு கண்களைத் திறந்து பெண்ணைப்பார்த்தவள், தன் வலியை மறந்தாள். தான் இருநாழிகை பட்ட கஷ்டத்தை மறந்தாள்.

பெண்ணின் அழகில் உலகத்தையே மறந்தாள்.

பெண்ணைக் கையை விட்டு இறக்க மறுத்தாள்.

மடியில் வைத்துக் கொள்வாள்.

பக்கத்தில் போட்டுக் கொள்வாள்.

பார்த்துப் பார்த்து மகிழ்ந்து போனாள்.

லாவண்யா மில்லிலிருந்தும், தெரிந்த பிரமுகர்களும் வந்து குழந்தையைப் பார்த்துவிட்டு ''வாட் எ லவ்லி சைல்டு!'' என்றபோது 'இவளை உண்டாக்கினது நான்' என்ற கர்வத்தோடு ராணிபோல அமர்ந்திருந்தாள் தர்மா.

'ஸிஸேரியன் ஆன உடம்பு, அதனால் ரொம்ப அலட்டிக்கொள்ளக்கூடாது, கனம் தூக்க வேண்டாம்' என்று டாக்டர் சொல்லியிருந்ததால் உட்கார்ந்த இடத்திலிருந்தே மற்றவர்களை இன்னும் அதிகாரம் பண்ணவும் தர்மா நன்றாய் கற்றுக் கொண்டாள்.

டிஸ்சார்ஜ் ஆகி வீட்டுக்கு வந்ததும் தானும் தன் பெண்ணும் ஏதோ ஆகாயத்திலிருந்து அபூர்வமாய் குதித்தவர்கள் என்பதுபோல தர்மா நடந்துகொண்டாள்.

எல்லாம் கையில் எடுத்துத்தர வேண்டும்.

கூப்பிட்ட குரலுக்கு ஏன் என்று கேட்க ஒரு ஆள் அருகில் நின்று கொண்டே இருக்கவேண்டும்.

கூத்தடித்தாள் தர்மா.

அதுவும் முரளியிடம் ரொம்பவும் தான் எதிர்பார்த்தாள்.

மாயாவைக் கையில் வைத்துக்கொண்டு நாப்கின் கட்டிக் கொண்டிருப்பாள்.

அருகில் எட்டி எடுத்தால் எடுக்கக்கூடிய துணியை எடுக்கக் கணவனைக் கூப்பிடுவாள்.

''முரளி... ப்ளீஸ் கெட் மீ த நாப்கின்...'' என்பாள்... வராந்தாவில் பேப்பரோ, புத்தகமோ ஆபீஸ் வேலையோ எதுவோ படித்துக்கொண்டிருப்பதை பாதியில் விட்டு விட்டு வருவான் முரளி.

''முரளி ஏ. ஸி. யைக் குறையுங்கள்...''

''முரளி ஆயாவைக் கூப்பிடுங்கள்...'' இப்படி ஒன்று மாற்றி ஒன்று.

கூப்பிட்ட உடனே அவன் வராவிட்டால் அதையே சாக்காக வைத்துக்கொண்டு எதாவது சண்டைக்கு அஸ்திவாரம் போடுவாள்.

அவள் இழுத்த இழுப்புக்கு முரளி வந்தால் எல்லாம் சுமுகமாக இருக்கும்... இல்லையென்றால் அமர்க்களம் தான்...

பார்த்துக்கொண்டே இருக்கும் ராஜத்துக்கு பற்றிக் கொண்டு வரும்,

எங்கேயிருந்து இத்தனை துர்க்குணமும், அகங்காரமும் வந்தது என்று நொந்து கொள்வாள்.

தாங்க முடியாமல் போனால் ''மாப்பிள்ளையை ஏன் இழுத்தடிக்கறே... நான் பக்கத்திலேதானே இருக்கேன்... என்னைக் கேளேன்'' என்பாள் எரிச்சலுடன்.

''ஏன்... எனக்கு மட்டும் தான் பெண்ணோ? அவருக்கு இல்லையோ? பண்ணட்டுமே'' என்பாள் திமிருடன் தர்மா.

இப்படித் தூக்கி எறிந்து பேசியோ, அல்லது வளுச் கண்டைக்கோ போகாதபோது பெண்ணைப் பற்றி பேசி கேட்பவர்கள் காதுகளை நிரப்பினாள் அவள்.

சதா பெண்ணின் பெருமை.

அவளைத் தான் வளர்க்கப் போகும் நேர்த்தி.



''இவளைக் கொடைக்கானல் ஸ்கூலில் படிக்க வைத்து...காலேஜ் படிப்புக்கு ஸ்டேட்ஸுக்கு அனுப்பணும் ...இவள் புத்தியைப் பார்த்து ஊரே அதிசயப்படணும்... என்ன முரளி?'' என்பாள் ஒருநாள்.

''மாயாவுக்கு பத்து வயசில் பரதநாட்டியம் ஆரம்பிக்கணும்...டான்ஸ் சொல்லிக் கொடுத்தா தான் கிரேஸ் வரும்...பதினைஞ்சு வயசு ஆகும்போது 'பாலே' கூட கத்துத்தரணும்...ஏன் முரளி மெட்ராஸிலே பாலே ஸ்கூல் இருக்கோ?'' என்பாள் மறுதினம்...

''வீட்டிலேயே மாயா கத்துக்கிற மாதிரி பியானோ ஒண்ணுவாங்கிடணும்...எனக்கென்னமோ இந்த கர்நாடக பாட்டு பிடிக்கறதில்லை...சி...ஷூட் வேர்ன் பியானோ, கிடார்...அண்ட் அதர் இன்ஸ்ட்ருமெண்ட்ஸ்'' என்பாள் அதற்கும் அடுத்த நாள்

ஆசை...ஆசை...ஆசை

தர்மாவின் நெஞ்சில் ஆசை முட்டிக் கொண்டு நின்றது.

'எனக்குக் கிடைக்காததையெல்லாம் என் பெண்ணுக்கு கிடைக்க வைப்பேன்' என்ற ஆவேசம்,

இந்த அசட்டு வெறியில் மகளுக்கு ஒரு மாசம்தானே ஆகிறது...அவள் வளரட்டுமே...பிறகு ஆசைப்படலாமே.. இதற்குள் என்ன கற்பனைகள்?... என்றெல்லாம் அவள் நினைக்கவில்லை.

முதல் இரண்டு நாட்கள் இவள் இப்படிப் பேசினதும் 'ஏதோ ஆசை பேசுகிறாள்...!' என்று முரளி ஆர்வத்துடன் கேட்டான். ஆனால் இதுவே பழக்கமாகிப் போய் தினம் தினம் வேறு பேச்சில்லாமல் பேசுமளவுக்கு தர்மாவுக்கு வெறியானதும் அவனுக்குப் போர் அடித்தது.

''அசடுபோல் இது என்ன பேச்சு தர்மா?'' என்று ஸ்வாதீனமாய் சொன்னாலும் தர்மா தவறாக எடுத்துக் கொண்டு ''யூ ஹாவ் நோ இன்டிரஸ்ட் இன் மீ ஆர் இன்

அவர் சைல்ட்' என்று முகத்தைத் தூக்குவாள் என்று
தெரியுமாதலால், தர்மாவோடு ஓரிரு வார்த்தைகள் பேசி
விட்டு 'வேலை இருக்கிறது' என்று நகர்ந்து விடுவான்.

கணவன் கிடைக்கவில்லை என்றால் அம்மாவிடம்
தான் பெண்ணை வளர்க்கப்போகும் நினைப்பற்றி பேசி
மகிழ்வாள் தர்மா.

''என்டி தர்மா இப்படி அசட்டு பிசட்டுனு பேசறே...
முளைச்சு ரெண்டு இலை விடலை... அதுக்குள்ளே என்
னென்ன ஆசைப்படறே...இது நன்னாயில்லை தர்மா''
என்று சொல்ல, ராஜத்துக்கும் மகள் பந்தாடி விடுவாள்
என்ற பயம் இருக்கதால் பொதுவாக தலையாட்டிவிட்டு
பேசாமல் இருந்து விடுவாள்.

ஆனாலும் சில சமயங்களில் தாங்க முடியாமலும்
இவள் பேசாலேயே வளரும் குழந்தைக்கு திருஷ்டி பட்டு
விடப் போகிறதே என்ற பயத்தாலும் ''இப்பவே என்ன
அவசரம் உனக்கு? மாயா பெரியவளாகட்டும்...உன் இஷ்
டப்படி செய்யலாம்'' என்று மகளை அடக்க முயற்சிப்
பாள்.

சாதாரணமாக நடமாட, வெளியில் போக தர்மா
வுக்கு மேற்கொண்டு ஒரு மாசமானது.

கொஞ்சம் உடம்பு முடிந்து, வெளியில் போகத்தெம்பு
வந்ததும், காரை எடுத்துக் கொண்டு கடைகளுக்குத்தான்
அவள் போனாள்

மாயாவுக்கு தினுசு தினுசாய் உடைகள், பொம்
மைகள்.

பெண்ணுக்கென்று தனியாக ஒரு அறையை அலங்
கரிக்க திட்டமிட்டிருந்தபடி, தங்கள் படுக்கை அறைக்கு
பக்கத்து அறையை சிங்காரிக்கத் தொடங்கினாள் தர்மா.

வெளிர் 'பிங்க்' நிறத்தில் பூப்போட்ட வால்பேப்பர்—
பிங்க் நிற குழந்தைக் கட்டில்... விட்டத்திலிருந்து



தொங்கின ராட்சத கிலுகிலுப்பை... பெரிசு பெரிசாய்
கரடி பொம்மைகள், புஸு புஸுவென்று—

வெளிநாட்டுப் புத்தகங்களை மாடத்துக்கு வைத்துக்
கொண்டு, விருப்பப்படி அறையை மாற்றினாள் அவள்.

''இந்த பிங்க் கலர் மனசுக்கு இதமாக இருக்குல்ல...
குழந்தை கண்ணைத்திறந்து பார்க்கும்போது கிது
கிலுப்பை சந்தோஷத்தைக் கொடுக்கும்''...இப்படி எதா
வது உற்சாகமாய் பேசினால் ''யெஸ். யூ ஆர் ரைட்''
என்று ஆமோதித்துவிட்டு அந்தப் பக்கம் போய் விடுவான்
முரளி.

''பிஞ்சுக் குழந்தைக்கு எதுக்கு இதெல்லாம்? அதுக்கு
என்ன புரியப் போறது? தேமேன்னு உன்னோடயே படுக்க
வைச்சுக்கப் படாதோ...'' என்றெல்லாம் ராஜத்துக்கு
கேட்கத் தோன்றும், ஆனால் வாயைத் திறக்க மாட்டாள்.

நாளெல்லாம் கடையில் அலைந்து விட்டு, மாலையில்
வந்து படுக்கையில் 'பொத்'தென்று விழுவாள் தர்மா.

முரளி அலுவலகத்திலிருந்து திரும்பும் சமயத்துக்கு
'காலை...வலிக்கிறது...தலையைச் சுத்துகிறது...ஆ' என்று
அரற்றிக் கொண்டு படுத்திருப்பாள்.

அந்தப் பிள்ளை ஆள் கொடுக்கும் காபியை குடித்து
விட்டு கிளப்புக்கோ, வேறு எங்கோ போவதை பார்க்கும்
போது ராஜத்துக்கு வருத்தமாய் இருக்கும்.

'இவளை யார் ஊர் மேயச் சொல்றா? அப்புறம்
இப்படி ஆ...ஊ...னு கத்தச் சொல்றா?' என்று குமை
வாள்.

தர்மாவின் அசட்டு நடத்தையால், காணாததைக்
கண்ட வேகத்தால், அவள் கணவன் அவளிடமிருந்துவிலகிப்
போவது ராஜத்துக்கு நன்றாய் புரியவே செய்தது.

மாயா பிறந்த முப்பது நாட்களானதும், இனி மகளுக்கு தான் கண்டிப்பாக தேவைப்படவில்லை என்று உணர்ந்து ஊருக்குக் கிளம்பினாள் ராஜம்.

புறப்படும் சமயத்தில் மட்டும் பெண் என்ன வேணுமானாலும் கத்தட்டும் நான் என்கடமையைச் செய்யணும் என்று எண்ணியவள் தர்மாவுக்குத் தனக்குத் தெரிந்ததைச் சொன்னாள்.

''மாப்பிள்ளை முன்னே மாதிரி இல்லை தர்மா... சரியாக சாப்பிடறதில்லை... உடம்பு இளைச்சுப் போயிருக்கார்...நீ கொஞ்சம் பார்த்துக்கோம்மா...

''என்னதான் பொம்பளை உசத்தியா இருந்தாலும் ஆம்படையானை அரவணைச்சுப் போனாதான் அவனுக்கு வாழ்வு சுவர் இருந்தாதானே சித்திரம்?—நீ புத்திசாலி... சமர்த்தா இரு தர்மா...''

''அவர் சாதாரணமாகத்தான் இருக்கார்ம்மா... ஆபீஸ்லே வேலை ஜாஸ்தி இருக்கும்... நீ வீணா கவலைப்படாதே...போய் விட்டு வா...'' என்று அம்மாவை அதிகம் பேசாமல் கத்தரித்து வழி அனுப்பினாள் தர்மா.

ஆயா இருந்தாலும், அம்மா ஊருக்குப் போனதும் குழந்தையை விட்டுவிட்டு ரொம்பத் தனியாக வெளியே போக தர்மா விரும்பாததால், சிநேகிதிகளுக்கு போன் செய்து ''என்னாலே வரமுடியாது...வொய் டோண்ட் யூ ஆல்கம் ஹியர்...கேன் பிளே கார்ட்ஸ்...'' என்று அழைப்பு விடுத்தாள்.

நல்ல சாப்பாடு.

சீட்டு விளையாட வசதியான இடம்.

வேறு என்ன வேண்டும்?

கிளப் குழாம் தர்மாவின் இல்லத்தில் முகாம் அடிக்க ஆரம்பித்தது.



குழந்தையைப் பார்த்துக்கொண்டே பொழுதை போக்குவதற்குத் தர்மாவுக்கும் இந்த ஏற்பாடு ரொம்ப ஒத்துவந்தது.

பிற்பகல் ஒன்று அல்லது இரண்டு மணிக்கு ஜமா கூடும்...மாலை ஐந்து ஆறு என்று ஆகும் கலைய.

பல தடவைகள் மாலையில் முரளிவீட்டுக்கு வந்தவன், 'ஹலோ' என்று விருந்தாளி மாதிரி சொல்லிவிட்டுச் செய்வதற்கு ஒன்றும் இல்லாததால் வெளியே போய்விட நேர்ந்திருக்கிறது.

வீட்டில் போர் அடித்ததால் கம்பெனி வேலைகளில் நேரத்தை அதிகம் செலவழிக்க ஆரம்பித்திருந்த முரளி, முன்னையைவிட வெளியூருக்கும் அடிக்கடி போக ஆரம்பித்தான்.

அவன் ருசிகள் கொஞ்சம் கொஞ்சமாய் மாறுவது, புத்திசாலி என்று தன் மாரைத் தானே தட்டிக்கொள்ளும் தர்மாவுக்கு சுத்தமாய் புரியவில்லை.

இப்படியே கிட்டத்தட்ட ஏழு மாசங்கள் கழிந்த பிறகு திடீரென்று ஒருநாள் 'முரளிக்கு என்னாயிற்று? அவர் முன் போல் இல்லையே?' என்று தர்மா தனக்குள் கேட்டுக் கொள்ளும்படி ஒரு சம்பவம் நடந்தது.

முதல்நாள் பம்பாயிலிருந்து திரும்பினதிலிருந்து முரளி ஏனோ பழைய கலகலப்புடன் இல்லாததாகத் தர்மாவுக்குத் தோன்றியது.

வலியச் சென்று இவள் பேசினபோது அவன் ஓரிரு வார்த்தைகளில் பதில் சொல்லியது என்றைக்கும் இல்லாத புதுப் பழக்கமாய் இருந்தது.

''ஹௌ வாஸ் த பாம்பே ட்ரிப்? மங்களாவைப் பார்த்தேளா?''

பம்பாயிலிருந்து நூறு மைல் தள்ளி இருந்த கல்யாணில் மங்களாவும், அவள் கணவனும் குடி இருந்தார்கள். முரளிக்கு அவர்களிடம் உள்ள ஈடுபாட்டால்

எப்போது பம்பாய் சென்றாலும் அவர்களைப்பார்க்காமல் வரமாட்டான்.

''மங்களாகிட்டேயிருந்து லெட்டர் வந்து நாளாச்சு... சௌக்கியமா இருக்காளா?'' தர்மா கேள்விமேல் கேள்வி கேட்டாள்.

''ஐ டிண்ட் ஸீ மங்களா திஸ் டைம்'' என்றான் முரளி.

''ஏன்?''

''டைம் இல்லை...தவிர ஒவ்வொரு தடவையும் பார்க்கணும்னு சட்டமா?''

முரளியா இப்படி எடுத்தெறிந்தாற் போல பேசுகிறார்!

''நான் ஒண்ணும் உங்களைப் பார்க்கச் சொல்லலை!... நீங்களாத் தானே போவேள்?'' மேற்கொண்டு பேச இடமில்லாமல் முரளி ஆபீசுக்குக் கிளம்பிவிட்டான்.

தர்மாவுக்கு ரொம்ப கோபம்...வர வர முரளிக்குப் பேசக்கூட மறந்து போச்சு...யார் மேலேயோ கோபம்னா அதை என்கிட்ட ஏன் காட்டணும்?

நாலு நாட்களாய் ஊரில் இல்லை இப்போது வந்தவர் 'நீ எப்படி இருந்தாய்? மாயா என்னென்னபண்ணினாள்?' என்று ஒரு வார்த்தை கேட்கலை? எதுக்காக இப்போ சலிப்பு? என்று அவளுக்குக் கோபம், எனவே அவனிடம் அன்று முழுவதும் வேறு ஒன்றும் பேசவில்லை.

அதே கோபத்தில்தான் மறுநாள் மாயாவுக்கு நான்கு முறைகள் வயிற்றுப்போக்கு இருந்தபோது அதைப்பற்றி கணவனிடம் ஒன்றும் சொல்லவில்லை.

அடுத்த நாள் மாயாவின் வயிற்றுப்போக்கு பத்து தடவைகளாயிற்று. கையில் நிற்காமல் குழந்தை அழுதாள்.

தர்மா டாக்டருக்கு போன் செய்து வரவழைத்தாள், ''பயப்பட ஒண்ணுமில்லை...பல் முளைக்கும்



முன்னால் வரும் சாதாரண டயரியாதான்'' என்று சொல்லி மருந்து கொடுத்துவிட்டுப் போனார் டாக்டர்.

மனம் பொறுக்காமல் முரளிக்கு போன் பண்ணி மாயாவுக்கு உடம்பு சரியில்லாததைச் சொன்னாள் தர்மா.

''டாக்டர்தான் பயப்பட ஒண்ணும் இல்லைன்னாரே... ஏன் வொர்ரி பண்ணிக்கறே?'' என்றமுரளி 'நான் ராத்திரி ப்ளைட்டில் டெல்லிக்குப் போகணும்...மாதவனை விட்டு என் பெட்டிகளைத் தயார் பண்ணச் சொல்'' என்று கூறியபோது, அடங்கிப் போயிருந்த கோபம் மீண்டும் தர்மாவுக்குத் தலை எடுத்தது.

மாலை வீட்டுக்குத் திரும்பியவனிடம் ''இப்போ என்ன டெல்லியில் வேலை? பம்பாயிலிருந்து வந்து இரண்டு நாளாகலை?...மாயாவுக்கு வேற உடம்பு சரியில்லை...ஐ டோண்ட் வாண்ட் யூ டு கோ டு டெல்லி'' என்று வாதாடினாள்.

''மாயாவுக்கு பயப்படும்படி ஒன்றும் இல்லை... அதனாலே நான் இருக்க வேண்டிய அவசியம் இல்லை. தவிர எனக்கு டெல்லியில் முக்கியமான மீட்டிங் இருக்கு... ஐ காண்ட் கான்சல் இட்'

முரளி கிளம்பி விட்டான்.

அவன் பொறுப்பில்லாமல் பேசிவிட்டுக் கிளம்புவதாக தர்மாவுக்குத் தோன்ற ''வொய் ஆர் யூ டாக்கிங் வித் அவுட் ரெஸ்பான்ஸிபிலிடி?'' என்று உரக்கக் கத்தினாள்.

முரளி நின்றான்...திரும்பினான்.

சில கணங்கள் மௌனமாயிருந்தான். ''உன் பொறுப்பை மட்டும் நீ பண்றயா? டோண்ட் ப்ரீச் அதர்ஸ்'' என்ற ஒரே ஒரு வரி அழுத்தமாய் பேசிவிட்டு படிகளில் இறங்கி காரில் ஏறி புறப்பட்டுப் போய் விட்டான்.

அவன் போய் பல நேரங்கள் ஆகியும், 'உன்பொறுப்பை நீ சரியா பண்ணறயா?' என்ற கேள்வி மனசில் உறுத்த முதல் தடவையாய் முரளி ஏன் இப்படி பேசுகிறார் என்று பயந்தாள் தர்மா.

முடிவு
1976

ஏனோ அழுகை அழுகையாய் வந்தது தர்மாவுக்கு.

மாயாவின் உடம்பு சரியில்லை :

எனக்கும் மனசு சரியில்லை.

முரளி ஆறுதலாய் இரண்டு வார்த்தைகள் பேசக் கூடாது? இது என்ன காரணமில்லாத கோபம்?

ஊருக்குப் போகுமுன் முரளி அவளை 'நீ பொறுப்புடன் நடந்து கொள்கிறாயா; பிறருக்கு உபதேசம் பண்ண?' என்று கேட்டு விட்டது நெஞ்சில் சுரீர் என்று தர்மாவுக்கு உறைத்துக் கொண்டிருந்தது.

ஏதோ விவாதங்கள்; சர்ச்சை வரும்... ஆனால் இப்படி முகத்தில் அடித்தாற்போல முரளி பேசிப் பழக்கமில்லை யாதலால், குளவி கொட்டின மாதிரி அவளுக்கு வலி இருந்து கொண்டேயிருந்தது.

ஒரு நாள் பூராவும் இதையே எண்ணி மருகியவள் மறுநாள் மாயாவின் வயிற்றுப் போக்கு அதிகமாகிப் போனதால், தன் மனசு வலியைக் கொஞ்சம் மறந்தாள்.

டாக்டர் ஒன்றுமில்லை என்று சொல்லியிருந்தும் கூட அவளுக்குப் பதட்டமாய் இருந்தது.

''ஒண்ணுமில்லை; தர்மா... சரியாகிவிடும்... டோன்ட் ஒர்ரி'' என்று முரளி அருகில் இருந்து சொன்னால் தேவலைப் போல இருந்தது.

'பகல் சீட்டுக் கச்சேரி உண்டா?' என்று ஒரு சிநேகிதி கேட்டபோது, வெளி மனிதர்கள் ஒருத்தரையும் பார்க்க, பேச வேண்டும் போல் இல்லாததால் ''மாயாவுக்கு உடம்பு சரியில்லை. இரண்டு நாட்கள் கழித்து நானே போன் பண்ணுகிறேன்... நீங்கள் மற்றவருக்கும் சொல்லி விடுங்கள்'' என்று கூறி விட்டாள்.

பகல் முழுவதும் குழந்தைக்கு அருகிலேயே இருந்தாள் தர்மா

மாலையில் வயிற்றுப்போக்கு சற்றே கட்டுப்பட்டு குழந்தை விளையாடிக் கொண்டிருந்தாலும் தனியாக இருப்பது கஷ்டமாக இருந்ததாலும் என்றும் இல்லாத அதிசயமாக திருவையாறுக்கு ஒரு ட்ரங்கால் போட்டாள் தர்மா.

அடுத்த தெரு வக்கீல் வீட்டு நம்பரில் அப்பாவைப் பேச அழைத்தாள் அவள்.

கால் உடனே கிடைத்து விட்டது.

''என்னம்மா?'' என்றார் ராமநாதன்.

''ஒண்ணுமில்லேப்பா...இரண்டு நாளா மாயாவுக்கு தண்ணியா வெளிலே போறது...இவர் ஊரில் இல்லை... தனியா இருந்தா கஷ்டமா இருக்கு...அம்மா வந்தால் தேவலைனு பார்த்தேன்...''

''அம்மாவாம்மா?...அவளால் இப்ப வர முடியும்னு எனக்குத் தோணலை...டாக்டர் என்ன சொன்னார் தர்மா?''

''பல் முளைக்கிறதுக்குத் தான் இப்படி படுத்தற துன்னார். ஏம்பா அம்மா வர முடியாது?''

''விசாலி, பாப்பா, சேதுவுக்கு இப்ப பரிட்சை சமயம்...அம்மா விட்டுட்டு வர முடியாது...இரண்டு நாள் பாரு. அப்புறம் போன் பண்ணு...முடிஞ்சா அனுப்ப றேன்...''

தான் கேட்டு அப்பா மறுத்துவிட்டாரே என்ற அவமானம் ஏழ ''வேண்டாம்பா...நானே பார்த்துக்க றேன்...'' என்று சொல்லி ரிஸீவரை வைத்து விட்டாள்.

'ஏதோ அத்தி பூத்தாற்போல நான் கூப்பிடுகிறேன் இப்பவர சௌகரியப்படாதாம் ...வேண்டாமே ...இவர் வந்து எனக்கு ஒன்றும் ஆக வேண்டாம். சமயத்துக்கு உதவாத மனிதர்கள் யாராய் இருந்தால் என்ன? இனி,இவர் களிடம் நான் எதையாவது கேட்டேன் என்றால் என் பேர் தர்மா இல்லை.' எண்ணங்கள் கசக்க வைராக்கியம் பூண்டாள் தர்மா.



முரளியாவது குழந்தைக்கு எப்படி இருக்கிறது என்று கேட்டு போன் பண்ணுவான் என்று எதிர்பார்த்தவளுக்கு அன்று முழுவதும் அவன் தொடர்பு கொள்ளாதது என்னமோ போல இருந்தது.

கம்பெனியில் கேட்டால் டெல்லி விலாசம், போன் நம்பர் கொடுப்பார்கள். வேண்டுமானால் இவள் கூப்பிடலாம்.

'வேண்டாம் போ...மகளைப் பத்தி அவருக்கு அக்கறை இல்லாத போது, நான் ஏன் வலியப் போய் விவரம் சொல்லணும்?...'' என்ற வீம்பு தோன்ற, தர்மா பேசாமல் இருந்து விட்டாள்.

முரளியின் வார்த்தைகள், இந்த மௌனம் எல்லாம் புது வழக்கமாய் தோன்றி, தர்மாவின்இதயத்தில் நெருடிக் கொண்டிருக்கவே செய்தது.

சொல்லி வைத்தாற் போல வயிற்றுப் போக்கு நின்று மறுநாள் காலையில் மாயா சாதாரணமாகச் சிரித்து விளையாடியதும், தர்மாவின் மன உளைச்சலும் கொஞ்சம் குறைந்தது.

சிரிப்பும், கொஞ்சலுமாய் அவள் குழந்தையுடன் விளையாடிக் கொண்டிருக்கையில், காலை போஸ்டில் வந்த தபால்களை எடுத்து வந்து மேஜை மேல் வைத்து விட்டுப் போனான் தோட்டக்காரன்.

மாயா உறங்கின பிறகு சாவகாசமாய் லெட்டர் களைப் பார்த்தாள் தர்மா.

ரொபப நாட்களுக்குப் பிறகு மங்களாவிடமிருந்து ஒரு கனமான லெட்டர் வந்திருந்தது.

இத்தனை பக்கங்கள் எழுதுகிறாப் போல இவளுக்கு என்ன விஷயம் இருக்கும் என்று யோசித்துக் கொண்டே கவரைப் பிரித்தாள்.

''அன்பான தர்மா''—என்று ஆரம்பித்திருந்தாள் மங்களா,

''இந்த லெட்டரை எப்படி எழுதறதுன்னே எனக்குப் புரியலை. ஒரு நாள் பூரா யோசனை பண்ணிட்டு பிறகு

எழுதறேன்...உனக்கு ரொம்ப அதிர்ச்சி தரப்போற ஒரு விஷயத்தை நான் சொல்ல வேண்டியிருக்கேன்னு ரொம்ப வருத்தப் பட்டுண்டே எழுதறேன் தர்மா... இந்த லெட்டரைப் படிச்சப்புறம் 'என் குடும்ப விஷயத்தில் தலையிடற அளவுக்கு உரிமை எடுத்துக்கறயானு' கூட நீ கோபிக்கலாம். ஐடோண்ட் கேர்...சின்ன வயசிலிருந்தே உன்னை என் தங்கையாக நினைச்சுதான் நான் பழகி யிருக்கேன், உனக்கு ஒரு கெட்டதுன்னா அது என்னையும் பாதிக்கும் அளவுக்கு நான் உன்மேல் அன்பு வைச்சிருக் கேன்...அதனால தான் இந்த லெட்டரை எழுதறேன்... சுத்தி வளைக்கப் போறதில்லை... நேரடியாகவே விஷயத்துக்கு வரேன்...''

எதுக்காக இப்படி ஒரு பீடிகை போடுகிறாள் மங்களா என்று வியப்பு தர்மாவுக்கு உண்டாயிற்று.

அதே சமயத்தில் சோழியன் குடுமி சும்மா ஆடாது என்கிறாற் போல் மங்களா இப்படி அஸ்திவாரம் போட வேண்டும் என்றால் என்னமோ தான்.

மேலே லெட்டரைப் படிக்க தர்மாவுக்குப் பயமாக இருந்தது. சற்று நிதானித்து விட்டுத் தொடர்ந்தாள்.

''போன வாரம் இவர் கம்பெனியிலிருந்து மஹாப லேஷ்வருக்கு பிக்னிக் போகத் திட்டமிட்டு, ஒரு டீலக்ஸ் பஸ்ஸில் எல்லா ஆபீசர்கள், அவர்கள் மனைவிகளுமாய் போயிருந்தோம்

மஹாபலேஷ்வர் ஒரு அழகான மலை வாசஸ்தலம்னு உனக்குத் தெரிஞ்சிருக்கும்,

நாள் பூரா சுத்திவிட்டு சாயங்காலம் அங்கேயுள்ள டூரிஸ்ட் ஹோட்டலில் எல்லாருமாய் சாப்பிட்டுவிட்டு கல்யாண் திரும்பத் திட்டமிட்டிருந்தபடி ஹோட்டலுக் குப் போனோம்

பெரிய நாகரீகமான ஹோட்டல்

எல்லோரும் இறங்கட்டும் அப்புறமா நாங்க இறங்க லாம்னு உட்கார்ந்துண்டு இருக்கறச்சே-நான் முரளியைப் பார்த்தேன்,



இருவரும் பார்த்தார்.

''அதோ முரளி...''னு நான் சொல்லிட்டு ஜன்னல் வழியா கையை ஆட்டிக் கூப்பிடப் போனேனா.

'சும்மா இரு'னு இவர் கையை பிடிச்சு இழுத்தார்.

முரளிகூட ஒரு பெண்ணும் இருந்தா—

அவள் முரளியின் கையோடு கையைக் கோர்த்துண்டு போனா—ரிசப்ஷனுக்குப் போய்—முரளி ஏதோ சொல்லி கையை நீட்டினதும், ரூம் சாவியை ரிசப்ஷனிஸ்ட் கொடுத்தா.

அவா உள்ளே போயிட்டா.

இவரும் நானும் இறங்கி ரிசப்ஷனுக்குப் போய் 'மிஸ்டர் முரளியின் ரூம் நம்பர் எதுனு கேட்டோம்— 'மிஸ்டர் அண்ட் மிஸஸ் முரளி...டீலக்ஸ் ஸீட்...நம்பர் என்பது' என்றான் அவன்.

எங்களுக்கு எப்படி இருந்திருக்குமென்று நீ ஊகிக் கலாம்.

தர்மா உனக்கு நான் இதெல்லாம் எழுதறது ரொம்ப அநாகரிகமான செய்கை. இது என் மனசுக்கே புரியறது... ஆனாலும் நாளைக்கு நீயும், முரளியும் ஒன்னாயிருக் கணுமே என்கிற துடிப்பில்தான் உன் கவனத்துக்கு இந்த விஷயத்தைக் கொண்டு வந்திருக்கேன்,

நான் உரிமையோட உன் கிட்டே சில சமாசாரங்கள் பேசப் போறேன். நீ கோபிச்சுண்டாலும் பரவாயில்லை.

முரளி கொஞ்ச நாளாய் சந்தோஷமாக இல்லைன்னு நானும், இவரும் நினைக்கிறோம்,

ஏன் தர்மா? உன்னால் பதில் சொல்ல முடியுமா?

போன மாசம் இங்கே வந்தபோது நிறைய குடிச்சார். ஒரே ஒரு தடவை மட்டும் என் கிட்டே 'எப்படியிருந்த தர்மா இப்ப இப்படி மாறிப் போனா மங்களா? அவளை மாத்தினது என்ன? ஏன் அவ என்னை கவனிக்கவே மாட்டேங்கரா? 'ஷி டஸ் நாட் நீட் மீ எனிமோர்' என் றெல்லாம் சம்பந்தா சம்பந்தம இல்லாமல் பேசி வருத்தப் பட்டார். குடிமயக்கத்திலே பேசறார்னு நாங்க விட்டுட் டோம்.

ஆனால் மஹாபலேஷ்வரில் அவரை இன்னொரு பெண்ணோடு பார்த்தப்புறம் தான் முரளி நிஜமாகவே புண்பட்டுப் போயிருக்கார்னு தோணித்து—

பெண்களோடு சகஜமாய் பழகறதில் தப்பு இல்லை என்று நினைப்பவர் முரளி.

உங்கள் கல்யாணத்துக்கு முன்னால் அவர் எப்படி இருந்தார்னு உனக்கே தெரியும்.

உன் அசட்டுத்தனத்தால் அவரை மறுபடியும் அந்தப் பாதைக்குத் துரத்திட்டயோனு எனக்குப் பயமா இருக்கு தர்மா.

முரளி இப்படி வேறு பெண்ணோட தொடர்பு வைச்சுக்கறது. கல்யாணத்திற்குப் பிறகு இதுதான் முதல் தடவையோனு நாங்க நினைக்கிறோம்...என்னா அன்னிக்கு அவர் சகஜமாய் இல்லை, கொஞ்சம் நெர்வஸாக இருந்த மாதிரிதான் தோணித்து. கடவுள் புண்ணியத்தில் ஆரம்ப நிலையிலேயே நாங்க பார்த்துட்டோம். இதுவும் நல்லதுக்குத்தான் முளையிலேயே கிள்ளி எரியறது நல்லதுதானே?

முரளி லவ்ஸ் யூ வெரி மச்...அதை ஞாபகம் வைச்சுக்கோ தர்மா.

தப்பு பண்றது மனுஷ சுபாவம்—அதனால இந்த நிகழ்ச்சியைப் பெரிசு பண்ணி பிரிசலைப் பிளவாக மாத்தாமல் உன் முரளியைத் திரும்ப உன்கிட்டே அழைச்சிண்டா நீ புத்திசாலி. அதுதான் உனக்கும் உன் பெண்ணோட வருங்காலத்துக்கும் நல்லது.

யோசிச்சிட்டு நடந்துக்கோ.

நீ நிம்மதியா வாழ்ந்தா எங்களைவிடச் சந்தோஷம் அடையறவா யாரும் இருக்க முடியாது.

உனக்கு எந்த விதத்தில் உதவி வேணும்னாலும் நாங்க பண்ணத் தயாரா இருக்கோம்.

உன்
மங்களா.

உடம்பு மனசு, எல்லாம் மரத்துப் போன நிலையிலிருந்தாள் தர்மா.



இப்படியொரு இடியை அவள் கனவிலும் எதிர் பார்க்கவில்லை.

முரளி—இன்னொரு பெண்ணுடன் தங்கியிருந்தாரா? கடவுளே!

எங்கே, என்ன தப்பாகிப் போனது?

கோபம் சீறிக்கொண்டு எழுந்ததால் உடம்பு தடதட வென்று அவளுக்கு நடுங்கியது.

சீ—என்ன கேவலமான மனிதர்!

கல்யாணமாகி மூன்று வருஷங்கள் ஆவதற்குள் புத்தி இப்படிப் பேதலித்து விட்டதே—

இவர் மனுஷரா? இல்லை மிருகமா—

எழுந்த ஆத்திரத்தில் முரளியை நாக்கைப் பிடுங்கிக் கொள்ளுகிறார் போலே நாலு வார்த்தை கேட்டுவிட்டுப் பெண்ணைத் தூக்கிக்கொண்டு, அவனை விட்டு தூர ஓடிப் போய்விட வேண்டும் என்ற வெறி எழுந்தது.

ஆமாம்—எங்கே போவாள்?

திருவையாறுக்கா?

சீ—இனிமேல் அந்த அப்பா அம்மாவிடம் எந்த உதவியும் கேட்கப் போவதில்லை என்று வைராக்கியம் எடுத்து ஒரு நாள் ஆகவில்லை, அதற்குள் அந்தப் பிடிவாதத்தை இழந்து திருவையாறுக்கா போகப் பாகிறாள்?

வேண்டாம் என்று ஒதுக்கிவிட்டு வந்த அந்தப் பழைய வாழ்க்கைக்கா?

எப்படியோ வளர்க்க ஆசைப்படும் மாயாவை, தான் வளர்ந்தது போலவே கிராமத்தில், ஆசாரமாய், மடியுடன் சாதாரணமாய் வளர்க்கவா?

ம்ஹூம் மாட்டேன் என்று சண்டி பண்ணியது தர்மாவின் மனம்.

பின் எங்கே போவது?

ஒரு வேலை பார்த்துக்கொண்டு மெட்ராசிலேயே ஒரு தனி வீட்டில் இருக்கலாமா? இருக்கலாம்; ஆனால் ஏ.ஸி. அறை இருக்காது.

கூப்பிட்ட குரலுக்கு ஆள்கள் வரமாட்டார்கள்.

கையில் இப்படிப் பணம் புழங்காது.

தர்மா தன் மகளை அமெரிக்கா அனுப்ப முடியாது ஏதோ சுமாராய் வாழலாம்.

தேவலையா?

''யூ ஆர் எ ஸ்கௌண்ட்ரல்'' என்று முரளியின் மூகத்துக்கு நேரே பெரியதாய் கத்த வேண்டும்போல மனசு ஆர்பரித்தது.

கத்தி விடலாம்.

அது ரொம்ப சுலபம்.

ஆனால் இப்படிக் கத்தினால் அவர் மாறிவிடுவார் என்பது என்ன நிச்சயம்? இத்தக் கத்தலே அவரை அவளிடமிருந்து இன்னும் அதிகமாய் பிரித்துவிட்டால்?

ஒன்றும் சரிப்பட்டுவராமல், நினைப்பு சுவரில் முட்டிக் கொண்டு அனாதையாய் அலைந்தது.

முதலில் தோன்றிய ஆத்திரம்—இப்போது மெள்ள மெள்ள அழுகையாய் மாறியது.

வாழ்க்கையில் பணத்தின் ருசி கண்டு விட்டாள் தர்மா.

இனித் திரும்ப இவையெல்லாம் இல்லாமல் இருக்க முடியாது.

அவளுக்காக மட்டுமல்ல...அவளுடைய மாயாவுக் காகவாவது அவள் இந்த வாழ்க்கைத் தரத்தை தொடர வேண்டும்.

'ஹா' என்று துக்கம் எழப் படுக்கையில் குப்புறப் படுத்துக்கொண்டு குமுறினாள் தர்மா.

என்னவெல்லாமோ வந்து நினைவில் கூத்தாடின.., கொஞ்சம் கொஞ்சமாய் இது நாள் ஞாபகத்துக்கு வராத உண்மைகள் இன்று தலை எடுத்தன.

முரளியிடம் அவள் முன் போல இல்லைதான்.

கணவன் மனைவி சேர்ந்து படுத்து மாசங்கள் ஆகி யிருக்குமா?

அவன் ஆபீசிலிருந்து வரும்போது இவள் தன்னைத் தயாரித்துக்கொண்டு வரவேற்ற நாட்களெல்லாம் அந்த நாட்களா?

முரளிக்கு என்று இவள் என்ன பண்ணி விட்டாள்?



இப்போதெல்லாம் தர்மாவுக்குக் குழந்தையைக் கொஞ்சவும், சினேகிதிகளோடு ஊர் சுற்றவும், சீட்டு ஆடவுமே நேரம் போதவில்லையே.

இவைகளெல்லாம் ஒன்று சேர்ந்துதான் முரளி இன் னொரு பெண்ணை நாட வைத்ததோ?

தன்மேல வெகுலாகத் தவறு இருக்கிறது என்ற எண்ணம் எழுந்த சமயத்தில் ''உன் பொறுப்பைச் சரியா பண்ணினியா?' என்று முரளி கேட்டதும் ஞாபகம் வந்தது. இதையெல்லாம் மனசில் வைத்துக்கொண்டுதான் கேட்டாரா?

தன் மேலேயே பச்சாத்தாபம் எழ, குமுறி வெகு நேரம் அழுதாள் தர்மா.

காரணமில்லாமல் சாம்பு மாமா, ருக்குமாமியெல் லாம் அவள் நினைவில் வந்து போனார்கள்.

'பெண்ணுங்கறவ நாணல் மாதிரி இருக்கணும் தர்மா...ஆத்துலே வெள்ளம் வரச்சே வளைந்து கொடுக் காம மரம் மாதிரி நின்னா, வெள்ளத்தோட வேகம் அந்த மரத்தைப் பிடுங்கி எறிஞ்சுடும்...ஆனா நாணல் மாதிரி வளைஞ்சு கொடுத்தா வெள்ளம் வடிஞ்ச பிறகு, மறுபடி யும் தலைநிமிர்ந்து நிற்கலாம்' என்று அம்மா சொல்லு வாளே அதுக்கு இது தானா அர்த்தம்?

'வாழ்க்கையில் யாரோடு சேர்ந்து இருந்தாலும் அது பெற்றோரோ, உடன் பிறந்தவரோ, இல்லை கணவனோ யாராக இருந்தாலும் வளைந்து கொடுத்து வாழ்ந்தால் தான் அமைதியோடு வாழ முடியும்' என்ற அர்த்தத்தில் தான் அன்று அம்மா சொன்னாளோ?

நான் மரம் மாதிரி என் போக்கில் நின்று, முரளியைக் கவனிக்காததாலா அவர் என்னிடமிருந்து விலகிப் போனார்?

அவர் போக்குக்குப் போய், மெதுவாய் என் பக்கம் இழுத்திருக்க வேண்டுமோ?

ருக்கு மாமி சாம்பு மாமாவை மாற்றின மாதிரி?

என் வாழ்க்கை இதே அந்தஸ்தோடு இருக்க வேணடும் என்றால், என் மாயாவை நான் எப்படி யெல்லாமோ வளர்க்க ஆசைப்படுவதெல்லாம் நனவாக வேண்டு மென்றால், இந்த வீட்டிலேயே இருந்து கொண்டு முரளியை மெல்ல மெல்ல என் வசபபடுத்தி, அவரை என் வழிக்குக் கொண்டு வருவது தான் ஒரே வழி.

இது ஒன்றும் சிரமமில்லை.

முரளி அவளை ரொம்ப விரும்புகிறார். இது பொய் இல்லை.

இவள் அசட்டுத்தனத்தால் தான் அவரை இப்போது இழந்து நிற்கிறாள்.

மங்களா எழுதியிருப்பதுபோல தப்பு பண்ணுவது மனுஷ சுபாவம்...யார் தான் இதற்கு விதிவிலக்கு?

வாழ்க்கையில் அதிருஷ்டசாலி என்ற இறுமாப்பில் இழக்கக்கூடாததை இழக்க இருந்தவள், இன்று யார் செய்த புண்ணியத்தாலோ கடைசி நிமிடத்தில் விழித்துக் கொண்டு விட்டது தர்மாவுக்குப் புரிந்தது.

தர்மா தெளிந்துவிட்டாள்.

இன்றைய நாகரிக உலகிற்கும், சில தனிப்பட்ட மனிதர்களும் வேண்டுமானால் தர்மா நாணலாக மாறி



னதை 'இது என்ன அசட்டுத்தனம்?' என்று பழிக்கலாம்... கவலையில்லை... தர்மாவுக்கு அவள் வாழ்க்கைதான் முக்கியம்...இனியும் யாருக்காகவும் அவள் அதை இழக்கத் தயாராக இல்லை.

மரமாய் இருந்த தர்மா இன்று நாணலாக இருக்கத் தீர்மானித்துவிட்டாள்.

'இனி எந்த வெள்ளத்தையும் எதிர் நோக்குவேன்' என்ற தன்நம்பிக்கையோடு அவள் கண்களை துடைத்துக் கொண்டு நிமிர்ந்தபோது, குழந்தை மாயா 'ங்கா' என்று அழகாய் கூவிச் சிரித்தாள்.

முற்றும்.

2003
3743901